JR

# வரலாற்றுப் பதிவுகள்

வரலாற்றில் இடம்பெற்ற மிக முக்கிய நிகழ்வுகளையும் தினங்களையும் கால ஒழுங்கில் விபரிக்கும் நூல்

ஜெயலக்சுமி இராசநாயகம்



JPL
C12536

வெளியீடு: J.R திறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, அறிவியல் சார்

KOHA JPL

# வரலாற்றுப் பதிவுகள்

வரலாற்றில் இடம்பெற்ற மிக முக்கிய நிகழ்வுகளையும் தினங்களையும் கால ஒழுங்கில் விபரிக்கும் நூல்

19 JUN 2018

263559

1253CC

தொகுப்பு

கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம்

சிரேஷ்ட விரிவுரையாளர்

கல்வியியற் துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வெளியீடு: J.R திறன்

2017

263559CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0.01

நூல் : வரலாற்றுப் பதிவுகள்
தொகுப்பு : கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம்
பதிப்புரிமை : ஆசிரியருக்கு
முதல் பதிப்பு : 2017
வெளியீடு : J.R திறன்
அச்சு : குமரன் அச்சகம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Title : Varalattup Pathyvukal
Author : Dr. Mrs. Jeyaluxmy Rasanayagam
Copyright : Author
First Edition : 2017
Publisher : J.R Thiran
Printed by : Kumaran Press (Pvt) Ltd
39, 36th Lane, Colombo -6

ISBN : 978-955-7421-00-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி

உலகளாவிய ரீதியில் இடம்பெற்ற முக்கிய வரலாற்று நிகழ்வுகளை தொகுத்து அவற்றை நூல் வடிவமாக்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி. ஜெயலக்சுமி இராசநாயகம் அவர் களினால் ஆக்கப்பட்ட ''வரலாற்றுப் பதிவுகள்'' நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள் என்றும் மறக்கப்பட முடியாதவையாகும். அந்த வகையில் பத்து நூற்றாண்டுகளுக்கும் மேலான காலப்பகுதியில் இடம் பெற்ற நிகழ்வுகளை தொகுத்து நூல் வடிவம் கொடுத்த கலாநிதி திருமதி. ஜெயலக்சுமி இராசநாயகம் அவர்களின் முயற்சி பாராட்டத்தக்கதாகும். ஒரே பார்வையில் சகல வரலாற்று நிகழ்வுகளையும் இலகுவாகப் பார்வையிடக்கூடிய வகையில் தேவைக்கேற்றவாறு புகைப்படங்களுடன் திகதி மாதம் வருடங்களுடன் இந்நூல் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. போட்டிப் பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கும் இந்நூல் சிறந்த வழிகாட்டியாக அமையும். அத்துடன் வருங்கால சந்ததியினருக்கும் பயன்மிக்க ஆவணமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இந்நூல் வரலாற்றுப் பொக்கிஷமாகப் பேணப்பட வேண்டிய ஆவண மாகும். இவ்வாறு சமூகம் பயன்பெறத்தக்க வகையில் நூலாசிரியர் மேலும் பல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டு இவரது இம்முயற்சிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ. இரவீந்திரன்**
செயலாளர், வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடமாகாணம்
03.03.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

பல்வேறு சரித்திர உண்மைகளும் சமபவங்களும் மறையும் நிலையிலும் மறக்கப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன. மனிதன் மனதாலும் கையாலும் கணக்கு செய்த காலம் போய் அதன் வேலையை இயந்திரமே செய்து சரியான விடையை ஒருசில விநாடிகளில் எமக்குத் தரக்கூடியதாக இன்றைய விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியின் பரிமாணம் காணப்படுகின்றது. இதற்கேற்றால் போல் எமது சமூகமும் வளர்ச்சி காண வேண்டும். இதற்கு விஞ்ஞான உலகத்தில் நடைபெற்ற பல உண்மைச் சம்பவங்கள் பற்றிய தகவல்கள் பெரிதும் உதவும். நடைபெற்ற சம்பவங்களினதும், நிகழ்வுகளினதும் தகவல்கள் எதிர்காலத்திற்கு வழிகாட்டும்; தீர்மானம் எடுப்பதற்கு உதவும். பல பழைய விடயங்கள் எமது எதிர்கால வாழ்க்கைக்கு இன்றியமையாததாக உள்ளது. முன்பு சாதனை படைத்தவர்களை இன்றைய உலகம் திரும்பி பார்க்கும் போது தான் நாமும் சாதனையை முறியடித்தால் என்ன என்ற உற்சாகம், உந்துதல் ஏற்படும். அப்போதுதான் புதிய சாதனைகள் உருவாகும். இதற்கு தேவையானது கடந்த கால வரலாற்று பதிவுகள் தான். இதனை மனதிலிருத்தி என்னால் சேகரிக்கக்கூடிய தரவுகளை இயன்றளவு சேகரித்து நூல் வடிவம் செய்துள்ளேன். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய விடயங்களை மீளவும் நினைவூட்டும் வகையில் இதனை தொகுத்துள்ளேன். பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட கால பதிவுகள் இதில் நினைவூட்டப்படுகின்றன. சர்வதேச நிகழ்வுகளாக கொண்டாடப்படும் நாட்களை இதில் பதிவு செய்துள்ளேன். மிக முக்கியமாக, நடந்து முடிந்த சம்பவங்களை ஒரே பார்வையில் வருடம், மாதம், திகதி ரீதியாகப் பதிவு செய்துள்ளேன்.

இந் நூல் மாணவர்களுக்கு மட்டுமன்றி பொதுவாசகர்களுக்கும், அறிவுசார் சமூகத்தினருக்கும் பயன்படும் என்று நம்புகின்றேன்.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட உறுப்பினரும், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளருமாகிய இ. இரவீந்திரனுக்கும் இந் நூல் தரமானதாக அமைவதற்கு தேவையான ஆக்கமும் ஊக்கமும் அளித்த ஆர்வலர்களுக்கும் இந்நூலை தரமானதாக அச்சிட்டு வெளியீடு செய்யும் குமரன் பதிப்பகத்தாருக்கும் எனது நன்றிகள்.

**ஜெயலக்சுமி இராசநாயகம்**

கல்வியியற் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி

**ஜனவரி – 01**

1801. பெரிய பிரித்தானியா மற்றும் அயர்லாந்துப் பேரரசு இணைந்து ஐக்கிய இராட்சியம் ஆனது.

1804. எய்ட்டி பிரான்ஸிடமிருந்து சுதந்திரமடைந்தது.

1808. ஐக்கிய அமெரிக்காவில் அடிமைகளை இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டது.

1833. அரச அதிபர் என்ற பெயர் மாற்றம் பெற்றது. அதற்கு முன்பு கலெக்டர் என்ற பெயர் இருந்தது. கோல்புறுக் ஆணைக்குழு இலங்கையில் மேற்கொண்ட சீர்திருத்தங்களை கொண்டு கலெக்டர் பதவி 01.01.1833 லிருந்து அரச அதிபர் என பதவி மாற்றம் பெற்றது.

1858. இலங்கையில் முதலாவது தந்திச் சேவை கொழும்புக்கும் கண்டிக்கும் இடையில் ஆரம்பமானது.

1863. ஐக்கிய அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் கறுப்பர்களை அடிமைத் தனத்தில் இருந்து விடுவித்தார்.

1866. யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக இலங்கைக் காவல்துறை (Police) அமைக்கப்பட்டது

1872. இலங்கையில் ரூபா மற்றும் சதம் ஆகிய நாணயங்கள் அறிமுகப்படுத்தப் பட்டன.

1872. முதலாவது இந்திய அஞ்சல் (தபால்) சேனீ மலைச் (Mount Cenis) சுரங்கம் ஊடாக சென்றது.

1872. இலங்கையில் ஆட்சியுரிமைச் சட்டமானது அமுல்படுத்தப்பட்டது.

1877. இலங்கையின் மிகப் பெரிய அருங்காட்சியகமான கொழும்பு நூதன சாலை (National Museum of Colombo) அமைத்து முடிக்கப்பட்டது.

1877. இந்தியாவின் மகாராணியாக விக்டோரியா டில்லியில் அறிவிக்கப் பட்டார்.

1883. இலங்கையின் தமிழர் தாயகம் வடக்கு-கிழக்கு என இரண்டு மாகாணங் களாக பிரிக்கப்பட்டது.

1984. இலங்கையில் பாடசாலை வகுப்பு நிலைகள் தரம் (Grade) என்பது ஆண்டு (Year) என மாற்றப்பட்டது. தரம் 1 என இருந்தது ஆண்டு 2 என மாற்றம் பெற்றது.

1890. எரித்தியா இத்தாலிய குடியேற்ற நாடாக ஆக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1896. இலங்கையில் முன்னர் ரொபேர்ட்சன் கம்பனியின் பொறுப்பில் இருந்த தொலைபேசி சாதனத்தை இலங்கை அரசு கையேற்றது.

1912. சீனக்குடியரசு அமைக்கப்பட்டது.

1913. அமெரிக்க தபால் இலாகாவில் முதன் முதலாக பொதிகள் அனுப்பும் முறை ஆரம்பிக்கப்பட்டது.

1948. பிரித்தானிய தொடரூந்து சேவைகள் நாட்டுடமை ஆக்கப்பட்டன.

1949. ஐக்கிய நாடுகள் அறிவுறுத்தலின் படி இந்திய - பாகிஸ்தான் எல்லையான காஷ்மீரில் நள்ளிரவுக்கு ஒரு நிமிடத்துக்கு முன்னர் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி பாகிஸ்தானுடனான இந்தியப் போர் முடிவுக்கு வந்தது.

1949. யாழ்ப்பாண நகரசபை மாநகரசபை அந்தஸ்த்தை பெற்றது. முதலாவது முதல்வர் சாம் A. சபாபதி மற்றும் உதவி முதல்வராக S.S. நவரத்தினம் பதவி வகித்தனர்.

1956. சூடான் ஐக்கிய இராச்சியத்திடமிருந்து சுதந்திரமடைந்தது.

1958. இலங்கையில் வாகன இலக்கத் தகடுகளில் சிங்கள மொழியில் ஸ்ரீ எழுத்து கட்டாயமாக்கப்பட்டது.

1958. ஐரோப்பிய சமூகம் அமைக்கப்பட்டது.

1959. பிடெல் காஸ்ட்ரோ ஹவானாவைக் கைப்பற்றி கியூபாவில் கம்யூனிச ஆட்சியை நிறுவினார்.

1971. ஐக்கிய அமெரிக்கா தொலைக்காட்சிகளில் புகைத்தல் குறித்த விளம்பரங் கள் தடை செய்யப்பட்டன.

1971 நிறுவனங்களில் கடமையாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் வேலை யில் இணைந்துகொண்டதும் ஊழியர் சேமலாபநிதி செலுத்துவது தொழில்தருனருக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

1979 யாழ்ப்பாணம் வளாகமாக (Campuse) இயங்கியது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமாக (University) தரம் உயர்த்தப்பட்டது.

1984. புரூனை ஐக்கியஇராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1985. இலங்கை கல்விச் சேவை (SLES) இலங்கை கல்வி நிர்வாக சேவையாக (SLEAS) தரம் உயர்த்தப்பட்டது.

1987. வடமாகாணத் தலைநகர் யாழ் குடாநாடு மீது இலங்கை அரசினால் பொருளாதாரத் தடைவிதிக்கப்பட்டது.

1995. எட்டாவது உலகத்தமிழாராச்சி மாநாடு இந்தியத் தமிழ்நாடு தஞ்சையில் ஆரம்பம் (1-5).

1995 உலக வணிக அமைப்பு உருவாக்கம்.

1997. ஐக்கியநாடுகள் சபையின் ஏழாவது பொதுச்செயலாளராக கோபி அனான் பதவியேற்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999. இலங்கையில் பாடசாலை வகுப்புநிலைகள் ஆண்டு (year) என்பது தரம் (grade) என மாற்றப்பட்டது.

1999 யூரோ நாணயம் முதல் முதலில் அறிமுகமாகியது.

2000. இந்தியாவின் கன்னியா குமரியில் அமைந்துள்ள விவேகானந்த மண்டபத்தை அடுத்துள்ள பாறையில் 133 அடி உயரத்தில் 1330 இசை வாணர்கள் இசை முழங்க முதல்வர் மு. கருணாநிதியால் திருவள்ளுவர் சிலை திறந்துவைக்கப்பட்டது. இதற்குரிய அடிக்கல் 06.09.1990ம் ஆண்டு நாட்டப்பட்டு 1999ல் நிறைவு பெற்றது.

2002. இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கான பொருளாதார தடைநீக்கப்பட்டது.

2007. இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் நிதிரீதியாக இரண்டாக பிரிந்து செயற்பட தொடங்கியது.

2007. எட்டாவது ஐக்கியநாடுகள் பொதுச் செயலாளராக தென்கொரியா நாட்டைச் சேர்ந்த பான் கீ மூன் பதவியேற்பு.

2007. இலங்கையில் புகையிலை மது பொருட்கள் பாவனை தடைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

2008. ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இந்து கலாசார அமைச்சருமான தியாகராஜா மகேஸ்வரன், கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலில் காலையில் வழிபாட்டில் இருந்தபோது இனம்தெரியாதோரால் சுட்டுக் கொலை (பிறப்பு: 10.01.1966).

2008. இலங்கைத் தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவையான Nethra Tv ஆரம்பிக்கப்பட்டது.

2016 இலங்கை அரசியலமைப்பு நிர்ணய சபையாக மாற்றியமைக்கும் தீர்மானம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

2016 Facebook போன்று இலங்கையில் முதலாவது சமூக வலைத்தலம் www. Linklank.com உத்தியோகபூர்வமாக வெளியீடு செய்யப்பட்டது.

**ஜனவரி– 02**

1757. இந்திய மாநிலங்களில் ஒன்றான கல்கத்தாவை ஐக்கிய இராச்சியம் கைப்பற்றியது.

1782. இலங்கையை ஆண்ட கடைசி அரசன் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் பிறப்பு (இறப்பு 30.01.1832).

1793. ரஷ்யாவும் - புரூசியாவும் போலாந்தை பங்கிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1959. ரஷ்யர்களால் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட முதலாவது செயற்கைக் கிரகம் ''லூனா'' சந்திரனையும் தாண்டிச் சென்று சூரியனை வலம் வந்தது.

1989. இலங்கையின் மூன்றாவது நிறைவேற்று ஜனாதிபதியாக ரணசிங்க பிரேமதாச பதவியேற்ப்பு. (01.05.1993வரை பதவிவகித்தார்). தேர்தல் 19.12.1988ஆம் ஆண்டு நடைபெற்றது. (1-5-1993) மனிதக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

1989. இலங்கையின் 12வது பிரதமராக ரணில் விக்கிரமசிங் பதவியேற்பு (1-5-1993 வரை).

2009 தமிழிழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த கிளிநொச்சி நகரத்தை இலங்கை இராணுவம் கடும் யுத்தத்தின் மூலம் கைப்பற்றியது.

**ஜனவரி – 03**

1588. இந்திய மாநிலங்களில் ஒன்றான பஞ்சாப்பின் புகழ் பெற்ற சீக்கிய வழிபாட்டுத் தலமான அமிர்தசரஸ் பொற் கோயிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

1740. ஆங்கிலேயருக்கு மண்டியிட மறுத்து தன் தாய்த் திருநாட்டிற்காக போராடி ஈற்றில் தூக்கிலிடப்பட்ட மன்னன் மாவீரன் வீரபாண்டிய கட்டப் பொம்மன் பிறப்பு (இறப்பு-16-10-1793).

1840. சேர்.ஜேம்ஸ்ராஸ் முதன் முதலாக ஒலியைப் பயன்படுத்தி கடலின் ஆழத்தைக் கண்டறிந்தார்.

1888. 91cm முறிவுத் தொலைநோக்கி முதல் முறையாக கலிபோர்னியாவில் உபயோகிக்கப்பட்டது. இதுவே அந்நேரத்தில் உலகின் மிப்பெரும் தொலை நோக்கியாகும்.

1956. ஈபிள் கோபுரத்தில் ஏற்பட்ட தீயினால் மேற்குப்பகுதி சேதமடைந்தது.

1957. முதலாவது மின்கடிகாரத்தை ஹமில்ட்டன் வாட்ச் கம்பெனி அறிமுகப் படுத்தியது

1958. தீவுக் கூட்டமான மேற்கிந்திய தீவுகளின் கூட்டமைப்பு அமைக்கப்பட்டது.

1959. அலாஸ்கா ஐக்கியஅமெரிக்காவின் 49வது மாநிலமானது.

1962. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது.

1968. இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் மிகக் கோலாகல மாகத் தொடங்கியது (3-5 வரை).

1974. யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஆரம்ப மானது. (3-9 வரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு (ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க) அரசுக்கும் இடையே நடந்த பேச்சுக்களின் இரண்டாம் கட்டம் ஆரம்பமானது.

2008. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு விலக்கிக் கொள்வதாக அறிவித்தது (05வருடம் 10மாதம் 10 நாட்கள் இரு தரப்பும் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்தன.)

**ஜனவரி – 04**

1493. கொலம்பஸ் தான் கண்டுபிடித்த புதிய உலகை விட்டுப் புறப்பட்டார்.

1643. ஆங்கில அறிவியலாளரும், ஈர்ப்புவிதி கண்டுபிடிப்பாளரும், கணித வியலாளரும் மற்றும் தத்துவஞானியுமான சேர். ஐசக் நியூட்டன் பிறப்பு (இறப்பு-31.03.1727).

1698. லண்டனில் அரச மாளிகையான வைட்ஹோல் (White Hall) தீயினால் சேதமுற்றது.

1809. பார்வையற்றவர்களுக்கான பிரெயில் எழுத்தினை உருவாக்கியவரான லூயிஸ் பிரெயில் பிறப்பு (இறப்பு- 06.01.1852).

1889. இலங்கையில் சப்ரகமுவா மாகாணம் என்ற புதிய மாகாணம் சேர்.E.N. வோக்கர் என்பவரால் உருவாக்கப்பட்டது.

1912. பிரித்தானிய காலனித்துவ நாடுகளில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப் பட்டது.

1922. அறிவுசார் ஒத்துழைப்புக்கான அனைத்துலக குழு (சி.ஐ.சி.ஐ) தோற்று விக்கப்பட்டது.

1948. பர்மா ஐக்கிய இராச்சியத்திமிடமிருந்து விடுதலையடைந்தது.

1958. முதலாவது செயற்கைக் கோள் ஸ்புட்னிக் -1 தனது சுழற்சிப் பாதையை விட்டு விலகி பூமியில் வீழ்ந்தது.

1959. லூனா -1 சந்திரனுக்கு மிக அண்மையில் சென்ற முதலாவது விண்கலம்.

1981. ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு. தமிழ் நாடு மதுரையில் முதலமைச்சர் M.G. இராமச்சந்திரன் (மருதூர் கோபாலமேனன் இராமச் சந்திரன்) தலைமையில் ஆரம்பமாகியது (04.01.1981 தொடக்கம் 10.01.1981வரை).

1997. 28வது சர்வதேச திரைப்பட விழா கேரளாவிலுள்ள திருவனந்த புரத்தில் தொடங்கியது.

2004. ஸ்பிரிட் என்ற நாசாவின் தரையுளவி செவ்வாயில் தரையிறங்கியது.

2010. உலகத்திலேயே மிகப் பெரிய கோபுரம் பாஜ் டுபாய் (Khalifa Tower) டுபாயில் திறந்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனவரி – 5** ✱ தேசியபறவைகள் தினம்

1592. மொஹாலாயப் பேரரசர் ஷஹாப் உத்தின் முகமத் ஷாஜகான் பிறப்பு (இறப்பு 22.01.1666)

1929. ஐக்கியஅமெரிக்காவில் சமூக உரிமைக்காக போராடிய மாபெரும் ஆபிரிக்க அமெரிக்க தலைவர் மார்டின் லூதர் கிங் பிறப்பு.

1965. ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து இந்தோனேசியா வெளியேறியது.

1967. இலங்கை வானொலி சேவை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

1971 உலகின் முதல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் மெல்போர்னில் நடைபெற்றது.

1997. ரஷ்யப் படைகள் செச்சினியாவில் இருந்து வெளியேறின.

2000. தமிழனுக்காக குரல் கொடுத்ததல்லாமல் அதனால் தன்னுயிரையும் தியாகம் செய்த "மாமனிதன்" இலங்கையின் தமிழ் காங்கிரஸ் அரசியற் கட்சித்தலைவர் சட்டமேதையும் பிரபல சட்டவாளருமான அமரர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் ஏக புத்திரனும் கட்சித் தலைவருமான குமார் பொன்னம்பலம் கொழும்பில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார். (பிறப்பு - 12.08.1938)

**ஜனவரி – 06**

1838. சாமுவேல் மோர்ஸ் மின்னியல் தொலைத் தந்தியை முதல் முறையாக வெற்றிகரமாகச் சோதித்தார்.

1852. பார்வை அற்றவர்களுக்கான பிரெய்ல் எழுத்தினை உருவாக்கிய லூயிஸ் பிரெய்ல் இறப்பு (பிறப்பு - 04.01.1809).

1929. அன்னை தெரேசா இந்தியாவின் வறிய மற்றும் நோயுற்றவர்களுக்கு சேவை செய்வதற்காக இந்திய கல்கத்தாவை வந்தடைந்தார்.

1950. ஐக்கிய இராச்சிய மக்கள் சீன குடியரசை அங்கீகரித்தது.

1959. உலகின் முதல் செயற்கைக் கோள் ஏவப்பட்டது. ரஷ்யாவின் காஸ்மிக் ராக்கெட் எனும் அந்தச் செயற்கைக் கோள் புவியை விட்டு 8000 கிலோமீட்டர் தூரம் மேலே சென்று சுற்றுப் பாதையை அடைந்தது.

1967. இந்திய திரைப்பட இசையமைப்பாளரும், ஒஸ்கார் விருது நாயகனுமான A.R. ரஹ்மான் பிறப்பு.

1992. நகோர்னோ கரபாக் அசர்பைஜானிடமிருந்து விடுதலையடைந்தது.

2003. இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான பேச்சு வார்த்தை தாய்லாந்து நாகர் கோன் பதாம் நகரில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை இலங்கை இராணுவ தடுப்பு முகாமில் இறப்பு.

2016 இலங்கை ரேடியோ வரலாற்றில் முதல் முறையாக ஜனாதிபதி ஒருவர் நேரடி வானொலி நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றார். SLBC Subharathi நிகழ்ச்சி ஜனாதிபதி மைத்திரிபாலா ஸ்ரீசேனா.

**ஜனவரி** – 07

1584 யூலியன் கலண்டர் முறை புனித நோமன் ஆட்சியில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

1610. இத்தாலிய வானியலாளரும் இயற்பியலாளருமான கலிலியோ கலிலி வியாழன் கிரகத்தைச் (ஜீபிடர் கோள்) சுற்றி வரும் நான்கு இயற்கைச் செய்மதிகளை (நிலாக்களை)கண்டுபிடித்தார்.

1782. அமெரிக்காவின் முதலாவது வர்த்தக வங்கியான ''வடஅமெரிக்க வங்கி'' திறக்கப்பட்டது.

1785 ஆங்கிலக் கால்வாய் முதன் முதலாக பலூனில் பறந்து கடக்கப்பட்டது.

1789. ஐக்கிய அமெரிக்க நாட்டில் முதல் முதலாக ஜனாதிபதி தேர்தல் நடை பெற்றது.

1830 அமெரிக்காவில் முதலாவது புகையிரத நிலையம் பல்ரிமோரில் திறந்து வைக்கப்பட்டது.

1841. யாழ்ப்பாணத்தில் உதயதாரகை பத்திரிகை தமிழ், ஆங்கில இரு மொழிப் பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்டது. இப்பத்திரிகையே யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த முதலாவது பத்திரிகை யாகும்.

1914 முதலாவது நீராவிப் படகு பனாமாக் கால்வாயூடாக கடந்தது.

1925. யாழ்ப்பாண சமூக சேவையாளர் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி பிறப்பு (இறப்பு - 15.06.2008)

1927. அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து முதலாவது தொலைபேசிச் செய்தி நியூயோர்க் நகருக்கும் லண்டனுக்கும் இடையில் அனுப்பப் பட்டது.

1968. நாசாவின் சேர்வியர் - 7 விண்கலம் ஏவப்பட்டது.

1984. புரூனை ஆசியாவின் அமைப்பில் ஆறாவது உறுப்பு நாடாக இணைந்தது.

**ஜனவரி** – 08

1642. பூமி சூரியனைச் சுற்றி வலம் வரும் தாற்பரியத்தை உலகிற்கு அறியப் படுத்தியவரும் வானியியலின் தந்தை என அனைவராலும் போற்றப்படுப வருமான கலிலியோ கலிலி இறப்பு. (பிறப்பு- 15.02.1564).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1782. திருகோணமலைக் கோட்டையை பிரித்தானியர் கைப்பற்றினர்.

1806. கேப் கொலனி பிரித்தானியாவின் குடியேற்ற நாடாகியது.

1867. வாஷிங்டன் டிசியில் ஆபிரிக்கா அமெரிக்கர்கள் முதன்முறையாக வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர்.

1899. இலங்கையின் நான்காவது பிரதமர் S.W.R.D. பண்டாரநாயக்கா பிறப்பு (இறப்பு-26.09.1959).

1927. வியாபார ரீதியாக ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்துக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளும் முறை ஆரம்பமானது.

1940. இரண்டாம் உலகப்போரில் பிரித்தானியா உணவுப் பங்கீட்டை அறிமுகப்படுத்தியது.

1941. சாரண இயக்கத்தை உருவாக்கிய ரொபர்ட் பேடன் பவல் பிரபு இறப்பு (பிறப்பு-22.02.1857).

1949. ஜீன்ஸ் எனப்படும் மரபணுக் கூறின் முதல் புகைப்படத்தை தெற்கு லிபோர்னியா பல்கலைக்கழகம் வெளியிட்டது.

1966. டட்லி-செல்வா ஒப்பந்தத்தின்படி தமிழ்மொழி விசேட உபயோகச் சட்டம் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1973. சோவியத் விண்கப்பல் லூனா - 21 விண்ணுக்கு ஏவப்பட்டது.

1990. உலகப் புகழ் பெற்ற கட்டடமான பைசாவின் சாய்ந்த கோபுரம் மூடப் பட்டது. சுமார் 11 ஆண்டுகள் 11மாத சீரமைப்புப் பணிகளுக்குப் பிறகு 2001ல் மீண்டும் சுற்றுலாப் பயணிகளுக்குத் திறந்து விடப்பட்டது.

1995. ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க ஐக்கியமக்கள் சுதந்திர முன்னனி அரசின் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையிலான போர் நிறுத்தம் ஆரம்பம். ஆனால் இப்போர் நிறுத்தத் திலிருந்து இரு தரப்பினரும் 19.04.1995 அன்று விலகினர்.

2001. வடமராட்சியில் திக்கம் என்ற இடத்தில் அமைந்துள்ள திக்கம் வடிசாலையை புனர்வாழ்வு அமைச்சு சுவீகரித்து பனை அபிவிருத்தி சபை நிர்வாகத்திடம் கையளித்தது.

2015 இலங்கையின் 7வது ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. ஐ.ம.சு. கூட்டமைப்பைச் சேர்ந்த மைத்திரிபால சிறிசேனா அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

**ஜனவரி – 09**

1324. இத்தாலிய வணிகரான மார்க்கோ போலோ இறப்பு (பிறப்பு 1254).

1873. பிரான்சின் பேரரசன் மூன்றாம் நெப்போலியன் இறப்பு (பிறப்பு 20.04.1808).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1913. மகாத்மா காந்தி லண்டனில் நடைபெற்ற முதல் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டார்.

1921. புனித ஜார்ஜ் கோட்டையில் சென்னை சட்டமன்றத்தின் முதலாவது கூட்டம் நடைபெற்றது.

1924. அரசியல் வாழ்விலும் ஆன்மீக வாழ்விலும் அயராது உழைத்த வரும் சேர்.பொன் இராமநாதனின் சகோதரருமாகிய மாமேதை சேர்.பொன்னம் பலம் அருணாசலம் இறப்பு (பிறப்பு 14.09.1853).

1951. ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் நியூயோர்க் நகரில் அதிகார பூர்வமாக திறக்கப்பட்டது.

1972. ஹொங்கொங்கில் குயீன் எலிசபெத் கப்பல் தீக்கிரையானது.

1974. யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு முடிவடைந்தது.

1990. நாசாவின் கொலம்பியா விண்ணோட்டம் ஏவப்பட்டது.

1995. விண்வெளியில் 442 நாட்கள் தங்கியிருந்த ரஷ்ய விண்வெளி வீரர் வலேரி பாலியகேவ் திரும்பி வந்தார். நீண்ட காலம் விண்வெளியில் தங்கியவர் என்ற பெருமையையும் பெற்றார்.

2001. சீனாவின் ஷென்சூ 2 விண்கலம் ஏவப்பட்டது.

2009. இலங்கை இராணுவத்தின் 53வது 55வது படைப்பிரிவுகள் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து ஆணையிறவை மீளக் கைப் பற்றியது.

2015 இலங்கையின் 7வது நிறைவேற்று ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனா (SLFP) பதவியேற்பு.

2016 இலங்கை பாராளுமன்றத்தை அரசியலமைப்பு நிர்ணய சபையாக மாற்றியமைக்கும் தீர்மானம் பிரதமர் ரணில் விககிரம சிங்கவினால் பாராளுமன்றத்திலம் சமர்ப்பிக்கப்பட்டது.

**ஜனவரி** – 10 ✸ உலக சிரிப்பு தினம்

1806. தென்னாபிரிக்க கேப்டவுனில் டச்சு குடியேறிகள் பிரித்தானியரிடம் சரணடைந்தனர்.

1863. உலகின் மிகப்பழமையான சுரங்க தொடரூந்து பாதை லண்டனில் திறக்கப்பட்டது.

1881. யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

1883. குழந்தைகளுக்கான முதலாவது நூலகம் கட்டப்பட்டது.

1940. இந்திய கர்நாடக இசைக் கலைஞரும் திரைப்பட பாடகருமான K.J. யேசுதாஸ் பிறப்பு.

1946. லண்டனில் ஆரம்பமாகிய ஐக்கிய நாடுகளின் முதலாவது பொதுச் சபை கூட்டத்தில் 51 நாடுகள் பங்குபற்றின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1974. யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வான பரிசளிப்பும், விருந்தினருக்கு உபசாரம் செய்ய ஒழுங்கான பொதுக்கூட்டத்தில் இலங்கை காவல் துறையினரும் - குண்டர்களும் பொதுமக்களை தாக்கியதில் 11பேர் கொல்லப்பட்டனர்.

1984. பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இனப்பிரச்சினை தொடர்பான சர்வகட்சி மாநாடு ஆரம்பமானது.

1997. தமிழ் நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா தனது வாழ் நாள் முழுவதும் தங்க ஆபரணங்கள் அணியமாட்டேன் என சபதம் செய்தார்.

**ஜனவரி – 11**

1569. முதலாவது குலுக்கல் சீட்டு இங்கிலாந்தில் அறிமுகமாகியது.

1787. யுரேனஸ் கோளின் இரண்டு துணைக்கோள்கள் கண்டுபிடிக்கப் பட்டது.

1805. ஐக்கியஅமெரிக்காவின் கிழக்கு வடமத்திய பகுதியில் மிச்சிக்கன் பிரதேசம் அமைக்கப்பட்டது

1878. பால் முதற் தடவையாக புட்டியில் அடைத்து விற்கப்பட்டது.

1922. நீரிழிவு நோயை குணப்படுத்தும் மருந்தான இன்சுலின் மனிதனில் முதன்முதலாக் பயன்படுத்தப்பட்டது.

1963. உலகின் முதல் டிஸ்கோதீக் எனப்படும் டிஸ்கோ நடன அரங்கு அமெரிக்க லொஸ்ஏன்ஜல் மாநிலத்தில் திறக்கப்பட்டது.

1972. கிழக்குப் பாகிஸ்தான் பங்களாதேஷ் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1980. செஸ் வரலாற்றில் மிக இளைய வயதில் பிரிட்டனைச் சேர்ந்த நைகேல் சார்ட் அனைத்துலக மாஸ்டர் பட்டத்தை வென்றார்.

1990. இந்தியாவில் முதல் தேசிய தபால் தலைக் கண்காட்சி நடைபெற்றது.

1999. ஐரோப்பிய நாடுகளுக்கு பொதுவான ஒரே நாணயமாக யூரோ அறிமுகப்படுத்தப்பட்டது.

2013. இலங்கையின் 43வது பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்க பாராளுமன்ற குழுத் தீர்மானத்துக்கமைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களினால் பதவியில் இருந்து விலக்கப்பட்டார்.

**ஜனவரி – 12**

1814 இலங்கையில் முதல்முறையாக சிங்களமொழியில் வர்த்தமானி வெளியிடப்பட்டது.

1863. 19ம் நூற்றாண்டில் இந்தியாவின் தலை சிறந்த சமயத் தலைவர்களுள் ஒருவரான சுவாமி விவேகானந்தர் பிறப்பு (இறப்பு 08.07.1902).

1908. முதற் தடவையாக தூர இடங்களுக்கான வானொலிச் செய்தி ஈபெல் கோபுரத்திலிருந்து அனுப்பப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1915. அமெரிக்க காங்கிரஸ் பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தது.

1964 இலங்கையில் முதல்முறையாக அழகுராணிப் போட்டி ஆரம்பிக்கப்பட்டது.

1966. சிங்கப்பூர் குடும்பக் கட்டுப்பாடு ஆணையம் (Singapore Family Planning and PopulationBoard) நிறுவப்பட்டது

1967. நடிகர் M.R. ராதா, நடிகர் M.G. இராமச்சந்திரனை அவரது வீட்டில் வைத்து கைத்துப்பாக்கியால் சுட்டுப் படுகாயப்படுத்தினார்.

1970. நைஜீரியாவில் உள்நாட்டு போர் முடிவுக்கு வந்தது.

1972. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும், சோனியா காந்திக்கும் மகளாக பிரியங்காகாந்தி பிறப்பு.

2004. உலகின் மிகப் பெரும் பயணிகள் கப்பலான R.M.S. குயின்மேரி - 02 தனது கன்னிப் பயணத்தை ஆரம்பித்தது.

**ஜனவரி – 13**

1610. கலிலியோ கலிலி வியாழனின் நான்காவது துனைக்கோளைக் கண்டு பிடித்தார்.

1893. பிரிட்டனில் தொழிற்கட்சி தொடங்கப்பட்டது.

1911. இலங்கை சிங்கள இசைத் துறையின் முன்னோடியும் தேசிய கீதத்தை இயற்றியவருமான இசைக் கலைஞர் ஆனந்தசமரக்கோன் பிறப்பு. (இறப்பு 05.04.1962).

1930. மிக்கி மவுஸ் கார்ட்டூன் துணுக்குகளாக முதன் முதலாக வெளிவரத் தொடங்கியது

1942. பிளாஸ்டிக்கைப் பயன்படுத்தி கார் உற்பத்தி செய்யும் முறைக்கு காப்புரிமம் பெற்றார் ஹென்றி போர்டு. அதனால் காரின் எடையை முப்பது சதவீதம் வரை குறைக்க முடிந்தது.

1949. விண்வெளியில் பறந்த முதல் இந்தியர் ராகேஸ் சர்மா இறப்பு.

1964. இந்திய மாநில கல்கத்தாவில் இந்து - முஸ்லிம் கலவரம் மூண்டதில் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

1972. கானாவில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.

**ஜனவரி – 14**

1918. சோவியத் யூனியனில் விளாடிமிர் இலீச் லெனினைக் (Vladimir Ilyich Lenin) கொல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

1941. பலூன்கள் மூலம் தபால்களை கொண்டு செல்லும் முறை இந்தியா வில் ஆரம்பமானது. முழுமையாக ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1969. இந்தியாவில் சென்னை மாநிலம் என்ற பெயரில் இருந்த தமிழ் மாநிலம் தமிழ் நாடு என பெயர் சூட்டப்பட்டது.

1974. தமிழ் நாட்டில் புதுக்கோட்டை மாவட்டம் திருச்சி தஞ்சாவூர் மா நிலங்களிலிருந்து பிரித்து புதிதாக உருவாக்கப்பட்டது.

1980. இந்தியாவின் முதல் பெண் பிரதமராக இந்திராகாந்தி பதவியேற்றார்.

1985. தனது 100வது டென்னிஸ் விருதை வென்று வரலாற்றில் இடம்பிடித்தார் மார்ட்டினாநவரத்திலோவா. இதுவரை இது போன்ற சாதனையை Jimmy Connors, Chris Evert Lloyd ஆகிய இருவர் மட்டுமே நிகழ்த்தியிருந்தனர்.

1995. ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அரசுடனான தமிழீழ விடுதலைப் புலிகளின் மூன்றாம் கட்ட பேச்சு வார்த்தைகள் ஆரம்பம்.

2011. வடக்குகிழக்கு மாகாண சபை இரண்டாக பிரிக்கப்பட்ட பின்பு வடக்கு மாகாண சபை தனது அலுவலகத்தை திருகோணமலை யிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடம்மாற்றியது.

**ஜனவரி** – 15 ✸ உலக மத தினம்.

1559. முதலாம் எலிசபேத் இங்கிலாந்தின் அரசியாக முடி சூடினார்.

1759. உலகப் புகழ் பெற்ற பிரிட்டிஷ் அருங்காட்சியகம் திறக்கப்பட்டது.

1799. இலங்கையில் அடிமைகள் கொண்டுவரப்படுவது முற்றாகத் தடை செய்யப்பட்டது.

1908. யாழ்ப்பாணத்துக்கும் காரைநகருக்கும் இடையில் பயணிகள் படகுச் சேவை (ferry) ஆரம்பிக்கப்பட்டது.

1929. ஐக்கிய அமெரிக்காவில் சமூக உரிமைக்காக போராடிய மாபெரும் அமெரிக்க, ஆபிரிக்க தலைவர் மார்ட்டின் லூதர் கிங் பிறப்பு (இறப்பு 04.04.1968).



இலங்கை இசைக் கலைஞர்
ஆனந்த சமரக்கோன்



இலங்கையின் முதல் பெண்
ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

KOHA JPL



1936. முற்றிலும் கண்ணாடியால் அமைக்கப்பட்ட கட்டடம் ஒகைய் யோவில் கட்டப்பட்டது.

1943. பரப்பளவு அடிப்படையில் உலகின் மிகப்பெரிய கட்டிடங்களில் ஒன்றான ஐக்கிய அமெரிக்காவின் இராணுவத் தலைமையகம் பென்டகன் திறந்து வைக்கப்பட்டது.

1951. இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் தயாரிக்கப்படும் திரைப்படங் களை மத்திய அரசே தணிக்கை செய்து வெளியிட்டு வரும் முறை ஆரம்பமானது.

1953. அமெரிக்க அதிபர் ஹாரி ட்ரூமன் (Harry Truman) தனது பிரியா விடை உரையை வானொலியிலும் தொலைக்காட்சியிலும் ஆற்றிய முதல் அதிபர் என்ற பெருமையைப் பெற்றார்.

1955. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலை யாக ஆரம்பிக்கப்பட்டது.

1970. 3வது உலகத் தமிழாராச்சி மகாநாடு பாரிஸில் நடைபெற்றது (15- 18).

1972. எகிப்து நாட்டின் புகழ்பெற்ற அஸ்வான் அணைக்கட்டு திறக்கப் பட்டது.

1975. போர்த்துக்கல் அங்கோலாவுக்கு விடுதலை வழங்கியது.

1990. இலங்கையில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ள தந்தையின் தொழிலைக் குறிக்கும் பகுதி பதிவாளர் நாயகத்தினால் நீக்கப்பட்டது.

1991. ஈராக்கின் ஆக்கிரமிப்பிற்கு எதிராக ஐக்கிய நாடுகள் அதன் வர்த்தக நடவடிக்கைகளையும் மற்றும் எண்ணெய் ஏற்றுமதியையும் தடைசெய்தது.

1994. பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் தொழில் பதியத் தேவையில்லை என்ற திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

2001. இலங்கையின் முதலாவது இராணுவத்தளபதி மேஜர். ஜெனரல் அன்ரன் முத்துக்குமாரன் இறப்பு (பிறப்பு 06.07.1908)

2001. இணையத்தள சமூக சேவையான விக்கிபீடியா ஆரம்பிக்கப்பட்டது.

2005. கையடக்கத் தொலைபேசிகளில் தமிழ் குறுஞ் செய்திகளை அனுப்பும் செல்லினம் என்ற மென் பொருள் மலேசியாவில் அறிமுகப்படுத்தப் பட்டது.

203559

**ஜனவரி – 16**

1711. கோவாவில் பிறந்து இலங்கை கத்தோலிக்கருக்கு சேவை செய்வதற்கு வந்த ஜோசப் வாஸ் அடிகள் கண்டியில் இறப்பு (பிறப்பு 21.04.1651).

1919. ஐக்கிய அமெரிக்காவில் மது அருந்துவது சட்டப்படி குற்றம் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது.

1970. தன்னை லிபியாவின் அதிபராக முடி சூட்டிக்கொண்டார் கேணல் கடாபி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979. ஈரான் மன்னர் முகம்மது ரேஷா பாஹலாவி குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறி எகிப்தில் குடியேறினார்.

1987. இந்திய தொலை தூர செயற்கைக்கோள் IRS – IA ஏவப்பட்டது.

1987. சார்க் நாடுகளின் முதலாவது செயலாளர் நாயகமாக பங்களாதேஷ் அதிபர் அப்துல் அப்சான் பதவியேற்ப்பு.

1991. அமெரிக்கா ஈராக் மீது போரை அறிவித்தது.

1993. தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி கேணல் கிட்டு உட்பட 10 விடுதலைப் புலிகள் வெளிநாடொன்றில் இருந்து இலங்கை திரும்பு கையில் சர்வதேசக் கடற்பரப்பில் இந்தியக் கடற்படையால் சுற்றி வளைக்கப்பட்ட போது கப்பலை வெடிக்க வைத்து இறந்தனர்.

1994. ஈராக்கிற்கு எதிராக Operation Desert Storm நடவடிக்கைக்கு வெள்ளை மாளிகை அங்கீகாரம் அளித்தது. குவைத்திலிருந்த ஈராக்கியப் படை களை விரட்டியடிக்கும் முயற்சியாக அமைந்தது.

2008. இலங்கை வடமாகாணத்தில் இராணுவ நடவடிக்கையை முழு அளவில் அரசு அறிவித்தது.

2008. இலங்கையில் 18.03.2000ல் நிறுவப்பட்ட யுத்த நிறுத்த கண் காணிப்பு குழு தனது செயற்பாடுகளை நிறுத்தியது. இலங்கையிலிருந்து வெளி யேறுவதாக அறிவித்தது.

2009. வவுனியாவிலிருந்து ஓமந்தை ஊடாக புதுக்குடியிருப்புக்கு (பிரிகேட்) பதினோராவது உலர் உணவு வாகனத் தொடரை ஐக்கிய நாடுகள் சபை முதன்முதலில் அனுப்பியது.

**ஜனவரி – 17**

1706. மின்னல் மின்சாரத்தை கண்டுபிடித்த அமெரிக்காவைச் சேர்ந்த பெஞ்ச மின் பிராங்கிளின் பிறப்பு (இறப்பு 17.04.1790).

1871. சான் பிரான்சிஸ்கோவைச் சேர்ந்த ஆன்ட்ரூ ஹாலிடை என்பவர் கேபிள் கார் முறைக்கு காப்புரிமத்தைப் பெற்றார்.

1917. தமிழ் நாட்டின் முதலமைச்சரும் இந்திய திரைப்பட நடிகரும் இலங்கை மலைநாட்டில் பிறந்தவருமான M.G. இராமசந்திரன் பிறப்பு (இறப்பு 24.12.1987).

1946. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தனது முதலாவது கூட்டத்தை நடாத்தியது.

1976. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்புவதற்காக C.D.S. என்னும் செயற்கைக் கோளை முதன் முதலாகக் கனடா விண்ணில் செலுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991. வளைகுடாப்போர் ஆரம்பம்.

2007. இலங்கையில் Max TV ஆரம்பிக்கப்பட்டது.

**ஜனவரி – 18**

1698. உலகின் முதல் நீராவி இயந்திரம் சவேரி எனும் ஆங்கிலேயரால் அமைக்கப்பட்டது.

1824. இலங்கையின் ஆளுநராக சேர்.எட்வர்ட் பார்ன்ஸ் நியமிக்கப்பட்டார்.

1854 காலணித்துவ ஆட்சிக்காலத்தில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தவர்களில் ஒருவரான குமாரசாமிப் புலவர் பிறப்பு (22.03.1922).

1855 குமார சுவாமிப் புலவர் அம்பலவாணப்பிள்ளை என்பவருக்கும் சிதம்பரம் அம்மையாருக்கும் புதல்வராக சுன்னாகத்தில் பிறந்தார். (25-4-1922)

1896. எக்ஸ்ரே இயந்திரம் முதல் தடவையாக காட்சிப்படுத்தப்பட்டது.

1919. முதலாம் உலகப் போர் தொடர்பாக பாரிஸ் சமாதான உச்சி மாநாடு பிரான்ஸ் வேர்சாயி நகரில் ஆரம்பமானது.

**ஜனவரி – 19**

1736. நீராவி இயந்திரத்தை கண்டுபிடித்த ஸ்கொட்லாந்து நாட்டு விஞ்ஞானி ஜேம்ஸ் வாட் பிறப்பு (இறப்பு 25.08.1819).

1933. இந்திய கர்நாடக இசைப்பாடகரும் நடிகருமான சீர்காழி எஸ். கோவிந்த ராஜா பிறப்பு (இறப்பு 1988).

1985. இலங்கையின் வடக்குப் பகுதிக்கான புகையிரத சேவை தமிழீழ விடுதலைப் புலிகளினால் கிளிநொச்சி முறுகண்டி பகுதியில் ஏற்பட்ட குண்டுத் தாக்குதலால் இடைநிறுத்தப்பட்டது.

2007 தமிழிழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு வாகரைப் பகுதியை இலங்கை இராணுவம் கைப் பற்றியது.

**ஜனவரி – 20**

1266. இங்கிலாந்து நாடாளுமன்றம் தனது முதலாவது கூட்டத்தை வெஸ்மினிஸ்டர் அரண்மனையில் நடத்தினர்.

1892. முதலாவது அதிகாரபூர்வமான கூடைப்பந்தாட்ட விளையாட்டு மகாசு செட்சில் இடம்பெற்றது.

1933. சேர்.பொன் இராமநாதன் பெண்கள் கல்லூரி யாழ்ப்பாண மாவட்டம் மருதனார் மடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதுவே இலங்கையில் உருவாக்கப்பட்ட முதல் பெண்கள் பாடசாலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1937. அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுபவர்கள் ஜனவரி 20ம் திகதி பதவி ஏற்கும் முறை ஏற்படுத்தப்பட்டது.

1941. ஜோன் எஃப்கென்டியை அமெரிக்காவின் 35வது குடியரசுத் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார் (20.01.1961 - 22.11.1963).

1977. ஜிம்கார்ட்டர் அமெரிக்காவின் 39வது குடியரசுத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார் (20.1.1981 வரை).

1981. அமெரிக்க வரலாற்றிலேயே மிக அதிக வயதில் 40வது அதிபர் பதவி யேற்றவர் Ronald Wilson Reagan (வயது 69) நான்கு ஆண்டுகள் கழித்து 1985 ல் இதே நாளில் இரண்டாவது முறையாக அந்தப் பதவியை ஏற்றுக்கொண்டார். **Ronald Wilson Reagan.**

1991. சூடான் அரசு நாடெங்கும் இஸ்லாமியச் சட்டத்தை அறிமுகப்படுத்தி யதில் நாட்டின் வடக்குப்பகுதி முஸ்லிம்களுக்கும் தெற்கில் வாழும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில்உள்நாட்டுப் போர் மேலும் தீவிர மடைந்தது.

1993. பில் கிளிண்டன் அமெரிக்காவின் 42வது குடியரசுத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார் (20.01.2001 வரை).

1997. இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்றார் பில் கிளின்டன்.

2008. சுன்னாகம் இலங்கை வங்கி தனது வங்கிச் சேவையினை கணணி மயமாக்கியது

2009. அமெரிக்காவின் 44வது ஜனாதிபதியாக பாரக் ஒபாமா பதவியேற்பு. இவர் கறுப்பு இனத்தைச் சேர்ந்த முதலாவது அமெரிக்க ஜனாதிபதி யாவார்.

2012. இந்தியா முன்னாள் ஜனாதிபதியும், அணு விஞ்ஞானியுமான டாக்டர். A.P.J. அப்துல்கலாம் இலங்கை வருகை.

**ஜனவரி – 21**

1924. சோவியத் யூனியனின் சிற்பி விளாடிமீர் லெனின் இறப்பு (பிறப்பு 22.04.1870).

1925. அல்போனியா குடியரசாக அறிவிக்கப்பட்டது.

1947. இலங்கையின் முதலாவது சிங்களத் திரைப்படம் (கடவனுபொறண்டுவ - நிறைவேற்றப்படாத வாக்குறுதி) திரையிடப் பட்டது. இத்திரைப்படம் இதே பெயரில் மீண்டும் 1982ஆம் ஆண்டில் விஜய குமாரதுங்காவின் நடிப்பில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

1954. உலகின் முதலாவது அணுசக்தியால் இயங்கும் நீர் மூழ்கிக் கப்பல் USS நோட்டலஸ் ஐக்கிய அமெரிக்காவில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1959. இந்தியாவின் வைகை அணை திறக்கப்பட்டது.

1972. இலங்கையில் திரைப்படக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டது.

1989. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இறப்பு (பிறப்பு 08.05.1924).

2002 இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

**ஜனவரி** – 22

1798. நெதர்லாந்தில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.

1840. பிரித்தானிய குடியேற்றவாசிகள் நியூசிலாந்தை அடைந்தனர்.

1863. ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக போலந்து, லித்துவேனியா, பெலரஸ் ஆகிய நாடுகளில் கிளர்ச்சி வெடித்தது.

1879. தென்னாபிரிக்காவின் சூலுப் படைகள் ஐசண்டல்வானாவில் வைத்து பிரித்தானியப் படைகளைத் தோற்கடித்தனர்.

1889. கொலம்பியா கிராம போன் வாஷிங்டனில் அமைக்கப்பட்டது.

1901. 64 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த விக்டோரியா மகாராணி தனது 81வது அகவையில் காலமானதை அடுத்து அவரது மூத்த மகன் ஏழாம் எட்வேர்ட் பிரித்தானியாவின் மன்னரானார்.

1901. பிரித்தானியாவைச் சேர்த்து ஏனைய இராச்சியங்களை தனது கைப்பிடியில் வைத்திருந்த ராணி விக்டோரியா இறப்பு (பிறப்பு 24.05.1819).

1905. சென் பீட்டர்ஸ்பேர்க்கில் சார் மன்னருக்கெதிராக தொழிலாளர்களின் எழுச்சி முறியடிக்கப்பட்டது.

1941. இரண்டாம் உலகப் போரில் ஐக்கிய இராச்சியம் லிபியாவின் டோப்ருக் நகரை நாசிப் படைகளிடம் இருந்து கைப்பற்றியது.

1947. பன் மொழிப் புலவர் சுவாமி ஞானப்பிரகாசர் இறப்பு (பிறப்பு 30.08.1875).

1952. உலகின் முதலாவது பயணிகள் ஜெட் விமானம் (BOAC யின் Comet) சேவைக்கு விடப்பட்டது.

1957. சினாய் தீபகற்பத்தில் இருந்து இஸ்ரேல் வெளியேறியது.

1964. கென்னத் கவுண்டா வட றொடீசியாவின் முதலாவது அதிபரானார்.

1980. நோபல் பரிசு பெற்ற சோவியத் இயற்பியலாளர் அந்திரேசாகரொவ் மாஸ்கோவில் கைது செய்யப்பட்டார்.

1984. ஆப்பிள் மக்கிண்டொஷ் கணினி அறிமுகப்படுத்தப்பட்டது.

1988. 500வது ஒரு நாள் சர்வதேச கிரிக்கட் போட்டி இந்தியா மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையே நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990. இலங்கை வடபுலத்தில் செயற்பட்டு வந்த இந்திய அமைதிகாக்கும் படை காங்கேசன் துறைமுகத்தினூடாக முற்றாக வெளியேறினார்கள்.

1992. சாயீரின் தேசிய வானொலி நிலையத்தை தீவிரவாதிகள் கைப்பற்றி அரசை பதவி விலகும்படி அறிவித்தனர்.

1999. ஆஸ்திரேலியாவிலிருந்து வந்து ஒரிசாவில் தொழு நோயாளிகளுக்குச் சேவை செய்த கிறிஸ்தவ மத போதகர் கிராஹம் டைன்ஸ் என்பவரும் மற்றும் அவரின் இரண்டு மகன்களும் இந்து மத வெறியர்களால் உயிருடன் கொளுத்தப்பட்டனர்.

**ஜனவரி** – 23

1849 அமெரிக்காவின் முதல் பெண் மருத்துவராக திருமதி. எலிசபெத் பிளக்வெல் நியமிக்கப்பட்டார்.

1897. இரண்டாவது உலக மகா யுத்தத்தில் பாரத தேசியப் படை அமைத்து சுதந்திர போராட்டம் நடத்திய நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் பிறப்பு (இறப்பு-18.08.1945).

1899 பிலிப்பைன்ஸ் மக்கள் குடியரசின் முதலாவது ஜனாதிபதியான எமிலியோ அகியூனால்டோ பதவிப்பிராணம் செய்தார்.

1957. சென்னை மாநிலத்தில் தமிழ், ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டது.

1995 வடக்கு கிழக்கு மாகாண 2வது ஆளுநராக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி பொன்சேகா பதவியேற்பு

2012. இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமான டாக்டர். A.P.J. அப்துல்கலாம் யாழ்ப்பாண பல்கலைகழகத்திற்கும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லுரிக்கும் வருகை.

2013. யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் 72அடி உயரமுள்ள ஆஞ்சநேயர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**ஜனவரி** – 24

1857. தெற்காசியாவின் முதலாவது முழுமையான பல்கலைக்கழகமாகவும் இந்தியாவின் முதல் பல்கலைக்கழகமாகவும் கல்கத்தா பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

1897. சுவாமி விவேகானந்தர் சிக்காகோவிலிருந்து நாடு திரும்பும் வழியில் யாழ்ப்பாணம் வருகை தந்தார். யாழ் இந்துக் கல்லூரியில் பிரமாண்ட மான வரவேற்பு அளிக்கப்பட்டது.

1908. முதல் சாரணப்படை சாரணியத்தின் தந்தையென போற்றப்படும் பேடன்பவல் என்பவரால் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது.

1950. சுதந்திர இந்தியாவின் முதல் அதிபராக பாபு ராஜேந்திர பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1950. இரவீந்திர நாத் தாகூர் எழுதிய ''ஜன கண மன'' எனும் பாடல் இந்தியாவின் தேசிய கீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1965. இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது நேச நாடுகளுடன் சேர்ந்து வெற்றி ஈட்டிய பிரிட்டிஷ் பிரதமர் (ஐக்கிய இராச்சியத்தின்) சேர் வின்சன்ட் சர்ச்சில் இறப்பு (பிறப்பு 30.11.1874).

1966. இந்தியாவின் முதல் பெண் பிரதமராக இந்திராகாந்தி பதவியேற்பு (24.03.1977வரை).

1973. வியட்நாம் போர் முடிவு.

1984. முதலாவது ஆப்பிள் மாக்கின்டொஷ் கணினி விற்பனைக்கு வந்தது.

1993. பொலநறுவையில் சர்வதேச விமான நிலையத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

1996. மாஸ்கோவுக்கு உளவு பார்த்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் போலந்துப் பிரதமர் ஜோசப் அலெக்ஸ்கி தனது பதவியைத் துறந்தார்.

**ஜனவரி** – 25

1755. மாஸ்கோ பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

1871. இந்தியாவின் 18வது மாநிலமாக இமாசலப் பிரதேசம் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

1882. வேல்ஸ் இளவரசர்கள் அல்பேர்ட் விக்டர், ஜோர்ஜ் ஆகியோர் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

1924. உலகின் முதல் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் France-d Alps மலைத் தொடரில் உள்ள சாமனீக்ஸ் (Chamonix) என்ற இடத்தில் ஆரம்பமானது.

1949. இஸ்ரேலில் முதலாவது பொதுத்தேர்தல் இடம்பெற்றது David Ben Guion பிரதமரானார்.

1971. உகண்டாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மில்ட்டன் ஓபோட் அதிபர் பதவியில் இருந்து அகற்றப்பட்டு இடி அமீன் தலைவரானார்.

1975. ஒரே கட்சி ஆட்சி பங்களாதேஷில் கொண்டுவரப்பட்டது (முஜிப்பூர் ரஹ்மான் பிரதமராக இருந்த போது)

1986. தேசிய எதிர்ப்பு இயக்கத்தினரால் உகாண்டா அரசு கவிழ்க்கப்பட்டது.

1998. பௌத்த மக்களின் புனிதத் தலமான கண்டி தலதா மாளிகையில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டு 25 பேர் படுகாயமடைந்தனர்.

2009. இலங்கை இராணுவம் 59வது படைப்பிரிவு தமிழீழ விடுதலைப் புலிகள் வசமிருந்த முல்லைத்தீவை மீளக்கைப்பற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனவரி – 26** ✸ சர்வதேச சுங்க தினம், சுங்க ஒத்துழைப்பு அமைப்பின் முதலாவது கூட்டம் நடைபெற்ற தினமான இது பிரகடனப் படுத்தப்பட்டது.

1823. அம்மை நோய்க்கு தடுப்பு மருந்து கண்டுபிடித்தவர் (சின்னம்மை நோய்) எட்வர்ட் ஜென்னர் இறப்பு (பிறப்பு 17.05.1749)

1950. இந்திய தேசியக் காங்கிரஸ் ஜனவரி 26ஐ இந்தியாவின் விடுதலை நாளாக (பூரண சுயராஜ்யநாள்) அறிவித்தது.

1950. இந்தியாவின் அரசியல் சட்டம் (யாப்பு) நடைமுறைக்கு வந்தது.

1950. இந்தியாவில் தேசிய இலட்சினை இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

1952. கைதடி முதியோர் இல்லத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பிரதமர் D.S. சேனநாயக்க அவர்களால் தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் குமாரசுவாமி அவர்களின் முயற்சியால் இது உருவாக்கப்பட்டது.

1961. முதன் முதலில் காந்தியின் தபால்த் தலையை அமெரிக்கா வெளியிட்டது.

1965. இந்தியா குடியரசாகி 15 ஆண்டுகளின் பின் இந்தி மொழி (Hindi) இந்தியாவின் ஆட்சி மொழியாக்கப்பட்டது.

1983. லோட்டஸ் 1-2-3 வெளியிடப்பட்டது.

2010. இலங்கையின் 6வது நிறைவேற்று ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டனியின் முதன்மை வேட்பாளர் மகிந்த ராஜபக்ச 6,015,934 வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெற்றார்.

**ஜனவரி – 27**

1880. தோமஸ் அல்வா எடிசன் வெள்ளொளிர்வு விளக்குக்கான காப்புரிமம் பெற்றார்.

1888. தேசிய புவியியற் கழகம் (National Geographic Society) வாஷிங்டன் டிசியில் அமைக்கப்பட்டது.

1918. பின்லாந்தில் உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.

1924. விளாடிமீர் லெனினின் உடல் மாஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் மாலை 4:00 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது.

1925. பனகல் அரசர், சென்னை மாகாணத்தின் முதல் அமைச்சராக இருந்தபோது அற நிலையத்துறை மசோதா சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

1926. ஜோன் லோகி பயார்ட் (John Baird) என்ற ஸ்காட்டிஷ் கண்டுபிடித்த தொலைக்காட்சிப் பெட்டி மூலம் படம் ஒளிபரப்புவதை முதன் முதலாக செய்து காட்டினார்.

1938. நியூயோர்க்கில் நயாகரா நீர்வீழ்ச்சியில் நயாகரா பாலம் உடைந்து வீழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1945. இலட்சக்கணக்கான யூதர்கள் குரூரமாகக் கொல்லப்பட்ட போலந்தின் அவுஷ்விட்ஸ் சித்திரவதை முகாமில் எஞ்சியிருந்த கைதிகள் 7,600 பேர் சோவியத் செம்படையினாரால் விடுவிக்கப்பட்டனர். அந்த முகாமில்தான் யூதர்களைக் கொன்று குவித்தனர் நாஜிகள். அந்த முகாமில் மட்டும் சுமார் ஒன்றரை மில்லியன் பேர் மடிந்தனர்.

1967. அப்பொலோ - 1 விண்வெளி வீரர்கள் மூவர் கென்னடி விண்வெளி மையத்தில் தமது விண்கலத்தைப் பரிசோதிக்கும் போது இடம்பெற்ற தீ விபத்தில் கொல்லப்பட்டனர்.

1973. வியட்நாம் போரை முடிவுக்குக் கொண்டு வந்த உடன்பாடு பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் எட்டப்பட்டது.

1989. கலைஞர் மு. கருணாநிதி மூன்றாவது தடவையாக தமிழ் நாட்டின் முதலமைச்சரானார்.

2008 இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வலியுறுத்தி சென்னை சாஸ்திர பவன் முன்பு முத்துகுமார் என்ற இளைஞர் தீக்குளித்து மரணம்

**ஜனவரி – 28**

1120 கி.பி இராமாயணம் இயற்றிய கவிச்சக்கரவர்த்தி கம்பர் பிறப்பு (இறப்பு கி.பி.1197)

1820. பாபியன் பெலிங்ஷோசென் தலைமையில் ரஷ்யா நாடு காண் பயணக் குழு அண்டாட்டிக்காவை அடைந்தது.

1878. பாரிசில் ஈபிள் கோபுரம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

1882. சென்னையில் முதன் முதலாக தொலைபேசி அறிமுகப்படுத்தப்பட்டது.

1935. ஐஸ்லாந்தில் கருக்கலைப்பு சட்டப்பூர்வமாக்கிய முதல் நாடானது.

1987. இலங்கையில் முதலாவது இராணுவப்படுகொலை மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலைப் பகுதியில் ஆரம்பமானது. (ஜனவரி 28,29,30 ஆகிய மூன்று நாட்களும் நடைபெற்றது) 86 தமிழ் இளைஞர்கள் படுகொலைசெய்யப்பட்டனர்.

1973. தமிழர் இளைஞர் பேரவை ஒன்றும் அமைப்பு உருவாக்கப்பட்டது. (தனிநாடு என்ற கோரிக்கையை தமிழர் பிரச்சினை தீர்வாக முன் வைத்தது)

1974. இலங்கையில் புதிய தமிழீழப் புலிகள் அமைப்பு உருவாக்கம்.

1976. இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உருவாக்கம்.

**ஜனவரி – 29** ✦ உலக தொழு நோயாளர் தினம்

1595. ஷேக்ஸ்பியரின் ரோமியோவும் ஜூலியட்டும் நாடகம் முதன் முதலாக அரங்கேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1780. இந்தியாவில் முதன்முதலாக ஜேம்ஸ் அகஸ்துஸ் ஹிக்கி என்பவர் கல்கத்தாவில் இந்தியாவின் முதல் பத்திரிகையான "வங்காள கெஜட்" என்னும் பத்திரிகையை வெளியிட்டார்.

1814. நெப்போலியன் பொனபார்ட்டின் பிரெஞ்சு இராணுவம் பிரியென் நகரில் இடம்பெற்ற சமரில் ரஷ்யாவை வெற்றி பெற்றது.

1861. கான்சஸ் ஐக்கிய அமெரிக்காவின் 34வது மாநிலமாக இணைந்தது.

1886. ஜேர்மனியரான கார்ல் பென்ஸ் பெட்ரோலினால் இயங்கும் முதலாவது தானுந்துக்கான காப்புரிமம் பெற்றார்.

1946. ஐக்கிய அமெரிக்காவில் CIG எனப்படும் மத்திய உளவுத்துறை குரூப் (Central Intelligence Group) அமைக்கப்பட்டது.

2009. இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வலியுறுத்தி சென்னை சாஸ்திரி பவன் முன்பு ஒரு இந்திய இளைஞன் (முத்துக்குமார்) தீக்குழித்து இறப்பு. முதலாவது இறப்பு.

2012. நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் கோயிலின் 108 அடி மகாராஜ கோபுரம் புதிதாக கட்டப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. நலதளம் நலகலசங்களை கொண்டது. இதனை இந்தியாவிலுள்ள கலியப் பெருமாள் புருஷோத்தமன் அமைத்தார். அத்திபாரம் 2011ல் நாட்டப் பட்டது.

**ஜனவரி – 30**
- தியாகிகள் தினம் - மகாத்மா காந்தியின் இறந்த நாளை தியாகிகள் தினமாக ஐ.நா. பிரகடனப்படுத்தியது.
- உலக தொழுநோய் தினம்.

1649. பொது நலவாயம் இங்கிலாந்து என்ற குடியரசு அமைக்கப்பட்டது.

1835. ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆண்ட்ரூ ஜாக்சன் கொலை முயற்சியில் இருந்து தப்பித்தார்.

1836 கைது செய்யப்பட்ட கண்டிய மன்னன் ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன் தமிழக வேலூர் சிறையில் காலமானார்.

1933. ஜேர்மனியின் குடியரசுத் தலைவரான ஹிண்டன் பர்க் அடொல்ப் ஹிட்லரைத் தலைமை அமைச்சராக நியமித்தார்.

1930. உலகின் முதலாவது Radiosonde சோவியத் ஒன்றியத்தில் உருவாக் கப்பட்டது.

1948. இந்தியாவின் தேசத் தந்தையான மகாத்மா காந்தி நாது ராம் கோட் சேயால் சுட்டுக்கொல்லப்பட்டார். இத்தினம் தியாகிகள் தினம் என அங்கீகரிக்கப்பட்டது.

1948. விமானத்தை கண்டுபிடித்த ரைட் சகோதரர்களில் ஒருவரான ஆர்வில்ரைட் இறப்பு (பிறப்பு- 19.08.1871).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1948. இந்திய அஹிம்சை போராட்ட வாதி மகாத்மா காந்தி தனது சட்ட மறுப்பு இயக்கத்தை கைவிட்டார்.

1980. அன்னை தெரேசாவிற்கு இந்திய உயர் விருதான பாரத ரத்தினா விருது வழங்கப்பட்டது.

1985. இந்திய நாடளுமன்றத்தில் கட்சி மாறல் தடைச்சட்டம் நிறைவேற்றப் பட்டது.

2015 இலங்கையின் 45வது பிரதம நிதியரசராக கனகசபாபதி பரிபலான் ஜனாதிபதி மைத்திரி பாலா சிறிசேனா முன்னிலையில் பதவியேற்றார். இலங்கையின் இரண்டாவது தமிழ் நிதிபரசராவார்.

**ஜனவரி – 31**

1747. பால்வினை நோய்களுக்கான முதலாவது மருத்துவ நிலையம் லண்டனில் லொக் மருத்துவமனையில் நிறுவப்பட்டது.

1915. ஜேர்மனி ரஷ்யாவுக்கு எதிராக நச்சு வாயுவைப் பயன்படுத்தியது.

1948. மகாத்மா காந்தியின் இறுதி ஊர்வலம் நடைபெற்றது (ஏழுமணி நேரம் இடைவிடாமல் நேர்முக வர்ணனை செய்து வானொலியில் ஒலிபரப்பப் பட்டது)

1958. ஐக்கிய அமெரிக்காவின் முதல் வெற்றிகரமான செயற்கை கோளான எக்ஸ்புளோரர்-1 விண்ணுக்கு ஏவப்பட்டது.

1955. யாழ்ப்பாணம் யா/புனித ஜோன் போஸ்கோ வித்தியாலயம் கத்தோலிக்க பாட்டுத் தந்தை ஜேம்ஸ் அடிகளாரும் ஆயராக இருந்த மேற்கு எமிலியானுப்பிள்ளை ஆண்டகை அவர்களினாலும் அமைக்கப் பட்டது.



கொழும்பு மத்திய வங்கியின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1961. நாசாவின் மேர்க்குரி-ரெட்ஸ்டோன் 2 விண்கலம் ஹாம் என்ற சிம்பன்சி ஒன்றை விண்ணுக்குக் கொண்டு சென்றது.

1961. சாமோஸ் என்ற பெயருடைய முதலாவது வேவு செயற்கைக் கோளை அமெரிக்கா செலுத்தியது.

1963. இந்தியாவின் தேசியப் பறவையாக மயில் அறிவிக்கப்பட்டது.

1966. சந்திரனில் முதன் முதல் மனிதனின்றி விண்கலம் லூாணா - 9 (USSR) இறங்கியது.

1971. பிரித்தானிய அரசின் கடைசி மகா தேசாதிபதி சோல்பரிபிரபு இறப்பு (பிறப்பு 1888)

1979. இலங்கை பாடசாலைகள் அனைத்திலும் பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும் என பொது சட்டம் அமுல் படுத்தப்பட்டது.

1990. ரஷ்யாவின் முதல் McDonalld's விரைவு உணவகம் மாஸ்கோவில் திறக்கப்பட்டது.

1996. கொழும்பு மத்திய வங்கியின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 86 பேர் இறந்ததோடு 1,400 பேர் வரை படுகாயமடைந்தனர்.

2009. 500ற்கு அதிகமான திரைப்படங்கள் நடித்த இந்திய நகைச்சுவை நடிகர் நாகேஷ் இறப்பு (பிறப்பு-27.10.1933).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரி

**பெப்ரவரி – 01**

1662. ஒன்பது மாத முற்றுகையின் பின்னர் சீனாவின் இராணுவத் தளபதி கொக்சிங்கா தாய்வான் தீவைக் கைப்பற்றினார்.

1788. ஐசாக் பிறிக்ஸ் மற்றும் வில்லியம் லோங்ஸ்ட்ரீட் ஆகியோர் நீராவிப் படகுக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.

1832. ஆசியாவின் முதலாவது அஞ்சல் தபால் வண்டி சேவை கண்டியில் ஆரம்பமாகியது.

1864. டென்மார்க் - புரூசியா போர் ஆரம்பமானது.

1880. யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்கும் இடையில் முதலாவது தபால் வண்டி Mail Coach சேவை ஆரம்பம்.

1884. ஒக்ஸ்போர்ட் (Oxford) ஆங்கில அகராதி வெளியிடப்பட்டது.

1893. தோமஸ் எடிசன் தனது முதலாவது அசையும் படத்துக்கான படப் பிடிப்பகத்தை நியூ ஜேர்சியில் கட்டி முடித்தார்.

1913. உலகின் மிகப்பெரிய தொடரூந்து நிலையம் Grand Central Terminal நியூயோர்க் நகரில் திறக்கப்பட்டது.

1917. உகண்டா அதிகாரத்தை சர்வதிகாரி "இடிஅமீன்" கைப்பற்றினார். மக்களை 90 நாட்களில் வெளியேற்றினார்.

1918. ரஷ்யா ஜூலியன் நாட்காட்டியில் இருந்து கிரிகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.

1929. அமெரிக்கா இசைத் திரைப்படமான The Broad Way Melody திரையிடப் பட்டது.

1946. ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது பொதுச் செயலாளராக நோர்வேயின்ட்றிகிவால் பதவியேற்பு.

1976. பிக்காசோவின் 119 ஓவியங்கள் பிரான்சில் களவு போயின.

1979. அயத்துல்லா கொமேனி 14 ஆண்டுகளுக்கு பிறகு ஈரானுக்குத் திரும்பினார்.

1989 இலங்கையின் 2வது நிறைவேற்று ஜனாதிபதியாக ஆர் பிரேமதாச பதவியேற்பு.

2003. அமெரிக்க விண்வெளிக் கலமான கொலம்பியா விண்வெளி வெடித்துச் சிதறியது. விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியப் பெண் கல்பனா சாவ்லாவும் மற்றும் ஏனைய விண்வெளி வீரர்களும் இறப்பு.

2005. கனடா ஓரினத் திருமணத்தை சட்ட பூர்வமாக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்க விண்வெளிக் கலமான கொலம்பியா
விண்வெளியில் பயணம் செய்த வீரர்கள்

2016. ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் கடலுக்கடியிலான கேபிள் முறை Seamewe நிலையத்தை மாத்தறையில் திறந்து வைத்துள்ளது.

**பெப்ரவரி – 02** ✱ உலக சதுப்பு நிலத் தினம்.

1878. துருக்கியின் மீது கிரேக்கம் போரை அறிவித்தது.

1880. முதலாவது மின்சார வீதி விளக்குகள் ஐக்கியஅமெரிக்க மாநிலங்களில் ஒன்றான இந்தியானாவில் நிறுவப்பட்டன.

1933. ஜேர்மனியின் நாடாளுமன்றத்தை சர்வதிகாரி அடெல்ப் ஹிட்லர் கலைத்தார்.

1969. தமிழ் நாடு முதலமைச்சர் அறிஞர் C.N. அண்ணாத்துரை இறப்பு (பிறப்பு: 15.09.1909) இவரது இறுதி ஊர்வலத்தில் ஒன்றரைக் கோடி மக்கள் கலந்து கொண்டது ஓர் உலக சாதனையாக பதிவு செய்யப்பட்டது

1989. செய்மதி தொலைக்காட்சி சேவை ஸ்கைப் தொலைக்காட்சி ஆரம்பிக்கப் பட்டது.

2014. யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக வீதி சமிக்ஞை விளக்குகள் யாழ் நகர் சத்திர சந்தியில் ஆரம்பிக்கப்பட்டது.

2008 தமிழிழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே 2002 இல் ஏற்பட்ட போர் நிறுத்த உடன்படிக் கையிலிருந்து விலகிக் கொள்வதாக இலங்கை அரசு பிரகடனப்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெப்ரவரி – 03**

1468. எழுத்து அச்சு இயந்திரத்தை கண்டுபிடித்த ஜேர்மனியரான ஜோகான் கார்டன்பேர்க் (Johan Gutenberg) பிறப்பு.

1690. ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது காகித நாணயம் மசாசூ செட்ஸில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1925. இந்தியாவில் முதல் மின்சார ரயில் போக்குவரத்து விக்டோரியா டெர்மினஸிலிருந்து குர்லாவிற்கு ஆரம்பமானது.

1944. இரண்டாம் உலகப் போரில் ஐக்கியஅமெரிக்கா மார்சல் தீவுகளை கைப்பற்றியது.

2010. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஏவுகணையை ஈரான் வெற்றிகரமாக ஏவியது.

2011. இலங்கையில் பயன்படுத்தப்படும் நிலக்கரி மூலம் இயங்கும் வைஸ்ரோய் புகை வண்டி சுற்றுலாத் துறையில் ஈடுபடுத்தப்பட்டு 25 வருடங்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு அதன் ஞாபகார்த்தமாக முத்திரை வெளியிடப்பட்டது. இதன் அகலம் 132cm உயரம் 30cm இதுவே இலங்கையில் வெளியிடப்படும் மிகப் பெரிய முத்திரை என தபால் சபை அறிவித்துள்ளது.

2017. இலங்கையில் தகவல் அறியும் சட்டமூலம் அமுல்படுத்தப்பட்டது.

**பெப்ரவரி – 04**

1834 இலங்கையின் ஆங்கிலப் பத்திரிகை சிலோன் ஒப்சேவர் முதலாவதாக வெளிவந்தது. பிரதம ஆசிரியர் E.J. Darley

1747. இத்தாலிய தமிழறிஞர் வீரமாமுனிவர் இறப்பு (பிறப்பு 08.11.1680).

1891. பிரபலமான ஓவியரும் சிற்பியும் வரை கலை ஓவியரும் கவிஞருமான மாக்ஸ் ஏர்ண்ஸ்ட் என்பவர் ஜேர்மனியில் பிறப்பு

1894. இலங்கை ஆங்கிலப் பத்திரிகை "சிலோன் ஒப்சேவர்" முதலாவதாக வெளிவந்தது.

200550



யாசீர் அரபாத்



அடெல்ப் ஹிட்லர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1946. இலங்கையின் தேசிய கீதமாக ஆனந்த சமரக்கோன் 1940ம் ஆண்டு எழுதி ஏற்கனவே பரவலாக புழக்கத்திலிருந்த ''நமோ நமோ மாதா'' எனத் தொடங்கும் சிங்களப் பாடலும் தேர்வுக்காக நியமிக்கப்பட்ட வற்றுள் அடங்கும். எனினும் வேறு இருவரால் எழுதப்பட்ட ஸ்ரீலங்கா மாதா பல யக மஹிமா எனத் தொடங்கும் பாடல் தெரிவு செய்யப்பட்டு சுதந்திரத் தினத்தன்று தேசிய கீதமாக வானொலி மூலம் நாடெங்கும் ஒலிபரப்பப்பட்டது.

1948. இந்தியத் துணைக்கண்டத்தின் தென் கீழ் கரைக்கு அப்பால் இந்து சமுத்திரத்தில் கிட்டத்தட்ட 20 மில்லியன் மக்கள் வாழும் தீவு நாடான ''இலங்கை'' ஐக்கியஇராச்சியத்திடமிருந்து சுதந்திரமடைந்தது.

1969. பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மூன்றாவது தலைவராக யாசீர் அரபாத் பதவியேற்பு. 29.10.2004 வரை.

1978. அணிசேரா நாடுகளின் 6வது தலைமைச் செயலாளராக இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன பதவியேற்பு (9.09.1979 வரை).

1978. இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக J.R. ஜெய வர்த்தன பதவியேற்பு (02.01.1989 வரை பதவி வகித்தார் ஐ.தே.கட்சி).

1982. இலங்கை அரசிற்கு ரூபவாஹினி தொலைக்காட்சி நிலையத்தை யப்பான் அரசு நன்கொடையாக கட்டி கையளித்தது.

1982 இலங்கைத் தமிழ்களுக்கு தனிநாடு (தமிழிழம்) வேண்டுமென்று வலியுறுத்தி அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் நகரில் சர்வதேச ரீதியில் முதல் மாநாடு நடைபெற்றது.

1982. இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக சர்வதேச ரீதியில் நடைபெற்ற முதல் மாநாடு இலங்கை தமிழர்களுக்கு தனிநாடு (தமிழிழம்) வேண்டுமென்று வலியுறுத்தி அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் நகரில் வாஷிங்டன் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

1999. இலங்கையின் 50வது வருட சுகந்திர பொன்விழாவில் பிரிட்டன் இளவரசர் சாள்ஸ் தலைமை தாங்கினார்.

2004. ஐக்கிய அமெரிக்கா கலிபேர்னியா மாநிலத்தை தலைமையகமாகக் கொண்டு இலவச சமூக வலையமைப்பான Face book ஆரம்பிக்கப் பட்டது.

2011. இலங்கையின் 11வது நாணயத்தாள் தொடர்கள் மத்திய வங்கியால் வெளியிடப்பட்டது.

2016. 1949 இல் 1வது சுதந்திர தின விழாவுக்கு பின் இன்றைய 68வது சுதந்திர தின விழா தமிழ் தேசிய கீதத்துடன் நிறைவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெப்ரவரி – 05**

1898. நவீன உரைநடை இலக்கியத்தின் முன்னோடியும் படைப்பாளிகளில் முக்கியமானவருமான மற்றும் கொழும்பு ஷாகிரா கல்லூரி ஸ்தாபகருமான அறிஞர் முகம்மது காசிம் சித்திலெப்பை இறப்பு (பிறப்பு 11.06.1838).

1900. பனாமா கால்வாய் தொடர்பாக ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.

1917. மெக்சிக்கோவின் தற்போதைய கூட்டாச்சி அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1931. ஜவஹர்லால் நேருவின் தந்தை மோதிலால் நேரு இறப்பு.

1958. ஐக்கிய அரபுக் குடியரசின் முதலாவது அரசுத்தலைவராக கமல் அப்துல் நாசர் நியமிக்கப்பட்டார்.

1960. ரஷ்ய மக்கள் நட்புறவு பல்கலைக்கழகம் ரஷ்ய தலைநகர் மொஸ் கோவில் ஆரம்பிக்கப்பட்டது.

1962. புதன், செவ்வாய், வெள்ளி, வியாழன், சனி ஆகிய ஐந்து கோள்களுடன் சந்திரன், சூரியன் ஆகியவை வான் வெளியில் அதிசயமான நிகழ்ச்சியாக ஓரே வரிசையில் தோன்றின.

1989. இலங்கையில் முதலாவது விகிதாசார பிரதிநிதித்துவ பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது.

1995. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஜனாதிபதி சந்திரிக்கா அரசின் படைகளுடனான மோதல் தவிர்ப்பை கண்காணிக்கும் குழு யாழ்ப் பாணம் வந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்தது.

**பெப்ரவரி – 06**

1819. ஸ்டாம் போர்ட் ராபில்ஸ் என்பவரால் சிங்கப்பூர் அமைக்கப் பட்டது.

1863. சிலோன் பேட்ரியட் (The Ceylon Patriot) இதழ் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது.

1912. சர்வதிகாரி அடொல்ப் ஹிட்லரின் மனைவி இவா பிராண் பிறப்பு. (இறப்பு 30.04.1945).

1931. மேதிலால் நேரு இந்திய அரசியற்தலைவர் இறப்பு (1861)

1958. உலகின் மிகப் பிரபலமான கால்பந்துக் குழுவான Manchester Unitedக்கு ஒரு கறுப்பு தினமாக அமைந்தது. குழுவைச் சுமந்து வந்த விமானம், பனிமலையில் மேல் எழும்பும் முன்னரே மோதி வெடித்துச் சிதறியது.

1959. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் முதலாவது டைட்டான் ஏவுகணை புளோரிடாவில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1978. இலங்கையின் (குடியரசுக்கு பின்) 3வது பிரதமராக ரணசிங்க பிரேமதாச பதவியேற்பு. (மார்ச் 3.1989 வரை).

2000. டாரஜா ஹலோனென் பின்லாந்தின் முதல் பெண் அதிபரானார்.

2002. ஐக்கிய நாடு சபையில் சிறுவர் விவகாரம் தொடர்பாக இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க உரையாற்றினார்.

2008. இலங்கையில் பிரஜைகள் (சேவை பெறுநர்கள்) பட்டயத்தை அரசு அறிமுகப்படுத்தியது.

2010. ஜனாதிபதி மகிந்த ராஜபக்சாவுக்கு ரஸ்யப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிப்பு.

## பெப்ரவரி – 07

1849. புதிய ரோமன் குடியரசு அமைக்கப்பட்டது.

1914. சார்லி சாப்ளினின் முதல் திரைப்படமான Auto Races at Venice திரையிடப்பட்டது.

1962. கியுபாவுடனான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தடைகளை ஐக்கிய அமெரிக்க கொண்டுவந்தது.

1971. சுவிஸ்சலாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1974. கரிபியக் கடலில் அமைந்துள்ள தீவு நாடான ''கிரெனடா'' ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1999. உலக தமிழ் இணைய மாநாடு சென்னையில் ஆரம்பிக்கப்பட்டது.

2010. கொஸ்தாரிக்காவின் முதல் பெண் ஜனாதிபதியாக லோரா சின்சில்வா தெரிவு செய்யப்பட்டார்.

## பெப்ரவரி – 08

1849. புதிய ரோமன் குடியரசு அமைக்கப்பட்டது.

1904. ரஷ்யா ஜப்பானிய யுத்தம் அதிகாரபூர்வமாக ஆரம்பம்.

1924. அமெரிக்காவில் முதன் முறையாக நச்சு வாயுவைப் பயன்படுத்தி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. சிறைச்சாலையில் கேஸ் சாம்பர் (Gas Chamber) எனப்படும் நச்சுப் புகையூட்டிய அறையில் ஜீஜோன் (Geejon) என்ற கைதிக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

1956. இலங்கையில் சிங்களம் மட்டும் ஆட்சி மொழி என்ற சட்டம் களனி மகாநாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டது.

1971. நாஸ்டாக் பங்குச்சந்தைக் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டது.

2010. முன்னாள் இராணுவத் தளபதியும் கூட்டுப் படைகளின் முன்னாள் தலைமை அதிகாரியும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது வேட்பாளராக போட்டியிட்டவருமான ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவப் பொலிஸாரால் கைது.

**பெப்ரவரி – 09**

1885. முதலாவது ஜப்பானியர் ஹவாய் தீவை வந்தடைந்தனர்.

1895. வில்லியம் மோர்கன் கரப்பந்தாட்டத்தை (Volley ball) கண்டுபிடித்தார்.

1900. இலங்கையிலும் இந்தியாவிலும் நில நடுக்கம் உணரப்பட்டது

1900. ஆண்கள் டென்னிஸ் விளையாட்டில் முதன்மையான போட்டித் தொடரான "டேவிஸ் கோப்பை" டென்னிஸ் பந்தயம் ஆரம்பிக்கப் பட்டது.

1971. அப்பலோ - 14 விண்கலம் மூன்று அமெரிக்கர்களுடன் பூமி திரும்பியது.

1977. தென்கிழக்காசியாவில் வழக்காடுவதில் தனக்கென ஓர் இடத்தை வகித்து இலங்கைக்கும் தமிழ் இனத்துக்கும் பெருமை தேடித்தந்த சட்ட மேதை ஜி.ஜி.பொன்னம்பலம் இறப்பு. (பிறப்பு 8.11.1901)

2010. இலங்கையின் ஆறாவது பாராளுமன்றம் (குடியரசுக்கு பின்)கலைக்கப் பட்டது.

**பெப்ரவரி – 10**

1815. கண்டி இராச்சியத்தை கைப்பற்றும் நோக்கில் பிரித்தானியர் கண்டியினுள் நுழைந்தனர்.

1815. கண்டி இராச்சியத்தை ஆண்ட கடைசி மன்னர் ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கனின் பதவிக்காலம் நிறைவுற்றது.

1870. கிறிஸ்தவ பெண்கள் இளையோர் அமைப்பு (YWCA) நியூயோர்க் நகரில் அமைக்கப்பட்டது.

1931. இந்திய தலைநகராக புதுடில்லி உருவாக்கப்பட்டது.

1942. மகாத்மா காந்தி தனது சிறைவாசத்திக்கு எதிராக உண்ணா நோன்பு இருப்பு. (மார்ச் 3 வரை)

1968. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் சோனியா காந்திக்கும் திருமணம் நடைபெற்றது.

1969. கலைஞர் டாக்டர்.மு. கருணாநிதி முதல் தடவையாக தமிழ் நாட்டின் முதலமைச்சராக பதவியேற்பு.

1997. மனிதனுக்கும் கணனிக்கும் இடையில் நடைபெற்ற செஸ் (Chess) போட்டியில் IBM நிறுவனம் உருவாக்கிய Deep Blue என்ற கணினி செஸ் விளையாட்டில் உலக வீரரான கேரி காஸ்பரோவைத் தோற் கடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெப்ரவரி – 11** ✦ நோயாளர் தினம்

1713. இந்திய முகாலயப் பேரரசன் ஜகாந்த் ஷா இறப்பு (பிறப்பு-1664).
1732. ஐக்கிய அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி ஜோர்ஜ் வாசிங்டன் பிறப்பு. (இறப்பு 14.01.1799) உலகின் முதலாவது ஜனாதிபதியுமாவார்.
1814. நோர்வேயின் விடுதலை அறிவிக்கப்பபட்டது.
1826. லண்டன் பல்கலைக்கழக கல்லூரி லண்டன் பல்கலைக்கழகம் என தரம் உயர்த்தப்பட்டது.
1847. அமெரிக்காவைச் சேர்ந்த ஒளி விளக்கு கண்டுபிடிப்பாளர் மற்றும் தொழிலதிபரான தோமஸ் அல்வா எடிசன் பிறப்பு (இறப்பு 18.10.1931).
1884 இலங்கையில் முதல்தடவையாக வில்சன் அப்புகாமி என்பவருக்கு தூக்குதண்டனை விதிக்கப்பட்டது.
1908. ''நான் இறந்த பின் என் கல்லறையில் தமிழ் மாணவன் என்று பொறித்து வையுங்கள்'' என்று கூறிய J.U.போப் லண்டனில் இறப்பு. (பிறப்பு 24.04.1820).
1924. ஈழத்தின் நாட்டுக் கூத்து நடிகர் நடிகமணி ஏ.ஏ. வைரமுத்து பிறப்பு (இறப்பு: 08.07.1989).
1929. வத்திக்கான் நகர் இத்தாலியிடமிருந்து விடுதலையடைந்தது.
1933. மகாத்மா காந்தி ஹரிஜன் என்ற பத்திரிகையைத் தொடங்கினார்.
1945. இரண்டாம் உலகப்போர் யால்ட்டா உச்சி மாநாடு முடிவடைந்தது.
1968. இஸ்ரேல் - ஜோர்தான் எல்லைச் சண்டை ஆரம்பம்.
1971. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் சோவியத் ஒன்றியம் உட்பட 87 நாடுகள் சர்வதேச நிலப்பரப்பில் அணுவாயுத தடையை கொண்டுவர முடிவெடுத்தன.
1974. ஈரானில் இஸ்லாமியப் புரட்சி ஆரம்பம்.
1990. தென்னாபிரிக்க சிறையில் 27 வருடங்கள் இருந்த நெல்சன் மண்டேலா விடுதலையானார்.
2011. தொடர்ச்சியான மக்கள் கிளர்ச்சியை தொடர்ந்து எகிப்து நாட்டின் அதிபர் கொஸ்னி முபாரக் தனது பதவியை இராஜினாமா செய்து இராணுவத்திடம் அதிகாரங்களை ஒப்படைத்தார்.
2016. இலங்கையின் 29வது சட்டமா அதிபராக Jayantha Jayasuriya நியமனம்.

**பெப்ரவரி – 12**

1809. சார்ள்ஸ்டாலின் இங்கிலாந்தின் ஸ்ரூபஸ்பர் என்ற சிறிய நகரத்தில் பிறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1809. அடிமை முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதனை ஒழிக்க முன்வந்த ஐக்கிய அமெரிக்காவின் 16வது குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன் பிறப்பு (இறப்பு 15.04.1865).

1818. தென் அமெரிக்காவிலே ஆர்ஜேன்டீனா நாட்டிற்கு மேற்காக அமைந்துள்ள நாடான "சிலி" ஸ்பெயினிடமிருந்து விடுதலையடைந்தது.

1921. டில்லி பாராளுமன்றத்தின் அடிக்கல் நாட்டப்பட்டது.

2006. அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டீவ் போசெட் என்பவர் (வயது 61) விமானத்தில் 42 ஆயிரத்து 450 கிலோ மீற்றர் தூரம் இடைவிடாமல் பறந்து உலக சாதனை.

**பெப்ரவரி – 13**

1668. ஸ்பெயின் போர்த்துக்கல்லை தனி நாடாக அங்கீகரித்தது.

1879. இந்திய சுதந்திர போராட்ட வீராங்கனையும், பாரதப்பிராந்திய ஆளுநர் பதவி வகித்த முதல் பெண் சிரோண்மணி கவிக்குயில் சரோஜினி நாயுடு பிறப்பு (இறப்பு 02.03.1949).

1914. சேர். பொன்னம்பலம் அருணாசலத்துக்கு சேர் பட்டம் இங்கிலாந்து அரசருடைய அதிகாரபூர்வமான பக்கிங்ஹாம் அரண்மனையில் வழங்கப்பட்டது.

1948 ஐ.நாடுகள் வானொலி ஆரம்பிக்கப்பட்டது.

1960. பிரான்ஸ் தனது முதலாவது அணுகுண்டை சோதித்தது.

1985. கொக்கிளாய் இராணுவ முகாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலில் அழிக்கப்பட்டது.

1990. இரண்டு ஜேர்மனிகளும் இணைவது குறித்து அறிவிக்கப்பட்டது.

1996. நேபாளத்தில் மக்கள் புரட்சி மாவோயிசவாத போராளிகளால் ஆரம்பிக்கப்பட்டது.

2006. இந்திய குடியரசுத் தலைவரான அப்துல் கலாம் கடற்படையின் "I.N.S. சிந்துரக்சக்" என்ற நீர் மூழ்கி கப்பலில் (விசாகப்பட்டினம்) மூன்றரை மணி நேரம் பயணம் செய்தார். இதன் மூலம் நீர் மூழ்கி கப்பலில் பயணம் செய்த முதல் ஜனாதிபதி என்ற பெருமையைப் பெற்றார்.

**பெப்ரவரி – 14** ✱ காதலர் தினம் - வேலன்டைன் என்ற பெயருடைய இரு கிறிஸ்தவத் தியாகிகளின் இறப்பை அடுத்து இந்நாள் வேலன்டைன் நாள் என்றும் காதலர்களே பெரும்பாலும் கொண்டாடுவதால் காதலர் தினம் என்றும் அழைக்கப் படுகின்றது. காதலர்கள் தவிர பலரும் தங்கள் அன்பை தெரிவித்துக் கொள்ளும் தினமாக இருப்பதால் அன்பர்கள் தினம் என்றும் அழைக்கப்பபடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1483. இந்திய முகாலயப் பேரரசன் ஸாகிருதீன் பாபர் பிறப்பு. (இறப்பு 26.12.1530).

1675. தொலைபேசிக் கருவிக்கான காப்புரிமத்திற்காக அலெக்சாண்டர் கிரகம்பெல் விண்ணப்பித்தார்.

1924. ஐக்கிய அமெரிக்கா தலை நகர் நியூயோர்க்கை தலைமையிடமாகக் கொண்டு சர்வதேச நிறுவனமான IBM அமைக்கப்பட்டது.

1927. யூகொஸ்லாவியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 700 பேர் இறந்தனர்.

1946. Eniac என்ற முதல் தலைமுறைக் கணணி அறிமுகமானது.

1956. சோவியத் கம்யுனிஸ்ட் கட்சியின் 20வது மாநாடு மொஸ்கோவில் ஆரம்பமானது.

1982 யப்பான் நாட்டின் மக்களால் அன்பளிப்பு செய்யப்பட்ட இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.

1987. இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நிதர்சனம் தொலைக்காட்சி சேவை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

1989. சாத்தானின் கவிதைகள் நூலை எழுதியதிற்காக சல்மான் ருஷ்டிக்கு ஈராக் தலைவர் ருகெமல்லா கொமெய்னி மரண தண்டனை விதித்தார்.

2003 8வது உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் பங்களாதேஸ் அணிக்கெதிரான போட்டியில் தொடர்ந்து 3 வீரர்களை ஆட்டமிழக்க செய்து ஹட்ரிக் சாதனை

2005. லெபனானின் முன்னாள் பிரதமர் ரபீக் ஹாரி சுட்டுக் கொல்லப்பட்டார்.

## பெப்ரவரி – 15

1399 கி.மு. மெய்யியளாளர் சோக்ரட்டீஸ் மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்டார்.

1564. இத்தாலிய வானியியலாளர், கணிதவியலாளர் மற்றும் வானிலையியலின் தந்தை எனப் போற்றப்படும் கலிலியோ கலிலி பிறப்பு (இறப்பு 08.01.1642).



அலெக்சாண்டர் கிரகம்பெல்



கவிக்குயில் சரோஜினி நாயுடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1675. உலகில் முதன் முதலாக விளம்பரங்களை பிரசுரித்த ''பப்ளிக் இண்டலிஜென்சர்'' பத்திரிகை இங்கிலாந்து தலைநகர் லண்டனிலிருந்து வெளியானது.

1796. இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பமானது.

1880. முதன் முதலாக அலெக்சாண்டர் கிரகம்பெல் மற்றும் சார்ள்ஸ் சம்நெர் டேய்டெர் ஆகியோரால் வாசிங்டனில் மின்காந்த தொலைபேசி இயக்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

1916. இலங்கையின் 3வது ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா பிறப்பு (21.2.2008 - 92 வயது)

1920. யாழ்ப்பாணத்தில் முதற்தடவையாக அரிசி பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டது.

1923. கிரகோரியின் நாட்காட்டியை கடைசியாக ஏற்றுக் கொண்ட நாடுகளில் கடைசியான நாடான கீரிஸ் கிரகோரியின் நாட்காட்டியை அங்கீகரித்தது.

1942. இரண்டாம் உலகப் போரில் சிங்கப்பூர் ஜப்பானிடம் வீழ்ந்தது. 80,000 மேற்பட்ட படையினர் போர்க் கைதிகளாக பிடிக்கப் பட்டனர்.

1942. இரண்டாம் உலகப் போரில் 242 ஜப்பானிய போர் விமானங்கள் அவுஸ்ரேலியா டார்வின் நகரைத் தாக்கின.

1949. இலங்கைப் பிரதமர்களான சாலமன் பண்டாரநாயக்கா - ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆகியோருக்கு மூன்றாவது பிள்ளையாக அனுரா பண்டாரநாயக்கா பிறப்பு. (இறப்பு 16.03.2008).

1982. இலங்கை தொலைக்காட்சி சேவையான Srilanka Rupavahini Co-opration ஆரம்பிக்கப்பட்டது.

2002. 2001 ஆம் ஆண்டு போர் நிறுத்தத்தை தொடர்ந்து சில கட்டுப்பாடுகளுடன் இலங்கையின் மத்திய மாகாணத் தலைநகரான கண்டியையும் வட மாகாணத்தின் தலைநகர் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் A9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டது.

2005. ஐக்கிய அமெரிக்கா கலிபோர்னியா மாநில சான் புரூனோவை தலைமையகமாகக் கொண்டு Google துணை நிறுவனமான You Tupe ஆரம்பிக்கப்பட்டது.

**பெப்ரவரி – 16**

1646. இங்கிலாந்தின் முதலாவது உள்நாட்டுப் போரின் கடைசிச் சமர் டெவன் நகரில் இடம்பெற்றது.

1796. ஆங்கிலேயர் கொழும்பை டச்சுக்களிடம் இருந்து கைப்பற்றினர்.

1934. ஆஸ்திரியாவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1945. இரண்டாம் உலகப் போரில் முதல் தடவையாக அமெரிக்கப் போர் விமானம் ஜப்பான் நாட்டின் தலைநகரான டோக்கியோவை தாக்கியது.

1946. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு உதயமாகியது. 53 நாடுகள் அங்கத்துவமாக இணைந்தது.

1959. பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் 22வது தலைவரானார்.

1985. லெபனான் நாட்டை தளமாகக் கொண்டு இயங்கும் ஹிஸ்புல்லா இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

1988. சிங்களத் திரைப்பட நடிகரும், அரசியல்வாதியும் மற்றும் முன்னாள் சந்திரிகா குமாரதுங்கா பண்டாரநாயக்கவின் கணவருமான விஜய குமாரதுங்க கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார் (பிறப்பு 09.10.1945).

2004. முதன் முதலாக நோயாளிக்கு மயக்க மருந்து கொடுக்காமல் இதயத்தில் அறுவைச் சிகிச்சை செய்து இந்தியா பெங்களுரில் உள்ள வோகாட் மருத்துவமனை புதிய சாதனை.

2016. உலகில் முதல் முதலாக வர்த்தக நோக்கில் முன்னேற்றம் பரிசோதனை Google Internet Baloon இலங்கையின் வெளியில் பறக்கவிடப் பட்டுள்ளது.

## பெப்ரவரி – 17

1869. மத்திய தரைக்கடலையும் செங்கடலையும் இணைக்கும் எகிப்திலுள்ள செயற்கை கால்வாயான சுயஸ் கால்வாய் திறக்கப்பட்டது. முதலாவது கப்பல் போக்குவரத்தும் நடைபெற்றது. இவ் கடலானது 63 கி.மீ நீளமும் 300 மீ அகலமும் உடையது.

1881. இலங்கையில் இரண்டாவது தடவையாக சனத்தொகை கணக் கெடுப்பு நடாத்தப்பட்டது நாட்டின் மொத்தத் தொகை 2,759,738 ஆகும்.



கொழும்பு நகரத்தின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1890. பிரித்தானிய நீராவிக் கப்பல் ஒன்று சீனக் கடலில் மூழ்கியதில் 400 பேர் கொல்லப்பட்டனர்.

1924. விக்னேஸ் என்பவர் கலர் பிலிம் ரோலைக் கண்டுபிடித்தார்.

1936. சிறுவர்களுக்கான அதிமேதவி மாயாவி முதற்தடவையாக வரை கதைகளில் தோன்றினார்.

2000. Windows 2000 வெளியிடப்பட்டது.

2005. சர்வதேச முதலாவது T20 போட்டி அவுஸ்ரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நியுசிலாந்து அக்லாந்தில் உள்ள ஈடன் புங்காவில் நடைபெற்றது. இப்போட்டியில் அவுஸ்ரேலியா அணியினர் 44 ஓட்டங்களினால் வெற்றி பெற்றனர்.

2010. இலங்கையின் பிரபல தொலைக்காட்சி மேடை நாடக நடிகையான மணிமேகலை இராமநாதன் இறப்பு.

2016 அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு முதன் முதலாக அனுப்பப்பட்ட கடலில் இணையத்தள பலூன் பரிசோதனையின் பின் புசல்லாவை பகுதியில் தரையிறக்கப்படடது.

**பெப்ரவரி – 18**

1546. ஜேர்மனிய சமய சீர்திருத்தவாதி மார்ட்டின் லூதர் கிங் இறப்பு (பிறப்பு - 10.11.1483).

1833. யாழ்ப்பாணம், கண்டி, கோட்டை என தனித்தனியாக இருந்த மூன்று அரசுகளையும் சிலோன் என்ற ஒரே அரசாக பிரித்தானிய அரசு இணைத்தது.

1833. தமிழிழத்தை சிறிலங்காவுடன் இணைந்து சிலோன் என்ற அரசு உருவாக்க அதிகாரம் அழித்த கோல்புறூக் சட்டம் செல்லுபடியற்ற சட்டமாகியது.

1836. 19ம் நூற்றாண்டின் இந்தியாவின் புகழ் பெற்ற ஆன்மீகவாதியும் விவேகானந்தரின் குருவான ஸ்ரீ ராம கிருஷ்ணர் பிறப்பு (இறப்பு 16.08.1886).

1911. முதலாவது அதிகாரபூர்வமான விமான அஞ்சல் சேவை இந்தியாவில் அலகாபாத்தில் ஆரம்பமானது.

1953. உலகில் முதல் முறையாக ஐக்கிய அமெரிக்கா நியுயோர்க் நகரில் 3D எனப்படும் முப்பரிமாணத் திரைப்படமான Bwana Devil திரையிடப் பட்டது.

1959. நேபாளத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1965. மேற்கு ஆபிரிக்கா நாடானதும் ஆபிரிக்கா கண்டத்திலே மிகவும் சிறிய நாடுமான "கம்பியா" ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை யடைந்தது.

1967. அணு குண்டைக் கண்டுபிடித்த றொபேட் ஓப்பன் ஹெய்மர் இறப்பு (பிறப்பு 1904).

1971. இந்தியாவில் முதல் செயற்கை கோள் தகவல் தொடர்பு ஏற்படுத் தப்பட்டது.

1992. பனம்பொருள் அபிவிருத்தி சபையில் முதன் முதலாக கல்வி அபிவிருத்தி உத்தியோத்தர் பதவி வழங்கப்பட்டது.

2006. சுவிர்சலாந்து ஜெனிவா நகரில் இலங்கை அரசுக்கு (இலங்கை சுதந்திரக் கட்சி) எதிராக நடைபெறவுள்ள பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் குழுவினர் கிளிநொச்சியிலிருந்து பயணம்.

2010. வடமேற்கு பாகிஸ்தானில் இரட்டைக் குண்டுத் தாக்குதலில் 41 பேர் பலியானதோடு 60 பேர் படுகாயமடைந்தனர்.

2010. அமெரிக்க வரி விதிப்பு அலுவலகத்தின் மீது விமானத்தை மோதி தற்கொலை குண்டுத் தாக்குதல்.

## பெப்ரவரி – 19

1473. பூமிதான் சூரியனை சுற்றுகிறது அது மட்டுமன்றி பூமி தன்னைத் தானேயும் சுற்றிக் கொள்கிறது என்ற உண்மையை முதன் முதலில் உலகிற்குத் தெரியப்படுத்திய வானவியல் அறிஞர் நிக்கோலஸ் கோபர்நிக்ஸ் (Nicolaus Copernicus) பிறப்பு.

1600. பெருவின் ஹீவாய்நப்புட்டினா என்ற எரிமலை வெடித்தது.

1800. பிரான்சின் முதன்மை ராஜப் பிரதிநிதியாக மாவீரன் நெப்போலியன் தன்னைத்தானே அறிவித்துக் கொண்டான்.



*மார்ட்டின் லூதர் கிங்*



*சரத் பொன்சேகா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1836 18ம் நூற்றாண்டின் இந்தியாவின் புகழ்பெற்ற ஆன்மீக வாதியும் விவேகானந்தரின் குருவான ஸ்ரீராம கிருஸ்ணர் பிறப்பு (இறப்பு 16.08.1886)

1855. தமிழறிஞர் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் பிறப்பு (இறப்பு 28.04.1942).

1876. ஆங்கில இதழான யாழ்ப்பாண கத்தோலிக்க கார்டியன் (Nicolaus Copernicus) முதலாவது இதழ் வெளியிடப்பட்டது.

1878. கிராமபோனின் காப்புரிமத்தை தோமஸ் அல்வா எடிசன் பெற்றார்.

1915. முதலாவது உலகப் போர் ஆரம்பமானது.

2012. சர்வதேச T20 போட்டி வரலாற்றில் தென்னாபிரிக்க துடுப்பாட்ட வீரர் றிச்சட் லெவி நியுசிலாந்துக்கு எதிரான போட்டியில் 45 பந்துகளை எதிர் கொண்டு அதி வேக சதத்தினை பூர்த்தி செய்து உலக சாதனை.

2016 இலங்கை வரலாற்றில் முதல் தடவை வானில் இருந்து பார்க்கும் வண்ணம் 'Flying Boat' சேவை வெலிகமவில் தொடங்கப்பட்டது.

**பெப்ரவரி – 20** ✱ உலக சமூக நீதி தினம்

1835. சிலியின் கொன்செப்சியோன் நகரம் நிலநடுக்கத்தில் அழிந்தது.

1946. இலங்கையில் முதல் முதலாக இரட்டைத்தட்டு பேருந்து சேவை ஆரம்பம்.

1961. அ.இ. தமிழரசுக்கட்சி தலைவரான SJV செல்வநாயகம் தலைமையில் தமிழ் பிரதேசங்களில் சிங்களமொழியை அமுல்படுத்துவதற் கெதிராக வடக்கு கிழக்கு மாகாணங்கள் எங்கும் கர்த்தால் அனுஷ்ரிக்கப்பட்டது.

1962. Friendship 7 Mercury என்ற விண்கலம் மூலம் ஜோன் கிளின் (Jhon Glenn) என்பவர் 4 மணி 55 நிமிட நேரங்களில் உலகை மூன்று முறை வலம் வந்தார். அத்தோடு உலகை முதன் முதலில் வலம் வந்தவர் என்ற பெருமையையும் பெற்றார்.

1986. இலங்கையின் தேசிய மரமாக நாக மரம் பிரகடனப்படுத்தப்பட்டது.

1987. இந்தியாவில் அருணாசலப்பிரதேசம் அசாமில் இருந்து பிரிந்து தனி மாநிலமாகியது.

2002. எகிப்தில் தொடரூந்து ஒன்று தீப்பிடித்ததில் 370 பேர் கொல்லப் பட்டனர்.

2009. இலங்கை கொழும்பு வான்படையினரின் தலைமையகக் கட்டடம் மற்றும் அதற்கு அருகில் முன்பாக உள்ள உள்நாட்டு இறைவரி திணைக்கள கட்டடத்தின் மீதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வான் புலிகளின் கரும்புலிகள் இரவு 10 மணியளவில் குண்டுத் தாக்குதல் நடத்தியதில் 2 பேர் கொல்லப்பட்டு 47 பேர் காயமடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011. தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்க தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தாயார் வேலுப்பிள்ளை பார்வதி அம்மாள் வல்வெட்டித் துறையில் அவரது இல்லத்தில் காலமானார்.

2011. இலங்கை ஹம்பாந்தோட்டையில் 35,000 பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய மகிந்த ராஜபக்ச சர்வதேச துடுப்பாட்ட விளையாட்டு அரங்கம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் திறந்து வைக்கப்பட்டது.

**பெப்ரவரி – 21** ✸ அனைத்துலக தாய்மொழித் தினம் - கிழக்கு பாகிஸ்தான் தலைநகர் டாக்காவில் வங்காள மொழியை அரச கரும மொழியாக ஆக்கக் கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின் போது உயிர் நீத்த நான்கு மாணவர்களின் நினைவாக இத்தினம் உலகளாவிய முறையில் மொழி தொடர்பாக நினைவு கூரப்படும் சிறப்பு தினமாக கொண்டாடப் படுகின்றது.

1804. நீராவியால் இயங்கிய முதல் தொடரூந்து இயந்திரம் இயக்கி சோதித்துப் பார்க்கப்பட்டது.

1924. சிம்பாவேயின் முதலாவது அதிபர் ராபர்ட் முகாபே பிறப்பு.

1924. தென்னிந்திய திரைப்பட நகைச்சுவை நடிகரான M.R. ராதா பிறப்பு (இறப்பு-17.09.1979).

1947. எட்வின் லாண்ட் முதலாவது உடனடி படப்பிடிப்பு கருவியை நியூயோர்க் நகரில் காட்சிப்படுத்தினார்.

1952. இந்தியாவின் முதல் பொதுத் தேர்தல் ஆரம்பம். (இரண்டாம் கட்டம்).

1963. பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் அனைத்து வியாபார நிறுவனங்களையும் அரசுடமையாக்கினார்.

1963. லிபியாவில் இடம்பெற்ற நில நடுக்கம் ஒன்றில் 500 பேர் வரை கொல்லப்பட்டனர்.

1965. அமெரிக்க கறுப்பினத் தலைவர் மல்கம் எக்ஸ் இறப்பு (பிறப்பு 19.05.1925).

1995. சிக்காக்கோவைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஸ்டீவ் பாஸ்செட் (Steve Fossett) பலூனில் தனி மனிதனாக பசுபிக் பெருங்கடலைக் கடந்து உலக சாதனை படைப்பு.

**பெப்ரவரி – 22** ✸ உலக சாரணர் தினம்

1658. டச்சுக்காரரினால் மன்னார் கைப்பற்றப்பட்டது.

1732. ஐக்கிய அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவர் ஜார்ஜ் வாசிங்டன் பிறப்பு (இறப்பு 14.12.1799).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1857. சாரணர் இயக்கத்தை ஆரம்பித்த இங்கிலாந்தில் பிறந்த ஆங்கிலத் தளபதி பேடன் பவல் பிறப்பு (இறப்பு 08.01.1941).

1936. இலங்கையின் இரண்டாவது அரசாங்க சபைத் தேர்தல் (Election to the State Council of Ceylon) ஆரம்பம். (07.03.1936 வரை இத்தேர்தல் நடைபெற்றது).

1944. மகாத்மா காந்தியின் மனைவி கஸ்தூரிபாய் காந்தி இறப்பு (பிறப்பு 11.04.1869).

1974. சாமுவேல் பிக் ஐக்கிய அமெரிக்க அதிபர் ரிச்சார்ட் நிக்சனைக் கொலை செய்ய எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

2002. இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு திட்டவட்டமான ஒரு குறிக்கோளுடன் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினருக்கும் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு அடிப்படையில் செய்யப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையை கண்காணிப்பதற்கென ஸ்தாபிக்கப்பட்டது.

2002. இலங்கையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் பிரதமர் ரணில்விக்கிரம சிங்கவுக்கும் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கும் இடையே கைச்சாத் திடப்பட்டது.

2006. சுவிஸ்சர்லாந்து ஜெனிவாவில் இலங்கை அரசுக்கும் (இலங்கை சுதந்திரக்கட்சி) தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கிடையேயான முதல் சுற்று பேச்சு வார்த்தைகள் ஆரம்பம். (இப்பேச்சு வார்த்தை 23.02.2006 வரை நடைபெற்றது)

## பெப்ரவரி – 23

1904 பனாமா கால்வாயின் உரிமையை அமெரிக்கா 10 மில்லியனுக்கு வாங்கியது.

1905. ரோட்டரி அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

1919. இத்தாலியில் பெனிட்டோ முசோலினி பாசிசக் கட்சியை ஆரம்பித்தார்.

1947. அனைத்துலக தரநிர்ணய ஸ்தாபனம் (ISO) ஆரம்பிக்கப்பட்டது.

1966. சிரியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அரசு கவிழ்க்கப் பட்டது.

1974. தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரரும் சிறந்த களத்தடுப்பாளருமான Terschell Gibbs பிறப்பு.

1990. ஐக்கியநாடுகள் பொதுச் சபை தனது அரசியல் பிரகடனத்தில் அங்கத்துவ நாடுகள் அனைத்தும் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக உச்ச அளவில் முன்னுரிமை கொடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009. A.R. ரஹ்மானுக்கு கோல்டன் குளோப் விருது, இங்கிலாந்தின் பப்தா விருது மற்றும் ஆஸ்கார் விருதுகள் வழங்கப்பட்டன.

**பெப்ரவரி – 24**

1582. திருத்தந்தை 13ம் கிரகோரியின் ஆணைப்படி கிரகோரியின் நாட்காட்டி துவக்கி வைக்கப்பட்டது.

1886. தமிழ் தட்டச்சு பொறியை உருவாக்கிய ஆர். முத்தையா பிறப்பு.

1906. உலகப் புகழ் பெற்ற ஓவியங்களை வரைந்த ஓவியக்கலைஞர் ராகார விவர்மா இறப்பு.

1920. ஜேர்மனியில் நாசிக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

1928. பென்சிலின் மருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக பிளெமிங் என்ற விஞ் ஞானி அதிகார பூர்வமாக அறிவிப்பு.

1942. அமெரிக்கா வானொலியான ''வொய்ஸ் ஓப் அமெரிக்கா'' ஆரம்பிக்கப் பட்டது.

1945. எகிப்தியப் பிரதமர் அகமது மாஹிர் பாஸா நாடாளுமன்றத்தில் வைத்துக் கொல்லப்பட்டார்.

1948. இந்திய தமிழ் நாட்டு முதலமைச்சரும் நடிகையுமான செல்வி ஜெ. ஜெயலலிதா பிறப்பு.

1969. மரைனர் - 6 விண்கலம் செவ்வாய் கோளுக்கு ஏவப்பட்டது.

**பெப்ரவரி – 25** ✦ உலக காச நோய்த் தினம்

1836. சாமுவேல் கோல்ட் சுழல் துப்பாக்கிக்கான அமெரிக்கக் காப்புரிமத்தைப் பெற்றார்.

1837. மின்சாரத்தில் இயங்கும் மோட்டாருக்கான காப்புரிமத்தை தோமஸ் கமலன் போட் பெற்றுக்கொண்டார்.

1949. அறிஞர் அண்ணாத்துரை திரைக்கதை எழுதிய முதல் திரைப் படமான ''வேலைக்காரி'' திரையரங்குகளில் திரையிடப்பட்டது.

1964. உலக குத்துச் சண்டை வீரர் முகம்மது அலி உலக சம்பியன் பட்டம் வென்றார்.

1980. தென் அமெரிக்காவின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள நாடான சூரிநாமில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அரசாங்கம் கவிழ்க்கப் பட்டது.

1988. மாதிரி அணுவாயுதத்தைச் சுமந்து சென்ற இந்தியாவின் முதல் ஏவுகனை பிருதிவி (Prithivi) ஏவப்பட்டது.

2006. உலக மக்கள் தொகை 6.5பில்லியனைத் தாண்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011. இலங்கையின் முதலாவது கண் வங்கி கொழும்பு தேசிய வைத்திய சாலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் திறந்து வைக்கப்பட்டது.

2013. ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபையின் 22வது கூட்டத் தொடர் சுவிசர்லாந்து தலைநகர் ஜெனிவாவில் ஆரம்பம்.

**பெப்ரவரி – 26**

1936. இராணுவத்தினர் ஜப்பான் அரசைக் கவிழ்க்க இடம் பெற்ற புரட்சி தோல்வியில் முடிந்தது.

1986. இலங்கையின் தேசிய மரமாக நாகமரம் பிரகடனப்படுத்தப்பட்டது.

1986. இலங்கையின் தேசிய மலராக நீலோற்ப மலர் பிரகடனப்படுத்தப்பட்டது.

1991. உலகளாவிய ரீதியில் பரவிய வலையை (WWW) அறிமுகப்படுத்திய டி.எம். பொகோஸ் வி நெக்சல் முதலாவது இணைய உலாவியை அறிமுகப்படுத்தினார்.

1991. ஈராக்கின் பிடியிலிருந்து குவைத் முழுமையாக விடுதலையடைந்தது.

2001. ஆப்கானிஸ்தானில் தலிபான் அரசு மிகப் பழமையான இரண்டு புத்தர் சிலைகளை அழித்தது.

2007. கட்டுநாயக்கா விமான நிலையத்தின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் இலகு ரக விமானங்கள் மூலம் தாக்குதலை நடத்தினர்.

**பெப்ரவரி – 27**

1594. பிரான்சின் மன்னனாக நான்காம் ஹென்றி முடிசூடினான்.

1700. புதிய பிரித்தானிய தீவு கண்டுபிடிக்கப்பட்டது.

1801. ஐக்கிய அமெரிக்க தலைநகரான வாசிங்டன் டிசி நகரம் அமெரிக்க காங்கிரசின் நிர்வாகத்தின் கீழ் வந்தது.

1836. ரிவோல்வர் துப்பாக்கியைக் கண்டுபிடித்ததற்கான கண்டுபிடிப்பு உரிமையைச் சாமுவேல் கோல்ட் என்பவர் பெற்றார்.

1844. இலத்தீன் அமெரிக்க நாடான "டொமினிக்கன் குடியரசு" ஹெயிட்டியிட மிருந்து விடுதலையடைந்தது.

1879. செயற்கை இனிப்புட்டியான சக்கரின் கண்டுபிடிக்கப்பட்டது.

1900. பிரித்தானியாவில் பிரித்தானிய தொழிற்கட்சி அமைக்கப்பட்டது.

1993. ஜேர்மனி நாட்டின் தலைநகரான பெர்லினில் புகழ்பெற்ற நாடாளு மன்றம் தீயிட்டுக் கொழுத்தப்பட்டது.

2012. இலங்கையில் 14வது மக்கள் தொகை கணக்கெடுப்புக்கள் ஆரம்பம்.

2012. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 19வது கூட்டத் தொடர் நோர்வே தலைநகர் ஜெனிவாவில் ஆரம்பமாகியது. இக் கூட்டத் தொடரில் 47 நாடுகள் பங்குபற்றின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெப்ரவரி – 28** ✸ தேசிய அறிவியல் தினம் (இந்தியா) - சேர்.சி.வி. இராமன் தனது புகழ்பெற்ற ராமன் விளைவை (Raman Effaect) இந் நாளிலேயே கண்டுபிடித்தார் இந்தக் கண்டு பிடிப்பு உலகளாவிய பெருமையை இந்தியாவிற்கு பெற்று தந்ததுடன் உயரிய விருதான நோபல் பரிசும் கிடைத்தது. அந் நிகழ்வின் நினைவாக அறிவியல் என்பது அடித்தட்டு மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கோடு இந்தியா அரசு இத்தினத்தை தேசிய அறிவியல் தினமாக பிரகடனப்படுத்தியது.

1854. ஐக்கிய அமெரிக்காவில் குடியரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

1922. எகிப்து நாட்டிற்கு சுதந்திரம் வழங்கப்படுவதாக பிரிட்டன் அறிவித்தது.

1935. வோல்ஸ் கரோதேர்ஸ் என்பவரினால் நைலோன் கண்டுபிடிக்கப்பட்டது.

1953. ஜேம்ஸ் டி வாட்சன் மற்றும் பிரான்சிஸ் கிரிக் ஆகியோர் தாம் டி.என்.ஏ (D.N.A) வேதியியல் அமைப்பை கண்டுபிடித்ததாக அறிவித்தனர்.

1963. சுதந்திர சிற்பியும் பாரதத்தின் முதல் குடியரசுத்தலைவருமான டாக்டர். ராஜேந்திர பிரசாந் இறப்பு (பிறப்பு 03.12.1884).

1986. சுவீடன் நாட்டுப் பிரதமர் ஓலொப் பால்மே ஸ்டொக்ஹோம் நபரால் சுட்டுக்கொலை.

**பெப்ரவரி – 29**

1712. சுவீடனில் சுவீடன் நாட்காட்டியில் இருந்து ஜூலியன் நாட்காட்டிக்கு மாறுவதற்காக மாசி 29 ஆம் நாளுக்குப் பின்னர் மாசி 30ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1896. இந்திய விடுதலைப் போராட்ட வீரரும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சாராத முதல் பிரதமரான மொரார்ஜி ரன்சோதிஜி தேசாய் பிறப்பு (இறப்பு 10.04.1995).

1904. இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்கு பரிந்துரைத்த போது மறுத்த வரும் மற்றும் புகழ் பெற்ற நடனக் கலைஞருமான ருக்மணி தேவி அருண்டேல் பிறப்பு (இறப்பு 24.02.1986).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ச்

**மார்ச் – 01**

1873. முதலாவது தட்டச்சு பொறியை ரெயிங்ரன் சகோதரர்கள் நியூயோர்க்கில் தயாரித்தனர்.

1899. இலங்கையில் குற்றவியல் தண்டனைச் சட்டவிதித் தொகுப்பு the Ceylon Peace code நடைமுறைக்கு வந்தது.

1901. இலங்கையில் நான்காவது சனத்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப் பட்டது. மொத்த தொகையாக 3,565,954 பேர் பதிவாகினர்.

1910. சிந்தாமணி புகழ் ஏழிசை மன்னரான தமிழ்த் திரைப்பட நடிகர் M.K. தியாகராஜா பகவதர் பிறப்பு (இறப்பு 01.11.1959).

1912. பறக்கும் விமானத்திலிருந்து ஆல்பேர்ட் பெலி என்பவர் பரசூட்டில் இருந்து குதித்தார்.

1975. ஆஸ்திரேலியாவில் வர்ணத் தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப் பட்டது.

1980. பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரரும் சர்வதேச ஒருநாள் போட்டியில் அதிக சிக்ஸர் விளாசிய வீரரும் மற்றும் குறைந்த பந்தில் (37 பந்தில்) சதமடித்த வீரருமான Sahid Afridi பிறப்பு.

1981 இலங்கையில் ஊழியர் நம்பிக்கை நிதியம் 1980 ஆண்டின் 46ஆம் இலக்கம் கொண்டாட சட்டமாக நடைமுறைக்கு வந்தது ETF.

1995. அமெரிக்காவின் ஸ்ரான் போட் பல்கலைக்கழக பட்டதாரிகளான டேவிட் பிலோ மற்றும் கெரி ஜாங் என்பவர்களால் 1994 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட Yahoo! கலிபோர்னியாவை தலைமையிடமாகக் கொண்டு ஆரம்பம்.

2002. ஸ்பெயினில் யூரோ நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டது.

2011. கிபிர் விமானங்கள் இரண்டு இலங்கை கம்பஹா வான் பரப்பில் ஒன்றுடன் ஒன்று மோதி நொருங்கின.

2015 இலங்கையில் CSN TV சேவை இலங்கை அரசினால் நிறுத்தப்பட்டது.

**மார்ச் – 02**

1815. கண்டி மன்னர் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் மனைவி இராணி வெங்கட் றெங்கம்மா கைது செய்து மரக்கொடிகளால் கட்டி ஆபரணங்களையும் அபகரித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815. இலங்கை கண்டி இராச்சியம் பிரித்தானியர் வசமாயிற்று கண்டி மன்னன் சார்பில் பிரதானிகளும் பிரித்தானியர் சார்பில் தளபதி பிரவுண்றிக்கும் இடையே வெற்றி பெற்ற கண்டி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது (Kandyan Convention).

1815. கண்டி இராச்சியம் பிரித்தானியர் வசமாகியதை அடுத்து சிறைப் பிடிக்கப் பட்ட ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் என்ற கண்ணுசாமி தென்னிந்தியா வில் உள்ள வேலூர்க் கோட்டைக்கு அனுப்பப்பட்டார்.

1930. மகாத்மா காந்தி உப்புச்சத்தியாகிரகம் ஆரம்பிப்பதற்காக அகமத பாத்திலிருந்து குஜராத் கடலோரத்தில் இருந்து தண்டி நோக்கி 240 மைல் நடைபாதை பயணத்தை ஆரம்பித்தார்.

1935. உலகப் புகழ் பெற்ற வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதன் பிறப்பு. (இறப்பு - 08.09.2008).

1951. இலங்கை பாதுகாப்பு படையின் ஒரு முக்கிய பிரிவான இலங்கை விமானப்படை ஆரம்பம்.

1969. பிரான்ஸில் தயாரிக்கப்பட்ட ஒலி வேகத்தில் செல்லும் முதல் விமானம் "கன்னார்ட்" பறக்க விடப்பட்டது.

1991. இலங்கை பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரட்ணா மனிதக் குண்டுத் தாக்குதலில் கொழும்பில் கொல்லப்பட்டார் (பிறப்பு 04.04.1931).

2009. போரினால் பாதிக்கப்பட்ட வடபகுதி A9 நெடுஞ்சாலை செப்பனிடப் பட்டு நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட பின் படையினரின் போக்கு வரத்திற்காக திறக்கப்பட்டது.

## மார்ச் – 03 ✸ சர்வதேச மகிழ்ச்சி தினம்

1847. தொலைபேசிக் கருவியை கண்டுபிடித்த ஸ்கொட்லாந்து நாட்டுக் கண்டுபிடிப்பாளரும் விஞ்ஞானியுமான அலெக்சாண்டர் கிரகம் பெல் பிறப்பு (இறப்பு 02.08.1922).

1923. அமெரிக்காவின் முதல் நவீன செய்திப் பத்திரிகை TIME வெளிடப்பட்டது.

1938. அரேபியக் குடா நாட்டின் மிகப் பெரிய நாடான சவுதி அரேபியாவில் எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டது.

1971. இந்தோனேசியா பாகிஸ்தான் போர் ஆரம்பம்.

1989. இலங்கையின் 4வது பிரதமராக டிங்கிரி பண்டா விஜயதுங்கா பதவி யேற்பு (மே.7.1993 வரை).

1992. பால்கன் தீப கற்பத்தில் அமைந்துள்ள தெற்கு ஐரோப்பா நாடான "பொசுனியா-எர்செகோவினா" என்ற நாடு உருவாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1996. கேலிச்சித்திரத் துறையில் தனது ஆளுமையை வெளிப்படுத்திய யாழ்ப் பாணம் இணுவிலூரைச் சேர்ந்த சிரித்திரன் இதழாசிரியர் சி. சிவஞான சுந்தரம் இறப்பு.

**மார்ச் – 04**

1861. ஆபிரகாம்லிங்கன் அமெரிக்காவின் 16வது குடியரசுத் தலைவராக பதவியேற்றார். (4.3.1861 - 15.4.1865)

1931. இந்தியாவில் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப் பட வேண்டும் எனவும் மக்களின் அடிமட்டத்தினர் அனைவரும் உப்பைக் கட்டுப்பாடு ஏதுமின்றி பயன்படுத்தவும் பிரித்தானியாவின் ஆளுநர் எட்வர்ட் வூட் மற்றும் மகாத்மா காந்தி ஆகியோருக்கிடையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

1938. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க ஆலோசகர், தத்துவாசிரியர் கலாநிதி. அன்ரன் பாலசிங்கம் பிறப்பு (இறப்பு-14.12.2006).

1951. முதலாவது ஆசிய விளையாட்டுப் (Asian Games) போட்டிகள் இந்தியா தலைநகர் புது தில்லியில் ஆரம்பம். (6 விளையாட்டுகள் மட்டுமே நடைபெற்றன பங்கெடுத்த நாடுகள் 11 ஆகும். இப் போட்டி தொடரில் ஜப்பான் 24 தங்கம், 21 வெள்ளி, 15 வெண்கலம் என மொத்தம் 60 பதங்கங்களைப் பெற்று முதலிடத்திலும் இந்தியா 51 பதங்கங்களையும், ஈரான் 16 பதங்கங்களையும் பெற்று பதக்க பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்டன).

1960. இலங்கையில் ஒரே நாளில் பொதுத் தேர்தல் நடத்தப்படும் முறை பிரதமராக இருந்த தஹநாயக்க அவர்களினால் நான்காவது பொதுத் தேர்தலின் போது அறிமுகப்படுத்தப்பட்டது.

1972. இந்தியாவின் முதல் விளையாட்டு அருங்காட்சியகம் பாட்டியாலா என்ற இடத்தில் ஆரம்பம்.

1975. எலிசபெத் மகாராணி. உலக நகைச் சுவை நடிகர் சார்லி சாப்ளினுக்கு சேர் பட்டம் வழங்கிக் கௌரவித்தார்.

1980. சிம்பாபேயின் முதலாவது கறுப்பின பிரதமராக றொபேட் முகாபே பதவியேற்பு.

1997. குளோனிங் முறையில் மனிதனை நகலெடுக்கும் ஆராய்ச்சிக்கு அரசாங்க உதவி கிடையாது என்று ஆணைபிறப்பித்தார் அமெரிக்கா ஜனாதிபதி பில் கிளின்டன்.

2006 அசாம் மாநிலம் அசோட் மாநிலம் என பெயர் மாற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச்** – 05

1815. பிரித்தானிய பேரரசை போன்ற பலம் மிகுந்த நாட்டை எதிர்ப்பது சுலபமற்றது எனக் கண்டி அரசர் புரிந்து கொண்டு பிரித்தானிய - கண்டி உடன்படிக்கை ஒப்பந்தம் கைச்சாத்து. (British Ceylon)..

1964. இலங்கையில் அவசரகாலச் சட்டம் அமுலாகியது.

**மார்ச்** – 06

1079. ஓமார் கயாம் ஈரான் நாட்காட்டியை அமைத்து முடித்தார்.

1937. விண்வெளிக்குச் சென்ற முதல் வீராங்கனையும் ரஷ்யா விண்வெளி வீரருமான தெரெஷ்கோவா வலன்டீனா பிறப்பு.

1957. ஆபிரிக்கா கண்டத்தின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள "கானா" ஐக்கியஇராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1975. ஈரானும் ஈராக்கும் தமது எல்லை தொடர்பாக உடன்பாட்டுக்கு வந்தன.

1990 இலங்கையிலிருந்த இந்திய அமைதிப்படைகள் முற்றாக திருகோண மலை துறைமுகத்தினூடாக இந்தியா சென்றனர்.

2012. இலக்கமுறை தகவல்களை வழங்கும் ஒரு சேவையும் மற்றும் ஆன்டி ராய்டு பயன்பாடுகள் இசைக் கோப்புக்கள் புத்தகங்கள் திரைப்படங்கள் விளையாட்டுக்கள் போன்றவற்றை உள்ளடக்கிய ஓர் இணையக் கடையான கூகிள் பிளே (Google Play) ஆரம்பிக்கப்பட்டது.

**மார்ச்** – 07

1876. அலெக்சாண்டர் கிரகம் பெல் தொலைபேசிக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.

1918. முதலாம் உலகப்போரில் பின்லாந்து ஜேர்மனியுடன் கூட்டுச் சேர்ந்தது.

1969. இஸ்ரேலின் முதல் பெண் பிரதமராக கோல்டா மெயில் பதவி ஏற்பு.

1987. சர்வதேச துடுப்பாட்ட போட்டியில் 10,000 ஓட்டங்களை இந்தியா துடுப்பாட்ட வீரர் சுனில் கவாஸ்கர் பெற்றார். இவரே உலகில் 10,000 ஓட்டங்களை பெற்ற முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

1990. மகா ரிஷி எனப் போற்றப்படும் கவியோகி சுத்தானந்த பாரதியார் இறப்பு (பிறப்பு 11.05.1897).

1996. பாலஸ்தீனத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது நாடாளு மன்றம் அமைக்கப்பட்டது.

2009 மட்டக்களப்பை தலைமையகமாக கொண்டு பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தன் தலைமையில் இயங்கிய தமிழிழ மக்கள் விடுதலைப் புலிகள் தம்மிடமுள்ள ஆயுதங்களை அதிகாரபூர்வமாக அரசிடம் கையளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011. இலங்கையில் Carton Sports Net work (CSN) தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டது.

**மார்ச் – 08** ✱ அனைத்துலக பெண்கள் தினம் - பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலின வாதம் மற்றும் வன்முறைகளைப்பற்றிய விழிப் புணர்வு ஏற்படுத்தும் தினமாக கொண்டாடப்படுகின்றது - 1921

1868 முதன் முதலில் போக்குவரத்து சமிக்ஞை லண்டனில் பொருத்தப்பட்டது. Traffic Signal

1911. பெண்கள் தினம் முதல் முதலில் டென்மார்க்கில் கொண்டாடப்பட்டது.

1917. ரஷ்யப் புரட்சி ஆரம்பமானது.

1922. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தவரான சுன்னாகம் குமாரசாமிப்புலவர் இறப்பு (பிறப்பு 18.01.1854).

1933. உலகின் முதல் தனியார் துப்பறியும் நிறுவனம் பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நகரில் நிறுவப்பட்டது. ''விடேக்'' என்னும் முன்னாள் பிரான்ஸ் நாட்டுக் காவற்துறை அதிகாரி தம் பெயரிலேயே இந் நிறுவனத்தை ஆரம்பித்தார்.

1998. இந்திய அரசினது 24 மணி நேர விளையாட்டு ஒளிபரப்புச் சேவையான DD Sports ஆரம்பிக்கப்பட்டது.

2011. இலங்கை கண்டி பல்லேகலேயில் அமைந்துள்ள முத்தையா முரளிதரன் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் முதல் போட்டிக்காக ஆரம்பம். ( 35,000 பேர் அமர்ந்து பார்க்கலாம்).

**மார்ச் – 09**

1918. விண்ணில் பறந்த முதல் மனிதர் யூரிககாரின் (Yuri Gagarin) பிறப்பு.

1959. பார்பி பொம்மை முதன் முதலாக விற்பனை.

1986. நாசாவின் கொலாம்பியா விண்ணோட்டத்துக்கு அடுத்ததாக தயாரிக்கப்பட்ட இரண்டாவது விண்ணோட்டமான சலேஞ்சர் விண்ணோட்டத்தின் அழிந்த சிதைவுகளை ஐக்கியஅமெரிக்காவின் ஆழ்கடலோடிகள் கண்டு பிடிப்பு. இறந்த ஏழு விண்வெளி வீரர்களினதும் உடல்கள் உள்ளே இருந்தமை குறிப்பிடத்தக்கது.

2006. சனியின் துணைக் கோளான என்செலாடசில் திரவ நிலையில் நீர் கண்டுபிடிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2016 இலங்கை பாராளுமன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்றுவதற்கான பிரேரணை வாக்கெடுப்பின்றி பாராளுமன்றத்தில் நறைவேற்றம்.

**மார்ச் – 10**

1801. பிரித்தானியாவில் முதலாவது மக்கள் தொகை கணக்கெடுப்பு இடம் பெற்றது.

1876. அலெக்சாண்டர் கிரகாம் பெல் உலகின் முதல் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார்.

1902. துருக்கியின் டோச்சாங்கிரி என்ற நகர் நிலநடுக்கத்தினால் முற்றாக அழிந்தது.

1911. இலங்கையில் ஐந்தாவது மக்கள் தொகை கணக்கெடுப்பு நடாத்தப் பட்டதில் மொத்த தொகையாக 4,092,973 பேர் பதிவாகியதோடு யாழ்ப்பாணத்தில் 40,441 பேர் பதிவாயினர்.

1957. சிகாதிய தீவிரவாத இயக்கமான அல் கொய்தாவைத் தோற்று வித்த ஒசாமா பின்லாடன் என அறியப்படும் ஒசாமா பின் முகம்மது பின் ஆவாட் பின் லாடன் பிறப்பு (இறப்பு 01.05.2011).

1977. இந்தியாவைச் சேர்ந்த J.C. பட்டாச்சாரியார் மற்றும் பல நாட்டு விஞ்ஞானிகள் யுரேனேஸ் கோளைச் சுற்றியுள்ள வளையத்தை கண்டு பிடித்தார்கள்.

2010. துணிச்சல் மிக்க பெண்ணுக்குரிய விருதை அமெரிக்கா ராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனிடமிருந்து இலங்கைப் பெண் ஜென்சிலா மஜீத் பெற்றார்.



Numb. 1.

The Daily Courant.

Thursday, March 12. 1702.

From the Vienna Journal, Dated March 1. 1702.

Vienna, March 1.

THE Regiment of Hussars commanded by Major General Colonitz, consisting of 1000 Men, is on its March from Hungary towards Bohemia and the Empire; and several other Imperial Regiments are marching this way. Our new Levies are carried on with great Success, and Recruits are continually sending away to their respective Regiments. We have Advice from Adrianople that the Sultan is in that City, and that my Lord Paget, Embassador from England, is also arriv'd there from Constantinople, and preparing to set out for this Place in a few days. Count Teckely lives in so Poor a Con... otherwise call'd Nicomedia in Asia,

Guards of his Electoral Highness of Bavaria, and the Count D' Aurel, Governor of Luxemburg, are made Lieutenant Generals: The Counts of Grebendonk and Toulongeon, the Barons of Winterfelt and Noirmont, Don John de Ydiasques, and Don Antonio Amezaga, Brigadiers, and the Sieur Verboom Engineer General. Orders are given for the speedy repairing the Castle of Ter Vier, where an Apartment is to be got ready for the Duke of Burgundy, who is coming into this Country to Command as Generalissimo this Campaign. On Friday last the Marquess of Bedmar went to Ghent, where he is to receive on Sunday next, the Homage from the States of Flanders in the Name of His Catholick Majesty.

From the Amsterdam Gazette, Dated March 16.

உலகின் முதல் ஆங்கில செய்திப் பத்திரிகை 'The Daily Courant'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச் – 11** ✦ உலக சிறுநீரக தினம்.

1702. உலகின் முதல் ஆங்கில செய்திப் பத்திரிகையான 'The Daily Courant' லண்டனில் முதன்முதலாக வெளியிடப்பட்டது.

1858. இலங்கையில் முதல் தபால் முத்திரை வெளியிடப்பட்டது.

1902. யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறையில் இருந்து சாவகச்சேரி வரையான 21 மைல் நீளத் தொடரூந்துப் பாதை அமைக்கப்பட்டது.

1905. காங்கேசன்துறையிலிருந்து மதவாச்சி வரைக்குமான புகையிரத பாதை அமைக்கும் பணி நிறைவடைந்தது.

1955. நுண்ணுயிர் கொல்லியான சிதை நொதியைக் கண்டுபிடித்த மருத்துவ விஞ்ஞானி சேர். அலெக்சாண்டர் பிளேமிங் இறப்பு (பிறப்பு 06.08.1881).

1985. சோவியத் ஒன்றியத்தின் தலைவராக மிக்கேயில் கோபர்ச்சேவ் பதவி யேற்றார்.

**மார்ச் – 12**

1610. ஜேக்கப் டி லா கார்டி தலைமையில் சுவீடன் படைகள் மாஸ் கோவைக் கைப்பற்றின.

1894. Coca-Cola மென்பானம் முதற் தடவையாக கண்ணாடிப் புட்டியில் அடைத்து விற்கப்பட்டது.

1928. ஐக்கிய அமெரிக்க கலிபோர்னியா மாநிலத்தில் சென் பிரான்சிஸ் அனைக்கட்டு உடைந்ததில் 400 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

1967. இலங்கையில் மோட்டர் ரயர் உற்பத்தி ஆரம்பம்.

1968. ஆபிரிக்காக் கண்டத்திற்கு தென்கிழக்கு கடலோரப்பகுதியில் அமைந் திருக்கும் தீவு நாடான ''மொரீஷியஸ'' ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1981 இலங்கையில் ஜனாதிபதியை மக்களினால் தேர்ந்தெடுப்பதற்கான சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

1992. மொரிசியஸ் பொதுநலவாய அமைப்பினுள் குடியரசாகியது.

2003. விஜய் பத்திரிகை சிறுவர்களுக்கான வார இதழாக அறிவியல், விஞ் ஞானம், தொழிநுட்பம், விண்வெளித் தகவல்களை தாங்கி யதாக தமிழ் பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் பத்திரிகை என்ற அடிக்குறிப்புடன் மலர்-01 இதழ்-01 என முதன் முதலாக வெளிவந்தது.

2013. இலங்கைக்கும் கொரியாவுக்கும் இடையேயான விமான சேவை சுமார் 30 வருட கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013. இலங்கையில் 2009ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது இராணுவத் தளபதியாக செயற்பட்ட சரத் பொன்சேகா "ஜனநாயகக் கட்சி" என்ற பெயரில் புதிய கட்சி தொடங்குவதற்காக தேர்தல் ஆணையர் மஹிந்த தேசப் பிரியாவிடம் விண்ணப்பம் கையளித்தார்.

**மார்ச் – 13** ✱ உலக சிக்கன தினம்

1639 றொலாட் பல்கலைக்கழகத்துக்கு சமயவாதி கோகான் றொலாட் என்பவரின் பெயர் சூட்டப்பட்டது.

1833. பிரித்தானிய சட்டவாக்க சபை (Legislative Council of Ceylon) கோல்புறுக் - கேமரன் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் சேர். ரொபர்ட் ஹேட்டன் என்பவரால் ஆரம்பம். (இந்த சட்டசபை 1931 டொனமூர் அரசியலமைப்பின் மூலம் இலங்கை அரசாங்க சபையாக மாற்றப்பட்டது).

1921. மொங்கோலியா சீனாவிடமிருந்து விடுதலையடைந்தது.

1900. பிரான்சில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் வேலை நேரம் சட்டப்படி 11 மணி நேரமாகக் குறைக்கப்பட்டது.

2003. இத்தாலியில் 350,000 ஆண்டு பழமையான மனித அடிச்சுவடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக இங்கிலாந்திலிருந்து வெளிவரும் உயரிய இதழான நேச்சர் இதழ் அறிவித்தது.

2010. ஆப்கானிஸ்தானில் தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதலில் 35 பேர் பலியானதோடு 47 பேர் காயமடைந்தனர்.

2010. தமிழகத்தின் புதிய சட்ட சபைக் கட்டடத்தை முதல்வர் மு. கருணாநிதி மற்றும் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி முன்னிலையில் பிரதமர் மன்மோகன் சிங் திறந்து வைப்பு.

2015 இந்தியப்பிரதமர் (நரேந்திரமோடி) அவர்கள் இருபத்தெட்டு வருடங்களின் பின்னர் இலங்கைக்கு வருகை. நாடாளுமன்றத்தில் விசேட உரை.

**மார்ச் – 14**

1489. சைப்பிரஸ் மகாராணி கத்தரீன் கோர்னாரோ தனது இராச்சியத்தை இத்தாலி நாட்டின் வடகிழக்கு பகுதியான வெனிஸ் நகருக்கு விற்றார்.

1794. எலி விட்னி பஞ்சைத் தூய்மைப்படுத்தி அதன் விதையில் இருந்து பிரித்தெடுக்கும் காட்டன் ஜின் என்ற இயந்திரத்திற்கான காப்புரிமத்தைப் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1883. பொதுவுடமைக் கொள்கையின் மூலகர்த்தா கால்மாக்ஸ் இறப்பு. (பிறப்பு 05.05.1818).

1898. டாக்டர்.வில்லியம் கப்ரியேல் றொக்வுட் இலங்கையின் அரசியல் நிர்ணய சபைக்கு தமிழ் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டார்.

1965. இந்திய பிரபல ஹிந்தி திரைப்பட நடிகர் அமீர்கான் பிறப்பு.

1978. இஸ்ரேலிய படைகள் தெற்கு லெபனானை ஆக்கிரமித்துக் கைப் பற்றியது.

1998. இந்தியா காங்கிரஸ் கட்சியின் தலைவியாக சோனியா காந்தி நியமனம்.

2012. பிரித்தானிய தொலைக்காட்சி சேவையான சனல் - 4 இல் இலங்கை யில் இனப்படுகொலை போர் குற்றங்கள் மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள் போன்ற மீறல்கள் நடந்ததுக்கு ஒரு முக்கிய சாட்சியாக கருதப்படும் இலங்கையின் கொலைக்கள ஆவணப் படத்தின் இரண்டாவது பகுதியாக ''தண்டிக்கப்படாத போர் குற்றங்கள்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

2015 மடுவிலிருந்து தலைமன்னாருக்கான தொடரூந்து சேவை இருபத் தைந்து வருடங்களின் பின்னர் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் மீள ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

**மார்ச் – 15**
- ✸ உலக ஊனமுற்றோர் தினம்
- ✸ உலக நுகர்வோர் தினம்.

1493. இத்தாலிய கடற்பயண வீரரான கிறிஸ்தோபர் கொலாம்பஸ் அமெரிக்காவுக்கான தனது முதலாவது பயணத்தை முடித்துக் கொண்டு ஸ்பெயின் திரும்பினார்.

1776. பிரித்தானியாவிடமிருந்து விடுதலை பெற்ற முதலாவது அமெரிக்கக் குடியேற்ற நாடாக ஐக்கிய அமெரிக்காவின் தென்கிழக்கு கடற் கரைப் பகுதியில் அமைந்துள்ள தெற்கு கரோலினா பிரித்தானியாவிடமிருந்து விடுதலையை அறிவித்தது.

1802. இலங்கைத் தமிழ் ஊடகங்களில் சாதாரண மக்களால் அறியப்பட்ட ''கெசட்'' என்று அழைக்கப்படும் வர்த்தமானி பத்திரிகை இலங்கை அரசினால் முதலாவது பதிப்பு வெளியிடப்பட்டது. (தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளிவருகின்றது).

1877. முதலாவது சர்வதேச தேர்வுத் துடுப்பாட்டம் (Test Much) அவுஸ் ரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் ஆரம்பம். 19.03.1877 வரை நடைபெற்ற இப்போட்டியில் அவுஸ்ரேலியா அணி 45 ஓட்டங் களால் வெற்றி பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1932. இலங்கையின் தலைநகர் கொழும்பில் இருந்து வெளியாகும் ஒரு தேசிய தமிழ் நாளிதழான தினகரன் பத்திரிகை இலங்கையின் முன்னனி வெளியீட்டு நிறுவனமான லேக்ஹவுஸ் நிறுவனத்தால் முதன் முதலாக வெளியிடப்பட்டது.

1971 இலங்கையயை சுதந்திரமான உரிமை கொண்ட தன்னாதிக்கம் உள்ள குடியரசாதல் வேண்டும் என்ற தீர்மானம் பாராளுமன்றத்தில் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் முன்மொழியப்பட்டது.

1995. இலங்கை இரத்மலானை இந்துக்கல்லூரி மாணவர் விடுதி அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் திறந்து வைக்கப்பட்டது.

2002. இலங்கையில் முதன்முறையாக அரச அச்சகத்தினால் முத்திரைகள் வெளியிடப்பட்டன.

2012. 24 மணி நேரமும் கோல்வ் (Golf) விளையாட்டுக்களை மட்டும் நேரடி யாகவும் மறு ஒளிபரப்பாகவும் ஒளிபரப்புச் செய்யும் தொலைக்காட்சி சேவையான Ten Golf முதல் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

2015 இலங்கையின் 19 வது அரசியலமைப்பு திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்தது.

**மார்ச் – 16**

1521. உலகைச் சுற்றி வந்த முதல் மனிதராக அறியப்படும் பெர்டினென்ட் மகலன் தென் கிழக்காசியா நாடான பிலிப்பைன்ஸை அடைந்தார்.

1963. இந்தோனேசியாவில் உள்ள பாலித் தீவின் மிக உயர் இடத்தில் அமைந்துள்ள ஆகூங் எரிமலையில் நெருப்புக் கக்கியதில் 11,000 பேர் வரை இறப்பு.

1997. சுவர்ணவாகினி தொலைக்காட்சி ஆரம்பம்

2001. தென்னாபிரிக்கா முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலாவுக்கு 2000ம் ஆண்டுக்கான காந்தி அமைதி விருதினை இந்தியா வழங்கியது.

2004. இலங்கை நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தனது சொந்த ஊரான கண்டியில் அமைந்துள்ள அஸ்கிரிய விளையாட் டரங்கில் தனது 87வது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலியா வீரர் மைக்கல் கஸ்பரோவிச்சின் விக்கெட்டை நேரடியாகத் தகர்த்ததன் மூலம் 500வது விக்கெட்டை பூர்த்தி செய்தார். அத்தோடு இவ் இலக்கை வேகமாக குறைந்த போட்டியில் எட்டிப் பிடித்த பந்து வீச்சாளர் என்ற பெருமையையும் தனதாக்கிக் கொண்டார். இவருக்கு அடுத்த படியாக அவுஸ்ரேலியா சுழல் பந்து வீச்சாளர் சேன் வோர்ன் 108 போட்டி களிலும் மேற்கிந்திய தீவுகளின் வேகப் பந்து வீச்சாளர் கொட்னி வோல்ஸ் 129 போட்டிகளிலும் 500 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

2006. மனித உரிமைக்கான அமைப்பை உருவாக்குவதற்கு ஐக்கிய நாடுகள் பொதுசபை ஆதரவாக வாக்களித்தது.

2012. இந்திய துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் பங்களாதேஷ் நகர் மிர்புரில் நடைபெற்ற பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியில் சதத்தினை (114 ஓட்டம்) பெற்று சர்வதேச கிரிக்கெட் போட்டி வரலாற்றில் (டெஸ்டில்-51 ஒரு நாள் போட்டியில்-49) அடங்கலாக 100 சதங்களை பெற்ற முதல் வீரர் என்ற பெருமையை பெற்றுக் கொண்டார். ஆயினும் இப்போட்டியில் இந்திய அணி தோல்வி அடைந்தது.

**மார்ச் – 17**

1919. றோவ்லட் சட்டத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வதற்காக மகாத்மா காந்தி சென்னை வந்தார்.

1958. 1948ம் ஆண்டு ஐக்கியநாடுகள் ஜெனிவாவில் இடம் பெற்ற மகா நாட்டில் வரையப்பட்டு சர்வதேச கடல் சம்பந்தமான தாபனம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

1996. ஆறாவது உலகக்கிண்ண துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா அணியினர் 50 பந்து பரிமாற்ற நிறைவில் 241 ஓட்டங்களை பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியினர் 46.2 பந்து பரிமாற்றத்தில் 3 விக்கட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்து முதல் தடவையாக உலகக் கிண்ணத்தை இலங்கை அணியினர் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக அரவிந்த டீ சில்வா தெரிவு செய்யப்பட்டார். (14.02.1996 ஆரம்பமானது).

2000. கிழக்காபிரிக்கா நாடான உகண்டாவில் கடவுளின் பத்துக் கட்டளை களை மேம்படுத்தும் மத இயக்கம் ஒன்றின் உறுப்பினர்கள் 800 பேர் வரையில் அவ்வியக்கத் தலைவர்களினால் படுகொலை செய்யப் பட்டனர்.

**மார்ச் – 18**

1965. வாஸ்காட்-2 என்ற ரஷ்ய செயற்கைக் கோளில் சென்ற லியோனஸ் என்ற வீரர் முதன் முதலாக விண்ணில் நடந்து சாதனை புரிந்தார்.

1999. இந்தியத் தொலைக்காட்சி சேவையான தூர்தர்சன் அலைவரிசை தொடங்கப்பட்டது.

2002. இலங்கையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு கடமையில் அமர்த்தப் பட்டது. (16.01.2008 வரை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006. மலேசியா நாட்டின் சாஹிமி அப்துல் ஹமீது என்ற வாலிபர் ராஜ நாகத்திற்கு 3நிமிடங்களில் 51 முத்தங்கள் கொடுத்து பாம்புக்கு முத்தமிடுவதில் உலக சாதனை படைப்பு.

2013. இலங்கை ஹம்பாந்தோட்டை மத்தள இரண்டாவது சர்வதேச விமான நிலையம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சாவினால் திறந்து வைப்பு.

**மார்ச் – 19**

1932. அவுஸ்ரேலியாவில் அமைந்துள்ள உலகப் புகழ்பெற்ற சிட்னி துறைமுகப் பாலம் திறப்பு.

1972. இந்தியாவும் பங்களாதேஷமும் நட்புறவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

1988. இந்திய அரசிடம் நீதி கோரி உண்ணா விரதப் போராட்டத்தை அன்னை பூபதி மட்டக்களப்பில் தொடங்கினார். நீதி வழங்காத நிலையில் ஏப்ரல் 19ல் இறந்தார்.

1998. இந்தியப் பிரதமராக அடல் பிஹாரி வாஜ்பாய் பதவியேற்பு (மே.22. 2004 வரை பதவியில் இருந்தார்).

2008. முன்னாள் மெராட்டுவ பல்கழைகழகத்தின் உபவேந்தரும் விஞ்ஞானம் தொழினுட்பம் சம்பந்தமான பல நூல்களை எழுதிய ஆர்தர்.சி. கிளார்க் இறப்பு. (பிறப்பு 16.12.1917).

**மார்ச் – 20** வாயச் சுகாதார தினம்

1727. ஆங்கில கணிதவியலாளர் அறிவியலாளர் மற்றும் தத்துவஞானியு மான சேர். ஐசாக் நியூட்டன் இறப்பு. (பிறப்பு 25.12.1642)

1948. சிங்கப்பூரில் முதலாவது தேர்தல் இடம்பெற்றது.

1956. வட ஆபிரிக்கா கண்டத்தில் மத்தியதரைக் கடலை ஒட்டி அமைந்துள்ள ''துனீசியா'' பிரான்சிடமிருந்து விடுதலையடைந்தது.

2001. பிரிட்டன் கார்வோல்ட் பகுதியில் பறக்கும் விமானத்தின் சிறகுகள் மீது நடந்து சாதனை புரிந்தான் 10 வயதுடைய சிறுவன் கய்மேசன்.

**மார்ச் – 21**
- உலக வன தினம்.
- உலக செய்யுள் தினம் (கவிஞர்).
- உலக விசா தினம்
- மனம் நலிவுற்றோர் தினம்

1917. டானிஸ் மேற்கிந்திய தீவுகள் கன்னித் தீவுகள் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1948. இந்தியா பிரிக்கப்பட்டு பாகிஸ்தான் என்ற தனி நாடு பிறந்த பின் பாகிஸ்தான் நாட்டின் தந்தை என்று அழைக்கப்படும் முகம்மது அலி ஜின்னா உருது மட்டுமே பாகிஸ்தானின் அரசு மொழியாக இருக்கும் என பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் வைத்து பிரகடனப்படுத்தினார்.

1960. இலங்கையின் 6வது பிரதமராக டல்லி ஹெல்டன் சேனநாயக்க பதவியேற்பு 21.07.1960 வரை.

1990. ஆப்பிரிக்காவில் அட்லாண்டிக் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள நமீபியா தென் ஆப்பிரிக்கா ஆட்சியிலிருந்து விடுதலையடைந்தது.

2006. இலவச சமூக வலயமைப்பு சேவையும் மற்றும் மைக்ரோ வலைப் பதிவிடல் சேவையுமான டிவிட்டர் (Twitter) இணையத்தள சேவை ஆரம்பிக்கப்பட்டது.

2015 இலங்கையில் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து உக்குவிப் புக்காக மாதம் ரூபா 2000/= வழங்க அரசு அனுமதி வழங்கியது.

**மார்ச் – 22** ✱ உலக நீர் தினம் (World Water Day) - நீர் வளத்தின் ஒட்டுமொத்த திட்டத்தையும் நிர்வாகத்தையும் மேம் படுத்தி நீர் வள பாதுகாப்பை வலுப்படுத்தி நாள் தோறும் கடுமையாகவுள்ள நீர் பற்றாக்குறை பிரச்சனையை தீர்ப்பது என்பது தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் நோக்கமாக ஐக்கிய நாடுகள் அவையின் வேண்டு கோளுக்கிணங்க இத்தினம் உலகமெங்கும் கொண்டாடப் படுகின்றது.

1457. உலகிலேயே முதன் முதலில் புத்தக வடிவில் பதிக்கப்பட்ட பைபிள் நூல் (Gutenberg Bible) வெளியிடப்பட்டது.

1895. உலகின் முதல் திரைப்படம் திரையிடப்பட்டது.

1942. கொழும்பு தமிழர் முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இது 1945ம் ஆண்டு கொழும்பு தமிழ் சங்கமாக மாறியது.

1942. இரண்டாம் உலகப் போரில் பெலரஸ்கின் காட்டின் (Khatyn) நகரில் அனைத்து மக்களும் ஜேர்மனி படையினரால் உயிருடன் எரிக்கப்பட்டனர்.

1945. தென்மேற்கு ஆசியா, வடக்கு ஆபிரிக்கா, வட மேற்கு ஆபிரிக்கா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 22 நாடுகளின் கூட்டமைப்பான அரபு லீக் எனப்படும் அரபு நாடுகளின் கூட்டமைப்பு கெய்ரோவில் அமைக்கப் பட்டது.

1953. இலங்கையின் முதல் பிரதமர் D.S. சேனநாயக்கா குதிரைச் சவாரி செய்யும் போது அதிலிருந்து தவறி வீழ்ந்து இறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960. இலங்கையின் 7வது பிரதமராக சிறிமாவோ ரத்வத்த டயஸ் பண்டார நாயக்க பதவியேற்பு (27-3-1965 வரை).

1972. ஸ்ரீலங்கா என்ற பெயர் மாற்றம் பெற்றபின் முதலாவது இலங்கை பிரதமராக சிறிமாவோ ரத்வத்த டயஸ் பண்டாரநாயக்கா பதவியேற்பு (ஜீலை23.1977வரை).

2010. லண்டனைச் சேர்ந்த செய்தியாளர் நிறுவனமான த டைம்ஸ் இதழ் எல்லாக் காலங்களிலும் சிறந்த பத்து உலகக் கோப்பை வீரர்களில் ஆர்ஜென்டினா அணி வீரர் ஆர்மேண்டோ மரடோனாவை முதலாவதாக தேர்வு செய்தது.

**மார்ச் – 23** ✱ உலக வானிலை ஆய்வு தினம்.

1622. கிரேக்கத்துக்கான எல்லைகளை மூன்று வல்லரசுகளான பிரித்தானியா பிரான்ஸ் ரஷ்யா ஆகியன வரையறுத்தன.

1931. இந்திய சுதந்திர போராட்ட வீரன் பகத்சிங் இறப்பு (பிறப்பு 27.09.1907).

1956. பாகிஸ்தான் தனது நாட்டை இஸ்லாமியக் குடியரசாகப் பிரகடனம் செய்தது. இதுவே உலகின் முதலாவது இஸ்லாமியக் குடியரசு நாடாகும்.

1964 யோகர் சுவாமிகள் இறப்பு (1872)

1965. முதன்முதலில் பல அமெரிக்க வீரர்கள் ஒரே விண்கலத்தில் பயணித்தனர்.

1976. ஐக்கிய நாடுகள் சபையால் குடியியல் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையும் உடன்படிக்கை தெரிவுக்கான இறுதிப் பத்திரமும் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

1998. உலகளவில் சாதனை படைத்த டைட்டானிக் திரைப்படம் 11 ஒஸ்கார் விருதுகளைப் பெற்றது.

2001. இலங்கை தம்புள்ளையில் அமைந்துள்ள இரங்கிரி சர்வதேச துடுப்பாட்ட மைதானம் முதல் போட்டிக்காக ஆரம்பம். (16800 பேர் அமர்ந்து பார்க்கலாம்).

2010. இலங்கை மாலுமிகளுடன் பிரிட்டன் கப்பல் கொள்ளையர்களால் இலங்கை கடற்பரப்பில் வைத்து கடத்தல்.

2010. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுகாதார கவனிப்பு சட்ட மூலத்தில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கைச்சாத்து.

2015 சிங்கப்பூரின் முதலாவது பிரதமரும் நிருவாகத் தந்தையுமான Lee Kuanyew தனது 91 வது வயதில் காலமானார். பூதஉடல் 28.3.2015ல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

2015 இலங்கைப் பிரஜைகளுக்கு இரட்டைக் குடியுரிமை அனுமதிக்கப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச் – 24** ✱ உலக காச நோய் தினம் - மார்ச்.24.1882ஆம் ஆண்டில் டாக்டர்.றொபேர்ட் கோக் என்பவர் காசநோய்க்கான காரணியை (TB bacillus) பெர்லினில் அறிவித்து அறிவியல் உலகை வியப்பில் ஆழ்த்திய நூற்றாண்டு நினைவு நாளில் காசநோய் மற்றும் இருதய நோய்களுக் கெதிரான அனைத் துலக அமைப்பு (International Union Against Tuberculosis and Lung Disease – IUATLD) உலக காசநோய் நாளாக அறிவிக்க வேண்டுகோள் விடுத்து 1996ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பு (WHO) இந்நாளை உலக காசநோய் தினமாக அறிவித்தது.

1882. காசநோயை உருவாக்கும் நுண்ணுயிரைத் தாம் கண்டுபிடித்திருப்பதாக டாக்டர். ராபர்ட் கோக் ஜேர்மன் பெர்லினில் அறிவித்தார்.

1922. முன்னனி தென்னிந்திய திரைப்படப் பாடகர் 2003 இல் பத்மஸ்ரீ விருதினைப் பெற்ற D.M. சௌந்தராஜன் மதுரையில் பிறப்பு.

1947. ஆங்கிலக் கடற்படைத் தளபதியான மவுண்ட்பேட்டன் பிரபு இந்தியா வின் பிரித்தானிய ஆளுநரானார்.

1965. இலங்கையின் வடக்கு, கிழக்கில் தமிழ் மொழிப் பயன்பாட்டை ஏதுவாக்குவதற்கும் வட கிழக்கில் அரச நில பகிர்ந்தளிப்பில் தமிழ் மொழி பேசுவோருக்கே முன்னுரிமை வழங்கவும் டட்லி - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

1979. இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சுழல் பந்து வீச்சாளர் Greame Swan பிறப்பு.

1984. நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு இந்திய அரசு "பத்மபூசனம்" விருது வழங்கி கௌரவிப்பு.

1984 தமிழ்நாட்டின் காலம் சென்ற முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா ராஜ்ய சபா உறுப்பினராக முதல் முதலில் நியமிக்கப்பட்டார். அரசியலில் ஆரம்பம்.

1987. பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் Saqibul Hasan பிறப்பு.

1988. தென்னிந்திய கர்நாடக சங்கீத வித்துவான் சீர்காழி S. கோவிந்த ராஜன் இறப்பு (பிறப்பு- 1935).

1990. வடக்கு கிழக்கிலிருந்து இறுதி இந்திய அமைதிகாக்கும் படைகள் திருமலை துறைமுகமுடாக வெளியெறியது.

2003. எட்டாவது உலகக்கிண்ண துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா அணியினர் முதலில் அவுஸ்ரேலியா அணியினரை துடுப்பெடுத்தாட பணித்தனர். அதற்கமைய முதலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா அணியினர் 50 பந்து பரிமாற்ற நிறைவில் 2 விக்கட்டுக்களை இழந்து 359 ஓட்டங்களை பெற்றனர். பதிலுக்கு வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்தியா அணியினர் 39.2 பந்து பரிமாற்றத்தில் சகல விக்கட்டுக்களை இழந்து 234 ஒட்ங்களை மாத்திரமே பெற்றதனால் அவுஸ்ரேலியா அணியினர் 125 ஒட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்று உலகக் கிண்ணத்தை கைப் பற்றினர். ஆட்ட நாயகனாக ரிக்கி பொன்டிங் தெரிவு செய்யப்பட்டார். (இப் போட்டிகள் அனைத்தும் 09.02.2003 ஆரம்பமானது).

2003. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதானம் பிரிட்டிஷ் தூதுவர் செல்வி.லிண்டாஜோய்டபீல்ட் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**மார்ச் – 25**

1807. அடிமைகளை வர்த்தகம் செய்வது ஐக்கிய இராச்சியத்தின் சட்ட மூலம் தடைசெய்யப்பட்டது.

1821. பால்க்கன் மூவலந்தீவுக்குத் தென்புறத்தில் அமைந்துள்ள ''கிரேக்கம்'' உதுமானியாப் பேரரசிடமிருந்து விடுதலையடைந்தது.

1883. இலங்கையில் கிறிஸ்தவர்களுக்கும் பௌத்தவர்களுக்குமிடையில் கொட்டாஞ்சேனையில் கலவரம் நடைபெற்றது.

1950. 1947ல் அமெரிக்க வாஷிங்டன் மாநிலத்தில் இருந்த சர்வதேச வானிலை ஆராய்ச்சித் தாபன பணிப்பாளர்களின் 12வது மகா நாட்டில் அங்கீகரிக்கப்பட்டு உலக வானிலை ஆராய்ச்சித் தாபன மாக இயங்கத் தொடங்கியது.

1954. முதலாவது வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை RCA நிறுவனம் வெளியிட்டது. (12 திரையளவின் விலை 1000 டொலர்).

1957. மேற்குஜேர்மனி - பிரான்ஸ் - இத்தாலி - பெல்ஜியம் - நெதர்லாந்து மற்றும் லக்சம் பேர்க் ஆகியன இணைந்து ஐரோப்பிய பொருளாதார சமூகம் உருவாக்கப்பட்டது.

1981. யாழ்ப்பாணத்தில் முதலாவது வங்கிக் கொள்ளை நீர்வேலியில் அமைந்துள்ள இலங்கை வங்கியில் கொள்ளையிடப்பட்டது.

1992. ஐந்தாவது உலகக்கிண்ண துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியினர் 50 பந்து பரிமாற்ற நிறைவில் 6 விக்கட்டுக்களை இழந்து 249 ஓட்டங்களை பெற்றனர். வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய இங்கிலாந்து அணியினர் சகல விக்கட்டுக்களையும் இழந்து 227 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால் பெற்று 22 ஒட்டங்களினால் வெற்றி பெற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் தடவையாக உலகக்கிண்ணத்தை பாகிஸ்தான் அணியினர் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக வாசிம் அக்ரம் தெரிவு செய்யப்பட்டார். (22.02.1992ஆரம்பமானது).

1991. உலகம் பரவிய வலையை (www) கொனெஸ்லி அறிமுகப்படுத்தினார்.

1992. உலகக் கோப்பை துடுப்பாட்ட போட்டிகளில் 1000 ரன்களை எடுத்த முதல் ஆட்டக்காரர் என்ற பெருமையை பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர் ஜாவித் மியான்டாட் தனதாக்கிக் கொண்டார்.

2007. இலங்கையின் சர்வதேச கட்டுநாயக்க விமான நிலையத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானப்படை வீரர்கள் இரவு 12.45 மணியளவில் பெரும் தாக்குதல் மேற்கொண்டனர்.

2012. யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் சர்வதேச தரத்திலான சத்திரசிகிச்சை வசதிகளைக் கொண்ட தனியார் வைத்தியசாலை (நொதேன் வைத்திய சாலை) ஆரம்பிக்கப்பட்டது.

**மார்ச் – 26**

1871. இலங்கையில் முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம் பெற்றது. 2,405,287 பேர் பதிவாகினர்.

1934. ஐக்கிய இராச்சியத்தின் வாகன ஓட்டுனர்களுக்கான பரீட்சை அறிமுகப் படுத்தப்பட்டது.

1952. இலங்கையின் 2வது பிரதமராக டட்லி சேனநாயக்கா பதவியேற்பு (12.10.1953 வரை)

1953. போலியோ என்னும் இளம்பிள்ளை வாதத்திற்குப் தடுப்பூசி மருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக அமெரிக்கா டாக்டர். ஜோனாஸ் சாக் (Dr.Jona Salk) அறிவிப்பு.



இங்கிலாந்து பாராளுமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971. தெற்காசியா நாடான ''பங்களாதேஷ்'' பாகிஸ்தானிடமிருந்து விடுதலையடைந்தது. பாகிஸ்தான் இரண்டாக பிரிக்கப்பட்டது.

1979. எகிப்து நாட்டிற்கும் - இஸ்ரேல் நாட்டிற்கும் இடையே 30 ஆண்டுகளாக நடந்த போர் முடிவுக்கு வந்தது.

2006. முதலாவது அறிவியல் தமிழ் மாநாடு சென்னையில் ஆரம்பம்.

2007. இலங்கை தலைநகரான கொழும்பில் உள்ள அனைத்துலக விமான நிலையமான பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு அருகாமையில் உள்ள விமானப்படைத் தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரிவான வான்புலிகள் தாக்குதல்களை நடத்தினர்.

**மார்ச் – 27** ✱ உலக நாடக தனம்

1854. கிராமியப் போரில் ஐக்கியஇராச்சியம் ரஷ்யா மீது போரை அறிவித்தது.

1892. சைவ சமய முன்னோடியான சுவாமி விபுலானந்தர் பிறப்பு. (19.07.1947)

1914. உலகில் முதன் முதலாக இரத்த தானம் பெல்ஜியத்தில் உள்ள புரூஸெலஸ் நகர் மருத்துவமனையில் நடைபெற்றது.

1934. விண்வெளி வீரர் யூரிககாரின் பிறப்பு.

1965. இலங்கையின் 8வது பிரதமராக டட்லி ஹெல்டன் சேனநாயக்கா பதவியேற்பு. 29.05.1970 வரை.

1968. விண்வெளிக்குச் சென்ற முதல் வீரரான சோவியத் ஒன்றியத்தின் யுரி ககாரின் விமான விபத்து ஒன்றில் கொல்லப்பட்டார்.

1977. இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரரும் உலகின் தலை சிறந்த அணித் தலைவர்களுள் ஒருவருமான Mahela Jayawardena பிறப்பு.

1988. உலக வரலாற்றில் அதிகளவில் விற்பனையான ''வயாக்ரா'' மாத்திரை அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**மார்ச் – 28**

1802. ஓல்பேர்ஸ் என்பவர் 2 பேலேஸ் என்ற சிறுகோளை கண்டு பிடித்தார்.

1936. M.G. இராமச்சந்திரன் நடிப்பில் வெளி வந்த முதல் திரைப்படமான சதிலீலாவதி திரையரங்குகளில் திரையிடப்பட்டது.

1978 கவிஞர் கண்ணதாசன் தமிழ்நாட்டின் அரசவை கவிஞராக முதலமைச்சர் M.G. இராமச்சந்திரனால் (MGR) நியமிக்கப்பட்டார்.

1995. இலங்கை தலை மன்னாருக்கும் இந்தியா தனுஸ் கோடிக்கும் இடையிலான 32 கிலோ மீட்டர் தூரத்தை இந்தியா தமிழ் நாட்டைச் சேர்ந்த 8 வயது சிறுவன் பாலாஜி நீந்திக் கடந்து சாதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006. ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்டு சமுதாயப் பணியாற்றிய வேதாத்திரி மகரிஷி இறப்பு (பிறப்பு 14.08.1911).

2011. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதல் பெண் துணைவேந்தராக பேராசிரியர் செல்வி. வசந்தி அரசரட்ணம் நியமிக்கப்பட்டார்.

**மார்ச் – 29**

1867. பிரிட்டிஷ் வட அமெரிக்கா சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றில் தீர்மானமாகியது.

1960 யாழ்ப்பாணத்தில் தாதியக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. (அத்திவாரம் 1957ல்) முதலாவது தாதிய மாணவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

2004. உலகத்திலேயே அயர்லாந்து முதன் முதல் பொது இடங்களில் புகைப் பிடிப்பதற்கு தடைவிதித்தது.

2005. இலங்கையின் இலஞ்சம், ஊழல் பற்றிய தகவல்களைப் புலனாய்வு செய்வதற்கான மூன்றாாவது ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

2005. Yahoo 360 பாகை சேவை ஆரம்பிக்கப்பட்டது.

**மார்ச் – 30**

1842. குரோபோர்ட் என்பவர் அறுவைச் சிகிச்சையில் முதன்முதலாக மயக்க மருந்து பயன்படுத்தினார்.

1851. ஐக்கிய இராச்சியத்தில் மக்கள் தொகை கணக்கெடுக்கப்பட்டது.

1870. அமெரிக்கா நாட்டு அரசியலமைப்பில் கறுப்பு வெள்ளை என்ற இனப் பாகுபாடு இன்றி குடியுரிமை பெற்றுள்ள எல்லாப் பிரஜைகளுக்கும் வாக்குரிமை அளிக்க சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1905. இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சாவின் தந்தையான D.A. ராஜபக்சா ஹம்பாந்தோட்டை மாவட்டம் மெதமுலன என்னும் கிராமத்தில் பிறப்பு (இறப்பு 07.11.1967).

1981. ஐக்கிய அமெரிக்க 40வது குடியரசுத் தலைவர் றொனால்ட றேகன் வாஷிங்டன் மாநிலத்தில் ஜோன் ஹிங்கிளி என்பவனால் மார்பில் சுடப்பட்டார்.

2002. இலங்கையில் முதன் முதலாக குராஷ் என்னும் புதிய விளையாட்டு கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

2015 இலங்கை புகையிரத நிலையங்களில் இலவச Wi-Fi இணைய சேவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் காலை 10 மணிக்கு கொழும்பு புகையிரத நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச்** – 31

1885. இலங்கையில் தமிழ், சிங்கள, இஸ்லாமிய வருடப்பிறப்பு நாட்கள் விடுமுறைகளாக அறிவிக்கப்பட்டது.

1889. ஈபெல் கோபுரம் கட்டிமுடிக்கப்பட்டு திறப்புவிழா நடைபெற்றது. மக்களின் பாவனைக்காக 06.04.1889ல் திறக்கப்பட்டது.

1898. இலங்கை தமிழரசு கட்சியை ஆரம்பித்த தமிழ் தலைவர் சா.ஜே.வே. செல்வநாயகம் பிறப்பு.

1966. சந்திரனை முதன் முதலாக சுற்றி வந்த லூனா-10 என்ற விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

1992. ஐக்கியநாடுகளின் உலக அறிவாற்றற் சொத்துக்கான தாபனம் 129 அங்கத்துவ நாடுகளைக் கொண்டதாக விளங்கியது.

2001. உலக ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இந்திய துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் 10,000 ஓட்டங்களைப் பெற்றார். 10,000 ஓட்டங்களைப் பெற்ற முதல் வீரர் என்ற பெருமையையும் தன தாக்கிக் கொண்டார்.

2003. ஜப்பான் ஹாகோன் நகரில் இலங்கை அரசுக்கும் (ஐக்கியதேசியக் கட்சி) தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையேயான ஆறாம் சுற்று பேச்சு வார்த்தைகள் ஆரம்பம்.

2011. இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் போர் குற்றங்களை யும் மனித இனத்துக்கு எதிரான குற்றங்களையும் இழைத்துள்ளார்கள் என்று குற்றம் சாட்டி இலங்கைக்கான ஐக்கியநாடுகள் நிபுணர்குழு தமது அறிக்கையை செயலாளர் பான்கீ மூனிடம் கையளிப்பு. (இலங்கை அரசுக்கும் இவ் அறிக்கை பின்னர் கையளிக்கப்பட்டது. பொதுவில் வெளியிட முன்பு இலங்கை அரசு சார்புப் பத்திரிகையான தஐலாண்டில் இதன் கசிவுகள் வெளியாகின).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல்

**ஏப்ரல்** – 01 ✱ உலக முட்டாள் தினம் - 1466ம் ஆண்டு மன்னன் பிலிப்பை அவரது அரச சபை விகடகவி பந்தயம் ஒன்றில் வென்று மன்னனையே முட்டாளாக்கிய நாள் ஏப்ரல் முதலாம் நாள் என்பதனால் இத்தினம் உலக முட்டாள் தினமாக கொண்டாடப்படுகின்றது.

1307. கில்லட்டின் (Guillotine) என்ற தலையை துண்டிக்கும் வெட்டுக் கத்தியைக் கொண்டு முதன் முதலில் அயர்லாந்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

1565. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் திகதியை முட்டாள் தினமாக கொண்டாடப்படும் பழக்கம் முதலில் இங்கிலாந்தில் ஆரம்பமானது.

1857. 6 பென்ஸ் பெறுமதியானதும் விக்டோரியா மகாராணியின் தலை யுருவம் கொண்டதுமான முத்திரை இலங்கையில் வெளியிடப்பட்டது.

1877 உலக தபால் ஒன்றியத்தில் இலங்கை இணைந்து கொண்டது.

1935. இந்தியாவின் நடுவண் வங்கியும் அரசின் கருவூலமும் மற்றும் நாட்டின் செலாவணிக்குரிய நாணயத்தை வெளியிடுவதோடு நாட்டின் பல பொருளாதார நடவடிக்கைகளை இயக்கி வருவதுமான Reserve bank of India தொடங்கப்பட்டது.

1942. 1942ம் ஆண்டின் 18ம் இலக்க அரசாங்க சேவை சகாயநிதி கட்டளைச் சட்டத்தின் கீழ் அரசாங்க சேவை சகாய நிதியம் ஆரம்பிக்கப்பட்டது.

1951. இலங்கை வானொலியில் வர்த்தக சேவை சிங்களத்திலும் தமிழிலும் ஆரம்பமானது.

1957. இந்தியாவில் நயா பைசா நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டது..

1979. ஈரான் 98 வீத மக்கள் ஆதரவுடன் ஓர் இஸ்லாமியக் குடியரசாகியது.

1979. இலங்கையில் தேசிய விடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆரம்பிக்கப்பட்டது.

2001. முதலாவது நாடாக நெதர்லாந்து சமப்பால் திருமணத்தை சட்ட பூர்வமாக அனுமதித்தது.

2002. 24 மணி நேரமும் சகல விளையாட்டுக்களை நேரடியாகவும் மறு ஒளிபரப்பாகவும் ஒளிபரப்புச்செய்யும் தொலைக்காட்சி சேவையான Ten Sports முதல் ஒளிபரப்பை ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004. வலைத்தள மின்னஞ்சலான GMAIL (ஜிமெயில்) அறிமுகப்படுத் தப்பட்டது.

2010 இசைப்புயல் A.R. ரஹ்மானுக்கு இந்திய குடியரசுத் தலைவர் பிரதீபா பட்டில் "பத்மபூசன் விருது" வழங்கி கௌரவிப்பு.

2013. இலங்கை வடமாகாணத்தில் முதலாவது எரிவாயு மயானம் வவுனியா வில் ஆரம்பிக்கப்பட்டது.

**ஏப்ரல் – 02** ✱ உலக சிறுவர் நூல் தினம்.

1881. இந்தியா விடுதலைப் போராட்ட வீரர் மற்றும் சிறந்த இலக்கிய வாதியும் மொழி பெயர்ப்பாளருமான வ.வே.சு. ஐயர் பிறப்பு (இறப்பு 04.06.1925).

2011. பத்தாவது உலகக்கிண்ண துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 50 பந்து பரிமாற்ற நிறைவில் 6 விக் கட்டுக்களை இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய இந்தியா அணியினர் 48.2 பந்து பரிமாற்றத்தில் 04 விக்கட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்ததனால் இந்தியா அணியினர் உலகக்கிண்ணத்தை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக அணித் தலைவர் மகேந்திர சிங்டோனி தெரிவு செய்யப்பட்டார். (இப்போட்டித் தொடர் 19.02.2011 ஆரம்பமானது).

2011. ஒருநாள் சர்வதேச துடுப்பாட்ட போட்டியிலே முதல் தடவையாக நாணயச் சுழற்சி இரண்டு முறை இடம் பெற்றது. பத்தாவது உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் முதற் தடவையாக இலங்கை அணித்தலைவர் குமார் சங்கக்கார வென்றார். ஆனால் அவர் கூறியது பார்வையாளர்களின் பலத்த சத்தத்தினால் தனக்கு கேட்க வில்லை எனப் போட்டி நடுவர் ஜெப் குரோவ் குறிப்பிட மீண்டும் நாணயச் சுழற்சியில் ஈடுபடுமாறு அழைத்தார். அதற்கமைய இரண்டாவது தடவையாகவும் நாணயச் சுழற்சி நடைபெற்றது அதில் இலங்கை அணித்தலைவர் குமார் சங்கக்கார இரண்டாவது தடவையும் வென்றார்.

2011. உலக சாதனை படைத்த (354 போட்டியில் 534 விக்கட்டுக்கள்) இலங்கை சுழல் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் சர்வதேச ஒருநாள் துடுப்பாட்ட (ODI) போட்டியிலிருந்து ஓய்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏப்ரல்** – 03

1680. மராட்டிய வீர மன்னர் சத்திரபதி சிவாஜி இறப்பு (பிறப்பு 06.04.1627)

1917. வெளிநாட்டில் தஞ்சமடைந்திருந்த ரஷ்யாவின் முதல் அதிபர் விளாடிமிர் லெனின் நாடு திரும்பினார்.

1973. இந்தியா நடனப்புயல் மற்றும் உலகப் புகழ் பெற்ற பொப் இசைப்பாடகர் மைக்கல் ஜாக்சனுக்கு ஒப்பாக கருதப்படும் பிரபுதேவா பிறப்பு.

1973. உலகின் முதலாவது நகர்பேசி (Hand Phone) அழைப்பு நியுயோர்க் நகரில் மேற்கொள்ளப்பட்டது.

**ஏப்ரல்** – 04 ✸ உலக நிலக்கண்ணிகள் விழிப்புணர்வு தினம்.

1929. பெற்றோலினால் இயங்கும் ஊர்தியைக் கண்டுபிடித்த ஜேர்மனிய வாகனப் பொறியியலாளர் கார்ல் பென்ஸ் இறப்பு (பிறப்பு 25.11.1844).

1949. வடக்கு அத்திலாந்திக் நாடுகளின் பாதுகாப்பு ஒப்பந்தம் (NATO) ''வொஷிங்டன் ஒப்பந்தம்'' மூலமாக செய்து கொண்டன (இவ் அமைப்பில் 16 நாடுகள் அங்கத்துவம் பெறுகின்றன).

1968. அமெரிக்கா கறுப்பினத் தலைவர் மார்டின் லூதர் கிங் டென்னசி மாநிலத்தில் மெம்பிஸ் நகரில் வைத்து சுட்டுக்கொலை செய்யப்பட்டார் (பிறப்பு 15.01.1929).

1968. அப்பலோ - 6 விண்கலம் நாசாவினால் விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

1973. ஏழு உயரமான கட்டடங்களை உடைய உலக வர்த்தக மையம் ஐக்கிய அமெரிக்கா தலைநகரான நியுயோர்க நகரில் திறந்து வைக்கப்பட்டது.

1975. அமெரிக்காவை மையமாகக் கொண்டு செயல்படும் ஒரு சர்வதேச தொழில்னுட்ப நிறுவனமான மைக்ரோ சொவ்ட் (Microsoft) நிறுவனம் பில்கேட்ஸ் மற்றும் போல் அலென் ஆகியோரினால் உருவாக்கப்பட்டது.



*நிலாவில் நீல் ஆம்ஸ் ரோங்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979. பாகிஸ்தானில் ஏற்பட்ட இராணுவப் புரட்சியால் பதவி பறிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட சுல்பிக்கார் அலி புட்டோவுக்குத் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

1983. ஐக்கியஅமெரிக்கா நாசாவின் கொலம்பியா விண்ணோட்டத்திற்கு அடுத்ததாக தயாரிக்கப்பட்ட இரண்டாவது விண்ணோட்டமான சாலஞ்சர் விண்ணோட்டம் தனது முதலாவது பயணத்தை ஆரம்பித்தது.

2007. சார்க் நாடுகளின் அமைப்பில் ஆப்கானிஸ்தான் புதிய எட்டாவது நாடாக இணைந்து கொண்டது.

2012. ஐந்தாவது இந்தியன் பிரீமியர் லீக் (IPL) கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவில் கோலாகலமாக ஆரம்பம்.

**ஏப்ரல் – 05**

1930. மகாத்மா காந்தி இந்திய தெற்குத் திசையில் அமைந்துள்ள பெருங் கடலான அரபிக் கடலின் குஜராத் கடற்கரையோரப் பகுதியான தண்டியில் உப்புச் சட்டத்தை மீறி உப்பைக் கையிலே அள்ளி எடுத்து வந்து தனது 241மைல் நடைப் பயணத்தை முடித்தார்.

1933. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் தமிழ் இலக்கிய விமர்சகர் திறனாய்வாளர் கலாநிதி க.கைலாசபதி பிறப்பு (இறப்பு 06.12.1982).

1934. சட்டமேதை ஜி.ஜீ.பொன்னம்பலம் வடமராட்சியில் பாராளுமன்றத் தேர்தல் போட்டியிட்டு வெற்றிபெற்றார். தனது 31வது வயதில் முதலாவதாக அரசியலில் பிரவேசித்துள்ளார்.

1942. இரண்டாம் உலகப்போரின் போது யப்பான் இலங்கை தலை நகரான கொழும்பு மீது குண்டுகளை வீசியது.

1956. இலங்கை பொதுத்தேர்தலில் S.W.R.D. பண்டாரநாயக்கா தலைமையிலான சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றது.

1957. இந்திய தேர்தலின் மூலம் உலகின் முதல் பொதுவுடமை அரசாங்கம் கேரளாவில் முதல் முதலாக அமைக்கப்பட்டது.

1971. இலங்கை அரசிற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினர் ரோகண விஜயவீர தலைமையில் நாட்டின் பல பாகங்களிலும் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இதை தொடர்ந்து ஊரடங்கு சட்டம். நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டது.

1971 ஜனதா விமுக்திப் பெறமுனை (JVP) இயக்கத்தினால் யாழ்ப்பாண கோட்டை தாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986. இலங்கை தலைநகர் கொழும்பில் அமைந்துள்ளதும் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் நடத்திய வரிசையில் இரண்டாம் இடத்தைப் பெற்றதுமான சு. பிரேமதாசா மைதானம் முதல் போட்டிக்காக ஆரம்பிக் கப்பட்டது.

2008. சமூக வலையமைப்பான முகநூலில் (Face book) அரட்டை (Chat) அறிமுகப்படுத்தப்பட்டது.

2009. தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய நகரான புதுக்குடியிருப்பை முற்றிலும் கைப்பற்றியதாக இலங்கை இராணுவம் உத்தியோக பூர்வமாக அறிவிப்பு.

2010. இலங்கையில் புதிய 10 ரூபா நாணயக்குற்றி மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டது.

2016 பாராளுமன்றம் அரசியலமைப்பு நிர்ணய சபையாக மாற்றம். 7 பிரதி தலைவர்களும் நடவடிக்கை குழுவுக்கு 21 பராளுமன்ற உறுப்பினர்களும் நியமனம்.

**ஏப்ரல் – 06**

1896. முதலாவது ஒலிம்பிக் போட்டிகள் கிரீஸ் ஏதென்ஸ் நகரில் கோலாகல மாக ஆரம்பம்.15.04.1896 வரை இப்போட்டிகள் நடைபெற்றன.

1917. முதலாம் உலகப்போரின் போது அமெரிக்கா ஜேர்மனிக்கு எதிராகப் போர் பிரகடனம் செய்தது.

1919. இந்தியப் போராட்ட வீரர் மகாத்மா காந்தி பொது வேலை நிறுத்தத்தை அறிவித்தார்.

1998. இந்தியாவை தாக்கக் கூடிய நடுத்தர ஏவுகணைகளை பாகிஸ்தான் சோதித்தது.

2003 அமெரிக்க மற்றும் பிரிட்டன் படைகள் ஈராக் பாக்தாத் மற்றும் பஸ்ராவில் உள்ள அதிபர் சதாம் ஹுசைன் தங்யிருந்த மாளிகைக்குள் நுழைந்தன.

2004 இலங்கையின் 10வது பிரதமராக மகிந்த ராஜபக்ச பதவியேற்பு (21.11.2005 வரை).

2010. இலங்கையில் தொழிலாளர் தினத்திலிருந்து பேரூந்துகளில் பிச்சை எடுக்கத் தடை விதிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏப்ரல் – 07** ✱ உலக புகைபிடிக்காத நாள் (1988) No Tobacco Smoking Day

✱ உலக சுகாதார தினம் (World Health Day) - 1948 ஆம் ஆண்டில் இடம்பெற்ற உலக சுகாதார அமைப்பின் கூட்டம் ஒன்றில் ஒவ்வோர் ஆண்டும் 1950இல் இருந்து உலக சு காதார தினமாக கொண்டாடுவதற்கு தீர்மானிக்கப் பட்டது. அன்றில் இருந்து ஒரு முக்கியமான உலக சுகாதார அமைப்பின் முக்கியமான சுகாதாரம் சம்பந்தமான கருப் பொருளை மையமாகக் கொண்டு கொண்டாடப்படுகின்றது.

1923. ஆங்கிலேய வேதியியலாளர் ஜோன் வோக்கர் தான் கண்டு பிடித்த தீக்குச்சியை விற்பனைக்கு விட்டார்.

1927. முதலாவது தொலைதூரக் காட்சி சேவை வோஷிங்டன்டிசி மற்றும் நியுயோர்க் நகரம் ஆகியவற்றிக்கிடையில் இடம்பெற்றது.

1948. அனைத்துலக பொதுச் சுகாதாரத்திற்கான ஒருங்கிணைப்புப் பணிகளை செய்வதற்காக ஐக்கிய நாடுகளினால் "உலக சுகாதார அமைப்பு" (WHO) உருவாக்கம்.

1963. யுகோஸ்லாவியா சோசலிச குடியரசாகியது. மார்ஷல் டீட்டோ ஜனாதிபதி யானார்.

1964. IBM தனது System 360ஐ அறிவித்தது.

1978. தமிழிழ விடுதலைப் புலிகளின் பாசறையை தேடிச் சென்று அழிக்கும் நோக்கில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி பஸ்தியாம் பிள்ளையும் மற்றும் மூன்று உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர்களும் மன்னார் மாவட்ட காட்டுப் பகுதிக்குள் வைத்து செல்லக்கிளி என்ற போராளியால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

1989. இந்திய சகலதுறை துடுப்பாட்ட வீரர் கபில்தேவ் டெஸ்ட் துடுப்பாட்ட போட்டிகளில் 4000 ரன்களும், 300 விக்கெட்டுக்களும் பெற்ற உலகின் இரண்டாவது வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

1991. இந்தியாவிலே சிறந்த படத்துக்கான இந்திய அரசின் தங்கப்பதக்க பரிசை முதல் முறையாக "மறுபக்கம்" என்ற தமிழ் திரைப்படம் பெற்றது.

**ஏப்ரல் – 08** ✱ உலக உரோமர் கலாசார தினம்

563.கி.மு புத்த மதத்தை தோற்றுவித்த கௌதம புத்தர் பிறப்பு.

1867. முதலாவது உலக கண்காட்சி பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நகரில் ஆரம்பமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1938. நோபல் பரிசு பெற்றவரும் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் ஏழாவது செயலாளரும் கானாவைச் சேர்ந்தவருமான கோபி அனான் பிறப்பு.

1952. இலங்கையின் முதலாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

1957. எகிப்தில் உள்ள செயற்கைக் கால்வாயும் மத்திய தரைக்கடலையும் செங்கடலையும் இணைப்பதும் அத்தோடு 163Km நீளமும் 300m அகலமும் கொண்டதுமான சுயஸ் கால்வாய் மீளத் திறக்கப்பட்டது.

1958. பண்டா-செல்வா ஒப்பந்தம் எதிர்த்து SWRD பண்டாரநாயக்காவின் வீட்டின் முன்பாக பௌத்த குருமார்கள் சத்தியாக் கிரகத்தை ஆரம்பித்தனர்.

1958. பண்டா-செல்வா ஒப்பந்தம் எதிர்க்கட்சி தலைவர் J.R. ஜெயவர்த் தனவினது பௌத்த குருமார்களினதும் கடும் எதிர்ப்பினால் பண்டார நாயக்காவினால் கிழித்தெறியப்பட்டது.

1985. இந்தியாவில் விசவாயு அனர்த்தம் ஏற்பட்டதில் 2000 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

2002. யாழப்பாணம் - கண்டி வீதியான A9 பாதை யுத்தத்தின் பின்னர் போக்குவரத்துக்காகத் திறக்கபட்டது.

2010. இலங்கை நாடாளுமன்ற 7வது பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி வெற்றி பெற்றது.

2011. நான்காவது இந்தியன் பிரீமியர் லீக் கிரிக்கெட் (IPL) போட்டிகள் இந்தியாவில் கோலாகலமாக ஆரம்பம்.

2011. இலங்கை தொலைக்காட்சி சேவையான The Buddhist Tv ஆரம்பிக் கப்பட்டது.



இரண்டாம் உலகப் போரின் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏப்ரல் – 09**

1865. அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. இவ் யுத்தத்தில் 6 லட்சம் வீரர்கள் இறப்பு.

1942. இரண்டாம் உலகப் போரில் ஜப்பானிய கடற்படையினர் இலங்கை கிழக்கு மாகாண திருகோணமலை நகரைத் தாக்கினர். பிரித்தானியாக் கப்பல் (HMS Hermes) அவுஸ்ரேலியாக் கப்பல்கள் (HMAS Vampire) இலங்கையின் கிழக்கு கரையில் மூழ்கடிக்கப் பட்டன.

1967. உலகின் பிரபலமான பயணிகள் விமானம் போயிங் விமானம் - 737 முதலாவதாகப் பறக்கவிடப்பட்டது.

1984. யாழ்ப்பாணம் அடைக்கல மாதா ஆலயம் இலங்கை இராணுவத் தினரின் றொக்கட் தாக்குதலுக்கு உள்ளானது.

1991. கருங்கடலின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள "ஜோர்ஷியா" சோவியத் ஒன்றியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1999. மேற்கு ஆபிரிக்கா நாடான நைஜீரியாவில் அந்நாட்டு அதிபர் இப்ராகிம் மைனசாரா படுகொலை செய்யப்பட்டார்.

2003. அமெரிக்கப் படைகள் ஈராக் நாட்டின் மீது போர் தொடுத்து சதாம் ஹுசேனின் அரசைக் கைப்பற்றியது.

**ஏப்ரல் – 10** ✱ அன்னையர் தினம்

1658. இலங்கை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஊர்காவற்துறை கோட்டை டச்சுக்காரர்களினால் கைப்பற்றப்பட்டது.

1912. டைட்டானிக் பயணிகள் கப்பல் தனது முதலாவதும் இறுதியுமான பயணத்தை 2223 பேருடன் இங்கிலாந்து சௌதாம்டன் துறை முகத்தில் ஆரம்பித்தது.

1918. அவுஸ்ரேலியா புகழ் பெற்ற சிட்னி ஓப்ரோ மாளிகையை வடிவமைத் தவரான ஜோர்சன் அட்ர்சன் பிறப்பு (இறப்பு 29.11.2008).

1985. யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையம் கிளர்ச்சிக்காரர்களால் தாக்கப்பட்டது.

1985. இலங்கை அரசிற்கும் தமிழ் விடுதலை இயக்கங்களுக்குமிடையே திம்புவில் பேச்சுவார்த்தை ஆரம்பம்

1995. இலங்கையில் கொத்மலை நீர்த்தேக்க வேலைகளை ஆரம்பித்து வைத்த இந்தியப் பிரதமர் மொராஜி தேசாய் தனது 99 வயதில் இறப்பு (பிறப்பு 29.02.1896).

2001. ஐக்கிய அரபு அமீரகம் சார்ஜாவில் நடைபெற்ற இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேச துடுப் பாட்டப் போட்டியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அதிரடி வீரர் சனத் ஜெயசூர்யா ஒரு ஓவரில் 30 ஓட்டங்கள் குவித்து சாதனை.

2002. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் 12 ஆண்டுகளின் பின்னர் 400 பத்திரிகையாளர்களைக் கிளிநொச்சியில் சந்தித்துப் பேசினார்.

2004. மேற்கிந்திய துடுப்பாட்ட வீரர் பிரைன் லாரா இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் 400 ஓட்டங்களைக் குவித்து டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வரலாற்றில் ஒரு இனிங்ஸில் தனி நபர் பெற்ற அதிகூடிய ஓட்டமாக சாதனை படைப்பு.

2010. போலாந்து விமான விபத்தில் ஜனாதிபதி உட்பட 132 பேர் பலியானார்கள்.

2011. இலங்கை அரசாங்கத்திடம் நிபுணர் குழு அறிக்கை கையளிக்கப்பட்டது. (212 பக்கங்களை கொண்டமைந்தது. 16 பக்கங்களில் அறிக்கையின் வரையறை நோக்கு ஆய்வுமுறை, பரிந்துரைகள் போன்றன முன்வைக் கப்பட்டன. 122 பக்கங்களில் இலங்கை அரசும் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்த குற்றங்கள் ஆவணப்பட்டிருந்தன இறுதி 74பக்கங்களில் அறிக்கைக்கான ஆதார ஆவணங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அறிக்கை நவம்பர் 2008லிருந்து 18 மே 2009 வரையான நிகழ்வுகளை மட்டுமே ஆய்வின் வரையறையாகக் கொண்டிருக்கிறது).

**ஏப்ரல் – 11**

1865. ஐக்கியஅமெரிக்கா அதிபர் ஆபிரகாம் லிங்கன் தனது கடைசிப் பேச்சை நிகழ்த்தினார்.

1869. இந்திய விடுதலைப் போராட்ட வீரர் மகாத்மா காந்தியின் மனைவி கஸ்தூரிபாய் பிறப்பு (இறப்பு-1944).

1870 தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சி வீரர் லெனின் பிறப்பு 21.01.1924

1921. விளையாட்டு வர்ணனை முதல் முறையாக வானொலியில் ஒலிபரப் பானது.

1970. ஐக்கிய அமெரிக்கா நாட்டினால் நடைமுறைபடுத்தப்பட்ட ஒரு தொடரான அப்போலோ - 13 விண்கலம் ஏவப்பட்டது.

1997. பாம்புகள் திகில் நிறைந்த Anaconda திரைப்படம் திரையரங்குகளில் திரையிடப்பட்டது.

2003. உலகம் முழுவதும் பயத்தை ஏற்படுத்திய "சார்ஸ்" வைரஸ் நோய்க்கான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

2013. சோதனைக் குழாய் மூலம் குழந்தை பெறும் முறையை கண்டு பிடித்த பிரிட்டன் விஞ்ஞானி றொபேட் எட்வேர்ட்ஸ் 87வது வயதில் இறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998 ஆம் ஆண்டு முதலாவது சோதனைக் குழாய் குழந்தை பெற்று சாதனை படைத்ததோடு இவருக்கு 2010 ஆம் ஆண்டு நோபல் பரிசும் கிடைத்தது.

**ஏப்ரல் – 12**

- உலக வீதியோரச் சிறுவர்களுக்கான சர்வதேச தினம் (International Day for Street Children) - உலகெங்கும் கோடிக்கணக்கில் உள்ள வீதியோரச் சிறுவர்களின் நல்வாழ்வுக்கும் அவர்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கும் நாளாகக் கொண்டாடப்படுகின்றது. மொரோக்கோ, உகண்டா, எதியோப்பியா, குவாத்தமாலா மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளில் வீதியோரச் சிறுவர்களினால் கொண்டாடப்படுகின்றது. அத்துடன் ஐக்கியஇராச்சியம் மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகளில் பள்ளிச் சிறுவர்களும் இதனைக் கொண்டாடுகின்றனர்.
- மனித விண்வெளிப்பயணத்திற்கான சர்வதேச தினம் (International Day of Human Space Flight) - விண்வெளிக்கு முதன் முதலில் பயணம் செய்த ரஷ்யா வீரரான யுரி ககாரின் நினைவாக இந்நாளை சிறப்பு நாளாக கொண் டாடுவதற்கு 2011. ஏப்ரல் 4ஆம் நாள் கூடிய ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஏகமனதாகத் தீர்மானித்து இந்நாளை தேர்வு செய்து கொண்டாடுகின்றது.

1832. இலங்கையில் கட்டாய அரசசேவையை ஒழிக்கும் ஆணையை பிரித்தானிய அரசர் பிறப்பித்தார்.

1945. ஐக்கிய அமெரிக்க 32வது குடியரசுத் தலைவர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட் இறப்பு (பிறப்பு 30.01.1882).

1955. ஜோனாஸ் சால்க் என்பவரினால் கண்டுபிடிக்கப்பட்ட போலியோ நோய் தடுப்பூசி பாதுகாப்பானது என அறிவிக்கப்பட்டது.

1956. இலங்கையின் 4வது பிரதமராக சொலமன் ரிஜ்வே டயஸ் பண்டார நாயக்க பதவியேற்பு 26.9.1959 வரை.

1961. முதல் விண்வெளி வீரர் யூரிகாரின் வாஸ்டோக் விண்கலம் விண் வெளிக்கு முதன் முதல் சென்றது.

1980. மேற்கு ஆபிரிக்கா நாடான லைபீரியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து சாமுவேல் டோ நாட்டின் அதிகாரத்தை கைப் பற்றினார். 130 ஆண்டு கால மக்களாட்சி அமைப்பு முறை முடிவுக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983. பிரித்தானியா திரைப்படமான "காந்தி" எட்டு ஒஸ்கார் விருதுகளைப் பெற்றது.

2006. ஜீமெயில் (GMAIL) தொடர்பிலுள்ள பயனர்களினால் பகிரப்பட்டு (உங்களின் விருப்பப்படி) பார்வையிடக்கூடிய இணைய நாட்காட்டியான கூகிள் காலண்டர் (Google Calender) ஆரம்பிக்கப்பட்டது.

2009. இலங்கையில் போர் நிறுத்தம் செய்யக்கோரி இலண்டனின் 200,000 தமிழர்கள் திரண்டு பிரம்மாண்டமான ஊர்வலம் நடத்தினர்.

**ஏப்ரல் – 13**

1111. ஐந்தாம் ஹென்றி புனித ரோம் பேரரசின் மன்னனாக முடி சூடினான்.

1829. பிரித்தானிய நாடாளுமன்றம் ரோமன் கத்தோலிக்கர்களுக்கு மத உரிமை அளித்தது.

1912. ஐக்கியஅமெரிக்காவில் வானொலி தொடர்பாடல் சீராக்கல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதனால் வானொலி சட்டப்படியான ஒரு பாவனைப் பொருளாக ஆகியது.

1930. மகாத்மா காந்தியின் உப்புச் சத்தியாகிரகத்திற்கு ஆதரவாக தென்னிந்தியாவில் ராஜாஜி தலைமையில் பாதயாத்திரை தொடங்கப்பட்டது.

1941. ஜப்பானுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் அணிசேரா உடன்பாடு எட்டப்பட்டது.

1979. இலங்கையில் சுயாதீன தொலைக்காட்சி சேவையான (ITN) சேவை ஆரம்பிக்கப்பட்டது.

1984. முதலாவது ஆசியாக் கிண்ண துடுப்பாட்டப் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் ஆரம்பம். (இப் போட்டித் தொடரில் இந்தியா கிண்ணத்தை கைப்பற்றியது).

1998. செயற்கை முறையில் உருவாக்கப்பட்ட உலகின் முதல் ஆட்டுக் குட்டியான டோலி (Dolly) இயற்கையான முறையில் ஒரு குட்டியை ஈன்றது.

2006. இணையத்தள சேவையான கூகிள் கலண்டர் வெள்ளோட்டம் விடப்பட்டது.

2009 இலங்கையில் அமைதி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நோர்வே நாட்டு பிரதிநிதிகளை இலங்கை அரசு நீக்கிக் கொண்டது.

**ஏப்ரல் – 14** ✱ உலக சித்தர்கள் தினம் (World Siddha Day) - சித்த மருத்துவத்தின் சிறப்பை போற்றும் வகையிலும் சித்த மருத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சித்த மருத்துவ அறிவியலை உருவாக்கிய சித்தர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும் கொண்டாடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1865. ஐக்கிய அமெரிக்க குடியரசுத்தலைவர் ஆபிரகாம் லிங்கன் நாடக அரங்கில் நாடகம் பார்த்து கொண்டிருந்த போது பின்னால் இருந்து **john botha** என்ற நபரினால் சுடப்பட்டார்.

1912. உலகப் புகழ் பெற்ற பயணிகள் கப்பலான டைட்டானிக் இரவு 11.40 மணியளவில் பனிப்பாறையுடன் மோதியது.

2000. தமிழ்நாட்டில் சண் குழுமத்தினால் நடாத்தப்படும் 24 மணி நேரச் செய்தி அலைவரிசையான சண் செய்திகள் (Sun News) தொலைக்காட்சி சேவையை சண் குழுமத்தின் தலைவரான கலாநிதி மாறனால் முதல் ஒளிபரப்பு ஆரம்பித்து வைப்பு.

2006. இலங்கையில் நேரமாற்றம் அமுலாக்கப்பட்டது.

2009 இலங்கையின் அமைதி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நோர்வே நாட்டை இலங்கை அரசு விலக்கிக் கொண்டது.

2013. பழம் பெரும் திரைப்படப் பின்னணிப் பாடகர் பி.பி. சிறினிவாஸ் 82 வது வயதில் இறப்பு.



*டைட்டானிக் பயணிகள் கப்பல் கவிழும் தோற்றம்*

**ஏப்ரல் – 15**

1815. சல்லி என்றழைக்கப்பட்ட டச்சு செப்பு நாணயம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1865. ஜோன் பூத் என்பவனால் முதல் நாள் (14.04.1865) சுடப்பட்ட ஐக்கிய அமெரிக்க குடியரசுத்தலைவர் ஆபிரகாம் லிங்கன் இறப்பு (பிறப்பு 12.02.1809).

1912. உலகப் புகழ் பெற்ற பயணிகள் கப்பலான டைட்டானிக் கப்பல் காலை 2.20 மணியளவில் 2223 பேருடன் மூழ்கியது. அதில் 706 பயணிகள் மட்டும் காப்பாற்றப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1923 இன்சுலின் முதன் முதலாக நீரிழிவு நோய்க்கு மருந்தாக பாவிக்கப் பட்டது.

1976. தமிழ் நாட்டில் வள்ளுவர் கோட்டம் திறக்கப்பட்டது.

2009. அனைத்து ஒடுக்கு முறைகளையும் தகர்த்தெறிவோம் என்ற அடிக் குறிப்புடன் இலங்கையில் "தமிழ் முரசு" பத்திரிகை சுவடு - 01 எனும் தொடர் இலக்கத்துடன் 20 ரூபா விலையில் வெளிவந்தது.

**ஏப்ரல் – 16**

1346. தென்கிழக்கு ஐரோப்பாவின் பெரும் பகுதியை உள்ளடக்கிய சேர்பியப் பேரரசு டுசான் சில்னி என்பவனால் உருவாக்கப்பட்டது.

1444. இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில் ஐந்து ஆண்டுகள் போர் நிறுத்த ஒப்பந்தம் எட்டப்பட்டது.

1851. இலங்கையின் தேசியத் தலைவர் மற்றும் யாழ்ப்பாணம் மருதனார் மடத்தில் அமைந்திருக்கும் இராமநாதன் பெண்கள் கல்லூரியின் ஸ்தாபகருமான சேர்.பொன்னம்பலம் இராமநாதன் பிறப்பு (இறப்பு 26.11.1930).

1853. இந்தியாவின் முதலாவது பயணிகள் தொடரூந்து சேவை பம்பாயில் ஆரம்பிக்கப்பட்டது.

1885. இலங்கையில் அஞ்சல் அலுவலக சேமிப்பு திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது.

1889. உலகப் புகழ் பெற்ற நகைச்சுவை நடிகரான சார்லி சாப்ளின் பிறப்பு (இறப்பு 25.12.1977).

1966. முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் ஆரம்பமானது (16 - 23 வரை).

2009. மல்யுத்தத் தொடரான w.w.w Super Stars முதன் முதலாக ஒளிபரப்பப் பட்டது.

2009 இலங்கை வடபகுதியில் நடைபெற்ற விடுதலைப்புலிகளுக்கு இலங்கை இராணுவத்துக்குமிடையிலான யுத்தத்தின் போது யுத்த முனையில் அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த ஐ.நா.செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியாக விஜய் நம்பியார் இலங்கை வருகை.

2009 இலங்கை அரசுக்கும் தமிழிழ விடுதலைப் புலிக்குமிடையே நடை பெற்றுக்கொண்டிருக்கும் யுத்த உச்சக்கட்டத்தில் அரசுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு ஐ.நா.செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியான விஜய் நம்பியார் இலங்கை வந்தார்.

2010. ஐஸ்லாந்து எரிமலை வெடித்ததில் ஐரோப்பா எங்கும் விமான சேவை கள் பாதிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010. சிகிச்சைக்காகச் சென்னை சென்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தாயார் வேலுப்பிள்ளை பார்வதி இந்திய அரசினால் திருப்பி அனுப்பப்பட்டார்.

**ஏப்ரல் – 17**

1790. மின்னல் மின்சாரத்தைக் கண்டுபிடித்த அமெரிக்காவைச் சேர்ந்த பெஞ்சமின் பிராங்கிளின் இறப்பு (பிறப்பு 17.01.1706).

1917. இலங்கையின் முதலாவது பெண் பிரதமரும் உலக பெண் பிரதமருமான சிறிமவோ பண்டார நாயக்க பிறப்பு (10.10.2000)

1931. இலங்கை அரச சபை உருவாகுவதற்காக சட்டசபை கலைக்கப்பட்டது.

1941. இரண்டாம் உலகப் போரில் யுகொஸ்லாவியப் பேரரசு ஜேர்மனியிடம் சரணடைந்தது.

1946. மத்திய கிழக்கில் அமைந்துள்ள நாடான "சிரியா" பிரான்சிடமிருந்து விடுதலையடைந்தது.

1952. இந்தியாவில் லோக் சபை முறை அமுல்படுத்தப்பட்டது.

1966. இந்திய திரைப்படத்துறையில் 5 பிலிம்பேர் விருதுகள் தேசிய விருது மற்றும் தமிழ்நாடு மாநில விருதுகளைப் பெற்ற விக்ரம் என அழைக்கப் படும் விக்ரம் வினோத் தமிழ் நாடு பரமக்குடியில் பிறப்பு.

1966. முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு மலேசியாவில் ஆரம்பம் 23.4.1966இல் நிறைவடைந்தது.

1971. பங்களாதேசின் தந்தை எனப் போற்றப்படுபவரும் மற்றும் முதல் அதிபருமான முஜிபுர் ரஹ்மான் தலைமையில் பங்காளதேச மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.

1972. உலக சாதனை படைத்த இலங்கை நட்சத்திர சுழல் பந்துவீச்சாளார் முத்தையா முரளிதரன் கண்டி குண்டசாலையில் பிறப்பு.

1986. 335 ஆண்டுகள் போரை முடிவுக்கு கொண்டு வரும் ஒப்பந்தம் நெதர்லாந்துக்கும் சில்லி தீவுகளுக்கும் இடையில் கைச்சாத்தானது.

2004. இந்திய திரைப்பட நடிகை சௌந்தர்யா பாரதிய ஜனதா கட்சிக்கு ஆதரவாக பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ள சென்ற வேளை பெங்களுர் விமான விபத்தில் இறப்பு.(பிறப்பு 18.07.1972).

2015 இலங்கையின் முதலாவது திறந்த வெளி மிருகக்காட்சி சாலை பின்னவலையில் திறந்து வைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏப்ரல் – 18** ✱ உலக மரபுரிமை தினம்

1835. அவுஸ்ரேலியாவில் மெல்பேர்ன் நகரம் அமைக்கப்பட்டது.

1930. ஐக்கிய இராச்சியத்தில் பொது நிதியில் இயங்கும் ஊடக நிறுவனமான BBC வானொலி தனது வழமையான செய்தி அறிக்கையில் இந்நாளில் ''எந்த செய்திகளும் இல்லை'' என அறிவித்தது.

1949. அயர்லாந்து குடியரசு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1958. இலங்கையில் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண செய்துகொள்ளப்பட்ட S.W.R.D. பண்டாரநாயக்க - S.J.V. செல்வநாயகம் ஒப்பந்தம் முறிவடைந்தது.

1980. ஆபிரிக்கா தென் பகுதியில் அமைந்துள்ள நாடான ''சிம்பாப்வே'' ஐக்கியஇராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

2008. இந்திய பெங்களூர் நகரில் முதலாவது இந்தியன் பிரீமியர் லீக் Indian Premier Leaque (IPL) கோலாகலமாக ஆரம்பம்.

2009. இரண்டாவது இந்தியன் பிரீமியர் லீக் Indian Premier Leaque (IPL) கிரிக்கெட் போட்டிகள் தென்னாபிரிக்காவில் கோலாகலமாக ஆரம்பம்.

**ஏப்ரல் – 19**

1882. பரிணாமக் கோட்பாட்டை கண்டுபிடித்தவரான சார்ல்ஸ் டார்வின் இறப்பு (பிறப்பு-12.02.1809).

1904. கனடாவில் மக்கள் திரளாக வாழும் புகழ் பெற்ற நகரமான டொரோண்டோ நகரத்தின் பெரும் பகுதிகள் தீயினால் அழிந்தன.

1918. உலகிலேயே முதன் முதலாக போக்குவரத்திற்கு மின்சார சிக்னல் விளக்குகள் அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் செயல்படத் தொடங்கின.

1936. பாலஸ்தீனர்களின் ஆங்கிலேயர்களுக்கு எதிரான முதலாவது கிளர்ச்சி தொடங்கப்பட்டது.

1975. இந்தியாவின் முதலாவது செய்மதி ஆரியப்பட்டா விண்ணுக்கு ஏவப்பட்டது.

1987. பிரபல ரஸ்யா டென்னிஸ் வீராங்கனையும் அமெரிக்காவில் தங்கும் வாய்ப்பினை பெற்றவரும் டெனிஸ் போட்டியில் 27 பட்டங்களை வென்றவருமான மரியா சரபோவா (Maria Sharapova) பிறப்பு.

1988. மட்டக்களப்பில் இராணுவ ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக உண்ணா நோன்பிருந்த அன்னை பூபதி இறப்பு (பிறப்பு 03.11.1932).

1995. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடனான பேச்சு வார்த்தை முறிவடைந்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்தனர். அதனை அடுத்து திருகோணமலைத் துறைமுகத்தில் ரணசுரு, வீரயா என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயருடைய இரண்டு பீரங்கிக் கப்பல்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டன. மூன்றாவது ஈழப்போர் ஆரம்பமானது.

1996. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ். மாவட்டம் வலிகாமப் பகுதியை அரசபடைகள் முற்றாகக் கைப்பற்றினர். தென்மராட்சிப் பகுதிக்குள் அரசபடைகள் நுழைந்தன.

**ஏப்ரல்** – 20

1889. வட ஆஸ்திரியாவில் உள்ள பிரான்ல் என்ற ஊரில் சுங்க அதிகாரியாக பணிபுரிந்த அலாய்ஸ் கிரப்பர் ஹிட்லர் மற்றும் அவரது மூன்றாவது மனைவிக்கு நாலாவது மகனாக ஜேர்மனி சர்வாதிகாரி ஹிட்லர் பிறப்பு (இறப்பு 30.04.1945).

1920. 7வது ஒலிம்பிக் போட்டிகள் பெல்ஜியம் அன்ட்வேர்ப் நகரில் கோலா கலமாக ஆரம்பம். 12.09.1920 வரை நடைபெற்ற இப் போட்டியில் ஐக்கியஅமெரிக்க 41 தங்கம், 27 வெள்ளி, 27 வெண்கலமாக மொத்தம் 95 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப் பட்டியலில் முதலிடத்தையும் சுவீடன் 19 தங்கம், 20 வெள்ளி, 25 வெண்கலம் உட்பட மொத்தம் 64 பதக்கங்களையும் ஐக்கிய இராச்சியம் 15 தங்கம், 15 வெள்ளி, 13 வெண்கலம் உட்பட மொத்தம் 43 பதக்கங்களையும் சுவீகரித்துப் பதக்கப்பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களைத் தக்கவைத்துக் கொண்டன.

1926. திரைப்படத்துக்கு ஒலியை இணைக்கும் வைட்டாபோன் என்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

1945. ஜேர்மனியின் நாசிக் கட்சியின் தலைவர் அடொல்ப் ஹிட்லர் கடைசித் தடவையாகத் தனது சுரங்கப் பதுங்கு இருப்பிடத்தில் இருந்து வெளியே வந்தார்.

1970. பிரபல கடற்பயணியான ஜேம்ஸ் குக்கால் (Captain James Cook) ஆவுஸ்திரேலியாவின் நியுசவுத்வேல்ஸ் மாநிலம் கண்டுபிடிப்பு.

1998. 28 ஆண்டுகள் இயங்கிய ஜேர்மனியின் சிவப்பு இராணுவ அமைப்பு என்ற தீவிரவாத அமைப்பு கலைக்கப்பட்டது.

2010. இந்திய பிரபல நடிகர் அமிதாப் பச்சன் இலங்கை வருகை.

**ஏப்ரல்** – 21

1651. இலங்கையில் சேவையாற்றிய கத்தோலிக்க மதகுரு ஜோசப் வாஸ் அடிகள் பிறப்பு (இறப்பு 16.01.1711)

1837. உலகின் முதல் பாலர் பாடசாலை ஜேர்மனியில் பிரைடிரிச் புரோபெல் என்பவரால் தொடங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1944. பிரான்சில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.

1960. பிரசீலியா பிரேசிலின் தலைநகராக ஆக்கப்பட்டது.

1964. புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் இறப்பு (பிறப்பு 29.04.1891).

1994. சூரியக் குடும்பத்துக்கு வெளியே கோள்கள் இருப்பது முதன் முதலில் கண்டறியப்பட்டது.

2010. தமிழ் நடிகை ரஞ்சிதாவுடன் சுவாமி நித்தியானந்தா பாலியல் உறவு கொண்டிருந்த காணொலியை சண் தொலைக்காட்சி ஒளி பரப்பியதை யடுத்து ஆச்சிரமத்தை விட்டு வெளியேறி தலைமறைவாகி இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள கோகலம் மாவட்டம் கர்கி என்னும் ஊரில் பதுங்கியிருந்த சுவாமி நித்தியானந்தாவை கர்நாடக காவற்துறையினர் கைது செய்தனர். கைது செய்யும் போது அவரிடம் 3இலட்சம் ரூபாயும் 2000 டொலர் பயணக் காசோலையும் இருந்து கைப்பற்றப்பட்டது.

2010. இலங்கையின் 12வது பிரதமராக திசநாயக்க முதியன் சேலாகே ஜயரத்ன பதவியேற்பு 9.01.2015 வரை.

**ஏப்ரல் – 22** ✱ உலக பூமி தினம் - ஐக்கிய அமெரிக்காவில் சுற்றுச் சூழலியல் நிபுணரும் மேலவை உறுப்பினருமான கேலார்ட் நெல்சன் என்பவர் சுற்றுச் சுழல் பற்றிய அறிவை பரப்பத் தகுந்த நாளாக 1970ஆம் ஆண்டு ஏப்ரல் 22 நடாத்த அழைப்பு விடுத்தார். அவரது அழைப்பை ஏற்று 20 மில்லியன் மக்கள் இந்நிகழ்வில் பங்கெடுத்தார்கள். அன்றிலிருந்து ஆண்டு தோறும் இந்நாள் 175 நாடுகளில் பூமி தினமாகக் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. (1970 ஆம் ஆண்டு தொடக்கம்.)

1500. பிரேசில் நாடு கண்டுபிடிக்கப்பட்டது.

1870. ரஷ்யத் தலைவர் மற்றும் புரட்சியாளர் பொதுவுடமை என்ற கோட்பாட்டு நிறுவுனரான விளாடிமீர் லெனின் பிறப்பு (இறப்பு 21.01.1924).

1912. ரஷ்யாவின் பொதுவுடைமைக் கட்சியின் பத்திரிகை ''ப்ராவீடா'' சென் பிட்டர்ஸ் போத்துக்கலில் வெளிவர ஆரம்பித்தது.

1915. முதலாம் உலகப் போரில் முதன் முதலாக குளோரீன் விஷ வாயுவை ஜேர்மனி பயன்படுத்தியது.

2000. ஆணையிறவு இராணுவ படைத்தளம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது.

2006. இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் உள்ள ஆய்வு மையத்தில் பிரமோஸ் ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009. மலையகத்தின் தனித்துவக் குரலாக மலையக சமூகத்தின் மறுமலர்ச்சிக்காக புது வேகத்துடன் பெரும் பணியாற்றிய வீரகேசரி பத்திரிகையின் பிறிதொரு வெளியீடாக சூரியகாந்தி 24 பக்கங் களில் Vol-01 No- 01 என்ற சுவட்டு இலக்கத்துடன் உதயமானது.

2009. T20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியிலே இந்திய துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங் இங்கிலாந்து அணி வீரர் ஸ்ரூவோர்ட் புறோட்டின் ஓவரில் தொடர்ந்து ஆறு சிக்ஸர்கள் அடித்து உலக சாதனை.

2010. நடிகை ரஞ்சிதாவுடனான தொடர்பின் காரணமாக நித்தியானந்தா சாமி சிறையில் அடைக்கப்பட்டார்.

2016. இலங்கை பொலிஸ் திணைக்களம் இலங்கை பொலிஸ் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**ஏப்ரல் – 23** ✱ உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினம் (World Book and Copyright Day) - வாசித்தல் பதிப்பித்தல் மற்றும் பதிப்புரிமையூடாக அறிவுசார் சொத்துக்களைப் பாதுகாத்தல் போன்றவற்றை வளர்க்கும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம் இதனைக் (UNESCO) கொண்டாடி வருகின்றது.

1639. சென்னைக்கோட்டை கட்டிமுடிக்கப்பட்டது.

1956. கொழும்பு - யாழ்ப்பாணம் (KKS) வரையான யாழ் தேவி புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டது. இப் பயணம் 290 மைல்கள் (395.8Km) தூரத்தைக் கொண்டது இத்தூரத்தை 7.5 மணி நேரத்தில் சென்றடையும்.

1982. கொங்கோ குடியரசு நாடாக அமைக்கப்பட்டது.

1984. மனித நோய் எதிர்ப்புத் திறன் குறைபாட்டு நோய்க் கூட்டறிவான எயிட்ஸ் வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

1990. ஐக்கிய நாடுகள் சபையின் 160 வது உறுப்பினராக சுதந்திரமடைந்த நமீபியா இணைந்தது.

1991. இங்கிலாந்து உலகப் புகழ்பெற்ற திரைப்பட இயக்குநரான ராய் சத்திரஜித் தனது 71 வயதில் இறப்பு (பிறப்பு 02.05.1921).

1993. முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சி முன்னணி தலைவருமாகிய லலித் அத்துலத் முதலி குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார். (பிறப்பு 26.11.1936).

2008. சமூக வலையமைப்பான முகநூல் (Face book) அனைத்து பாவனையாளர்களும் அரட்டையை (Chat) பயன்படுத்த ஆரம்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏப்ரல் – 24** ✱ திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட ஆங்கிலத் தேசத்தவர் போப் பையர் பிறப்பு. (இறப்பு - 1909)

1961. 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த "வாசா" என்ற கப்பல் சுவீடனில் மீட்கப் பட்டது.
1965. டொமினிக்கன் குடியரசில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தது.
1970. மேற்கு ஆபிரிக்கா நாடான "காம்பியா" குடியரசாகியது.
1981. முதலாவது IBM தனி மேசைக்கணணி அறிமுகமானது.
1993. இந்தியாவில் பஞ்சாயத்து அரசுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
2011. ஆன்மீகவாதி சத்தியசாய்பாபா காலை 7மணி 40நிமிடத்தில் முத்தி நிலையடைந்தார்.
2015 இலங்கையில் சிறிலங்கா ரெலிகொம் (S.L.T) தொழில்நுட்ப பல்கலைக் கழகம் கொழும்பில் ஜனாதிபதி மைதரிபால சிறிசேனாவினால் ஆரம்பிக்கப்பட்டது.

**ஏப்ரல் – 25** மலேரியா தினம்

1855. ஐந்து நிறத்தில் இலங்கை நாட்டின் பௌத்த கொடியை ஒல்கோட் என்ற அரசியல்வாதி உருவாக்கினார்.
1874. வானொலியை கண்டுபிடித்த மார்க்கோனி பிறப்பு 20.07.1937, இத்தாலி.
1916. அயர்லாந்தில் இராணுவச் சட்டத்தை ஐக்கியஇராச்சியம் பிறப்பித்தது.
1920. அமெரிக்காவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
1945. ஐக்கிய நாடுகள் சாசனம் தோன்றியது 26.4.1945 இல் ஏற்றுக்கொள்ளப் பட்டது.




இந்தியன் பிரீமியர் லீக் (IPL) கிரிக்கெட் போட்டி ஒன்றின் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006. இலங்கை தலைநகர் கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் தற்கொலைதாரியினால் மேற்கொள்ளப்பட்ட குண்டுவெடிப்பில் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா படுகாயமடைந்தார் அத்தோடு 5 பாதுகாவலர் கொல்லப்பட்டனர்.

2010. மூன்றாவது இந்தியன் பிரீமியர் லீக் (IPL) கிரிக்கெட் இறுதிப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மும்பை இந்தியன் அணியும் மோதல் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5விக்கெட்டுக் களை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றனர். வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 146ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 22 ஓட்டங்களால் வெற்றி பெற்று முதல் முறையாக இந்தியன் பிரீமியர் லீக் (IPL) கிண்ணத்தை கைப்பற்றிக் கொண்டது. ஆட்டநாயகனாக ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களைப் பெற்ற சுப்பர் கிங்ஸ் அணி வீரர் சுரேஸ் ரெய்னா தெரிவானார்.

**ஏப்ரல் – 26** ✱ அறிவுசார் சொத்து உரிமை தினம் (World Intellectual Property Day) - மக்களின் அன்றாட வாழ்வில் அறிவுசார் சொத்துரிமையின் பங்கு பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உலகளாவிய ரீதியில் கண்டுபிடிப்பாளர்கள் கலைஞர்கள் மற்றும் ஓவியர்கள் சமூகத்திற்கு அளிக்கும் பங்களிப்புக்களை கௌரவிக்கவும் இந் நிகழ்வு 2001 இல் அறிவுசார் சொத்துரிமை அமைப்பினால் (World Intellctual Property Organization WIPO) ஆரம்பிக்கப்பட்டது. ஏப்ரல் 26ஆம் திகதியே அறிவுசார் சொத்துரிமை அமைப்பு உருவாக்கப்பட 1970 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சிறப்புக் கூட்டத்தில் தீர்மானம் கொண்டுவரப்பட்டு கொண்டாடப்படுகின்றது.

1867. இலங்கை தலைநகர் கொழும்புக்கும் மத்திய மாகாணத் தலைநகர் கண்டிக்கும் இடையிலான முதலாவது புகையிரத சேவை ஆரம்பம்.

1920. இந்திய கணித மேதை ஸ்ரீனிவாச இராமானுயம் இறப்பு (பிறப்பு 22.12.1887).

1977. இலங்கையின் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் S.J.V. செல்வநாயகம் இறப்பு (பிறப்பு 31.03.1898).

2011. இலங்கை போர் குற்றங்கள் தொடர்பான நிபுணர் குழுவின் அறிக்கையை ஐக்கியநாடுகள் சபை அதிகாரபூர்வமாக வெளியிட்டது. இவ் அறிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தம் 216 பக்கங்களை கொண்டமைந்தது இவ் அறிக்கையில் இலங்கையின் போர் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் சுட்டிக் காட்டப்படும் புகைப்படங்களும் விளக்கப்படங்களும் உள்ளடக்கப் பட்டுள்ளன.

**ஏப்ரல் – 27** ✱ உலக கிரபிக்ஸ் வடிவமைப்பு தினம்

1124. முதலாம் டேவிட் ஸ்கொட்லாந்து மன்னன் ஆனான்.

1521. உலகைச்சுற்றி வரும் போது பிலிப்பைன்ஸ் நாட்டு ஆதிவாசிகளால் போர்த்துக்கல் மாலுமி லெப்டினென்ட் மகலன் கொல்லப்பட்டார் (பிறப்பு 1480).

1908. 4வது ஒலிம்பிக் போட்டிகள் ஐக்கியஇராச்சிய தலைநகர் லண்டனில் கோலாகலமாக ஆரம்பம். 31.10.1908 வரை நடைபெற்ற இப் போட்டியில் ஐக்கியஇராச்சியம் 56 தங்கம், 51 வெள்ளி, 39 வெண்கலமாக மொத்தம் 146 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப் பட்டியலில் முதலிடத்தையும் ஐக்கிய அமெரிக்கா 23 தங்கம், 12 வெள்ளி, 12 வெண்கலம் உட்பட மொத்தம் 47 பதக்கங்களையும் சுவீடன் 8 தங்கம், 6 வெள்ளி, 11 வெண்கலம் உட்பட மொத்தம் 25 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப்பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன.

1960. மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடான டோகா பிரான்சிடமிருந்து விடுதலையடைந்தது.

1961. மேற்கு ஆபிரிக்கா நாடான சியெரா லியொன் ஐக்கிய இராச்சியத் திடமிருந்து விடுதலையடைந்தது.

1994. முதல் தடவையாக தென்னாபிரிக்காவில் கறுப்பினத் தலைவர்களுக்கும் வாக்களிக்க மக்களாட்சி முறையிலான தேர்தல் நடைபெற்றது.

2009. அக்னி Fm (Akkne Fm Reliance Networks) இல் 23-1 ஆம் ஒழுங்கை, கௌடான தெஹிவளை என்ற முகவரியில் பயிற்சி நிலையத்தையும் கலையகத்தையும் கொண்டுள்ள இந்நிறுவனத்தின் வானொலி நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

**ஏப்ரல் – 28**

1855. இலங்கையில் பௌத்த கொடி கேணல் கென்றி ஸரரீல் ஒல்கொற்றின் சிபார்சின் படி வெளியிடப்பட்டது.

1932. தீ நுண்மத்தால் ஏற்படும் ஒரு கூடிய குருதிப்போக்குக் காய்ச்சலான "மஞ்சள் காய்ச்சல்" நோய்க்கான தடுப்பு ஊசி முதன்முதலாக அறிமுகப் படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1937. ஈராக் ஜனாதிபதி சதாம் ஹீசைன் பிறப்பு (இறப்பு 30.12.2006)

1945. கம்பியில்லாத் தந்தி முதன் முதலாக அமெரிக்காவில் செயற்படுத் தப்பட்டது.

1945. இத்தாலிய சர்வாதிகாரி பெனிட்டோ முசோலினியும் அவனது மனைவி கிளாராவும் இத்தாலிய எதிர்ப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டனர். மின்கம்பத்தில் தலைகீழாக தொங்கவிடப்பட்டனர். குற்றவியல் ஆராய்ச்சி நிபுணர்கள் முசோலினியின் மூளையை ஆராய்சிக்காக எடுத்தனர்.

2005. இலங்கையின் பிரபலமான ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் கொழும்பில் கடத்தப்பட்டு சுட்டுக்கொலை செய்யப்பட்டார் (பிறப்பு 11.08.1959).

2007. ஒன்பதாவது உலகக்கிண்ண துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்ச்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா அணியினர் மழை காரணமாக நிர்ணயிக்கப்பட்ட 38 பந்து பரிமாற்ற நிறைவில் 4 விக்கட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியினர் மறுபடியும் மழை குறுக்கிட 36 பந்து பரிமாற்றத்தில் 08 விக்கட்டுக்களை இழந்து 215 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதனால் அவுஸ்திரேலியா அணியினர் வெற்றி பெற்று உலகக்கிண்ணத்தை கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக அவுஸ்ரேலியா அணி வீரர் அடம் கில்கிறிஸ்ட் தெரிவு செய்யப் பட்டார். (இப் போட்டிகள் 13.03.2007 ஆரம்பமானது).

2015 இலங்கை 1978ம் ஆண்டு அரசியல் அமைப்பின் 19வது திருத்தம் 215 பா.ம.உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

**ஏப்ரல் – 29** ✱ அனைத்துலக நடன தினம்.

1672. பிரான்சின் பதினான்காம் லூயி மன்னன் நெதர்லாந்தை முற்றுகை யிட்டான்.

1884. ஒக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தில் முதன் முதலாக பெண்கள் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டனர்.

1961. இயற்கையை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட அரசு சார்பற்ற சர்வதேச நிறுவனமான ''இயற்கைக்கான உலகளாவிய நிதியம்'' நிறுவப்பட்டது. (100க்கு மேற்பட்ட நாடுகளில் 1300க்கு மேற்பட்ட இயற்கைப் பாதுகாப்பு திட்டங்களுக்கு பங்களிப்பு செய்து வருகின்றது. அத்தோடு 5 மில்லியனுக்கு மேற்பட்டோர் உதவித் தொகை வழங்கு கின்றனர்).

1982. இலங்கையின் புதிய பாராளுமன்ற கட்டடத்தை எதிர்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் திறந்து வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991. பங்களாதேசில் சிட்டாகொங்கில் இடம்பெற்ற சூறாவளியால் 138,000 பேர் வரை இறந்ததோடு 10மில்லியன் பேர் வீடுகளை இழந்தனர்.

1995. இலங்கை இராணுவத்தினரின் அவ்ரோ விமானம் மன்னார் கடல் பகுதியில். 50 படையினருடன் தமிழீழ விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

1999. மல்யுத்தத் தொடரான WWE Smack Down முதன் முதலாக ஒளி பரப்பப் பட்டது.

2007. சண் குழுமத்தின் சிறுவர்களுக்கான முதலாவது 24 மணி நேர தொலைக் காட்சி சேவையான சுட்டி டிவி (Chutti Tv) முதல் ஒளி பரப்பு ஆரம்பிக்கப்பட்டது.

2007. தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரிவான வான் புலிகளின் இரண்டு வான் கலங்கள் தலைநகர் கொழும்புக்கு வடக்கே 3 மைல் தொலை வில் உள்ள கொலன்னாவை எண்ணெய் குதங்களையும் 10 மைல் தொலைவில் உள்ள கெரவலப்பிட்டி எண்ணெய் குதங்களையும் குண்டு வீசி தாக்கி அழித்தன.

**ஏப்ரல்** – 30

1789. ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது குடியரசுத் தலைவராக ஜார்ஜ் வாசிங்டன் பதவியேற்பு. இவர் 04.03.1797 வரை பதவியில் இருந்தார்.

1803. ஐக்கிய அமெரிக்கா லூசியானா மாநிலத்தை பிரான்சிடமிருந்து 15 மில்லியன் அமெரிக்கா டொலருக்கு வாங்கியது.

1939 அமெரிக்காவின் எம்பயர் கட்டடத்திலிருந்து பொதுமக்களுக்கான தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.

1945. ஜேர்மனியை ஆண்ட சர்வாதிகாரி அடொல்ப் ஹிட்லர் தங்கியிருந்த பேர்லின் நகரை ரஷ்ய படைகள் கைப்பற்றியதைத் தொடர்ந்து அடொல்ப் ஹிட்லர் தனது மனைவியான ஈவா பிரவுனுடன் தற்கொலை செய்து கொண்டார் (பிறப்பு-20.04.1889).

1961. யாழ்ப்பாணத்தில் பணி புரிந்த அயர்லாந்து லோங் அடிகள் இறப்பு (பிறப்பு-1896).

1982. இந்திய திருச்சி மாநிலத்தில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் அமைக்கப் பட்டது.

1999. ஆசியன் அமைப்பில் கம்போடியா இணைந்து கொண்டது.

2003. 2005ம் ஆண்டில் பலஸ்தீன நாட்டை உருவாக்கும் ஆலோசனைகளைக் கொண்ட மத்திய கிழக்கு சமாதானத் திட்டம் (Road Map) அமெரிக்கா, ரஷ்யா, ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே

**மே – 01** ✱ உலக தொழிலாளர் தினம் - ஆண்டு தோறும் தொழிலாளர் களால் உலகளாவிய ரீதியில் மே தினமாக கொண்டாடப் பட்டு வருகின்றது. (1886 தொடக்கம்)

1707. இங்கிலாந்தும் ஸ்கொட்லாந்தும் இணைக்கப்பட்டு பெரிய பிரித்தானியா ஒரு நாடாகியது.

1840. உலகின் முதல் முத்திரை ஐக்கியராச்சியத்தில் வெளியிடப்பட்டது.

1886. ஐக்கிய அமெரிக்காவில் 8-மணிநேர வேலை நாளை வலியுறுத்தி வேலைநிறுத்தம் ஆரம்பமானது. இந்நாள் பின்னர் மே நாள் எனவும் தொழிலாளர் நாள் எனவும் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

1897. சுவாமி விவேகானந்தரால் ''ராமகிருஸ்ண மிஷன்'' இந்தியாவில் நிறுவப்பட்டது.

1951. நடிகர் திலகம் சிவாஜிகணேசனுக்கும் கமலாக்கும் திருமணம் நடைபெற்றது.

1956. மலத் துகள்களினால், மாசடைந்த நீர் மற்றும் உணவு வாய்வழியாக உட்கொள்ளப்படும் போது ஏற்படும் நோயான ''இளம்பிள்ளைவாத நோய்'' தடுப்பு மருந்து அறிமுகப்படுத்தப்பட்டது.

1963. கிராம சேவகர் முறை உருவாக்கப்பட்டது. (விதானையார் முறை இல்லாது ஒழிக்கப்பட்டது)

1971. தென்னிந்திய தமிழ்த் திரைப்பட முன்னனி நடிகர் மற்றும் கார் ஓட்டப் பந்தய வீரருமான அஜித் குமார் பிறப்பு.

1973. இலங்கையில் சிவில் நிர்வாக சேவைக்குப்பதிலாக ''ஸ்ரீலங்கா நிர்வாக சேவை'' (SLAS) முறை அமுல்படுத்தப்பட்டது.

1982 ரூபவாகினி கூட்டுத்தாபனம் பா.உ. ஆனந்த டீ. அல்விஸ் அவர் களால் ஆரமபித்து வைக்கப்பட்டது.

1988. யாழ்ப்பாண வடமராட்சியில் அமைந்துள்ள செல்வச்சந்நிதியில் அமைந் துள்ள அரசம்மா மடத்தில் சந்நிதியான் ஆச்சிரமம் ஆரம்பமானது.

1991 யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் "Workers Education" கற்கை நெறி ஆரம்பம்.

1993. இலங்கையின் இரண்டாவது ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அவர்கள் மே தின பேரணி செய்த வேளை கொழும்பு ஆமர் வீதியில் நடந்த தற்கொலை குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டார் (பிறப்பு 23.06.1924).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008. உலகின் மிக நீளமான கடல் பாலம் நீனாவின் யாங்ட்ஸே ஆற்றுக்கழி முகப்பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

2011. இலங்கை அரச உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய வயதெல்லை 55 லிருந்து 57 வயதாக அதிகரிக்கப்பட்டது.

**மே – 02**

1952. உலகின் முதன் முறையாக ஜெட் விமானப் போக்குவரத்து ஆரம்பமானது

1993. இலங்கையின் நான்காவது நிறைவேற்று ஜனாதிபதியாக டிங்கிரி பண்டா விஜயதுங்கா (ஐ.தே.கட்சி) பதவியேற்பு (நவம்பர் 12.1994 வரை).

1994. தென்னாபிரிக்காவில் நடைபெற்ற முதல் ஜனநாயக தேர்தலில் நெல்சன் மண்டலோ வெற்றி பெற்றார்.

1997. பிரிட்டனில் மிக இளவயது பிரதமராக டோனி பிளேயர் பதவியேற்பு.

2010. இந்திய மும்பைத் தாக்குதல் வழக்கில் பாகிஸ்தான் தீவிரவாதி அஜ்மல் கசாப் குற்றவாளி எனத் தீர்ப்பு

**மே – 03** ✸ உலக பத்திரிகை தினம் (World Prees Freedom Day) - பத்திரிகை சுதந்திரத்தை பரப்பும் நோக்கிலும் ''மனித உரிமைகள் சாசனம்'' பகுதி 19 இல் இடம்பெற்றுள்ள பேச்சுரிமைக்கான சுதந்திரத்தை உலக நாடுகளின் அரசு களுக்கு நினைவூட்டவும் ஐக்கிய நாடுகள் அவையினால் சிறப்பு நாளாக பிரகடணப்படுத்தப்பட்டு கொண்டாடப் படுகின்றது. 1993ல் ஐ.நா. சபையில் பொதுச்சபைக் கூட்டத்தில் பிரகடனம் செய்யப்பட்டது

1941. உலக சேவை வானொலியான BBC வானொலியில் தமிழோசை என்ற தமிழ் ஒலிபரப்பு ஆரம்பமானது.

1952. உலகின் முதலாவது ஜெட் விமானம் முதற் தடவையாக பறந்தது.

1959. அமெரிக்காவில் இசைக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் மிகவும் முக்கியமான விருதான முதலாவது கிராமி விருதுகள் அறிவிக்கப்பட்டன.

1969. சென்னை மாகாணம் தமிழ்நாடு என அழைக்கப்பட்டது.

1986. கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் பயணிகள் விமானம் ஒன்றில் குண்டு வெடித்ததில் 21 பேர் கொல்லப்பட்டு 41 பேர் காயமடைந்தனர்.

2002. உலக அளவில் 821 மில்லியன் அமெரிக்க டாலர் வசூல் சாதனையை யும் மற்றும் ஒரே நாளில் 43.6மில்லியன் அமெரிக்க டாலர் வசூலை பெற்றதோடு கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த Spider – Man திரைப் படம் திரையரங்குகளில் திரையிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL



மே – 04

★ அனைத்துலக தீயணைக்கும் படையினர் தினம் (International Firefighters Day) வழக்கமாக இந்நாளன்று ஐரோப்பிய நாடுகளில் தீயணைக்கும் படையினர் நாள் கொண்டாடப்பட்டு வந்தது. எனினும் 1999. ஜனவரி. 4 அன்று அவுஸ்ரேலியாவில் இடம்பெற்ற காட்டுத் தீயை கட்டுப்படுத்தும் போராட்டத்தில் உயிரிழந்த ஐந்து தீயணைக்கும் படையினரை நினைவு கூருவதற்கு ஆதரவாக உலகெங்கும் மின்னஞ்சல் மூலமாக இடம் பெற்ற பரப்புரையினை அடுத்து இந் நாளை உலகெங்கும் நினைவுகூர முடிவு செய்யப்பட்டு கொண்டாடப் படுகின்றது.

1879. இலங்கை சட்ட சபையில் தமிழ் பிரதிநிதியாக பதவி வகித்த சேர். முத்துக்குமாரசுவாமி இறப்பு (பிறப்பு 23.01.1833).

1904. பனாமா கால்வாயின் கட்டுமான வேலைகள் ஐக்கிய அமெரிக்கா வினால் ஆரம்பிக்கப்பட்டது.

1924. 8வது ஒலிம்பிக் போட்டிகள் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கோலா கலமாக ஆரம்பம். 27.07.1924 வரை நடைபெற்ற இப் போட்டியில் ஐக்கியஅமெரிக்கா 45 தங்கம், 27 வெள்ளி, 27 வெண்கலமாக மொத்தம் 99 பதக்கங்களைச் சுவீகரித்துப் பதக்கப் பட்டியலில் முதலிடத்தையும் பின்லாந்து 14 தங்கம், 13 வெள்ளி, 10 வெண்கலம் உட்பட மொத்தம் 37 பதக்கங்களையும் பிரான்ஸ் 13 தங்கம், 15 வெள்ளி, 10 வெண் கலம் உட்பட மொத்தம் 38 பதக்கங்களையும் சுவீகரித்துப் பதக்கப் பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களையும் தக்கவைத்துக் கொண்டன.

1931. இலங்கை அரச சபைக்கான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1979. ஐக்கிய இராட்சியத்தின் முதலாவது பெண் பிரதமராக மார்கிரட் தட்சர் (Margaret Thatcher) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1980. யூகோஸ்லாவியா அதிபர் மார்ஷல் டிட்டோ இறப்பு (பிறப்பு 1892).

மே – 05

1816. "மூலதனம்" எனும் புத்தகத்தின் ஆசிரியரான சிந்தனையாளர் காரல் மார்க்ஸ் பிறப்பு (இறப்பு 14.03.1883).

1821. பிரெஞ்சு சக்கரவரத்தி நெப்போலியன் பெர்னபாட் இறப்பு (பிறப்பு 15.08.1769).

1823. யாழ்ப்பாண ஆண்கள் பாடசாலையான சென் ஜோன்ஸ் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1916. இந்திய தமிழ் திரைப்படத்துறையில் நடிகர், பாடகர், தயாரிப்பாளர் என்று பல துறைகளாலும் புகழ்பெற்று விளங்கிய புதுக்கோட்டை உலகநாதம்பிள்ளை சின்னப்பா (P.U. சின்னப்பா) பிறப்பு (இறப்பு 23.09.1951).

1944. மகாத்மா காந்தி சிறையிலிருந்து விடுதலையானார்.

1945. அரபு நாடுகளின் கூட்டமைப்பான அரபு லீக்கில் யேமன் இணைந்து கொண்டது.

1945. வட மேற்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள "நெதர்லாந்து" ஜேர்மனி யிடமிருந்து விடுதலையடைந்தது.

1972 புதிய தமிழ் புலிகள் என்ற அமைப்பை பிரபாகரன் தனது 18 வயதில் ஆரம்பித்தார்.

1976 18 வயதில் வேலுப்பிள்ளை பிரபாகரனால் 1972 இல் ஆரம்பித்த புதிய தமிழ் புலிகள் இயக்கம் தமிழிழ விடுதலைப் புலிகள் எனபெயர் மாற்றப்பட்டது.

1981. ஐரிஷ் புரட்சியாளர் பொபி சாண்ட்ஸ் சிறையில் உண்ணா நோன்பிருந்து இறப்பு (பிறப்பு 09.03.1954).

2000. புதன், செவ்வாய், வெள்ளி, வியாழன், சனி ஆகிய 5 கோள்கள் மற்றும் சந்திர, சூரியன் ஆகியன விண்வெளியில் ஒரே நேர் வரிசையில் தோன்றியது. இதே போன்று மீண்டும் காண்பதற்கு 2075ம் ஆண்டு வரை காத்திருக்க வேண்டும்.

2000. யாழ்ப்பாணத்தில் கல்வியியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

2006. சூடான் அரசுக்கும் - சூடான்விடுதலை இராணுவத்திற்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்தானது.

**மே – 06**

1840. பிரிட்டன் தபால் தலை உலகிலேயே முதன் முதலாகத் தபால் தலைகளை முன்கூட்டியே கட்டணம் கட்டி வாங்கி பயன்படுத்தும் பசை தடவிய தபால் தலைகளை விற்பனை செய்ய ஆரம்பித்தது.

1853. The Literary Mirror என்னும் ஆங்கில மாத இதழை யாழ்ப்பாணத்தில் வைமன் கதிரவேற்பிள்ளை ஆரம்பித்தார்.

1854 இந்தியாவின் முதல் தபால் தலை வெளியிடப்பட்டது.

1861. இந்தியா பிரதமர் ஜவஹர்லால் நேருவின் தந்தையும் சுதந்திர போராட்ட வீரரும் வழக்கறிஞருமான மோதிலால் நேரு பிறப்பு (இறப்பு 06.02.1931)

1889. பிரெஞ்சுப் புரட்சியின் நூற்றாண்டு நிறைவையொட்டி 31.03.1889 அன்று பாரிசில் திறக்கப்பட்ட ஈபில் கோபுரம் பொது மக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005. பிரிட்டன் பாராளுமன்ற தேர்தலில் தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றது. இதன் மூலம் மூன்று முறை வெற்றி பெறும் தொழிலாளர் கட்சியின் முதல் தலைவர் எனும் சிறப்பை டோனி பிளேயர் பெற்றார்.

**மே – 07**

1861. இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவரும் இந்தியா தேசிய கீதத்தை இயற்றியவருமான ரவீந்திரநாத் தாகூர் கல்கத்தாவில் பணக்கார பிராமணக் குடும்பத்தில் தேவேந்திரநாத் சாரதா தேவி தம்பதியினர் களுக்கு 14வது பிள்ளையாய் பிறந்தார். 9.12.1883ல் மிருனாலி தேவியை திருமணம் செய்தார். (இறப்பு 07.08.1941).

1868 இலங்கையின் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி பகுதியில் உடுப்பிட்டி என்ற ஊரில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

1945. இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனி நேச நாடுகளிடம் சரணடைந்தது இதன் மூலம் ஐரோப்பாவில் நடந்து வந்த இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்தது .

1982. தெல்லிப்பளை துர்க்கா மகளிர் இல்லம் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. (1952ல் ஆரம்பிக்கப் பட்டபோதும் 1982ல் தான் நிறுவனமயப்படுத்தப்பட்டது).

1990. திரைப்படத் துறையில் நீண்ட காலம் சேவையாற்றியமைக்காக பின்னனிப் பாடகி லதா மங்கேஸ்கருக்கு ''பால்கே'' விருது வழங்கப் பட்டது.

1993. இலங்கையின் 5வது (13வது) பிரதமராக ரணில் விக்கிரம சிங்கா பதவி யேற்பு 19.08.1994 வரை.

2010. CCTV News தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.

**மே – 08** ✱ உலக செஞ்சிலுவை தினம் (International Red Cross and Red Crescent Day) - முதலாவது நோபல் விருதினைப் பெற்றவரும் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆரம்ப கர்த்தாவு மான ஹென்றி டியூனைட் அவர்களின் பிறந்த தினமாக இந்நாள் அங்கீகரிக்கப்பட்டு 1948 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

1828. செஞ்சிலுவைச் சங்கத்தை நிறுவிய ஹென்றி டியூனான்ட் என்பவர் பிறப்பு (இறப்பு 30.10.1910).

1942. இரண்டாம் உலகப் போரில் முதல் முதலாக விமானம் தாங்கிக் கப்பல் யுத்தம் அமெரிக்காவிற்கும் ஜப்பானுக்கும் இடையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1944. உலகின் முதல் கண் வங்கி அமெரிக்கா தலைநகர் நியூயோர்க் நகரில் தொடங்கப்பட்டது.

1951. இலங்கை தேசிய கீதத்தை (ஸ்ரீலங்கா தாயே நம் ஸ்ரீலங்கா) தமிழில் மொழி பெயர்த்த பண்டிதர் மு.நல்லதம்பி இறப்பு (பிறப்பு 1896).

2002. ஐக்கிய நாடுகள் சபையின் முதல் குழந்தைகள் மாநாட்டை ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் கோபி அனான் தொடக்கி வைப்பு.

2010. கொஸ்தாரிக்காவின் முதல் பெண் ஜனாதிபதியாக சின் சில்வா பதவிப் பிரமாணம்.

## மே – 09

1874. குதிரையால் செலுத்தப்படும் முதலாவது பயணிகள் வண்டி (omnibus) மும்பை நகரில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1947. வறுமையான நாடுகளுக்கு கடன்கள் அமைத்து கொடுப்பதற்காக 5 சர்வதேச அமைப்புக்களை உள்ளடக்கிய ஓர் குழுமமான உலக வங்கி (World Bank Group) குழுமம் முதல் கடனை பிரான்சுக்கு வழங்கியது. இக்கடன் 250 டாலர் மில்லியன் மதிப்புள்ளது போருக்கு பின்னரான புனரமைப்பிற்கு இதுவே இன்றளவில் உலக வங்கி வழங்கிய மிகப் பெரும் கடன் தொகையாக உள்ளது.

1960. அமெரிக்கா கருத்தடை மாத்திரைகளை பயன்படுத்துவதை முதன் முதலில் சட்டபூர்வமாக்கியது.

1972. யோகர் சுவாமிகள் பிறப்பு (23.3.1964).

1978. ஆங்கிலக் கால்வாயை டேவிட் குக் என்ற ஆங்கிலேயர் விமானத்தின் மூலம் முதன் முதலாக பறந்து கடந்தார்.

1985. இந்தியாவின் தமிழ் நாடு மாநிலத்தில் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் பட்டது.

2004. செச்சினிய ஜனாதிபதி அகமது காதீரொல் கண்ணிவெடித் தாக்கு தலில் கொல்லப்பட்டார்.

## மே – 10

1612. தாஜ்மஹாலை உருவாக்கிய முகாலயப் பேரரசன் ஷாஜகான் மும்தாஜ் மஹாலை திருமணம் புரிந்தான்.

1785. இலங்கையில் முதன்முதலாக நாணயத்தாள் அறிமுகப்படுத்தப்பட்டது.

1857. இந்தியாவில் பிரித்தானியருக்கு எதிராக சிப்பாய்க்கலவரம் (படை வீரர்கலவரம்) ஏற்பட்டது. இக் கலவரம் 15 வருடமாக நடைபெற்று இன்று மிகவும் கொடூரமாக அடக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1932. தென்னாசியாவின் சிறந்த எழுத்தாளரும் திறனாய்வாளரும் யாழ்ப் பாணம் மற்றும் மட்டக்களப்பு பல்கலைக்கழக பேராசிரியருமான கார்த்திகேசு சிவத்தம்பி பிறப்பு.

1940. அரசியல் வாதிகளில் மிக முக்கியமானவரான வின்சன் சர்ச்சில் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமரானார்.

1946. ஜவஹர்லால் நேரு இந்தியாவின் மிகப் பெரிய அரசியல் கட்சிகளில் ஒன்றான இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் தலைவரானர்.

1993. இந்தியப் பெண்களான சந்தோஸ் யாதவ், கங்கா புட்டியா, டிக்கி டோல்மா ஆகியோர் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தனர். மகளிர் குழு எவரெஸ்ட் சிகரத்தை முதல் முறையாக அடைந்தது இதுவே முதல் முறையாகும்.

1994. தென்னாபிரிக்காவில் கறுப்பினத்திற்காக போராடிய முதலாவது கறுப் பினத் தலைவர் நெல்சன் மண்டேலா குடியரசு தலைவராக பதவியேற்றார்.

2008. கிழக்கு மாகாணசபையின் முதலாவது மாகாண சபை தேர்தல் நடை பெற்றது முதலமைச்சராக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திர காந்தன் பதவியேற்பு.

2011. கூகிளின் இணையவழி இசை கேட்கும் சேவையானதும் மற்றும் இணைய இசை சேமிப்பு நிலையமாகவும் அத்தோடு ஆப்பிள் நிறுவனத் தின் ஐ டியுன்ஸ் என்ற சேவைக்கு போட்டியாக கூகிளினால் கூகிள் இசை (Google Music) ஆரம்பிக்கப்பட்டது.

## மே – 11

1812. பிரிட்டன் பிரதமர் ஸ்பென்சர் பேர்சிவல் (Spencer Percival) நாடாளு மன்ற வளாகத்தில் சுட்டுக்கொலை. பிரிட்டன் வரலாற்றில் பிரதமர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

1887. மகாரிஷி எனப்போற்றப்படும் தமிழ் நாடு சிவகங்கையில் கவியோகி சுத்தானந்த பாரதியார் பிறப்பு (இறப்பு 07.03.1990).

1949. ஐக்கியநாடுகள் சபையில் இஸ்ரேல் இணைந்து கொண்டது.

1952. உலகின் முதல் ஐதரசன் குண்டுப் பரிசோதனையை பசுபிக் கடலில் அமெரிக்கா நடத்தியது.

1995. இந்திய மாநிலமான பம்பாயின் பெயர் மும்பை எனப் பெயர் மாற்றப் பட்டது.

1996. தமிழீழ விடுதலைப்புலிகள் வசமிருந்த யாழ் குடாநாடு அரச படை களின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மே – 12** ✱ உலக செவிலியர் தினம் (International Nurses Day) - செவிலியர் (தாதிகள்) சமூகத்திற்கு ஆற்றும் பங்களிப்பை சிறப்பாக நினைவுகூற இந்நாள் தேர்ந்தெடுக்கப்பட்டு கொண்டாடப்படுகின்றது.

1656. ஒல்லாந்தர் இலங்கை தலைநகர் கொழும்பைக் கைப்பற்றினர்.

1820. நவீன தாதியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்தில் முதன் முதல் தாதிப் பயிற்சிக் கல்லூரியை ஆரம்பித்த தாதி ப்ளோரன்ஸ் நைட்டிங்கேல் பிறப்பு (இறப்பு 13.08.1910).

1985. வல்வெட்டிதுறை சனசமூக நிலையத்தில் வைத்து இராணுவத்தினரால் 70 பேர் கொல்லப்பட்டனர்.

**மே – 13**

1888. பிரேசில் நாட்டில் அடிமை முறைமை இல்லாது ஒழிக்கப்பட்டது.

1898. தமிழில் முதல் நாவலை வெளியிட்ட P.R. ராஜமய்யர் இறப்பு (பிறப்பு 25.01.1872).

1952. சுதந்திர இந்தியாவின் முதலாவது பாராளுமன்றம் கூடியது.

1962. இந்தியா முதலாவது குடியரசுத்துணைத் தலைவராக சர்வபள்ளி இராதா கிருஷ்ணன் பதவியேற்பு (மே.12.1967 வரை).

1956. வாழும் கலை என்ற நிறுவனத்தை தோற்றுவித்த இந்திய ஆன்மிக குரு ஸ்ரீரவிசங்கர் பிறப்பு.

1981. கத்தோலிக்க மக்களின் ஆன்மிகத் தலைவர் போப் இரண்டாம் ஜோன்போல் வத்திக்கான் நகரில் துப்பாக்கியால் சுடப்பட்டார். பின் பல நாள் சிகிச்சைக்கு பின் குணமடைந்தார்.

2002. மரண தண்டனைக்கு எதிரான அரச சார்பற்ற அமைப்பான உலகக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

2006. திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் டாக்டர்.மு. கருணாநிதி ஐந்தாவது தடவையாக தமிழ் நாட்டின் முதலமைச்சரானார்.

**மே – 14** ✱ உலக நூதன சாலைகள் தினம்.

1796. மனிதர்களை மட்டும் தாக்கும் அதிக தொற்று தன்மை கொண்ட அம்மை நோய் தடுப்பூசியைக் கண்டுபிடித்த எட்வர்ட் ஜென்னர் முதன் முதலாக சிறுவன் ஒருவனுக்கு பயன்படுத்தி வெற்றி கண்டார்.

1811. தென் அமெரிக்காவின் மத்தியில் அமைந்துள்ள பராகுவே எசுப்பானியா விடமிருந்து சுதந்திரமடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1900. 2வது ஒலிம்பிக் போட்டிகள் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கோலாகலமாக ஆரம்பம். 28.10.1900 வரை நடைபெற்ற இப் போட்டியில் பிரான்ஸ் 26 தங்கம், 41 வெள்ளி, 34 வெண்கலமாக மொத்தம் 101 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முதலிடத்தையும் ஐக்கிய அமெரிக்க 19 தங்கம், 14 வெள்ளி, 14 வெண்கலம் உட்பட மொத்தம் 47 பதக்கங்களையும் ஐக்கிய இராச்சியம் 15 தங்கம், 6 வெள்ளி, 9 வெண்கலம் உட்பட மொத்தம் 30 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப் பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன.

1940. இரண்டாம் உலகப்போரில் நெதர்லாந்து ஜேர்மனியிடம் சரணடைந்தது.

1948. இஸ்ரேல் என்ற நாடு தன்னைத் தனிநாடாகப் பிரகடனப்படுத்தி தற்காலிக அரசை அறிவித்தது.

1965. இலங்கை கம்யூனிஸ்ட் (சீனா சார்பு) கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ரோகண விஜயவீராவினால் மக்கள் விடுதலை முன்னணிக் (J.V.P) கட்சி நிறுவப்பட்டது..

1976. வட்டுக்கோட்டையில் தமிழ் கூட்டணியின் முதலாவது மாநாடு நடைபெற்றது தனி நாட்டுக் கோரிக்கையை பிரகடனமாக முன்வைத்தது.

1992. இந்தியாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு முதன் முதலாக இந்திய மத்திய அரசு தடைவிதித்தது.

**மே – 15** ✱ உலக குடும்ப தினம்.

1718. உலகின் முதலாவது இயந்திரத் துப்பாக்கிக்கான காப்புரிமத்தை லண்டனைச் சேர்ந்த வழக்கறிஞர் நேம்ஸ் பக்கின் பெற்றார்.

1817 அமெரிக்காவின் முதன் முதலாக தனியார் மனநல மருத்துவமனை தொடங்கப்பட்டது.

1865. ஐக்கிய நாடுகளில் இன்னும் நடைமுறையிலிருக்கும் பழமை வாய்ந்த அமைப்பான சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியம் சர்வதேச தந்தி ஒன்றியம் என நிறுவப்பட்டது.

1925 அரபிய மொழியிலான முதலாவது கம்யூனிஸ்ட் செய்தித்தாள் 'அல்இன் சானியா' தொடங்கப்பட்டது.

1958. சோவியத்தின் ஸ்புட்னிக் - 3 விண்கலம் ஏவப்பட்டது.

1973. இந்தியாவில் முதல் திரவ எரிபொருள் ரொக்கட் விண்ணில் செலுத்தப் பட்டது.

1985. நெடுந்தீவு மாவலித்துறையில் இருந்து 64 பயணிகளுடன் புறப்பட்ட குமுதினி என்ற படகு இலங்கைக் கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டு குழந்தைகள், பெண்கள் உட்பட 36 பேர் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991 பிரான்ஸின் முதல் பெண் பிரதமராக எடித்கிறசன் பதவியேற்றார்.
2005. கிழக்கு மாகாணம் திருகோணமலை பேருந்து நிலையத்துக்கு முன்பு புத்தர் சிலை நிறுவப்பட்டது.
2009. ஈழப் போர் இறுதி யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் தமது தொடர்பாடல் சாதனங்களை தகர்த்து நொருக்கினர்.
2015 இலங்கையின் அரசியலமைப்பின் 19வது திருத்தத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் சபாநாயகர் ஒப்பமிட்டார்.

**மே – 16**

1903. இலங்கை பேராதனைப் பல்கலைக்கழக முதலாவது உபவேந்தர் சேர். ஐவர் ஜெனிங்ஸ் பிறப்பு (இறப்பு 19.12.1965).
1929. அமெரிக்காவில் திரைத்துறைக்கு வழங்கப்படும் உயரிய விருதுகள் மற்றும் உலகிலேயே அதிகளவில் தொலைக்காட்சி மூலம் பார்வையிடப்படும் விருது வழங்கும் விழாக்களில் முதன்மையான விருதுமான ஆஸ்கார் விருது முதன் முதலில் ஹலிவுட் ரூஸ்வெல்ட் ஹோட்டலில் 270 மக்கள் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விருது விழாவில் மொத்தம் 15 விருதுகள் வழங்கப்பட்டன.
1929 ஒஸ்கார் விருது ஆரம்பம்.
1975. உலகிலேயே உயர்ந்த மலைத் தொடரான எவரெஸ்ட் சிகரத்தை முதன் முதலாகப் பெண்மணி ஜீன்கோ டபெய் சென்றடைந்தார்.
2009. இலங்கைப் படைத்தளபதி மேஜர். ஜெனரல் சரத் பொன்சேகா தமிழீழ விடுதலைப் புலிகளைப் போரில் வென்று விட்டதாக அறிவித்தார்.
2010. மூன்றாவது சர்வதேச T20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் அவுஸ்ரேலிய - இங்கிலாந்து அணிகள் மோதல். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி அவுஸ்ரேலிய அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணியினர் 20 ஓவர்கள் நிறைவில் 6விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றனர். வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியினர் 17 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களைப்பெற்று 7 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்று மூன்றாவது சர்வதேச T20 உலகக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். இப் போட்டியின் ஆட்ட நாயகனாக இங்கிலாந்து அணிவீரர் கிலேக் கியுஸ்விட்டர் தெரிவானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மே – 17** ✱ உலக தகவல் சமூக தினம் (World Information Society Day) - தூனிசில் நடந்த தகவல் சமூகத்திற்கான உலக மாநாட்டை அடுத்து ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தீர்மானம் மூலம் அறிவிக்கப்பட்டு கொண்டாடப்படுகின்றது. 2005ல் ஐ.நா. சபையில் பிரகடனம் செய்யப்பட்டது.

1498. இந்தியாவுக்கான நேரடிக் கடல் மார்க்கத்தைக் கண்டுபிடித்த முதல் ஐரோப்பியரான வாஸ்கொடகாமா இந்தியாவை அடைந்தார்.

1749 சின்னம்மை நோய்க்கான அம்மைப்பால் குத்துதலை கண்டு பிடித்த இங்கிலாந்து மருத்துவர் எட்வேட் கென்னார் பிறப்பு 26.01.1823

1792. பண அடிப்படையில் உலகின் மிகப்பெரிய பங்குச் சந்தையான நியுயோர்க் பங்குச் சந்தை ஆரம்பிக்கப்பட்டது.

1998. தமிழர் விடுதலை கூட்டணி உறுப்பினர் யாழ் மாநகர முதல்வர் சறோஜினிதேவி யோகேஸ்வரன் சுட்டுக்கொல்லப்பட்டார்.

2009. பாலித கோகன்ன எழுத்து மூலமான தகவலை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினரான புலித்தேவனுக்கு காலை 8.46 மணிக்கு அனுப்பி காலை 18.05.2009 இராணுவத்திடம் நிபந்தனை இன்றி சரணடையுமாறு அனுமதித்தார். அதனையடுத்து 15 பேர் கொண்ட குழுவினர் சென்றனர் அப்போது இராணுவம் சுட்டுக் கொன்றதாக அவுஸ்ரேலிய ஊடகமான சிட்னிமோனிங் சிறோல்டி கூறியுள்ளது.

2013 யுத்தத்தின் பின்னர் ஓமந்தை-மடுவுக்காண புகையிரத சேவை ஆரம்பம்.

**மே – 18**

1969. அப்பலோ - 10 விண்ணுக்கு ஏவப்பட்டது.

1974. இந்தியா தனது முதலாவது அணுகுண்டை வெற்றிகரமாக சோதனை செய்தது.

1991. ஆபிரிக்காவின் கொம்பு என அறியப்படும் கிழக்காபிரிக்காவில் அமைந்துள்ள சோமாலிலாந்து சோமாலியாவிடமிருந்து விடுதலையடைந்தது.

2009. இலங்கை இராணுவ 53 வது பிரிவின் எதிர்நடவடிக்கையின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் இசைப்பிரிவு உறுப்பினர் இசைப்பிரியா சுட்டுக் கொல்லப்பட்டதாக அரசு அறிவித்தது.

2009. தமிழீழ விடுதலைப் புலிகளுடனான ஈழப்போர் முடிவடைந்ததாக இலங்கை இராணுவம் அறிவிப்பு.

2011. இலங்கையின் 43 வது பிரதமநீதியரசராகவும் முதலாவது பெண் நீதி அரசராகவும் சிராணிபண்டாரநாயக்கா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சா வினால் நியமிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மே – 19**

1930. தென்னாபிரிக்காவில் வெள்ளை இனப் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1978. ஜே.ஆர். ஜெயவர்த்தன ஐக்கியதேசிய கட்சி அரசால் தமிழீழ விடுதலைப் புலிகள் தடைச்சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.

2009. இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் உள்ளிட்ட பெருந்தலைவர்கள் போரில் கொல்லப்பட்டதாக அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்தது. இலங்கை ஜனாதிபதி மகிந்தராஜபக்ச புலிகளை வெற்றி கொண்டதை பிரகடனப்படுத்தினார். அதேநாள் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

**மே – 20**

1506. அட்லாந்திக் கடலைக் கடந்து அமெரிக்காவை கண்டுபிடித்தவரும் மற்றும் இத்தாலிய கடல் பயணியும் வர்த்தகருமான ஆய்வு பயண வீரர் கிறிஸ்தோபர் கொலம்பஸ் இறப்பு. (பிறப்பு 1451).

1570. உலகின் முதலாவது நவீன நிலவரைபை Atlas ஆபிரகாம் ஓர்டேலியஸ் வரைந்தார்.

1869. யாழ்ப்பாணத்தில் தொலைத் தொடர்பு சேவை ஆரம்பிக்கப்பட்டது.

1902. வட கரிபியன் கடலில் கரிபியக் கடலும் மெக்சிக்கோ குடாவும் கலக்கும் இடத்தில் அமைந்துள்ள ''கியூபா'' ஐக்கிய அமெரிக்காவிடமிருந்து விடுதலையடைந்தது.

1939. சமகாலத் தமிழ் வாழ்க்கையை சித்தரிக்கும் படைப்புக்களை தமிழ் திரைப்படத்துறையில் உருவாக்கிய இயக்குனரும் மற்றும் ஒளிப் பதிவாளருமான பாலு மகேந்திரா இலங்கை கிழக்கு மாகாண மட்டக் களப்பின் அருகே உள்ள அமிர்தகழி என்னும் சிற்றூரில் பிறந்தார்.

1983. எயிட்ஸ் நோயை உண்டாக்கும் கிருமிகளை கண்டுபிடித்த செய்திகள் முதற்தடவையாக வெளியிடப்பட்டன.

1999. குறைந்த தொலைவிலுள்ள நிலையான மொபைல் சாதனங்களுக் கிடையே தரவைப் பரிமாற்றிக் கொள்ள உதவும் ஒரு திறந்த தர நிலைக் கம்பியில்லா நெறிமுறையான "Bluetooth' வெளியிடப்பட்டது.

2002. தென் கிழக்கு ஆசியாவால் திமோர் தீவின் கிழக்கு பகுதியிலும் அருகாமையிலுள்ள அதௌரு தீவுகளிலும் இந்தோனேசியாவின் மேற்குத் திமோரின் வட மேற்குப் பகுதியில் ஒரு உட்குடைவுப் பகுதியில் அமைந்துள்ள கிழக்குத் திமோர் போர்த்துக்கலிடமிருந்து விடுதலையடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மே – 21**

1859. பிக்பென் மணிக்கூடு முதன் முதலாக இயக்கப்பட்டது.

1904. பிரான்ஸ் நாட்டின் தலை நகரான பாரிசில் சர்வதேச உதைப் பந்தாட்ட கூட்டமைப்பு "FIFA" ஆரம்பிக்கப்பட்டது.

1991. முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஸ்ரீபெரும்புதூரில் மனிதக் குண்டுத்தாக்குதலில் இறப்பு (பிறப்பு 20.08.1944).

1998. இந்தோனேசியாவின் சர்வாதிகாரியாக பல ஆண்டுகள் ஆட்சி புரிந்த ஜனாதிபதி சுசாட்டோ பதவி விலகினார்.

**மே – 22**

1834. இலங்கையில் சட்ட சபையின் முதலாவது கூட்டம் கொழும்பில் இடம் பெற்றது.

1906. விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள் தமது பறக்கும் கருவிக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.

1958. இலங்கையில் தென்பகுதியில் ஏற்பட்ட இனக்கலவரங்களில் நூற்றுக் கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1972. இலங்கையில் புதிய அரசியலமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்த தோடு சிலோன் என்ற பெயர் ஸ்ரீலங்கா எனப் பெயர் மாற்றம் பெற்றது. பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் பெற்றது. நிறை வேற்று அதிகாரமற்ற முதலாவது ஜனாதிபதியாக வில்லியம் கொபல்லாவ பதவியேற்பு (பெப்ரவரி. 4. 1978 வரை).

1972. சோல்பலி அரசியலமைப்பு இல்லாது ஒழிக்கப்பட்டது.

1972. இலங்கை குடியரசு நாடாகியது.

1977. இலங்கையில் மகாதேசாதிபதி முறை ஒழிக்கப்பட்டு ஜனாதிபதி முறை ஏற்படுத்தப்பட்டது.

1978. இலங்கையின் தேசிய வீரர் தினம் ஜனநாயக சோசலிய குடியரசு யாப்பு அறுதிப் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. மே 22 தேசிய வீரர் தினமாக பிரகடணப்படுத்தப்பட்டது.

1990. கணணியில் விண்டோஸ் 3.0 வெளியிடப்பட்டது.

1990. வடக்கு ஜேர்மன் - கிழக்கு ஜேர்மன் இணைந்து ஜேர்மன் குடியரசாகியது.

2007. இலங்கையின் 35வது குடியரசு தினத்தன்று. வடக்கு கிழக்கு மாகாண கொடி அறிமுகம்.

2009. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கை வருகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை பேராதனை பல்கலைக்கழகத்தின் ஒரு தோற்றம்

**மே – 23**

1805. இத்தாலியின் மன்னனாக நெப்போலியன் போனபாட் முடிசூடினான்.

1949. மேற்கு ஜேர்மனி உருவானது.

1994. தமிழீழ விடுதலைப்புலிகளினால் தமிழீழ வைப்பகம் (வங்கி) திறக்கப் பட்டது.

2009. ஐக்கியநாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீன் மூன் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சாவுடன் சம்பிரதாய பூர்வமான சந்திப்பை மேற்கொண்டார். யுத்தம் முடிவடைந்த பகுதியையும் இடம்பெயர்ந்த முகாமையும் பார்வையிட்டார்.

2015 தமிழ்நாட்டில் முதலமைச்சராக செல்வி.ஜெ. ஜெயலலிதா 5வது முறையாக பதவியேற்பு.

2016 தமிழ் நாட்டின் முதலமைச்சராக 6வது தடவையாக செல்வி ஜெயலலிதா ஜெயராம் பதவியேற்பு.

**மே – 24**

1844. தந்தி முறை கண்டுபிடித்ததும் அதிகாரபூர்வமாக கொடுக்கப்பட்ட உலகின் முதல் தந்தியான ''கடவுள் என்னென்ன செய்தார்?'' என்ற தந்தி சாமுவேல் மோர்ஸ் என்பவரால் வாஷிங்டனிலிருந்து மேரிலாந்துக்கு அனுப்பப்பட்டது.

1993. கிழக்காபிரிக்கா நாடான எரித்திரியா எதியோப்பியாவிடமிருந்து விடுதலையடைந்தது.

2007. யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவில் இலங்கைக் கடற்படைத்தளத்தைக் கடற்புலிகள் தாக்கியளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008. இரண்டாவது இந்தியன் பிரீமியர் லீக் (IPL) கிரிக்கெட் இறுதிப் போட்டி தென்னாபிரிக்க ஜெகனஸ்பேர்க் மைதானத்தில் டெக்கான் சார்ஜஸ் அணியும் ரோயல் சலன்ஜர் பெங்களுர் அணியும் மோதின. ரோயல் சலன்ஜர் பெங்களுர் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் டெக்கான் சார்ஜஸ் அணியை துடுப்பெடுத்தாட பணித்தது அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ரோயல் சலன்ஜர் பெங்களுர் அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால் டெக்கான் சார்ஜஸ் அணி 6 ஓட்டங்களால் வெற்றி பெற்று முதல் முறையாக இந்தியன் பிரீமியர் லீக் (IPL) கிண்ணத்தை கைப்பற்றிக் கொண்டது. ஆட்டநாய கனாக 4 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டஙகளை கொடுத்து 4 விக் கெட்டுக்களை கைப்பற்றிய ரோயல் சலன்ஜர் பெங்களுர் அணி வீரர் அனில் கும்ளே தெரிவானார்.

## மே – 25

✱ காணாமல் போன குழந்தைகள் தினம் International Missing Children's day - 1998

1518. இலங்கை யாழ்ப்பாண மாவட்டம் காரைநகரிலுள்ள வியாவில் ஐயனார் கோயில் கட்டிமுடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது.

1878. தங்கத் தாத்தா என பலராலும் அழைக்கப்பட்ட ஈழத்துப் புலவர் சோமசுந்தர புலவர் பிறப்பு (இறப்பு 10.07.1953).

1961. பத்தாண்டுகளின் இறுதிக்குள் சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் ஐக்கிய அமெரிக்காவின் திட்டத்தை அதிபர் ஜோன் கு. கென்னடி அறிவித்தார்.

1995. இந்தியா துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் திருமணம் மும்பையில் நடைபெற்றது.

2000. மத்திய கிழக்கு நாடான லெபனான் இஸ்ரேலிடமிருந்து விடுதலை யடைந்தது.

## மே – 26

1912. இலங்கையிலிருந்து 7 பேரைக் கொண்ட முதலாவது தொகுதி சிறைக்கைதிகள் அந்தமான் தீவுக்கு அனுப்பப்பட்டனர்.

1950. மலேசியாவின் தேசியக் கொடி அங்கீகரிக்கப்பட்டது.

1958. இனக்கலவரம் கொழும்புக்குப் பரவியது. தமிழரின் வீடுகள், கடைகள், வாகனங்கள் என பல சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டு பலர் கொல்லப் பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1966. வட அமெரிக்காவின் தென் முனையில் Equator அண்மித்து அமைந் துள்ள ஒரு கூட்டுறவு குடியரசு நாடான "கயானா" ஐக்கிய இராச்சியத் திடமிருந்து விடுதலையடைந்தது.

1974. இலங்கை இந்தியாவுக்கிடையில் உள்ள பாக் ஜலசந்தியில் புதிய எல்லைக் கோடுகள் மாற்றியமைக்க இந்தியா முன்வந்தது. அதன்படி உடன்படிக்கை கைச்சாத்தானது. இந்தியா பிரதமர் இந்திரா காந்தியும் இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் கைச்சாத்திட்டனர்.

1987. யாழ்ப்பாண மாவட்டம் வடமராட்சியில் இலங்கை படையினரின் ஒப்பரேசன் லிபரேசன் இராணுவ நடவடிக்கை இடம்பெற்றது. புலிகளின் வசமிருந்த நிலப்பகுதி இராணுவ கட்டுபாட்டுக்குள் கொண்டுவரப் பட்டது.

1995. 1000வது ஒரு நாள் சர்வதேச கிரிக்கட் போட்டி இங்கிலாந்துக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையில் இங்கிலாந்தின் ஒவல் மைதானத்தில் நடைபெற்றது.

1998. உலகிலேயே அதிக பொருள் செலவில் உருவாக்கப்பட்ட "கிராண்ட் பிரின்சஸ்" என்ற சொகுசுக் கப்பல் தனது முதல் பயணத்தை ஆரம்பித்தது.

2001. ஆபிரிக்க யூனியன் ஆரம்பம்.

## மே – 27

1597. இலங்கை கோட்டே மன்னன் டொன் யுவான் தர்மபாலா இறப்பு.

1934. இரண்டாவது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் இத்தாலியில் கோலாகலமாக ஆரம்பம்.



ஐந்தாவது இந்தியன் பிரீமியர் லீக் (IPL) கிரிக்கெட் இறுதிப் போட்டியில் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்ட கொல்கத்தா நைட் ரைடர் அணிவீரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1964. இந்தியாவின் முதலாவது பிரதமரான ஜவகர்லால் நேரு மறைவு 1889-1964

1970. இலங்கையில் 4வது நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றது. சுதந்திரக் கட்சி 91 ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

2002. செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருப்பதாக ஆய்வுகள் உறுதிப்படுத்தின.

2011. 1990 கலவரத்தின் போது தனது சேவையை நிறுத்திய யாழ்தேவி புகையிரதம் தனது பயணத்தைக் கொழும்பு - ஓமந்தை வரை ஆரம்பித்தது.

2012. ஐந்தாவது இந்தியன் பிரீமியர் லீக் (IPL) கிரிக்கெட் இறுதிப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் கொல்கத்தா நைட் ரைடர் அணியும் மோதின. நாணயச் சுழற்ச்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றனர். வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர் அணி 19.4 ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களை பெற்று கொல்கத்தா நைட் ரைடர் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று முதல் முறையாக இந்தியன் பிரீமியர் லீக் (IPL) கிண்ணத்தை கைப்பற்றிக் கொண்டது. ஆட்டநாயகனாக கொல்கத்தா நைட் ரைடர் அணி வீரர் மன்வின்டர்த் பிஸ்யா தெரிவானார்.

## மே – 28

1915. இலங்கையின் கண்டியில் சிங்களவர்களுக்கும் - முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்பட்ட கலவரம் முடிவுக்கு வந்தது.

1964. பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை முன் கொண்டு செல்லும் இயக்கங்களுள் ஒன்றான ''பாலஸ்தீன விடுதலை இயக்கம்'' தோற்று விக்கப்பட்டது.

1958 பலஸ்தீன விடுதலை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

1958 இலங்கையில் இனக்கலவரம் ஆரம்பம்.

1998. பாகிஸ்தான் ஐந்து அணுவாயுத பரிசோதனை நடாத்தியது.

2008. சிரியா குடியரசானது.

2011. நான்காவது இந்தியன் பிரீமியர் லீக் (IPL) கிரிக்கெட் இறுதிப் போட்டி சென்னை M.A. சிதம்பர மைதானத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் ரோயல் சலன்ஜர் பெங்களூர் அணியும் மோதின. நாணயச் சுழற்ச்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றனர். வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோயல் சலன்ஜர் பெங்களூர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 58 ஓட்டங்களால் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக இந்தியன் பிரீமியர் லீக் (IPL) கிண்ணத்தை கைப்பற்றிக் கொண்டது. ஆட்டநாயகனாக 95 ஓட்டங்களை குவித்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரர் முரளி விஜய் தெரிவானார்.

2016 G7 மகாநாட்டில் இலங்கையிலிருந்து கலந்து கொண்ட முதலாவது ஜனாதிபதி மைதிரிபால ஸ்ரீசேன ஆவார்.

**மே – 29** ✱ ஐக்கிய நாடுகளின் அமைதி காப்போருக்கான சர்வதேச தினம் (International Day of United Nations Peacekeepers) - ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆண், பெண் இரு சாராரையும் கௌரவப் படுத்துவதற்கும் சமாதானத்திற்கான இந்நடவடிக்கைகளின் போது உயிர் நீத்தவர்களை ஞாபக மூட்டுவதற்காகவும் 2001ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை பிரகடனப்படுத்தி கொண்டாடப்படுகின்றது.

1872. ஆண்மிக சாதனைகளில் சிறந்து விளங்கிய ஈழத்துச் சித்தர் சிவயோக சுவாமிகள் (யோகர் சுவாமிகள) பிறப்பு (இறப்பு-1964).

1917. ஐக்கிய அமெரிக்காவின் 35வது குடியரசுத் தலைவர் ஜோன் கு. கென்னடி பிறப்பு (இறப்பு 22.11.1963).

1953. பிரிட்டன் - ஐக்கிய இராச்சியம் (United Kingdom) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1970. இலங்கையின் 8வது பிரதமராக சிறிமாவோ ரத்வத்த டயஸ் பண்டார நாயக்கா பதவியேற்பு 23.7.1977 வரை. சீலோன் (இலங்கை) என்ற பெயர் சிறிலங்காவாக மாற்றம் பெற்றபின் (23.03.1972) 1வது பிரதமராக 22.3.1972 - 23.7.1977 வரை பதவி வகித்தார்.

1982. இலங்கை மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

1999. மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நைஜீரியா நாட்டில் மக்களாட்சி ஆரம்பம்.

2015. அமெரிக்காவின் பயங்கரவாத பட்டியலிலிருந்து கியூபா நீக்கப்பட்டது. 19.7.2015 நள்ளிரவுடன் இருநாடுகளும் ராஜதந்திர உறவுகளை பின் தொடர்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிட்னி நகரத்தின் தோற்றம்

**மே – 30**

1431. பிரிட்டனின் ஆக்கிரமிப்பிலிருந்து பிரெஞ்சு நாட்டைக் காக்க போராடிய வீராங்கனை ஜான் ஒப் ஆர்க் (Joan Of Arc) பொதுமக்கள் முன்னிலையில் தீ மூட்டிக் கொல்லப்பட்டார்.

1962. 7வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் சிலியில் கோலாகலமாக ஆரம்பம்.

1981. வங்களாதேச அதிபர் ஜியாவுல் ரஹ்மானும் அவரது 8 உதவியாளர்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

1987. இந்தியாவின் மிகச்சிறிய மாநிலமான "கோவா" மாநில அந்தஸ்தைப் பெற்றது.

**மே – 31**

- உலக புகையிலை எதிர்ப்பு தினம் - உலகில் மனித இறப்புக்களை தோற்றுவிக்கும் முக்கிய காரணிகளில் புகையிலை இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. அறிவிப்பு மூலம் உலக சுகாதார நிறுவனம் ஆண்டு தோறும் புகையிலை சம்பந்தமான சுமார் 3.5 மில்லியன் இறப்புக்களை குறைக்க முடியும் என உறுப்பு நாடுகள் சேர்ந்து இந்நாளை 1987 ஆம் ஆண்டு சிறப்பு நாளாக அறிவித்து தற்போது கொண்டாடப்பட்டு வருகின்றது.
- புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினம்

1602. இலங்கைக்கு வருகை தந்த முதலாவது ஒல்லாந்தர் ஜோரிஸ்ஃபள் அட்மிரல். இவர் மட்டக்களப்புக்கு வருகை தந்தார்.

1787. உலகின் முதல் கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகள், எஸேக்ஸ், மிடில் செக்ஸ் எனும் இரு அணிகளுக்கு இடையே இங்கிலாந்து லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*கண்டங்கள்*

1790. அமெரிக்காவில் முதல் பதிப்புரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

1910. தென்னாபிரிக்கா ஒன்றியம் அமைக்கப்பட்டது.

1911. ஆடம்பர பயணக் கப்பலும் மற்றும் உலகின் மிகப் பெரிய பயணிகள் நீராவிக் கப்பலுமான டைட்டானிக் கப்பல் வெள்ளோட்டம் விடப்பட்டது.

1916. ஜீட்லாந்துக்கு அப்பால் இடம்பெற்ற பெரிய போர் கப்பற் சண்டையான வைஸ் அட்மிரல் ரெய்ன் ஹார்ட் ஸ்கீர் (Reinhard Scheer) என்பவர் தலைமையிலான கொய்சாலிச் கடற்படையின் ஆழ்கடல் கப்பற்படையும் அட்மிரல் சர் ஜான் ஜெலிக்கோ தலைமையிலான ராயல் கடற்படையின் கிராண்ட் கப்பற்படையும் மோதிக் கொண்டன. (போரில் எவரும் வெற்றி பெறாத நிலையில் பிரித்தானியாவின் பெரிய கடற்படைக்குத் தாக்கு பிடிக்க முடியாத ஜேர்மனியின் கப்பல் பின்வாங்கி சென்று விட்டன.)

1962. மேற்கிந்திய தீவுகளின் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.

1968. உலகில் முதன்முதலில் சைக்கிள் ரேஸ் பாரிஸில் நடாத்தப்பட்டது.

1970. ஒன்பதாவது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் மெக்சிக்கோவில் கோலாகலமாக ஆரம்பம்.

1981. 97,000 அரிய நூல்களுடன் தென்கிழக்காசியாவிலே மிகப்பெரிய நூலகமாக திகழ்ந்த யாழ்ப்பாண பொது நூலகம் நள்ளிரவு நேரம் இலங்கை காவற்துறையினரால் முற்றாக எரிக்கப்பட்டது.

1986. 13வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் மெக்சிக் கோவில் கோலாகலமாக ஆரம்பம்.

2002. 17வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் தென்கொரியா - ஜப்பானில் கோலாகலமாக ஆரம்பம்.

2004. எதியோப்பிய ஓட்ட வீரர் கனி நிசோ பஹ்லீ (Kane nisa Bakele) நெதர்லாந்தில் நடைபெற்ற Fanny Blanker-Koen போட்டியில் 5000m ஓட்டத்தினை 12:37.35 விநாடிகளில் கடந்து உலக சாதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீன்

**ஜீன்** – 01

1929. அன்னை திரேசா இந்தியாவின் வறிய மற்றும் நோயுற்ற மக்களுக்கும் சேவை செய்வதற்காக கல்கத்தா சென்றார்.

1935. வாகனம் ஓட்டுவதற்குக் கற்றுக்கொள்ளும் போது "L" குறியீட்டை மாட்டுவது ஐக்கிய இராச்சியத்தில் கட்டாயமாக்கப்பட்டது.

1947. "சுதந்திரன்" தமிழ்ப் பத்திரிகை இலங்கையின் தலைநகர் கொழும்பில் வெளிவர ஆரம்பிக்கப்பட்டது.

1958. இலங்கையில் ஊழியர் சேமலாப நிதி அறிமுகப்படுத்தப்பட்டது.

1971. இந்திய கோயம்பூத்தூரில் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

1978. 11வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் ஆர்ஜென்டினாவில் கோலாகலமாக ஆரம்பம்.

1978. பண அடிப்படையில் உலகின் இரண்டாவது மிகப் பெரிய பங்குச் சந்தையான டோக்கியோ பங்குச் சந்தை நடவடிக்கைகள் ஆரம்பமாயின.

1980. உலகில் முதன் முதலாக செய்திகளை மட்டும் 24 மணி நேரமும் ஒளிபரப்பு செய்யும் தொலைக்காட்சி சேவையான CNN ஐக்கிய அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.

1995. வறுமை ஒழிப்புத் திட்டத்தை நீக்க இலங்கை அரசு சமுர்த்தித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

2008. முதலாவது இந்தியன் பிரீமியர் லீக் (IPL) கிரிக்கெட் இறுதிப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் ராஜஸ்தான் ரோயல் அணியும் மோதின. ராஜஸ்தான் ரோயல் அணி நாணயச் சுழற்ச்சியில் வெற்றி பெற்று முதலில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை துடுப்பெடுத்தாட பணித்தது அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றனர். வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல் அணி 20 ஓவர்கள் நிறைவில்7 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களை பெற்று 3 விக்கெட்டுக் களால் வெற்றி பெற்று முதல் முறையாக இந்தியன் பிரிமியர் லீக் (IPL) கிண்ணத்தை கைப்பற்றிக் கொண்டது. ஆட்டநாயகனாக ராஜஸ்தான் ரோயல் அணி வீரர் யுசுப்பதான் தெரிவானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2016 உலகில் மிக நீளமும் 57 கி.மி. அகலமும் கொண்ட சுரங்கப்பாதை சுவிற்சர்லாந்தில் திறப்பு.

**ஜீன் – 02**

1882. நவீன இத்தாலியின் தந்தையும் இத்தாலியை உருவாக்கியவருமான தேசிய வீரர் ஹரிபால்டி இறப்பு (பிறப்பு 04.07.1807).

1943. இந்தியாவின் தலைசிறந்த திரைப்பட இசையமைப்பாளர் இசைஞானி இளையராஜா பிறப்பு.

1946. இத்தாலியில் முடியாட்சியை குடியரசாக மாற்றும் முடிவுக்கு மக்கள் பெருமளவு ஆதரித்து வாக்களித்தனர். அதனால் இத்தாலியின் மன்னர் நாட்டை விட்டு வெளியேறினார்.

1979. ஹம் டென்மார்க் என்ற இடத்தில் நடைபெற்ற ஸ்கொட்லாந்து அணிக்கெதிரான கால் பந்துப் போட்டியில் ஆர்மேண்டோ மரடோனா விளையாடி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற போட்டியில் தனது முதல் முது நிலை சர்வதேச கோலை பதிவு செய்தார்.

1981 தமிழ் அறிஞர் தாவீது அடிகளார் யாழ்ப்பாணத்தின் புனித சம்பத்திரிசியர் கல்லூரியில் இருந்து யாழ் நூலகம் எரிவதைப் பார்த்து மாரடைப்பால் மரணமடைந்தார்.

2003. இந்தியாவில் முதல் பெண் கொமாண்டோ படை தமிழகத்தில் அமைக்கப்பட்டது.

2014 இந்தியாவின் 29 வது மாநிலமாக தெலுங்கான உதயமானது. ஆந்திரா மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டு ஐதராபாத் உள்ளிட்ட பத்து மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**ஜீன் – 03**

1924. தமிழ் நாட்டு முன்னாள் முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான (தி.மு.க) அரசியல்வாதியுமான டாக்டர்.மு. கருணாநிதி பிறப்பு.

**ஜீன் – 04**

1707. ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தில் தேசவழமைச் சட்டத்தை அறிமுகப் படுத்தினர்.

1917. பத்தரிகைத்துறை, இலக்கியம் மற்றும் இசையமைப்பு என்பவற்றிக்காக அமெரிக்காவில் வழங்கப்படும் விருதான புலிட்சர் பரிசுகள் முதன் முதலாக வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1925. இந்திய விடுதலைப் போராட்ட வீரர் இலக்கிய வாதி மற்றும் மொழி பெயர்ப்பாளருமான வ.வே.சு. ஐயர் இறப்பு (பிறப்பு 1881)

1938. மூன்றாவது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் பிரான்சில் கோலாகலமாக ஆரம்பம்.

1946. 36 ஆயிரம் பாடலுக்கு மேல் பாடி உலக கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்திருக்கும் இந்திய திரைப்பட இசைப்பாடகர் S.P. பாலசுப்ரமணியம் பிறப்பு.

1970. தென் பசுபிக் பெருங்கடலில் அமைந்திருக்கும் தீவுக் கூட்டமான ''தொங்கா'' ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1987. பூமாலை நடவடிக்கை இலங்கையின் ஆளுகைக்குட்பட்ட வான் பரப்பில் அத்து மீறி உள்நுழைந்த இந்திய விமானங்கள் யாழ்ப்பாண குடா நாட்டின் மீது உணவுப் பொதிகளை வீசியது. 23 தொன் உணவு பொதிகள் போடப்பட்டது பி.ப.450க்கு

2008. அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக ஒபாமா தகுதி பெற்றார்.

2010. சனல்-4 தொலைக்காட்சி சேவைக்கு சிறந்த செய்திக்கான விருது வழங்கி கௌரவிப்பு.

2016. பிரபல குத்துச் சண்டை வீரர் முகமட் அலி 74வது வயதில் மரண மடைந்தார்.

**ஜீன் – 05** ✦ உலக சூழல் தினம் - ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் 1973 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது கொண்டாடப்பட்டு வருகின்றது.

1956 S.W.R.D பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் ஆட்சி மொழியாக தனிச்சிங்களம் மட்டும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

1956. இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் கொழும்பு காலிமுகத்திடலில் மேற்கொள்ளப்பட்ட உண்ணாவிரத்தில் பங்கு பற்றிய உறுப்பினர்கள் மிது தாக்குதல் நடத்தப்பட்டு பலர் கொல்லப்பட்டனர்.

1959. சிங்கப்பூரின் முதலாவது அரசு பதவியேற்றது.

1974. பொன். சிவகுமாரன் உரும்பிராயில் காவற்துறையினரின் சுற்றி வளைப்பில் சயனைட் அருந்தி மரணமடைந்தார். (பிறப்பு 26.08. 1957). ஈழப்போராட்ட வரலாற்றில் முதன் முதலில் சயனைட் அருந்தி உயிர் நீத்தவரும் இவரே.

1977. முதலாவது தனிக்கணனி அப்பிள் 2 விற்பனைக்கு விடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979. இலங்கையின் சுயாதீன தொலைக்காட்சி சேவை அரசுடமையாக்கப்பட்டது.

1980. இலங்கையில் முதலாவது TV சனல் ITN அரசுடமையாக்கப்பட்டது.

1984. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி சீக்கியமக்களின் முக்கிய கலாசார மையமான பொற்கோயிலில் தாக்குதல் நடத்த உத்தரவிட்டார்.

2004. ஐக்கிய அமெரிக்கா 40வது குடியரசுத்தலைவரும் மற்றும் அதிக வயதில் (69வயது) குடியரசுத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவருமான ரோனால்ட் றீகன் இறப்பு. (பிறப்பு-06.02.1911).

2009. இரண்டாவது சர்வதேச T20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இங்கிலாந்தில் கோலாகலமாக ஆரம்பம்.

2009. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் பாதுகாப்பு சபையில் சம்பிரதாய பூர்வமற்ற வகையில் இலங்கை பற்றிய விசாரனை இடம்பெற்றது.

2010. 11வது சர்வதேச இந்திய திரைப்பட விருது வழங்கும் விழா தலைநகர் கொழும்பில் நடைபெற்றது. இவ்விழாவில் சிறந்த அறிமுக நடிகையாக இலங்கையைச் சேர்ந்த ஜக்குலின் தெரிவு செய்யப்பட்டார்.

**ஜீன் – 06**

1711. யாழ்ப்பாணத்தில் இந்து மதச் சடங்குகளுக்கு ஒல்லாந்து அரசினால் தடை விதிக்கப்பட்டது.

1844. கிறிஸ்தவ இளைஞர் அமைப்பு YMCA லண்டனில் அமைக்கப்பட்டது.

1930. இலங்கை தமிழ் செய்திப் பத்திரிகை வீரகேசரி நாளிதழ் முதலாவதாக வெளியிடப்பட்டது.

1933. காரில் இருந்தபடியே திரைப்படம் பார்க்கும் படியான ''டி ரைவ் இன் சினிமா'' திறந்த வெளி அரங்கு முதன் முதலில் நியூயோர்க் நகரில் திறந்து வைக்கப்பட்டது.

2002. பிரிட்டன் அரச பரம்பரையில் முதல் விஜயமாக மகாராணி எலிசபெத் லண்டன் முருகன் கோவிலுக்கு பயணம்.

2004. இந்தியாவில் தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

2007. இரவு 8.30 மணியளவில் விண்வெளியில் வளிமண்டலத்தை ஊடறுத்துக் கொண்டு எரிகல்லின் பாகங்கள் பிரகாசமான நில வெளிச்சத்துடன் பெரும் சத்தத்துடன் பல இடங்களில் விழுந்தன.

2011. 174 மீற்றர் உயரமான முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச பிரிவில் அமைந்துள்ள கிளிநொச்சி கொக்காவில் தொலைத் தொடர்பு பரிவர்த்தனை கோபுரம் புணரமைக்கப்பட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வினால் திறந்துவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜீன் – 07** ✱ உலக தொல்பொருளியலாளர் தினம்.

✱ 632.கி.பி இஸ்லாம் மதத்தை தோற்றுவித்த முகம்மது நபி (நபிகள் நாயகம்) பிறப்பு.

1893. மகாத்மா காந்தி தனது முதலாவது ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார்.

1917 மெல்லின் ஜோன் அவர்களால் சர்வதேச லயன்ஸ் கழகம் ஆரம்பம்.

1929. திருத்தந்தை 16ம் பயலபாஸ் கையொப்பம் இடப்பட்ட / இலாதிரன் உடன்படிக்கையின் படி வத்திக்கான் நகரின் தேசியக் கொடி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

2007. கொழும்பு விடுதிகளில் இருந்து தமிழர் கட்டாயமாக வெளியேற்றப் பட்டனர்.

**ஜீன் – 08** ✱ கடல் தினம் World oceans day

1874. இலங்கையின் முன்னாள் சட்டசபை சபாநாயகர் சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி பிறப்பு (இறப்பு 12.04.1966).

1922. முதலாவது கடல் தினம் கொண்டாடப்பட்டது.

1929 ஐக்கிய இராச்சியத்தில் முதல் தடவையாக தொழிற்கட்சி ஆட்சி ஆரம்பிக்கப்பட்டது.

1958. ஆறாவது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் சுவீடனில் கோலாகலமாக ஆரம்பம்.

1963. இந்தியா தேசிய வானொலி ''ஆகாச வாணி'' என்ற பெயரை மாற்றி "All India Radio" என்னும் பெயரை சூட்டிக்கொண்டது.

1990. 14வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் இத்தாலியில் கோலாகலமாக ஆரம்பம்.

1992 முதலாவது சர்வதேச கடல் நாள் கொண்டாடப்பட்டது.

1993. அமெரிக்க அறிவியலில் உருவான டைனோசர் திகில் நிறைந்த Jurassic Park திரைப்படம் திரையரங்குகளில் திரையிடப்பட்டது.

2006 ஒஸ்லோ பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகுவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

**ஜீன் – 09**

1903. அநுராதபுரத்தில் இடம்பெற்ற கலவரத்தில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்று பௌத்தர்களினால் சேதமாக்கப்பட்டு மதகுரு தாக்கப்பட்டார்.

1936. யாழ்ப்பாண மாநகரசபை கட்டிடம் திறந்துவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1945. இந்தியாவின் முதல் பெண் மற்றும் இந்தியா காவற்துறை அதிகாரியான பிரண்பேடி பிறப்பு.

1964. இந்தியாவின் பிரதமராக லால் பகதூர் சாஸ்திரி பதவியேற்பு (ஜனவரி. 11. 1966 வரை பதவியில் இருந்தார்).

1980. M.G. இராமச்சந்திரன் இரண்டாவது தடவையாக தமிழ் நாட்டின் முதலமைச்சரானார்.

2005. புற்றுநோய்க்கு கதிர்வீச்சு மூலமான சிகிச்சை முறை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டது.

2006. 18வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் ஜேர்மனியில் கோலாகலமாக ஆரம்பம்.

## ஜீன் – 10

1829. லண்டன் தேம்ஸ் நதியில் முதலாவது படகுப்போட்டி நடந்தது.

1934. இரண்டாவது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் இத்தாலி - செக்கோஸ்லாவாக்கியா அணிகள் மோதிக் கொண்டன இறுதியில் இரு அணிகளும் முழு நேர முடிவில் கோல் அடிக்காத நிலையில் மேலதிக நேரம் (After Extra Time) வழங்கப்பட்டது. அதில் இத்தாலி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

1946. ஐ.நா. பொதுச்சபையின் முதலாவது அமர்வு நடைபெற்றது.

1998. இலங்கை தொலைக்காட்சி சேவையான Sirsa Tv ஆரம்பிக்கப்பட்டது.

1998. 16வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் பிரான்சில் கோலாகலமாக ஆரம்பம்.

2001. சிம்பாப்வே அணிக்கு எதிராக வெற்றி பெற்றதன் மூலம் வெளிநாட்டில் நடக்கும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 15 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு இந்தியா அணியினர் முதல் வெற்றியைப் பெற்றுக்கொண்டனர்.

2009. ஐக்கியநாடுகள் சபை செயலாளர் நாயகம் பான் கீ மூன் அவர்கள் கூட்டறிக்கை தொடர்பில் பின்பற்ற வேண்டிய விடயங்களை குறிப்பிட்டு இலங்கை ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைப்பு.

2010. உளவு பார்த்த குற்றச்சாட்டில் 7வயது சிறுவனுக்கு தலிபான் போராளிகளால் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

2010. இலங்கை 2007ல் வன்னி இறுதிக் கட்டப்போரில் தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட போர் குற்றங்கள் மனித உரிமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையால் நிபுணர் குழு நியமிக்கப்பட்டது.

2015. இலங்கையில் மோட்டார் சைக்களில் பயணிப்போர் கெல்மட்பெலிற் கட்டாயம் அணிய வேண்டும் என சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜீன் – 11**

1961. குவைத் நாடு சுதந்திரமடைந்தது.

1964. தென்னாபிரிக்காவில் இன வன்முறையை தூண்டினார் என பிரிட்டோரியா நீதிமன்றம் நெல்சன் மண்டேலா மீது குற்றம் சுமத்தி ஆயுள் தண்டனை விதிப்பு.

1990 தமிழிழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் இலங்கை இராணுவத்துடன் மீண்டும் தாக்குதலை ஆரம்பித்தனர்.

1996 இந்திய பிரதமர் ரஜீவ்காந்தி கொலைக்குற்றச் சாட்டில் இந்திய இராணுவத்தால் பேரறிவாளன் கைது செய்யப்பட்டுள்ளார்.

2010. 19வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் தென்னாபிரிக்காவில் கோலாகலமாக ஆரம்பம்.

**ஜீன் – 12**

- உலக இரத்ததான தினம் world blood donar day 2005 லிருந்து உலக சுகாதார நிறுவனத்தினால் பிரகடனம்
- World day Against child Labour உலக சிறுவர் தொழிலாளர் எதிர்ப்பு தினம்

1934. பல்கேரியாவில் அரசியற் கட்சிகள் தடைசெய்யப்பட்டன.

1964. தென்னாபிரிக்காவின் கறுப்பின தலைவர் நெல்சன் மண்டேலாவுக்கு தென்னாபிரிக்கா நீதிமன்றம் ஆயுட்கால சிறைத்தண்டணை விதித்தது. (கைது 05.8.1962)

1990. யாழ்தேவி புகையிரத சேவை முறிகண்டியில் வைத்து கண்ணி வெடிக்கு இலக்காகியது. இதனை அடுத்து கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரையான சேவை நிறுத்தப்பட்டது.

1990 தமிழிழ விடுதலைப்புலிகள் அமைப்பு இலங்கை இராணுவத்துடன் மீண்டும் யுத்த தாக்குதலை தொடர்ந்தனர்.

2012 அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையத் தளம் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெகலிய ரம்புக்வெலவினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. (www.dgi.gov.lk)

**ஜீன் – 13**

1931. பிரித்தானியக் குடியேற்ற நாடு ஒன்றில் இடம்பெற்ற வயது வந்தவர்கள் அனைவரும் கலந்து கொண்ட முதலாவது தேர்தல் முறையான இலங்கை அரசாங்க சபைக்கான தேர்தல் ஆரம்பம். இத்தேர்தல் 20.06.1931 வரை நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1943. இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் சுபாஸ் சந்திர போஸ் நீர் மூழ்கிக் கப்பல் மூலம் ஜேர்மனியில் இருந்து டோக்கியோ வந்தார்.

1948. ஈழத்தின் முதல் எழுத்தாளர் சங்கமான தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

1955. சோவியத் ஒன்றியத்தின் முதலாவது வைரச் சுரங்கம் கண்டுபிடிக்கப் பட்டது.

1974. 10வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் மேற்கு ஜேர்மனியில் கோலாகலமாக ஆரம்பம்.

1978 இஸ்ரேலின் பாதுகாப்புப் படையினர் லெபனானை விட்டு வெளியேறினர்

1982. 12வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் ஸ்பெயினில் கோலாகலமாக ஆரம்பம்.

2000. உலக சரித்திரத்தில் முதல் முறையாக தென் கொரியா - வடகொரியா ஜனாதிபதிகள் சந்திப்பு.

2006. மல்யுத்தத் தொடரான Extreme Championship Wrestling முதல் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

**ஜீன் – 14**

1919. ஜோன் அல்கார்கும் மற்றும் விட்டன் புரோனும் அந்திலாந்திக் கடலை முதல் முறையாக வான் வழியாக பறந்து கடந்தனர்.

1940. இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனியிடம் பிரான்ஸ் சரணடைந்தது.

1946. தொலைக்காட்சிப் பெட்டியை கண்டுபிடித்த ஜோன் லோகி பெர்டு (John Logi Baird) இறப்பு.

1965. யாழ்ப்பாண தமிழறிஞர் தமிழ்த் தாத்தா புலவர் கந்தமுருகேசனார் இறப்பு (பிறப்பு 27.04.1902).

1967. சீனா தனது முதலாவது ஐதரசன் அணுகுண்டைப் பரிசோதித்தது.

1991. இந்தியப் பிரதமர் ராஜிவ்காந்தி கொலை வழக்கில் முருகன் மற்றும் அவரது மனைவியான நளினி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

2011. பிரித்தானியா தொலைக்காட்சியான சனல்-4 ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் நடந்த ஈழத்தமிழர் இனப்படுகொலை பற்றிய ஓர் ஆங்கில ஆவணப்படத்தை வெளியிட்டது.

**ஜீன் – 15**

1572. மின்னல் என்பது மின்சாரம்தான் என்பதை பரிசோதனை மூலம் பெஞ்சமின் பிராங்ளின் நிரூபிப்பு.

1911. International Business Machines (IBM) கணணி நிறுவனம் அமைக்கப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1948. சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம் நிறுவிய கொடை வள்ளல் ராஜா சேர்.அண்ணாமலைச் செட்டியார் இறப்பு (பிறப்பு 30.09.1881).

1984. யாழ்ப்பாணம் காரைநகரில் இலங்கையின் கடல் விமானம் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

1990. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசபடைகளுக்குமான 2வது ஈழப்போர் ஆரம்பமானது. காங்கேந்துறைமுகத்தில் ஆரம்பம்

1993. கனடாவின் கொன்சர் வேடிவ் கட்சியின் தலைவியாகத் தேர்ந் தெடுக்கப் பட்ட மிஸ் கிம் காம்பெல் (Miss Kim Camphell) கனடாவின் முதல் பெண் பிரதமராக பதவியேற்பு.

2000. 1500வது சர்வதேச துடுப்பாட்ட (Test Much) போட்டி இங்கிலாந்து - மேற்கிந்தியதீவுகளுக்கிடையில் எஜ்பாஸ்டர் மைதானத்தில் ஆரம்பம். 17.06.2000 வரை நடைபெற்ற இப்போட்டியில் மேற்கிந்தியதீவுகள் அணி ஒரு இனிங்ஸ் (Innings) மற்றும் 93 ஓட்டங்களால் வெற்றி.

2006. இலங்கை கிரிக்கெட் அணியினர் தனது முதலாவது சர்வதேச T20 போட்டியில் விளையாட் களமிறங்கினர்.

2007. உலகின் மிகவும் நீளமான 34 கிலோ மீற்றர் நீள தொடரூந்து சுரங்கப் பாதை சுவிட்சர்லாந்தில் ஆல்ப்ஸ் மலைக்குக் கீழாக அமைக்கப்பட்டது.

## ஜீன் – 16

1954. 5வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் சுவிசர்லாந்தில் கோலாகலமாக ஆரம்பம்.

1963. உலகின் முதல் விண்வெளி வீராங்கனை ரஷ்ய பெண்மணியான வாலெண்டினா தெரஸ்கோவா 2நாட்கள் 22மணி 42நிமிடங்கள் 48 முறை பூமியைச் சுற்றினார்.

1972. சத்ரபதி பட்டத்தை நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஏற்றுக்கொண்டார்.

1990 தமிழிழ விடுதலைப் புலிகளினால் யாழ்ப்பாண கோட்டை தாக்கப் பட்டது. 26.09.1990 இல் கோட்டை முற்றுகை செய்யப்பட்டது.

2009. ஐந்து வளரும் நாடுகளின் கூட்டமைப்பான BRICS முதலாவது மாநாடு ரஷ்யாவிலே திமித்ரி மெட வெடெவ் தலைமையில் ஆரம்பம். (இக் கூட்டமைப்பில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னா பிரிக்கா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன)

## ஜீன் – 17

1858. 1857 இந்தியப் புரட்சியில் முன்னின்று போராடிய வடமத்திய இந்தியாவின் ஜான்சி ராணி லக்ஷ்மிபாய் வீரமரண மடைந்தார் (பிறப்பு 19.11.1885).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1950. உலகில் முதல் முறையாக சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை சிக்காக்கோ நகரில் நடந்தது.

1962. 7வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் பிரேசில் - கிசோகோஸ்லாவாக்கியா அணிகள் மோதிக்கொண்டன. இறுதியில் பிரேசில் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது தடவையாகவும் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

1985. 24 மணி நேர சர்வதேச தொலைக்காட்சி சேவையான Discovery Channel ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டது. இவ் தொலைக்காட்சி சேவையானது தற்பொழுது தமிழிலும் தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

1994. 15வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் ஐக்கிய அமெரிக்காவில் கோலாகலமாக ஆரம்பம்.

2009. தனியார் லொறிகள் பயணிப்பதற்காக A9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டது. இதனையடுத்து யாழ்ப்பாண குடாநாட்டிக்கு தேவையான அத்திய வாசியப் பொருட்கள் யாழ்ப்பாண குடாநாட்டிக்கு வந்தடைந்தன.

2010. உலகக் கிண்ண கால்பந்துப் போட்டியில் 48 வருடங்களுக்கு பின் சிலி முதல் வெற்றியை பெற்றுக்கொண்டது.

**ஜீன் – 18**

1744. பதிவு செய்யப்பட்ட முதல் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பரியில் ஆரம்பம்.

1815. வரலாற்றுச் சிறப்பு மிக்க வோட்டர்ளு (Waterloo) போர் ஆரம்பம். இப் போரில் மாவீரன் நெப்போலியன் போர்க் கைதியாக சிறை பிடிக்கப் பட்டு செயின்ட் ஹலினா தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1869. இலங்கை நாணயம் அரசாங்க கட்டளை ஒன்றின் மூலம் ஒழுங்கமைக் கப்பட்டது.

1983. அமெரிக்காவின் முதல் விண்வெளி வீராங்கனை "சலி றைட்" சலஞ்சர் விண்வெளி ஓடத்தில் விண்ணில் முதற் பயணம் செய்தார்.

1985. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைப் படையினருக்கும் இடையில் முதலாவது போர் நிறுத்தம் ஒப்பந்தம் ஏற்பட்டது.

1996. இலங்கை வன்னிப் பகுதியின் முல்லைத்தீவு நகர் பகுதியில் இருந்த அரசு படையினரின் படைத்தளத்தைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக் கையான ஓயாத அலைகள் போர் தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஆரம்பிக்கப்பட்டது.

2010. தமிழீழ விடுதலைப்புலிகளின் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த முப்படையினர் கௌரவிப்பு வெற்றி விழாவை முன்னிட்டு நாட்டில் அரசாங்க விடுமுறை அமுல்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜீன் – 19**

1911. இலங்கை பிரதமர் டட்லி சேனநாயக்கா பிறப்பு (13.4.1973)

1938. மூன்றாவது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் இத்தாலி - ஹங்கேரி அணிகள் மோதிக்கொண்டன - இறுதியில் இத்தாலி அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது தடவையாகவும் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

1945. சாத்தானின் வேதம் எனும் நூலை எழுதிய சல்மான் ருஷ்டி பிறப்பு.

1961. மத்திய கிழக்கு நாட்டின் மிகச் சிறிய நாடான குவைத் ஐக்கிய இராச்சியத் திடமிருந்து விடுதலையடைந்தது.

1966. இந்தியாவின் முதல் பெண் பிரதமராக இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1970 ராஜீவ் காந்திக்கும் சோனியா காந்திக்கும் மகனாக ராகுல் காந்தி பிறப்பு.

1970 இலங்கை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் பிரித்தானிய முடியாட்சியிலிருந்து முழுமையாக சுதந்திரம் பெற்ற நாடாக முடியரசாக மாற்றுவதற்கான பிரகடனத்தினை கொழும்பு நவரங்கலா மட்டபத்தில் அதிகாரபூர்வமான கூட்டம் ஒன்றை கூட்டினார் 1700 பேர் பங்குபற்றினர் தமிழர் எவரும் பங்குபற்றவில்லை.

2010. செல் காஸ் "Shell Gas" நிறுவனத்தை இலங்கை அரசு அரசுடமை யாக்கியது.

**ஜீன் – 20**

* உலக அகதிகள் தினம் (World Refugee Day) - 2000 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் சிறப்புத் தீர்மானமொன்றின் படி அகதிகளுக்கான தமது ஆதரவினை வெளிப்படுத்தும் முகமாக உலக அகதிகள் தினமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆபிரிக்கா அகதிகள் தினத்தை இந்நாளிலே கொண்டாடுவதனால் இந்நாள் உலக அகதிகள் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. பல்வேறு மோதல் களில் சிக்கி அகதிகளாக தாம் வசிக்கும் நாட்டினுள் அல்லது பிறநாடுகளிலென இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களுக்குள்ளாகி வாழ்ந்து வரும் அகதிகள் பற்றிய விழிப்புணர்வினை உலக மக்களிடத்தில் ஏற்படுத்துவதே இந்நாளின் முக்கியமான நோக்கமாகும்.
* தந்தையர் தினம்

1877. அலெக்சான்டர் கிரகாம் பெல் உலகின் முதலாவது வணிகத் தொலை பேசிச் சேவையை கனடாவின் ஹமில்ட்டன் நகரில் ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999. ஏழாவது உலகக்கிண்ண துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்ச்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியினர் 39 பந்து பரிமாற்ற நிறைவில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 132 ஓட்டங்களை பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா அணியினர் 20.1 பந்து பரிமாற்றத்தில் 2 விக்கட்டுக் களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர். இரண்டாவது தடவை யாகவும் உலகக்கிண்ணத்தை அவுஸ்ரேலியா அணியினர் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக ஷேன் வோர்ன் தெரிவு செய்யப்பட்டார். (இப் போட்டிகள் 14.05.1999 ஆரம்பமானது).

2010. முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் 500 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டதாக அரசு அறிவித்தது.

2011. ஏதென்ஸ் நகரில் நடைபெற்ற மாற்று வலுவுடையோருக்கான ஒலிம்பிக் போட்டியில் யாழ்ப்பாணம் கோண்டாவில் சிவபூமி பாடசாலை மாணவன் துஷ்யந்தன் 100 மீற்றர் குறுந்தூரப் போட்டியில் பங்கேற்றார். நீண்டகால இடைவேளைக்கு பின் தமிழ் பகுதியிலிருந்து செல்லும் முதல் மாணவர் என்ற பெருமையையும் பெற்றார்.

**ஜீன் – 21** ✱ உலக யோகாதினம் Internatinal Yoga day

1658. டச்சுக்காரர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியது.

1970. ஒன்பதாவது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் இத்தாலி - பிரேசில் அணிகள் மோதிக்கொண்டன. இறுதியில் பிரேசில் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது தடவையாகவும் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

1975. முதலாவது உலகக்கிண்ண துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணியினர் 60 பந்து பரிமாற்ற நிறைவில் 08 விக்கட்டுக்களை இழப்பிற்கு 291 ஓட்டங்களை பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியினர் 58.4 பந்து பரிமாற்றத்தில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 274 ஓட்டங்களை பெற்று 17 ஓட்டங்களினால் தோல்வியுற்றதால். முதலாவது உலகக் கிண்ணத்தை மேற்கிந்திய தீவுகள் அணியினர் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக கிளைவ் லொயிட் தெரிவு செய்யப்பட்டார். (இப்போட்டிகள் 07.06.1975 ஆரம்பமானது).

1990. மன்னாரில் கொண்டச்சி இராணுவ முகாம் தமிழீழ விடுதலைப் புலி களால் தாக்கி அழிக்கப்பட்டது.

1991. இந்தியப்பிரதமராக பி.வி. நரசிம்மராவ் பதவியேற்பு (மே.16.1996 வரை பதவி வகித்தார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991. தமிழ் நாட்டின் முதல் பெண் முதல்வராக செல்வி.ஜெ. ஜெயலலிதா பதவியேற்றார்.

1993. இலங்கைத் தொலைக்காட்சி சேவையான TNL ஆரம்பிக்கப்பட்டது.

2000. பாகிஸ்தான் கிரிக்கெட் அணி சகலதுறை ஆட்டக்காரர் அப்துல் ரசாக் இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் தொடர்ந்து மூன்று வீரர்களை ஆட்டமிழக்கச் செய்து "ஹட்ரிக்" சாதனை.

2003. இணையவழி சமூக வலையமைப்பு நிறுவனமான ஹாய் - 5 (hi5) ராமு யாலமன்சி என்பவரால் அறிமுகம். (ஹாய்-5 (hi5) பாவனையாளர்கள் Face book (முகநூல்) உபயோகிப்பாளர்கள் போன்றே தங்களுடைய புகைப்படம், சொந்த விபரங்கள், தொடர்பு கொள்ளும் விபரம் போன்ற தகவல்களை கோப்புக்களாக இத்தளத்தில் பதிவு செய்யலாம்.

2009. இரண்டாவது சர்வதேச T20 உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டி இங்கிலாந்து லண்டன் லோட்ஸ் மைதானத்தில் பாகிஸ்தான் - இலங்கை அணிகள் மோதல். நாணயச்சுழற்ச்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய - இலங்கை அணியினர் 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றனர். வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியினர் 18.4 ஓவர்களில் 02 விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களை பெற்று 8 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்று இரண்டாவது சர்வதேச T20 உலகக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர். இப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களையும் 1 விக் கெட்டையும் கைப்பற்றிய பாகிஸ்தான் அணி வீரர் சஹீட் அப்ரிடி தெரிவானார்.

2015 முதலாவது சர்வதேச யோகாதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

## ஜீன் – 22

1658. போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர்கள்.

1925 பிரித்தானிய நாடாளுமன்றம் நிலமானிய முறையை நீக்கியது

1974. தென்னிந்திய தமிழ்த் திரைப்பட முன்னனி நடிகர் இளைய தளபதி ஜோசப் விஜய் பிறப்பு.

1976. கனடாவில் மரணதண்டனை விதிக்கப்படுவது நிறுத்தப்பட்டது.

2000. செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருப்பதற்கான நேரடிச்சான்றுகள் இருப்பதாக நாசா விஞ்ஞானிகள் அறிவிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜீன்** – 23

1658. இலங்கையில் போர்த்துக்கேயரின் கடைசிப்பிடியாக இருந்த யாழ்ப் பாணக் கோட்டையை டச்சுக்காரர் கைப்பற்றினார்கள்

1894. சர்வதேச ஒலிம்பிக் அமைப்பு பாரிசில் அமைக்கப்பட்டது.

1924. இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ பிறப்பு (இறப்பு 01.05.1993).

1979. இரண்டாவது உலகக்கிண்ண துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணியினர் 60 பந்து பரிமாற்ற நிறைவில் 09 விக்கட்டுக்களை இழப்பிற்கு 286 ஓட்டங்களை பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியினர் 51 பந்து பரிமாற்றத்தில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 194 ஓட்டங்களை பெற்று 92 ஓட்டங்களினால் தோல்வி யுற்றதால். இரண்டாவது உலகக் கிண்ணத்தையும் மேற்கிந்திய தீவுகள் அணியினர் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக V.V.N. ரிச்சார்ட் தெரிவு செய்யப்பட்டார். (இப்போட்டிகள் 09.06.1975 ஆரம்பமானது).

1980. ராஜீவ்காந்தியின் தம்பியான சஞ்சய் காந்தி விமான விபத்தில் மரண மடைந்தார் (பிறப்பு 14.12.1946).

2010. அவுஸ்ரேலியாவின் முதல் பெண் பிரதமராக ஜீலியா கில்லார்ட் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

**ஜீன்** – 24

1860. புளோரின்ஸ் நைற்றிக்கேள் முதன் முதல் தாதிப்பயிற்சி கல்லூரியை இங்கிலாந்தில் ஆரம்பித்தார்.

1927. ''அர்த்தமுள்ள இந்துமதம்'', ''இயேசு காவியம்'' முதலிய புகழ்பெற்ற நூல்களை இயற்றிய தமிழ் திரைப்பட பாடலாசிரியர் கவியரசு கண்ண தாசன் பிறப்பு (இறப்பு 17.10.1981).

1928. தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளர் M.S. விஸ்வநாதன் பிறப்பு.

1950. நான்காவது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் பிரேசிலில் கோலாகலமாக ஆரம்பம்.

1980. இலங்கை திறந்த பல்கலைக்கழகம் ஆரம்பம்.

1993. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் 48/41 விதிமுறைக் கமைய நிறுவப்பட்டது.

1996. இலங்கையின் நேரம் மணித்தியாலம் முன்நகர்த்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜீன் – 25**

1844. அமெரிக்கா ஜனாதிபதி ஜோன் டெய்லர் திருமணம் நடைபெற்றது. அமெரிக்கா ஜனாதிபதியாக பதவியிலிருந்த போது திருமணம் செய்து கொண்ட முதல் ஜனாதிபதி என்னும் பெருமையை பெற்றார்.

1932. இந்தியாவில் முதன் முதலாக கிரிக்கெட் போட்டி நடந்தது.

1940. பிரான்ஸ் அதிகாரபூர்வமாக ஜேர்மனியிடம் சரணடைந்தது.

1950. வட கொரிய இராணுவம் தென்கொரியவை ஆக்கிரமித்தது.

1967. உலகில் முதலாவது செய்மதி தொலைக்காட்சி நிகழ்ச்சி "நம் உலகம் (own world) 30 நாடுகளில் காண்பிக்கப்பட்டது.

1975. தென்கிழக்காபிரிக்கா நாடான "மெசாம்பிக்" போர்த்துக்கல்லிட மிருந்து விடுதலையடைந்தது.

1978. 11வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் ஆர்ஜென்டினா - நெதர்லாந்து அணிகள் மோதிக்கொண்டன இறுதியில் இரு அணிகளும் முழு நேர முடிவில் கோல் அடிக்காத நிலையில் மேலதிக நேரம் (After Extra Time) வழங்கப்பட்டது. அதில் ஆர்ஜென்டினா அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முதல் தடவையாகக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

1978. முதல் சோதனைக் குழாய் குழந்தை இங்கிலாந்து நாட்டின் மான் செஸ்டர் நகரில் பிறப்பு.

1983. மூன்றாவது உலகக்கிண்ண துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியினர் 54.4 பந்து பரிமாற்றத்தில் சகல விக்கட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களை பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணியினர் 52 பந்து பரிமாற் றத்தில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்களை பெற்று 43 ஓட்டங்களினால் தோல்வி யுற்றதால் மூன்றாவது உலகக்கிண்ணத்தை இந்திய அணியினர் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக ஆ. அமர்நாத் தெரிவு செய்யப் பட்டார். (இப்போட்டிகள் 09.06.1975 ஆரம்பமானது).

1998. வின்டோஸ் 98 முதற் பதிப்பு வெளியானது.

2009. ஆபிரிக்கா, அமெரிக்கா புகழ் பெற்ற பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜாக்சன் லொஸ் ஏன்ஜல் நகரில் இயற்கை மரணம் எய்தினார். (1958.08.29)

2009. இலங்கைத் தொலைக்காட்சி சேவையான வசந்தம் Tv ஆரம்பிக்கப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜீன் – 26** ✱ சித்திரவதைக்கு ஆளானோருக்கான சர்வதேச ஆதரவு தினம் (International Day in Torture Victims) - உலகெங்கும் உள உடல் ரீதியாக பல்வேறு சித்திரவதைகளுக்கு ஆளானோருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் அவையினால் 1987ஆம் ஆண்டு தீர்மானம் எடுக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வருகின்றது.

1882. கொழும்பு துறைமுகத்தில் முதன் முறையாக மின் ஒளி இணைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

1884. உலக நேர அளவு இங்கிலாந்தின் ''கிரின்வீச்'' என்ற இடத்திலிருந்து கணக்கிடப்பட்டது.

1945. ஐக்கியநாடுகள் பட்டயத்தை 50 நாடுகள் கையொப்பம் இட்டு ஐக்கிய நாடுகள் நிறுவனத்தை உருவாக்கம்.

1960. ஆபிரிக்கா கண்டத்தின் தென் கிழக்கே இந்தியப் பெருங்கடலிலுள்ள மடகஸ்கார் பிரான்சிடமிருந்து விடுதலையடைந்தது.

1976. உலகின் மிக உயரமான கோபுரங்களில் ஒன்றான (உயரம்-553, 33m) கனடாவின்C.N. கோபுரம் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறக்கப் பட்டது.

**ஜீன் – 27**

1927. ஈழத்தின் எழுத்தாளர்,மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா பிறப்பு.

1954. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.

1954. உலகின் முதலாவது அணுக்கரு ஆற்றல் உற்பத்தி மையம் மொஸ் கோவுக்கு அருகில் ஒப்னிள்ஸ்க் எனும் இடத்தில் அமைக்கப்பட்டது.

1967. உலகின் முதலாவது ATM லண்டன் என்பல்டில் அமைக்கப்பட்டது.

1974. இந்தியாவுக்குச் சொந்தமான கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமாக்கப் பட்டது.

1977. கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடான ஜிபுட்டி பிரான்சிட மிருந்து விடுதலையடைந்தது.

1979. முகம்மது அலி குத்துச்சண்டையில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

1998. மலேசியாவின் பிரதான வானூர்தி நிலையமும் தென்கிழக்காசியா வின் முக்கிய வானூர்தி நிலையங்களுள் ஒன்றான கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையமும் திறக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜீன்** – 28

1914. ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசர் பிரான்ஸில் பேடினந்தும் அவரது பாரியர் சோபியும். பிரின்ஸிப் என்ற பொஸ்னிய மாணவனால் கொலை செய்யப்பட்டனர். இதனால் முதலாவது உலக யுத்தம் ஆரம்ப மானது.

1932. முதன் முறையாக இந்தியா துடுப்பாட்ட அணி தேர்வுத் துடுப்பாட்டப் போட்டியில் (Test Much) விளையாடியது. இந்தியாவை எதிர்த்து விளையாடிய இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

1995. ஈழப்போரில் மண்டைதீவு இராணுவப் படைத்தளத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தனர்

2007. அவுஸ்ரேலிய சிட்னியில் அமைந்துள்ள ஒப்போரோ மாளிகை யுனெஸ் கோவினால் உலக பாரம்பரிய களமாக அமைக்கப்பட்டது.

**ஜீன்** – 29

1823. பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மெதடிஸ்த மிஷனால் ஆரம்பிக்கப்பட்டது. வணக்கத்துக்குரிய வின்சன் அம்மையார் கல்லூரியின் முதல் அதிபராக பொறுப் பேற்றார்.

1916. உலகில் முதல் போயிங் விமானம் வானில் பறந்தது.

1945. இலங்கையின் நான்காவது நிறைவேற்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க பிறப்பு.

1958. 6வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் சுவீடன் - பிரேசில் அணிகள் மோதிக்கொண்டன இறுதியில் பிரேசில் அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முதன் முறையாக கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

1974. கச்சதிவு ஒப்பந்தம் எதிர்த்து தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சி மாநாடு மு.அ.கருணாநிதி தலைமையில் கட்டப்பட்டது.

1986. 13வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் ஆர்ஜென்டினா - மேற்கு ஜேர்மனி அணிகள் மோதிக்கொண்டன இறுதியில் ஆர்ஜென்டினா அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது தடவையாகவும் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

1988. விழிப்புல வலுவிழந்தோர் இல்லம் கலாநிதி அன்னலட்சுமி சின்னத் தம்பி அம்மையார் அவர்களால் தெல்லிப்பளையில் 12 விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளுடன யாழ்ப்பாண மாவட்டம். ஆரம்பிக்கப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010. அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் சிறு பராய வாழ்க்கை தொடர்பான திரைப்படம் இந்தோனேசியாவில் வெளியீடு.

**ஜீன் – 30**

1859. நயகரா நீர் வீழ்ச்சியின் மீது சார்ள்ஸ் பிளான்டின் என்பவர் தன் முதுகில் ஒருவரை சுமந்தபடியே கயிறு ஒன்றின் மீது நடந்து சென்று சாதனை.

1940. ஜேர்மனியில் உள்ள மனநோயாளிகளை பிடித்து கொல்லும்படி சர்வதிகாரி ஹிட்லர் உத்தரவு.

1960. ஆபிரிக்காவின் மத்திய பகுதியில் அமைந்துள்ளதும் ஆபிரிக்காவிலே மூன்றாவது பெரிய நாடுமாகிய கொங்கோ எசுப்பானியாவிடமிருந்து விடுதலையடைந்தது.

2002. 17வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் ஜேர்மனி - பிரேசில் அணிகள் மோதிக்கொண்டன இறுதியில் பிரேசில் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று ஐந்தாவது தடவையாகவும் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

2007. கனடா ரொரண்டோவில் தமிழியல் மாநாடு ஆரம்பமானது.

2014 இலங்கையின் 23வது வணிக வங்கியாக கார்கிள்ஸ் தனது செயற் பாட்டை கொழும்பில் தனது தலைமையலுவலகத்தில ஆரம்பித்தது. இது கார்கிள்ஸ் சிலோன் பி.எல்.சி, சி.டி.கோல்டிங்ஸ் பி.எல்.சி ஆகிய வற்றினை அங்கத்துவ நிறுவனமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீலை

**ஜீலை** – 01 ✸ உலக கேளிக்கை தினம்

1825. ஐக்கிய இராச்சிய நாணயங்கள் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட நாணயங்களாக்கப்பட்டன.

1881. உலகின் முதலாவது சர்வதேசத் தொலைத்தொடர்பு சேவை கனடாவின் நியுபிரன்ஸ்விக் மாநிலத்திற்கும் ஐக்கிய அமெரிக்காவின் மேய்ன் மாநிலத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது.

1904. மூன்றாவது ஒலிம்பிக் போட்டிகள் ஐக்கிய அமெரிக்க சென்லூசியா நகரில் கோலாகலமாக ஆரம்பம். 23.11.1904 வரை நடைபெற்ற இப் போட்டியில் ஐக்கியஅமெரிக்க 78 தங்கம், 82 வெள்ளி, 79 வெண் கலமாக மொத்தம் 239 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முதலிடத்தையும் ஜேர்மனி 4 தங்கம், 4 வெள்ளி, 5 வெண்கலம் உட்பட மொத்தம் 13 பதக்கங்களையும் கியூபா 4 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலம் உட்பட மொத்தம் 9 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப் பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன.

1921. சீன கம்யுனிஸ் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

1932. அவுஸ்திரேலிய ஒலிபரப்பு சேவை (ABC) ஆரம்பிக்கப்பட்டது.

1947. இந்தியாவுக்கு முழு விடுதலையை ஆகஸ்ட் 15 ஆம் நாளன்று வழங்க பிரித்தானிய நாடாளுமன்றம் முடிவெடுத்தது.

1960. ஆபிரிக்கா கண்டத்தின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள "கானா" விடுதலையடைந்தது.

1961. பிரிட்டிஷ் நாட்டு இளவரசி டயானா பிறப்பு (இறப்பு 31.08.1997).

1961. இலங்கை மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது கிளை கொழும்பு Duke வீதியில் ஆரம்பிக்கப்பட்டது.

1962. ஆபிரிக்காவின் பேரேரிகளுக்கு அண்மையில் அமைந்துள்ள சிறிய நாடான "புருண்டி" பெல்ஜியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1962. ஆபிரிக்காவின் மத்தியில் அமைந்துள்ள ருவாண்டா பெல்ஜியத் திடமிருந்து விடுதலை.

1967. ஐரோப்பிய சமூகம் உருவாக்கப்பட்டது.

1980. இலங்கையில் அரச துறை ஊழியர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் பலர் வேலை இழந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1984 புருனி ஆசியாவின் அமைப்பின் 6வது உறுப்பு நாடாக இணைந்து கொண்டது.

1988. அகில இந்தியா வானொலியில் "இன்று ஒரு தகவல்" முதல் நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது. இந்நிகழ்ச்சியை தென்கச்சி கோ. சுவாமிநாதன் தொகுத்து வழங்கினார்.

1997. மக்கள் சீன குடியரசு ஹொங்கொங்கில் தனது ஆட்சியை ஆரம்பித்தது. 156 ஆண்டு கால பிரித்தானிய குடியேற்ற ஆட்சி முடிவடைந்தது.

2002. உலகில் இனப் படுகொலை, மனிதருக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர் குற்றங்கள் செய்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க ஐக்கிய நாடுகளினால் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court) நிறுவப்பட்டது.

2012. சூரிய ஒளியில் இயங்கும் பேருந்து (Bus) சீனாவில் முதல் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. 100 பயணிகள் அமரக்கூடியது.

**ஜீலை – 02**

1850. வாய்முகக் கவசத்துக்கான (Gas Mask) காப்புரிமத்தை அமெரிக்காவைச் சேர்ந்த P.J. லேன் என்பவர் பெற்றார்.

1940. இந்திய சுதந்திரப் போராட்ட வீரன் சுபாஸ் சந்திரபோஷ் கல்கத்தாவில் கைது செய்யப்பட்டார்.

1976. 1954 முதல் பிரிந்திருந்த வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம்கள் மீண்டும் இணைந்து சோசலிசக் குடியரசாகியது.

1988. இலங்கையில் முதலாவது மாகாணசபை தேர்தல் நடைபெற்றது.

2002. உலகத்தை பலூனில் இடைவிடாது தனித்து பறந்த முதல் மனிதன் என்ற பெருமையை ஸ்டீஸ் பொசெட் பெற்றார்.

2004. ஆசியன் அமைப்பில் பாகிஸ்தான் இணைந்து கொண்டது.

2005. இந்தியா சேது சமுத்திர திட்டப்பணிகளை பிரதமர் மன்மோகன் சிங் ஆரம்பித்து வைப்பு.

2007 வடக்குமாகாண சபை நிர்வாகரீதியாக தனியான மாகாணசபையாக செயற்படத் தொடங்கியது.

2010. அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஈரானின் அணுசக்தி நடவடிக்கைகளுக்குத் தடை ஏற்படுத்தும் சட்ட மூலத்தில் கைச்சாத்து.

2015 தேசிய அடையாள சட்டை ஒரே நாளில் பெறுவதற்கான கட்டணமாக ரூபா 500/= லிருந்து ரூபா ஆயிரமகா உயர்த்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜீலை – 03

1608. கியூபெக் நகரம் உருவாக்கப்பட்டது.

1928. முதன் முதலாக தொலைக்காட்சியில் வர்ணனை ஒளிபரப்பு செய்யப் பட்டது.

1944. முற்றிலும் நில எல்லைகளைக் கொண்ட கிழக்கு ஐரோப்பா நாடான ''பெலரஸ்'' நெதர்லாந்திடமிருந்து விடுதலையடைந்தது.

1972 வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாண கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது

1997. நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு ''பாபா சாஹேப் பால்கோ'' விருது அறிவிக்கப்பட்டது.

1997. மிகக்குறைந்த வயதில் (16 வயதில்) விம்பிள்டன் பட்டம் பெற்ற பெண்மணி எனும் பெருமையை சுவிசர்லாந்து வீராங்கனை மார்டினா ஹிங்கிஸ் பெற்றார்.

2010. கிர்கிஸ்தானின் முதல் பெண் ஜனாதிபதியாக ரோஸக்ச ஓடுன்ப யோவா (வயது-59) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2013 இலங்கையில் வடக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தல் நடை பெற்றது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வெற்றி பெற்றது. முதலமைச் சராக நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரன் நியமனம்.

## ஜீலை – 04

1598. 'ATLAS' எனப்படும் உலக வரைபடத்தை முதன் முதலில் தயாரித்து வெளியிட்ட ஆபிரகாம் ஓட்டோனியஸ் இறப்பு.

1776. பிரித்தானியா காலணித்துவத்தின் கீழ் இருந்து ஜோர்ஜ் வாஷிங்டன் தலைமையிலான அமெரிக்கா சுதந்திர யுத்தத்தின் மூலம் விடுதலை பெற்று சுதந்திர பிரகடனம் செய்தது.

1817- இந்தியாவில் முதன் முறையாக டெக்ஸ்டைல் (Textile) மில் ஆரம்பிக்கப் பட்டது.

1902- 19ம் நூற்றாண்டின் இந்தியாவின் தலை சிறந்த சமயத் தலைவரான சுவாமி விவேகானந்தர் இறப்பு (பிறப்பு 12.011863)

1910 மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு அத்திவாரம் இடப்பட்டது. அதிபர் Joseph Hutchinson

1934. ரேடியம், பொலோனியம் போன்ற கதிர் வீச்சுக்களை கண்டுபிடித்த வரும், போலாந்து நாட்டைச் சேர்ந்தவருமான மேரிகியூரி அம்மையார் இறப்பு (பிறப்பு 07.11.1867).

1954. 5வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் மேற்கு ஜேர்மனி - ஹங்கேரி அணிகள் மோதிக்கொண்டன இறுதியில் மேற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

2005. ஜிமெயில் (gmail) ஜேர்மனியில் கூகிள் மெயில் (google email) என மீள் பெயரிடப்பட்டது. அன்றிலிருந்து IP முகவரியூடாக எவராவது ஜேர்மனியில் இருந்து வருபவராக இருந்தால் அவர் googlemail.Com இணையத்தளத்திற்கு மீள் நடத்தப்படுவார். அவர்களின் மின்னஞ்சலானது @gmailemail.com ஐக் கொண்டிருக்கும் யாராவது ஜேர்மன் பயனர்கள் @gmail.com என்றவாறு மின்னஞ்சலைப் பெறவேண்டும் என்றால் அவர்கள் வேறு ஓர் நாட்டில் உள்ள புறொக்ஸி (Proxy) சேவரூடாகச் செய்து கொள்ளலாம். இத் திகதிக்கு முன்னர் சேவையை பெற்றுக்கொண்டவர்கள் அச் சேவையினை தொடரலாம்.

2006. சர்வதேச ஒருநாள் போட்டி கிரிக்கெட் வரலாற்றில் இலங்கை அணி நெதர்லாந்து அணிக்கு எதிரான போட்டியில் 9 விக்கெட்டுக் களை இழந்து 443 ஓட்டங்களை குவித்து உலக சாதனை.

2007. முஸ்லிம்களின் சமய பிரச்சினைகள் விவகாரங்களை ஆராய்ந்து தீர்ப்பு வழங்கும் அமைப்பான ஜமியதுல்ல உலமா சபைக்கு ஜனாதிபதி சிறிய காணித்துண்டொன்று வழங்கினார்.

2010. இலங்கை மத்திய வங்கியின் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறப்பு.

**ஜீலை** – 05

1811. தென் அமெரிக்க கண்டத்தின் வட பகுதியில் அமைந்துள்ள நாடான ''வெனிசுவேலா'' எசுப்பானியாவிடமிருந்து சுதந்திரமடைந்தது.

1865. Salvation Army இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது.

1962. ஆபிரிக்கா கண்டத்தின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ளதும் மற்றும் ஆபிரிக்கா கண்டத்தின் இரண்டாவது பெரிய நாடாகிய ''அல்ஜிரியா'' பிரான்சிடமிருந்து சுதந்திரமடைந்தது.

1971. அமெரிக்காவில் 18 வயதானவர்களுக்கு வாக்குரிமை வழங்கும் சட்டம் அமுல்.

1975. ஆபிரிக்கா கண்டத்தின் மேற்குக் கரைக்கு அப்பால் வட அட்லாண்டிக் பெருங்கடலில் மக்ரோனேசிய சூழல் வலயத்தில் அமைந்துள்ள பல தீவுக் கூட்டங்களைக் கொண்டநாடான ''கேப் வேர்ட்'' போர்த்துக்கல்லிடமிருந்து சுதந்திரமடைந்தது.

1977. பாகிஸ்தானில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரதமர் சுல்பிக்கார் அலி பூட்டோ பதவி இழந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987 தமிழிழ விடுதலைப் புலிகளின் முதல் கடும்புலி தாக்குதல் கப்டன் மில்லர் என்ற வல்லிபுரம் வசந்தன் என்பவரால் வடமராச்சி நெல்லியடி படைமுகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

1996. குளோனிங் முறையில் முதலாவது பாலூட்டி டோலி என்ற ஆடு ஸ்கொட்லாந்தில் பிறப்பு (இறப்பு 14.02.2003)

1997. செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழமுடியுமா? என்று ஆராய அமெரிக்காவினால் அனுப்பப்பட்ட ''சோஜர்ன்'' ரொக்கட் மூலம் ஏவப்பட்ட ''பாத் பைண்டர்'' என்னும் வாகனம் செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கியது.

## ஜீலை – 06

1907. இங்கிலாந்து சாரோ மாநிலத்தில் உலகின் முதல் மோட்டார் பந்தயம் நடந்தது.

1912. 5வது ஒலிம்பிக் போட்டிகள் சுவீடன் ஸ்டேக்லோம் நகரில் கோலாகல மாக ஆரம்பம். 22.07.1912 வரை நடைபெற்ற இப் போட்டியில் ஐக்கியஅமெரிக்க 25 தங்கம், 19 வெள்ளி, 19 வெண்கலமாக மொத்தம் 63 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப் பட்டியலில் முதலிடத்தையும் சுவீடன் 24 தங்கம், 24 வெள்ளி, 17 வெண்கலம் உட்பட மொத்தம் 65 பதக்கங்களையும் ஐக்கிய இராச்சியம் 10 தங்கம், 15 வெள்ளி, 16 வெண்கலம் உட்பட மொத்தம் 41 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப்பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களைத் தக்கவைத்துக் கொண்டன.

1947. சோவியத் ஒன்றியம் ஏ.கே-47 துப்பாக்கிகளைத் தயாரிக்க ஆரம்பித்தது.

1962. இலங்கைப் பிரதமர் S.W.R.D பண்டாரநாயக்காவைக் கொலை செய்த குற்றத்திற்காக ''சோமாராம தேரர்'' என்ற பௌத்தத் துறவி தூக்கிலிடப் பட்டார்.

1964. தென் கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள ''மலாவி'' ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலையடைந்தது.

1975. இந்தியப் பெருங்கடலில் ஆபிரிக்காவின் கிழக்கு கரையில் வட மடகஸ் காருக்கும் வடகிழக்கு மொசாம்பிக்குக்கும் இடையே அமைந்துள்ள தீவுகளால் ஆன நாடான ''கொமொரோஸ்'' பிரான்சிடம் இருந்து விடுதலையடைந்தது.

## ஜீலை – 07

1890. இலங்கையின் தொல்பொருள் திணைக்களம் அரச நிறுவனம் என்ற ரீதியில் 1890இல் ஆரம்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1896. இந்தியாவில் முதற்தடவையாக பம்பாய் நகரில் திரைப்படம் அறிமுகப் படுத்தப்பட்டது.

1947. நேபாளத்தின் கடைசி மன்னர் ஞானேந்திரா பிறப்பு.

1974. 10வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் மேற்கு ஜேர்மனி-நெதர்லாந்து அணிகள் மோதிக்கொண்டன. இறுதியில் மேற்கு ஜேர்மனி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது தடவையாகவும் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

1978. சொலமன் தீவுகள் ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை யடைந்தது.

1981. துப்பறியும் புனைகதை எழுத்தாளர் ஆர்தர்கொனன் டொயில் பிறப்பு (இறப்பு 22.05.1859)

1985. போரிஸ் போக்கர் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் ஓரே நேரத்தில் 3 சாதனைகளை நிகழ்த்தினார்.

2007. புதிய ஏழு உலக அதிசயங்கள் பட்டியல் வெளியிடப்பட்டது இந்தியா வின் தாஜ்மஹால் புதிய ஏழு அதிசயங்களில் ஒன்றாக தேர்ந்தெடுக்கப் பட்டது.

**ஜீலை – 08**

1497. வாஸ் கொடகாமாவின் இந்தியாவிற்கான முதல் நேரடிப்பயணம் ஆரம்பம்.

1985. இந்தியாவின் முயற்சியினால் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக பூட்டன் தலைநகரான திம்புலில் மாநாடு நடத்தப்பட்டது தமிழர் சார்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க LTTE, தமிழீழ விடுதலை இயக்கம் TELO, தமிழர் விடுதலை கூட்டணி TULF, தமிழ் மக்கள் விடுதலைகழகம் PLOT, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF, ஈழபுரட்சி அமைப்பு EROS என்பன கலந்து கொண்டன. அரசின் சார்பில் JR ஜயவர்த்தன சார்பில் சகோதரரான ஹெக்டர் ஜெயவர்த்தன தலைமையில் குழு கலந்து கொண்டது.

1990. 14வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் மேற்கு ஜேர்மனி- ஆர்ஜென்டினா அணிகள் மோதிக்கொண்டன இறுதியில் மேற்கு ஜேர்மனி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது தடவையாகவும் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

1994. அயர்லாந்து தடகள ஓட்ட வீராங்கனை சோனியா ஓசுலீவன் ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற 200m ஓட்டத்தினை 5:25:36 விநாடிகளில் கடந்து உலக சாதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995. இலங்கையில் வெண்தாமரை இயக்கம் சுகததாச விளையாட்டு அரங்கில் முதல் பெண் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2015 இலங்கையின் வடக்கு மாகாண சபையின் கீழ் தனியான அதிகார முடைய இறை வரித் திணைக்களம் ஆரம்பம்.

**ஜீலை – 09**

1810. பிரான்சில் மன்னனான நெப்போலியன் பொன பார்ட் பிரான்சுடன் ஒல்லாந்தை இணைத்தார்.

1816. ஆர்ஜென்டினா எசுப்பானியாவிடமிருந்து சுதந்திரமடைந்தது.

1903. யாழ்ப்பாணத்தில் இந்து வாலிபர் அமைப்பு (YMHA) உருவாகப்பட்டது.

1948. பாகிஸ்தான் தனது முதல் அஞ்சல் தலையை வெளியிட்டது.

1995. நவாலி புனித பேதுறு ஆலயத்தின் மீது இலங்கை விமானப் படையினரின் குண்டுத்தாக்குதலில் குழந்தைகள், பொதுமக்கள் என 141 பேர் கொல்லப் பட்டனர். இதே நாள் வலிகாமம் மேற்கு தென்மேற்கு பகுதிகள் அரச பாடசாலைகள் முற்றுகையிடப்பட்டது.(முன்னேறி பாய்ச்சல்)

2006. 18வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் இத்தாலி - பிரான்ஸ் அணிகள் மோதிக்கொண்டன. இறுதியில் இரு அணிகளும் முழு நேர முடிவில் கோள் அடிக்காத நிலையில் மேலதிக நேரம் (After Extra Time) வழங்கப்பட்டது. அதிலும் இரு அணிகளும் தலா 1 கோல் அடித்தமையால் இரு அணிகளது வெற்றி தோல்வியை தீர்மானிக்க பனால்டி முறை வழங்கப்பட்டது (After Penalty Shoot –Out) அதில் இத்தாலி அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று நான்காவது தடவையாகவும் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

**ஜீலை – 10**

1212. இங்கிலாந்து தலைநகர் லண்டன் நகரத்தின் பெரும் பகுதி தீயினால் அழிவடைந்தது.

1925. சோவியத் ஒன்றியத்தின் (டாஸ்) செய்தி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

1947. பாகிஸ்தானின் முதலாவது ஆளுநர் நாயகமாக முகமத் அலி ஜின்னா நியமிக்கப்பட்டார்.

1962. உலகின் முதன் முதலாக தகவல் தொடர்பு செயற்கைக் கோள் "டெல் ஸ்டார்" விண்ணில் ஏவப்பட்டது.

1973. பஹாமாஸ் ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1979. ஸ்கைலாப் விண்வெளி பூமிக்குத்திரும்பியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1992 போலாந்து நாட்டின் முதல் பெண் பிரதமராக திருமதி. ஹன்னா சாகா பதவியேற்பு.

2006. நான்காவது ஈழப்போர் திருகோணமலை மாவட்டத்தில் மாவிலாறு நீர் அணையைத் தாக்கியதன் எதிரொலியாக ஆரம்பித்தது.

**ஜீலை – 11** ✸ உலக மக்கள் தொகை தினம் (World Population Day) - மக்கள் தொகை குறித்த விழிப்புணர்வை உலகளாவிய ரீதியில் மக்களுக்கு எடுத்துச் செல்லும் முயற்சியாக ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தினால் கொண்டாடப்பட்டு வருகின்றது. (1987 ஆம் ஆண்டு இதே நாளிலேயே உலக மக்கள் தொகை 5 பில்லியனைத் தாண்டியது). 1989ம் ஆண்டிலிருந்து இந்நாள் பிரகடனப்படுத்தப்பட்டது.

1517. மார்டீன் புரொபிஷர் கிரீன்லாந்தை கண்டுபிடித்தார்.

1921. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி வில்லியம் ஹோலாட் டஃப்ட் இந் நாட்டின் பிரதம நீதியரசராக பதவியேற்றார். இவ்விரு பதவிகளையும் வகித்த ஒரே நபர் இவராவார்.

1921. மாங்கோலியா சீனாவிடமிருந்து விடுதலையடைந்தது.

1966. 8வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் இங்கிலாந்தில் கோலாகலமாக ஆரம்பம்.

1982. 12வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் மேற்கு ஜேர்மனி - இத்தாலி அணிகள் மோதிக்கொண்டன இறுதியில் இத்தாலி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது தடவை யாகவும் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

1987. அமெரிக்காவின் முதலாவது விண்வெளி நிலையமான ஸ்கைபிலப் பூமிக்குத் திரும்பும் போது உடைந்து சிதறி இந்து சமுத்திரத்தில் விழுந்தது.

1987. சர்வதேச மக்கள் தொகை தினம் அங்கீகரிக்கப்பட்டது. இது 11.7.1987ல் மக்கள் தொகை 500 கோடியை எட்டியது. இந்த நினைவைப் போற்றும் விதத்தில் ஒவ்வொரு வருடமும் யூலை 11ம் திகதி சர்வதேச மக்கள் தொகை தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. குரோஸியாவில் பிறந்த மதேஜ் காஸ்பர் எனும் குழந்தையே சர்வதேச மக்கள் தொகையை 500 கோடியாக்கியது.

1990. கிளிநொச்சியில் ''கொக்காவில்'' இராணுவ முகாம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டது.

2010. 19வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் ஸ்பெயின் - நெதர்லாந்து அணிகள் மோதிக்கொண்டன இறுதியில் இரு அணிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழு நேர முடிவில் கோல் அடிக்காத நிலையில் மேலதிக நேரம் (After Extra Time) வழங்கப்பட்டது. அதில் ஸ்பெயின் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முதல் முறையாக கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

**ஜீலை – 12**

100 கி.மு. ரோமேனிய இராணுவம் மற்றும் அரசியற் தலைவரான யுலியஸ் சீசர் பிறப்பு (இறப்பு 15.03.கி.மு44)

1641. போர்த்துக்கல்லுக்கும் நெதர்லாந்துக்கும் இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

1975. சாவோ தோமே பரின்சிபே போர்த்துக்கல்லிடமிருந்து விடுதலையடைந்தது.

1998. 16வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் பிரான்ஸ் - பிரேசில் அணிகள் மோதிக்கொண்டன இறுதியில் பிரான்ஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முதல் தடவையாக கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

2011. நெப்டியூன் கிரகம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக சூரியனை வலம் வந்து முடித்தது.

**ஜீலை – 13**

1844. இலங்கையில் காவல்துறை (Police) நீதிமன்றங்கள் அமைப்பு.

1869. இந்துப்பிள்ளைகளின் கல்விக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் ஓர் ஆங்கிலப் பாடசாலையை நிறுவினார்.

1908. இங்கிலாந்து லண்டனில் நடைபெற்ற நான்காவது ஒலிம்பிக் போட்டிகளில் முதன் முதலில் பெண்கள் பங்குபற்றினர்.

1930. முதலாவது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் உருகுவேயில் கோலாகலமாக ஆரம்பம்.

1934. நோபல் பரிசு பெற்ற நைஜீரியா எழுத்தாளர் வோல் சொயிங்கா பிறப்பு.

1953. தமிழ்த் திரைப்பட பாடலாசிரியர் கவிஞர் வைரமுத்து பிறப்பு

1983. பயனியர்-10 சூரிய மண்டலத்தைக் கடந்து விண்மீன்களுக்கிடையே தனது முடிவில்லாப் பயணத்தை தொடங்கியது.

1989. இலங்கை தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினருமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் சுட்டுக்கொலை. (பிறப்பு - 26.08.1927)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011. இந்திய நிதி மையமான மும்பை நகரில் மாலை 6.54க்கும் 07.06க்கும் இடையே 3 இடங்களில் தொடர் குண்டு வெடிப்புக்கள் வெடிப்பு. இக் குண்டு வெடிப்பில் 17 பேர் இறந்ததோடு 141 பேர் காயமடைந்தனர்.

**ஜீலை – 14**

1776. ஐக்கிய அமெரிக்கா சுதந்திர நாடாகியது.

1789. பாரிஸ் மக்கள் பால்டில் சிறையை தகர்த்து சிறைக்கைதிகளை விடுவித்து இராணுவ தளபாடங்களை கைப்பற்றினர். இதனால் பிரெஞ்சு புரட்சி ஏற்பட்டது.

1867. அல்பிரட் நோபல் டைனமைட் வெடிமருந்தை வெடிக்க வைத்து மக்களுக்கு காண்பிப்பு.

1943. மக்கள் விடுதலை முன்னனி தலைவர் (J.V.P) யின் ரோகண விஜய வீர பிறப்பு (இறப்பு 13.12.1989)

1967. சீனா தனது முதலாவது ஐதரசன் அணுகுண்டை பரிசோதித்தது.

1975. தமிழர் இளைஞர் இயக்கமான தமிழீழ விடுதலை இயக்கம் உருவாக்கப் பட்டது.

1995. இறுவட்டு (CD) MP3 பெயரிடப்பட்டது.

2006. இணையம் மூலமான மின்னனுச் செய்தித்தாளை இந்தியப் பத்திரிகையான (தமிழகம்) தினகரன், தினத்தந்தி ஆகிய நாழிதழ்கள் ஆரம்பித்தன.

2006 வடக்கு கிழக்கு மாகாணசபை இரண்டாக பிரிக்கப்படவேண்டு மென்று ஜே.வி.பி கட்சி உயர் நீதி மன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தது.

2015. இந்திய திரைப்பட இசையமைப்பாளர் எம்.எஸ். விஸ்வநாதன் 87வது வயதில் காலமானர்.

**ஜீலை – 15**

1815. பிரேஞ்சு மன்னர் நெப்போலியன் பிரித்தானிய படைகளிடம் சரணடைந்தான்.

1903. தனித் தமிழ் இயக்கத்தை ஆரம்பித்த மறைமலை அடிகள் பிறப்பு (இறப்பு 15.09.1950).

1903. தந்தை குமாரசாமிக்கும் தாய் சிவகாமி அம்பாளுக்கும் மகனாக தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் காமராஜர் தமிழ் நாடு விருதுநகரில் பிறப்பு (இறப்பு 02.10.1975)

1914. இந்திய விடுதலைக்கு வித்திட்ட தில்லையடி வள்ளியம்மையின் நினைவுச் சின்னத்தை தென்னாபிரிக்காவில் அஹிம்சை போராட்ட வீரர் மகாத்மா காந்தி திறந்து வைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1955. இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவிற்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.

1970. மூன்றாவது உலகத்தமிழ் மாநாடு பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி தொடக்கி வைத்தார்.

1991. ஈழத்து எழுத்தாளர் நெல்லை க. பேரன் இலங்கை இராணுவத்தின் எறிகணை குண்டு வீச்சில் குடும்பத்தோடு கொல்லப்பட்டார் (பிறப்பு - 18.12.1946).

1991. 7 நாடுகளின் கூட்டமைப்பான G7 அமைப்பு லண்டனில் உருவாக் கப்பட்டது.

2002. யுத்தத்தின்பின் செங்கலடி பதுளை வீதி A.5 திறக்கப்பட்டது.

2010. இந்திய ரூபாவிற்கு புதிய சின்னம் அறிமுகப்படுத்தப்பட்டது.

**ஜூலை – 16**

622. முகமது நபி மக்காவில் இருந்து மதீனாவிற்கு பயணம் தொடங்கினார். இது இஸ்லாமிய நாட்காட்டியின் தொடக்கமாகும்.

1769. அமெரிக்க கலிபோர்னியா மாநிலத்தின் பிரதான நகரான சான்டிய கோ நகரம் அமைக்கப்பட்டது.

1854. ஒளிப்படச்சுருளை கண்டுபிடித்த ஜோர்ஜ் ஈஸ்ற்மன் பிறப்பு (இறப்பு 14.03.1932)

1862. அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர்களான லூயிஸ் ஸ்வீப்ட் ஹெரேஸ் டர்டில் ஆகிய இருவரும் வால் விண்மீனை முதன் முதலாக கண்டுபிடித்தனர். இவர்களுடைய பெயரிலேயே அவ்வால் விண் மீனுக்கு ''ஸ்விப்ட்-டர்டில்'' எனப் பெயர் சுட்டப்பட்டது.

1918. ரஷ்ய மன்னர் ஜோர்ஜ் மற்றும் அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் உட்பட முழுக் குடும்பமும் புரட்சியாளர்களால் சுட்டுக்கொலை செய்யப் பட்டனர்.

1942. லிபியாவின் தலைவர் கேணல் முவம்மர் அல் கடாபி பிறப்பு.

1948. யேசு கிறிஸ்து வாழ்ந்த நசரெத் நகரத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்தது.

1965 பிரான்ஸையும் இத்தாலியையும் இணைக்கும் மோண்ட் பிளாங்க் சுரங்கப்பாதை திறக்கப்பட்டது.

1969. அப்பலோ - 11 விண்கலம் புளோரிடாவிலிருந்து ஏவப்பட்டது. இவ் விண்கலமே சந்திரனில் இறங்கிய முதலாவது மனிதரை ஏற்றிச் சென்ற விண்கலமாகும்.

1979- ஈராக் நாட்டின் அதிபராக சதாம் ஹீசைன் முதல்முறையாக பதவியேற்பு.

1979. கிரிபட்டி பிரித்தானியாவிடமிருந்து விடுதலையடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*இலவச சமூக இணையத்தள சேவைகள்*

1989. தமிழீழ மக்கள் விடுதலைக்கழக (Plote) அமைப்பின் தலைவர் க. உமா மகேஸ்வரன் இறப்பு (பிறப்பு 18.02.1945).

1994. மேக்கர் லெவி 9 என்ற வால்வெள்ளி வியாழனுடன் மோதியது.

1995. யாழ்ப்பாண காங்கேசன்துறையில் தமிழீழ விடுதலைப்புலிகளால் இலங்கை கடற்படையினரின் எடித்தாரா யுத்தக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

1999. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எஃப்கென்னடி ஜூனியர் உட்பட அவரின் மனைவி மைத்துனி ஆகியோர் விமான விபத்தில் பலியாகினார்கள்.

2004. மிலேனியம் பூங்கா சிக்காகோவில் அமைக்கப்பட்டது.

**ஜீலை – 17**

1911. யாழ்ப்பாணத்தில் தேச வழமைச்சட்டத்தின் திருமண விதிகளுக்கு மாற்றாக "யாழப்பாண திருமண" சிறப்புச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

1972. யாழ்ப்பாணத்தின் முதலாவது தமிழ் ஆயர் எமிலியானுஷ் பிள்ளை இறப்பு (பிறப்பு-1901)

1975. அமெரிக்காவின் அப்பல்லோ விண்கலமும் சோவியத்தின் சோயுஸ் விண்கலமும் விண்வெளியில் ஒன்றாக இணைந்தன. இரண்டு நாகளின் விண்கலங்கள் ஒன்றாக இணைந்தது இதுவே முதற் தடவையாகும்.

1976. 21வது ஓலிம்பிக் போட்டிகள் கனடா மொன்றியஸ் நகரில் கோலாகலமாக ஆரம்பம். 01.08.1976 வரை நடைபெற்ற இப் போட்டியில் சோவியத் யுனியன் 49 தங்கம், 41 வெள்ளி, 35 வெண்கலமாக மொத்தம் 125 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப் பட்டியலில் முதலிடத்தையும் கிழக்கு ஜேர்மனி 40 தங்கம், 25 வெள்ளி, 25 வெண்கலம் உட்பட மொத்தம் 90 பதக்கங்களையும் ஐக்கிய அமெரிக்க 34 தங்கம், 35 வெள்ளி, 25 வெண்கலம் உட்பட மொத்தம் 94 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப் பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன.

1976. இந்தோனிஷியாவின் 27ஆவது மாகாணமாக கிழக்கு திமோர் இணைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994. 15வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் இத்தாலி - பிரேசில் அணிகள் மோதிக்கொண்டன இறுதியில் இரு அணிகளும் முழு நேர முடிவில் கோல் அடிக்காத நிலையில் மேலதிக நேரம் (After Extra Time) வழங்கப்பட்டது. அதிலும் இரு அணிகளும் கோல் அடிக்காமையால் இரு அணிகளது வெற்றி தோல்வியை தீர்மானிக்க பனால்டி முறை வழங்கப்பட்டது (After Penalty Shoot - Out) அதில் பிரேசில் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று நான்காவது தடவையாகவும் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

1996. இந்தியா தமிழ் நாடான மெட்ராஸ் சென்னை என்று பெயர் மாற்றம் பெற்றது.

**ஜூலை – 18**

1830. உருகுவே அரசியலமைப்பு ஆரம்பம்.

1872. ஐக்கிய இராச்சியத்திலும் அயர்லாந்திலும் இரகசிய வாக்கெடுப்பு முறை அமுல்படுத்தப்பட்டது.

1918. தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பின தலைவரும் மற்றும் நோபல் பரிசு பெற்றவரான நெல்சன் மண்டேலா பிறப்பு.

1925. அடோல்ஃப் ஹில்டர் மெயின் காம்ஃப் (எனது போராட்டம்) என்னும் நூலை வெளியிட்டார்.

1965. சோவியத்தின் சோண்ட் - 3 விண்கலம் ஏவப்பட்டது.

1966. நாசாவின் ஜெமினி - 10 விண்கலம் ஏவப்பட்டது.

1973. ஆப்கானிஸ்தானில் மன்னராட்சி முடிவடைந்து குடியரசாகியது.

1977. வியட்நாம் ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்து கொண்டது.

1996. ஓயாத அலைகள் ஒன்றில் முல்லைத்தீவு இலங்கை இராணுவ படை முகாம் விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டது.

2014 இலங்கையில் செய்மதியூடான தொலைக்காட்சி சேவை ஒலிபரப்பு ஆரம்பம். பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்துள்ளார்.







கால்பந்து போட்டி காட்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜீலை** – 19

1940. வெற்றியைக் குறிக்க "V" என்ற சைகையை வின்சன் சர்சில் அறிமுகப் படுத்தினார்.

1947. 19ம் நூற்றாண்டின் தமிழிசை ஆய்வாளர், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் இறப்பு (பிறப்பு 27.03.1892)

1952. 15வது ஒலிம்பிக் போட்டிகள் பின்லாந்து சோல் சின்கி நகரில் கோலா கலமாக ஆரம்பம். 03.08.1952 வரை நடைபெற்ற இப் போட்டியில் ஐக்கிய அமெரிக்க 40 தங்கம், 19 வெள்ளி, 17 வெண்கலமாக மொத்தம் 76 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப் பட்டியலில் முதலிடத்தையும் சோவியத் யுனியன் 22 தங்கம், 30 வெள்ளி, 19 வெண்கலம் உட்பட மொத்தம் 71 பதக்கங்களையும் ஹங்கேரி 16 தங்கம், 10 வெள்ளி, 16 வெண்கலம் உட்பட மொத்தம் 42 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப் பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன.

1974 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் (வளாகம்) முதல் தலைவராக 1st President பேராசிரியர் கைலாசபதி நியமனம். 1-8-1974ல் பதவியேற்பு.

1980. 22வது ஒலிம்பிக் போட்டிகள் சோவியத் யூனியன் மொஸ்கோ நகரில் கோலாகலமாக ஆரம்பம். 03.08.1980 வரை நடைபெற்ற இப் போட்டி யில் சோவியத் யுனியன் 80 தங்கம், 69 வெள்ளி, 46 வெண்கலமாக மொத்தம் 125 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முதலிடத் தையும் கிழக்கு ஜேர்மனி 47 தங்கம், 37 வெள்ளி, 42 வெண்கலம் உட்பட மொத்தம் 126 பதக்கங்களையும் பல்கேரியா 08 தங்கம், 16 வெள்ளி, 17 வெண்கலம் உட்பட மொத்தம் 44 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப்பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்க வைத்துக் கொண்டன.

1996. 26வது ஒலிம்பிக்போட்டிகள் ஐக்கியஅமெரிக்க ஜோர்ஜியா மற்றும் அல்டண்டா மாநிலங்களில் கோலாகலமாக ஆரம்பம். 04.08.1996 வரை நடைபெற்ற இப்போட்டியில் ஐக்கியஅமெரிக்க 44 தங்கம், 32 வெள்ளி, 25 வெண்கலமாக மொத்தம் 101 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முதலிடத்தையும் ரஷ்யா 26 தங்கம், 21 வெள்ளி, 16 வெண்கலம் உட்பட மொத்தம் 63 பதக்கங் களையும் ஜேர்மனி 20 தங்கம், 18 வெள்ளி, 27 வெண்கலம் உட்பட மொத்தம் 65 பதக்கங் களையும் சுவீகரித்து பதக்கப் பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங் களை தக்கவைத்துக் கொண்டன.

2007. இலங்கை இராணுவம் கிழக்கு மாகாணத்தின் குடும்பி மலையை விடுதலைப்புலி அமைப்பிடமிருந்து கைப்பற்றியதுடன் தேசிய கொண்டாட்டமாக கிழக்கின் உதயம் என்ற விழாவை வெகு விமர்சை யாக கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் கொண்டாடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009. மலேசியாவில் இயங்கிவரும் ஓர் இந்து உரிமைகள் போராட்டக் குழுவான இந்து உரிமைகள் போராட்டக் குழு (Hindu Rights Action Force) இண்ட்ராவ் (Hindraf) கோலாலம்பூரை தலைமை யிடமாகக் கொண்டு ஆரம்பம்

2010. ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு நியூயோர்க் நகரில் முதற் தடவையாக கூடியது.

2015. யாழ் குடாநாட்டில் உருவான முதலாவது பரிசோதனை குழாய் மூலமான குழந்தை யாழ்ப்பாண தனியார் மருத்துவமனையான நொதேன் வைத்தியசாலையில் பிறந்தது.

**ஜீலை – 20** ✱ சர்வதேச சதுரங்க தினம் (International Chess Day) - 1924 ஆம் ஆண்டு இந் நாளிலேயே சதுரங்கக் கூட்டமைப்பு பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நிறுவப்பட்டது. இந்நாளை சர்வதேச சதுரங்க தினமாக 1966 ஆம் ஆண்டில் சர்வதேச சதுரங்க கூட்டமைப்பு (FIDE) அறிவித்து கொண்டாடப் பட்டு வருகின்றது. 356.கி.மு. கிரேக்க மன்னன் மகா அலெக்சாந்தர் பிறப்பு (இறப்பு-11.06.கி.மு323)

1810. கொலம்பியா விடுதலையடைந்தது.

1919. உலகின் மிகப்பெரிய மலைத்தொடரான எவரெஸ்ட் சிகரத்தை முதன் முதலாக அடைந்தவரும் நியூசிலாந்தின் மலையேறியுமான சேர் எட்மண்ட் ஹில்லறி பிறப்பு (இறப்பு-11.01.2008).

1937. வானொலியை கண்டுபிடித்தவரும், "வானொலியின் தந்தை" எனப் படுபவரும் மற்றும் கம்பியற்ற தகவல் தொடர்பு முறையை உருவாக்கிய வருமான மார்க்கோனி இறப்பு (பிறப்பு 25.04.1874)



*2012ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்ப நிகழ்வு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1949. இஸ்ரேலும் சிரியாவும் 19 மாத யுத்தத்தின் பின்னர் போர் நிறுத்த உடனபடிக்கையில் கைச்சாத்திட்டன.

1953. "Unicef" அமைப்பு ஐக்கிய நாட்டினால் நிரந்தரமாக்கப்பட்டது.

1960. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க இலங்கையின் பிரதமராக தெரிவு செய்யப் பட்டார். இவரே உலகின் முதன் பெண் பிரதமருமாவார்.

1969. அமெரிக்காவின் அப்போலோ - 11 விண்வெளி ஓடம் சந்திரனை அடைந்தது. நீல் ஆம்ஸ்ரோங், எட்வின் அல்ட்றின், மைக்கல் கொலின்ஸ் ஆகியோர் பயணம் செய்தனர். நீல் ஆம்ஸ்ரோங் சந்திரனில் காலடி வைத்த முதல் மனிதரானார்.

1973. கராத்தே வீரரும், ஹலிவுட் நடிகருமான புரூஸ்லீ 32வது வயதில் இறப்பு (பிறப்பு 27.11.1940).

1976. அமெரிக்கா அனுப்பிய வைக்கிங்-1 விண்கலம் செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கியது.

1979. இலங்கையில் பயங்கரவாதச்சட்டம் அமுலுக்கு வந்தது.

1995 அம்பாறை மாவட்டம் ஒலூவிலில் தென்கிழக்கு பல்கலைக்கழக கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இது 23.10.1996ல் பல்கலைக்கழகமாக தரமுயர்த் தப்பட்டது.

2000. இலங்கை கிரிக்கெட் வீரர் சங்கக்காரா தனது முதலாவது கன்னி டெஸ்ட் போட்டியில் காலி கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பித்தார். தென்னா பிரிக்காவுடனான போட்டியில் 1 இன்னிங்ஸ் 15 ஓட்டங்களால் வெற்றியிட்டியது.

2005. கூகிள் (Google) நிலப்படங்கள் போன்று நிலா கோளினை செய்மதிப் பார்வை மூலம் பார்க்க உதவும் இணையத்தளமாகவும் நிலவின் முன் தோற்றம் (Elevation) நேரடித் தோற்றம் மற்றும் அப்பலோ ஓடத்தினர் வழியான தோற்றங்களை காணக்கூடியதான கூகிள் நிலா அல்லது கூகிள் மூன் (Google Moon) அறிமுகம்.

2006 இலங்கை கிழக்கு மாகாணம் திருகோணமலையிலுள்ள மாவிலாறு அணைக்கட்டு தமிழிழ விடுதலைப் புலிகளினால் மூடப்பட்டது.

2011. கிளிநொச்சி மாவட்டத்தில் சர்வதேச தரம் வாய்ந்த விளையாட்டு அரங்குக்கான அடிக்கல் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சா வினால் நாட்டப்பட்டது.

2012. யாழ்ப்பாணம் கச்சேரி பழைய பூங்காவில் புதிதாக அமைக்கப்பட்ட பூங்கா மக்களின் பாவனைக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012 கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்தி சபைக்குரிய கட்டடம் புனரமைப்பு செய்யப்பட்டு இலங்கைக்கான இந்திய தூதுவர் காந்த் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

2015. ஐக்கிய நாடுகள் (பல) இலத்திரனியல் ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்து, தெற்காசியாவில் சாத்திட்ட முதல் நாடு இலங்கை.

2015. அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கு இடையிலான ராஜ தந்திர உறவு கடந்த 50ஆண்டுகளின் பின்பு இன்று உருவாக்கியுள்ளது 19.07.2015 நள்ளிரவுடன் உருவாகியது.

**ஜீலை – 21**

1831. பெல்ஜியம் நெதர்லாந்திடமிருந்து விடுதலையடைந்தது.

1899. சுவாமி இராமகிருஷ்னரின் மனைவியும் ஆண்மிகவாதியுமான சாரதா தேவி இறப்பு (பிறப்பு-1853)

1944. பசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ள தீவான குவாம் விடுதலையடைந்தது.

1954. ஜெனிவா மாநாட்டில் வியட்நாம் வடக்கு மற்றும் தெற்கு என இரண்டாக பிளவுபட்டது.

1960. சிறிமாவோ ரத்வத்த டயஸ் பண்டாரநாயக்கா 7வது பிரதமராக பதவி யேற்பு 27.03.1965 வரை

1969. நீல்ஆம்ஸ்ரோங் மற்றும் எட்வின் ஆல்டறின் ஆகியோர் முதன் முறையாக சந்திரனில் காலடி வைத்தவர்கள் என்ற பெருமையைப் பெற்றனர்.

1983 யாழ்ப்பாணம் பலாவி விதியில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அண்மை யில் தபால் கட்டை சந்தியில் அதிசக்தி வாய்ந்த குண்டுத் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இரவு 11.45 மணியளவில் நடந்தது இது பின்னர் இனக்கலவரமாக இலங்கை முழுவதும் நடைபெற்றது.

1998. விண்வெளிக்கு சென்ற முதலாவது அமெரிக்கர் அலன் ஷெப்பர்ட் இறப்பு (பிறப்பு- 18.11.1923).

2001. தென்னிந்திய திரைப்பட நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இறப்பு (பிறப்பு 01.10.1928).

2003. இலங்கை தொலைக்காட்சி சேவையான ART Television ஆரம்பிக் கப்பட்டது.

2007. ''ஹரிபொட்டர்'' தொடர் நாவலின் இறுதிப்பாகம் வெளிவந்தது.

2010. அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான இராஜாங்க உதவிச் செயலாளர் றொபேட் ஓபிளேக் இலங்கை வருகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011. 2000வது சர்வதேச தேர்வுத்துடுப்பாட்டப் போட்டி (Test Much) இங்கிலாந்து இந்திய அணிகளுக்கிடையில் லண்டன் லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பம். இப் போட்டியில் இங்கிலாந்து அணி 196 ஓட்டங்களால் அபார வெற்றி.

2011 நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு சென்னை மெரினா கடற்கரைச் சாலையில் சிலை நிறுவப்பட்டது.

2012. இந்தியாவின் 13வது குடியரசு தேர்தல் நடைபெற்றது. பிரணாப் முகர்ஜி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தார்.

## ஜூலை – 22

1832. பிரான்சின் பேரரசன் இரண்டாம் நெப்போலியன் இறப்பு (பிறப்பு 20.03.1811).

1933. வைலி போஸ்ட் என்பவர் 15596 மைல்களைக் கடந்து முதன் முதலாக உலகைச் சுற்றி வந்தார்.

1944. போலாந்து தேசிய தினம்.

1983. இன்று வெள்ளிக்கிழமை இரவு 11.45 மணியளவில் 13 படையினர் கொல்லப்பட்டனர் யாழ்ப்பாணத்தில் அதிசக்தி வாய்ந்த குண்டு வெடிப்பு நடந்தது. இது யூலைக் கலவரத்துக்கு ஆரம்பமான காரணியாகியது.

2003. ஈராக்கில் சதாம் ஹுசைனின் இரு புதல்வர்கள் குவாசி உதய் மற்றும் அவரது 14 வயது பேரன் அமெரிக்க இராணுவத்தினால் கொல்லப் பட்டனர்.

2009. 21ம் நூற்றாண்டின் மிக நீண்ட முழுமையான சூரிய கிரகணம் தோன்றியது.

2010 இலங்கை சிறுவர் உபகாரத் தொலைபேசிச் சேவை அதிகார சபை தாபிக்கப்பட்டுள்ளது.

2010. இந்திய ஆந்திராவில் மிகவும் புகழ் பெற்ற கோயில்களில் ஒன்றான மகாநந்தி சிவன் கோயிலின் முகப்பு கோபுரம் இடிந்து வீழ்ந்தது.

2010. சர்வதேச தேர்வுத் (Test) துடுப்பாட்ட போட்டியிலிருந்து உலக சாதனை படைத்த இலங்கை கிரிக்கெட் அணி சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் ஓய்வு. இவர் 133 Test போட்டியில் விளையாடி 800 விக்கெட்டுக்களையும், 22 முறை 10 விக்கட்டுக்களையும், ஒரு இனிங்ஸில் 67 முறை 5 விக்கட்டுக்களையும் கைப்பற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜீலை – 23**

1840 வட அமெரிக்கா கண்டத்திலிருந்து கனடா தனி மாகாணமாக உருவாக்கப் பட்டது.

1874 இலங்கை சட்டசபையின் தமிழ்பிரதிநிதி முத்துக்குமாரசாமி இங்கிலாந்தில் சேர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

1927. இந்தியாவில் முதல் வானொலி நிலையம் பம்பாயில் செயற்படத் தொடங்கியது.

1952. எகிப்து தேசிய தினம்.

1965. இலங்கை தமிழரசு கட்சியின் 10வது மாநாடு கல்முனையில் நடை பெற்றது

1977 இலங்கையில் மரணதண்டனை நிறைவேற்றப்படுவது சட்டரீதியாக தடுக்கப்பட்டது.

1977. இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான முதலாவது இனக்கலவரம் ஆரம்பம்.

1977. Ceylon என்ற பெயர் Srilanka என மாற்றம் பெற்ற பின் இரண்டாவது பிரதமராக ஜீனியஸ்ரிச்சர்ட் ஜெயவர்த்தன பதவியேற்பு (பெப்ரவரி. 6.1978 வரை).

1999. ''சந்திரா எக்ஸ் - கதிர் அவதான நிலையம்'' என்ற செய்மதி விண்ணுக்கு ஏவப்பட்டது.

2003. இலங்கையின் புகையிரத திணைக்களம் புகையிரத அதிகார சபையாக மாற்றப்பட்டது.

2010. 9வது தமிழாராச்சி மகாநாடு கோவையில் நடைபெற்றது. (23-27)

**ஜீலை – 24**

1924 சர்வதேச சதுரங்க கூட்டமைப்பு பாரிசில் அமைக்கப்பட்டது.

1960. ஐக்கியஅமெரிக்கா வாஷிங்டன் மாநிலத்தை தலைமையகமாகக் கொண்டு சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (International Development Association) நிறுவப்பட்டது. உலக வங்கி இதன் நிர்வாகத்திற்கு பொறுப்பாக செயல்படுகின்றது.

1969. அப்பலோ - 11 விண்கலம் பாதுகாப்பாக பசுபிக்கடலில் இறங்கியது.

1983. இலங்கையின் தலைநகரில் தமிழருக்கு எதிரான கலவரங்கள் தொடங்கியது.

2001. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் பல விமானங்கள் உள்பட தாக்கி அழிக்கப்பட்டன.

2012. முதன் முறையாக விண்வெளி சென்ற அமெரிக்கா பெண் சேலி பிரைட் (வயது 61) இறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜீலை** – 25

1952. ஐக்கிய அமெரிக்காவினுள் சுயாட்சி பெற்ற ஒரு பிரதேசமான புவேர்ட் டோரிக்கா அரசியலமைப்பை தொடங்கியது.

1957. வட ஆபிரிக்கா கண்டத்தில் மத்திய தரைக்கடலை ஒட்டி அமைந்துள்ள துனீசியா குடியரசாகியது.

1965. வெள்ளை நிலைக்குத்தான பிறையைக் கொண்டதும் பெரிய பச்சை நிற செவ்வகத்தை மத்தியில் கொண்டதும் சிவப்பு நிற செவ்வக கொடியாக மாலைதீவுகளின் தேசியக் கொடி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1977. இந்தியாவின் 6வது குடியரசு தலைவராக நீலம் சஞ்சீவி ரெட்டி பதவி யேற்பு. (ஜீலை.25.1982வரை)

1982. இந்தியாவின் 7வது குடியரசு தலைவராக ஜெயில் சிங் பதவியேற்பு (ஜீலை.25.1987வரை).

1983. கொழும்பு வெலிக்கடைச் சிறையில் 37 தமிழ் அரசியல் கைதிகள் சக சிங்களக் கைதிகளினால் படுகொலை செய்யப்பட்டனர். சிங்களப் பகுதிகளில் கறுப்பு ஜூலை படுகொலைகள் உச்சக் கட்டத்தை எட்டியது.

1984. சல்யூட்-7 விண்கலத்தில் சென்ற ரஸ்யாவின் சவீத்ஸ்கயா விண்ணில் நடந்த முதலாவது பெண் என்ற பெருமையை பெற்றார்.

1987. இந்தியாவின் 8வது குடியரசுத் தலைவராக வெங்கட்ராமன் பதவி யேற்பு. (ஜீலை.25.1992வரை பதவி வகித்தார்).

1992. இந்தியாவின் 9வது குடியரசுத் தலைவராக சங்கர்தயாள் சர்மா பதவி யேற்பு (ஜீலை.25.1997வரை பதவி வகித்தார்).

1992. 25வது ஒலிம்பிக் போட்டிகள் ஸ்பெயின் பெர்கோலினா நகரில் கோலா கலமாக ஆரம்பம். 09.08.1992 வரை நடைபெற்ற இப் போட்டியில் Unified Team 45 தங்கம், 38 வெள்ளி, 29 வெண்கலமாக மொத்தம் 112 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முதலிடத்தையும் ஐக்கிய அமெரிக்க 37 தங்கம், 34 வெள்ளி, 37 வெண்கலம் உட்பட மொத்தம் 108 பதக்கங்களையும் ஜேர்மனி 33 தங்கம், 21 வெள்ளி, 28 வெண்கலம் உட்பட மொத்தம் 82 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப்பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன.

1997. இந்தியாவின் 10வது குடியரசுத் தலைவராக கே.ஆர். நாராயணன் பதவியேற்பு (ஜீலை.25.2002வரை பதவி வகித்தார்).

2002. இந்தியாவின் 11வது குடியரசு தலைவராக டாக்டர் A.P.J. அப்துல் கலாம் பதவியேற்பு (ஜீலை.25.2007வரை பதவி வகித்தார்).

2007. இந்தியாவின் 12வது குடியரசு முதல் பெண் தலைவராக பிரதீபா பட்டேல் பதவியேற்பு (ஜீலை.25.2012வரை பதவி வகித்தார்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012. இந்தியாவின் 13வது குடியரசுத்தலைவராக (தேர்தல் 21.07.2012ல் நடைபெற்றது) பிரணப் முகர்ஜி பதவியேற்பு.

**ஜீலை – 26**

1788. நியுயோர்க் நகரம் ஐக்கிய அமெரிக்காவின் 11வது மாநிலமாக இணைந்தது.

1803. உலகின் முதலாவது பயணிகள் புகையிரத சேவை தெற்கு லண்டனில் ஆரம்பமானது.

1847. லைபீரியா ஐக்கிய அமெரிக்காவிடமிருந்து விடுதலையடைந்தது.

1891. பசுபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள விண்ட்வார்ட் தீவுக் கூட்டத்தில் மிகப் பெரிய தீவான டெஹீட்டி பிரான்சுடன் இணைந்தது.

1957. இனப்பிரச்சினை தீர்வாக பிராந்திய சபைகள் அமைப்பதற்கான S.W.R.D. பண்டாரநாயக்கா, S.J.V. செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்தானது. இது பண்டா - செல்வா ஒப்பந்த என அழைக்கப்பட்டது. எதிர்க் கட்சி தலைவர் J.R. ஜெயவர்த்தனாவினால் இதை எதிர்த்து மாபெரும் பாத யாத்திரை கண்டி நகரை நோக்கி நடத்தப்பட்டது.

1958. எக்ஸ்புளொரா - 4 விண்ணுக்கு ஏவப்பட்டது.

1965. மாலைதீவுகள் ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1971. அப்பலோ - 15 விண்கலம் ஏவப்பட்டது.

1974. 7ஆண்டுகள் இராணுவ ஆட்சியின் பின்னர் கிரேக்கத்தில் மக்களாட்சி ஏற்பட்டது.

1983. கிசோலவாக்கிய தடகள ஓட்ட வீராங்கனை கமீலா கிறா ரோச் விலோவா (Jamila Kra Toch Vilove) ஜேர்மனி மூனிச் நகரில் நடை பெற்ற போட்டியில் 800m ஓட்டத்தினை 1:53:28 விநாடிகளில் கடந்து சாதனை.

1987. இந்திய தலைநகர் டெல்லியில் பிரதமர் ராஜிப்காந்தியை தமிழக முதலமைச்சர் M.G. இராமச்சந்திரனும் தமிழீழ விடுதலைபுலிகள் இயக்க தலைவர் வே.பிரபாகரனும் சந்தித்து பேசினார்கள்.

2005. டிஸ்கவரி விண்ணோட்டம் ஏவப்பட்டது.

**ஜீலை – 27**

1921. பிரெட்றிக் பாண்டிங் தலைமையில் டொறெண்டோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களினால் இன்சுலின் மருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

1929. யுத்தக் கைதிகளை கையாளும் முறை ஜெனிவாவின் மூன்றாவது உடன்படிக்கை மூலம் கைச்சாத்தானது.

1953. வட கொரியா - தென் கொரியாவினது எல்லைப் பிரச்சனை யுத்தம் முடிவுக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1957. செல்லா பண்டா ஒப்பந்தம் பிராந்திய அமைக்கப்படும். தமிழர்களுக் கென்று ஒரு பிராந்திய கலை இருக்கும்.

1975. தமிழீழ விடுதலைப்புலிகளின் முதலாவது ஆயுதத் தாக்குதல் நடத்தப் பட்டது இதில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் தங்கராசா அல்பிரட் துரையப்பா சுட்டுக்கொல்லப்பட்டார் (பிறப்பு - 15.07.1926).

1983. கொழும்பு வெலிக்கடை சிறையில் இடம்பெற்ற இரண்டாம் கட்ட படுகொலை நிகழ்வில் 18 தமிழ்க் கைதிகள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

2006. ஆசியான் பாதுகாப்பு அமைப்பில் 27வது நாடாக இலங்கை அங்கத்துவம் பெற்றது.

2010. இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து நடாத்திய 2009ம் ஆண்டுக்கான சிறந்த பத்திரிகையாளர்களுக்கான விருது வழங்கும் விழாவில் Metro News க்கு சிறந்த பக்க வடிவமைப்புக்கான சிறப்பு விருது வழங்கப்பட்டது.

2012. 30வது ஒலிம்பிக் போட்டிகள் ஐக்கிய இராச்சிய தலைநகர் லண்டனில் கோலாகலமாக ஆரம்பம். 12.08.2012 வரை நடைபெற்ற இப்போட்டி யில் ஐக்கிய அமெரிக்க 46 தங்கம், 29 வெள்ளி, 29 வெண்கலமாக மொத்தம் 104 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முதலிடத் தையும் சீனா 38 தங்கம், 27 வெள்ளி 23, வெண்கலம் உட்பட மொத்தம் 88 பதக்கங்களையும் ஐக்கிய இராச்சியம் 29 தங்கம், 17 வெள்ளி, 19 வெண்கலம் உட்பட மொத்தம் 65 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப்பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன.

2015. இந்திய முன்னாள் 11வது குடியரது தலைவர் கலாநிதி. அப்துல்கலாம் 83வது வயதில் மறைவு, பிறப்பு (15.10.1931), இவரது 79வது பிறந்த தினத்தை உலக மாணவர் தினமாக ஐ.நா. சபை பிரகடனப் படுத்தியது இவர் இந்தியாவின் ஏவுகணை மனிதர் என அழைக்கப்பட்டவர்.

**ஜீலை – 28**

1821. பெரு எசுப்பானியாவிடமிருந்து விடுதலையடைந்தது.

1928. 9வது ஒலிம்பிக் போட்டிகள் நெதர்லாந்து அம்ஸரரீடம் நகரில் கோலா கலமாக ஆரம்பம். 12.08.1928 வரை நடைபெற்ற இப் போட்டியில் ஐக்கிய அமெரிக்க 22 தங்கம், 18 வெள்ளி, 16 வெண்கலமாக மொத்தம் 56 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப் பட்டியலில் முதலிடத்தையும் ஜேர்மனி 10 தங்கம், 7 வெள்ளி, 14 வெண்கலம் உட்பட மொத்தம் 31 பதக்கங்களையும் பின்லாந்து 8 தங்கம், 8 வெள்ளி, 9 வெண்கலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட மொத்தம் 25 பதக்கங் களையும் சுவீகரித்து பதக்கப்பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன.

1979. இந்தியாவின் பிரதமராக சரண் சிங் பதவியேற்பு (ஜனவரி.14. 1980 வரை)

1981. யாழ்ப்பாணம் ஆணைக்கோட்டை பொலிஸ் நிலையம் போராளி களால் தாக்கியழிக்கப்பட்டது.

1983. இந்திய வெளியுறவு அமைச்சர் B.V. நரசிம்மராவ் கொழும்பு வந்து கலவரம் பற்றி J.R. ஜெயவர்த்தனாவிடம் பேச்சு மேற்கொண்டார்.

1984. 23வது ஒலிம்பிக் போட்டிகள் ஐக்கியஅமெரிக்க லொஸ்ஏன்ஜெல் மற்றும் கலிபோர்னியா மாநிலங்களில் கோலாகலமாக ஆரம்பம். 12.08.1984 வரை நடைபெற்ற இப்போட்டியில் ஐக்கியஅமெரிக்க 83 தங்கம், 61 வெள்ளி, 30 வெண்கலமாக மொத்தம் 174 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முதலிடத்தையும் ருமேனியா 20 தங்கம், 16 வெள்ளி, 17 வெண்கலம் உட்பட மொத்தம் 53 பதக்கங்களையும் மேற்கு ஜேர்மனி 17 தங்கம், 19 வெள்ளி, 23 வெண்கலம் உட்பட மொத்தம் 59 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப்பட்டியலில் இரண்டாம் மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன.

2005. ஐரிஸ் குடியரசு இராணுவம் தனது 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக அறிவிப்பு.

2015. உலகின் முதன்முதலாக பாரிய 13 பலூன்களுடன் இலங்கை முழுவதும் இலவச இணையத்தள வசதிகளை ஏற்படுத்துவதற்கு கூகுளுடன் இலங்கை அரசு உடன்படிக்கை.

## ஜூலை – 29

1883. இத்தாலிய சர்வாதிகாரி பெனிட்டோ முசொலினி இத்தாலியில் இரும்புப் பட்டறை நடத்திய கொல்லர் ஒருவருக்கு மகனாக பிறப்பு (இறப்பு 28.04.1945)

1948. 14வது ஒலிம்பிக் போட்டிகள் சோவியத் ஐக்கிய இராச்சியம் லண்டன் நகரில் கோலாகலமாக ஆரம்பம். 14.08.1948 வரை நடைபெற்ற இப் போட்டியில் ஐக்கிய அமெரிக்க 38 தங்கம், 27 வெள்ளி, 19 வெண் கலமாக மொத்தம் 84 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முதலிடத்தையும் சுவீடன் 16 தங்கம், 11 வெள்ளி, 17வெண்கலம் உட்பட மொத்தம் 44 பதக்கங்களையும் பிரான்ஸ் 10 தங்கம், 6 வெள்ளி, 13 வெண்கலம் உட்பட மொத்தம் 29 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப்பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1957. அணுச்சக்தியின் அமைதி வழி பயன்பாட்டினை ஊக்குவிக்கவும் அணுக்கருவிகளின் இராணுவப் பயன்பாடுகளை தடுக்கும் முகமாக "சர்வதேச அணுசக்தி முகாமையகம்" (International Atomic Energy Agency) அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.

1981. வேல்ஸ் இளவரசர் சார்ல்ஸ் - டயானா திருமணம் நடைபெற்றது.

1987. இலங்கை - இந்திய ஒப்பந்தம் கொழும்பில் ஜனாதிபதி J.R. ஜெயவர்த்தனா மற்றும் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி ஆகியோரால் கைச்சாத்திடப் பட்டது. இதனையடுத்து இடம்பெற்ற மரியாதை அணிவகுப்பின் போது இலங்கை இராணுவீரர் விஜிதரோ விஜேமுனி என்பவரால் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி துப்பாக்கியால் தலையில் குத்தப்பட்டு காயம் அடைந்தார்.

1987. இலங்கையில் மாகாண சபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

1987. இலங்கையின் பலம் பொருந்திய இயக்கமாக இருந்த மக்கள் விடுதலை முன்னணி (JVP) அரசினால் தடைசெய்யப்பட்டது.

1999. இலங்கையின் தமிழ் அரசியல்வாதியும், நாடாளுமன்ற உறுப்பினரு மான நீலன் திருச்செல்வம் தற்கொலை குண்டு வெடிப்பில் படுகொலை செய்யப்பட்டார் (பிறப்பு 31.01.1944).

2005. சூரியக் குடும்பத்தில் கண்டறியப்பட்டுள்ள மிகப்பெரிய குறுங்கோளான ஏரிஸ் (Eris) கண்டுபிடிக்கப்பட்டது.

2015 Microsoft Windows 10 வெளியிடப்பட்டது.

**ஜீலை – 30**

1825. பசுபிக் கடலில் மால்டன் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.

1930. முதவாவது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் உருகுவே-ஆர்ஜென்டினா அணிகள் மோதிக்கொண்டன. இறுதியில் உருகுவே அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முதலாவது கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

1932. 10வது ஒலிம்பிக் போட்டிகள் ஐக்கிய அமெரிக்க லொஸ்ஏன்ஜல் மற்றும் கலிபோர்னியா மாநிலங்களில் கோலாகலமாக ஆரம்பம். 14.08.1932 வரை நடைபெற்ற இப் போட்டியில் ஐக்கிய அமெரிக்க 41 தங்கம், 32 வெள்ளி, 30 வெண்கலமாக மொத்தம் 103 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முதலிடத்தையும் இத்தாலி 12 தங்கம், 12 வெள்ளி, 12 வெண்கலம் உட்பட மொத்தம் 36 பதக்கங்களையும் பிரான்ஸ் 10 தங்கம், 5 வெள்ளி, 4 வெண் கலம் உட்பட மொத்தம் 19 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப் பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1966. 8வது FIFA உலகக்கிண்ண கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் இங்கிலாந்து - மேற்கு ஜேர்மனி அணிகள் மோதிக்கொண்டன. இறுதியில் இரு அணிகளும் முழு நேர முடிவில் கோல் அடிக்காத நிலையில் மேலதிக நேரம் (After Extra Time) வழங்கப்பட்டது. அதில் இங்கிலாந்து அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முதன் முறையாக கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

1969. வாக்கிய பஞ்சாங்க கணித மேதை யாழ்ப்பாணம் கொக்குவில் பிரம்மஸ்ரீ இ.சி.இரகுநாதையர் இறப்பு (பிறப்பு 03.03.1901).

1980. பசுபிக் பெருங்கடலின் தெற்கே அமைந்துள்ள ஒரு தீவான வனுவாட்டு பிரான்சிடமிருந்து விடுதலையடைந்தது.

1987. இந்திய அமைதி காக்கும் படை இலங்கையின் தமிழர் பகுதிகளான வடக்கு கிழக்கு பகுதிகளில் கப்பலில் வந்து இறங்கினர்.

**ஜீலை – 31**

1492. ஸ்பெயினிலிருந்து யூதர்கள் வெளியேற்றப்பட்டனர்.

1805. இந்திய விடுதலைப் போராட்ட வீரனும் குறுநில மன்னனுமான தீரன் சின்னமலை பிரித்தானியரால் தூக்கிலிடப்பட்டான் (பிறப்பு 17.04.1756).

1865. உலகின் முதலாவது குறுகிய அகல தொடரூந்துப் பாதை ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாநிலத்தில் அமைக்கப்பட்டது.

1952. இலங்கையில் உள்ளூராட்சி ஓய்வூதியத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது.

1971. அப்போலோ - 15 விண்வெளி வீரர்கள் தளவுளவியை சந்திரனில் செலுத்திச் சாதனை புரிந்தனர்.

2006. பிடல் காஸ்ரோ தனது நோயின் காரணமாக அதிகாரம் முழுவதையும் தனது சகோதரரான ராவுல் காஸ்ரோவிடம் கையளித்தார்.

2010. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனின் மகள் செல்ஸியா தனது காதலர் மார்க் மெஸ் வின்ஸ்கியை முறைப்படி கரம் பிடித்தார்.

2012. வட இந்தியாவில் 14 மாநிலங்களில் திடீர் மின்வெட்டு ஏற்பட்டதில் 600 மில்லியன் (60 கோடி) மக்கள் இருட்டினுள் மூழ்கினர். இவ் மின் வெட்டானது இந்தியாவிலும்-உலகளவிலும் மிகப் பெரும் மின் வெட்டாக கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகஸ்ட்

**ஆகஸ்ட் – 01** ✱ உலக சாரணர் தினம்

1291. சுவிஸ்சர்லாந்து ரோமபுரியிலிருந்து விடுதலையடைந்தது.

1907. சாரணிய இயக்கத்தின் முதல் பாசறையை பேடன் பவல் இங்கிலாந்தில் பிறௌன்சி தீவில் ஆரம்பித்து வைத்தார்.

1914. முதலாம் உலகப்போரில் ரஷ்யா மீது ஜேர்மனி போர் பிரகடனம் செய்தது.

1936. 11வது ஒலிம்பிக் போட்டிகள் ஜேர்மனி தலைநகர் பெர்லினில் கோலா கலமாக ஆரம்பம். 16.08.1936 வரை நடைபெற்ற இப்போட்டியில் ஜேர்மனி 33 தங்கம், 26 வெள்ளி, 30 வெண்கலமாக மொத்தம் 89 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முதலிடத்தையும் ஐக்கிய அமெரிக்க 24 தங்கம், 20 வெள்ளி, 12 வெண்கலம் உட்பட மொத்தம் 56 பதக்கங்களையும் ஹங்கேரி 10 தங்கம், 1 வெள்ளி, 5 வெண்கலம் உட்பட மொத்தம் 16 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன.

1939. இலங்கை வங்கி தனது வாடிக்கையாளர் சேவைக்காக ஆரம்பிக்கப் பட்டது.

1941. முதலாவது ஜீப் வண்டி உருவாக்கப்பட்டது.

1958. இலங்கை கொழும்புத் துறைமுகம் தேசிய மயமாக்கப்பட்டது.

1960. மேற்கு ஆபிரிக்காவில் உள்ள நாடான பெனின் பிரான்சிடமிருந்து விடுதலையடைந்தது.

1976 மகாவலி திட்டத்தின் பொல்கொல்ல அணை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களினால் திறந்துவைக்கப்பட்டது.

1977 யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதல் துனை வேந்தராக பேராசிரியர் எஸ்.வித்தியானந்தன் பதவியேற்றார்.

1978. பனம் பொருள் அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டது.

1981 தமிழ் நாடு தஞ்சாவூரில் தமிழ் பல்கலைக்கழகம் முதலமைச்சர் எம்.ஜி. ஆர் அவர்களால் நிறுவப்பட்டது.

1981. மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. (01.10.1986 இல் கிழக்கு பல்கலைக்கழகமாக தரம் உயர்த்தப்பட்டது).

1987. இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்குசில நாட்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபாகரன் இந்திய அரசின் ஏற்பாட்டில் ஹெலி மூலம் மானிப்பாய் சுதுமலை அம்மன் கோயில் முன்றலிலிருந்து இந்தியா சென்று இன்று காலை விசேட விமான மூலம் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தார். இந்திய அமைதிகாக்கும் படை பூரண பாதுகாப்பு வழங்கி அவரை புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் அனுப்பி வைத்தார்கள்.

2005. தமிழீழ விடுதலைப்புலிகளின் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி தனது ஒளிபரப்பினை தென்கிழக்காசியாவில் முதன் முதலாக ஒளி பரப்பினர்.

**ஆகஸ்ட் – 02**

1790. அமெரிக்காவில் முதன்முதலாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆரம்பம்.

1800 இலங்கை நில அளவைத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது.

1858. பிரித்தானியரால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மூலம் இந்தியா - பிரித்தானிய முடியின் கீழ் வந்தது.

1892. கொழும்பின் முதலாவது ஆயர் Dr.Bonjean இறப்பு.

1913. உலக தமிழாராய்ச்சி மன்றம் அமைத்தவரான உலகத் தமிழறிஞர் தனிநாயகம் அடிகளார் பிறப்பு (இறப்பு-01.09.1980).

1922. தொலைபேசியைக் கண்டுபிடித்த கனடாவைச் சேர்ந்த அலெக் சாண்டர் கிரஹாம் பெல் இறப்பு (பிறப்பு 03.03.1847).

1983. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் இணைந்து இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக முழு கர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதுவே முதலாவது கர்த்தாவாகும். இதனை தமிழ்நாட்டு அரச விடுமுறையாக அறிவித்தது.

1988. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி கொலை வழக்கு குற்றவாளியான சத்வத் சிங் மற்றும் தோர் சிங் இருவருக்கும் மரண தண்டனையை நீதிமன்றம் உறுதி செய்தது.

1990. ஈராக்கிற்கும் அமெரிக்கா தலைமையிலான 28 நாடுகள் அடங்கிய கூட்டுப்படையினருக்கும் இடையே வளைகுடாப் போர் ஆரம்பம்.

2001. இந்திய துடுப்பாட்ட வீரர் வீரேந்திர சேவாக் கொழும்பு சிங்கள விளையாட்டரங்கில் நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் 100 ஓட்டங்களைப் பெற்று தனது முதல் சதத்தினை பதிவு செய்தார். இப் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010. இலங்கையர்கள் பணியாற்றிய பனாமா கொடி தாங்கிய "M.V. சுயல்" என்னும் கப்பல் சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தல்.

**ஆகஸ்ட் – 03**

1942. கடல் பயணி, வணிகர் மற்றும் அட்லாண்டிக் கடலை கடந்து அமெரிக்காவை வந்தடைந்த முதல் ஐரோப்பியரான கிறிஸ்தோபர் கொலாம்பஸ் ஸ்பெயினை விட்டு புறப்பட்டார்.

1958. வில்லியம் அண்டர்சன் நீர்மூழ்கிக் கப்பல் மூலம் வட துருவத்தை அடைந்தார்.

1960. ஆபிரிக்கா கண்டத்தின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள நாடான நைஜர் குடியரசு பிரான்சிடமிருந்து விடுதலையடைந்தது.

1976. இந்திய தமிழ் நாட்டு பல்கலைக்கழகங்களில் ஒன்றான காந்தி கிராமம் கிராமிய பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

2015 கொழும்பு - கண்டி அதிவேக பாதைக்கான கட்டுமான பணிகளை ஜனாதிபதி மைத்திரிபால ஸ்ரீசேனா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

**ஆகஸ்ட் – 04**

1906. அவுஸ்திரேலியா சிட்னியில் மத்திய தொடரூந்து நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

1963. திராட்சைச் சாறை புளிக்க வைத்து பெறப்படும் ஒரு ஆற்கோல் பானமான வைன் கண்டுபிடிக்கப்பட்டது.

1987. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் யாழ்ப்பாணம் சுதுமலையில் முதன் முதலில் மக்கள் முன் தோன்றி உரையாற்றினார்.

2005. குளோனிங் மூலம் உலகில் முதல் நாய்க்குட்டியை தென்கொரிய விஞ்ஞானிகள் உருவாக்கினார்கள்.

2006. வறுமைக்கு எதிரான அமைப்பு (Action Firm) என்ற அரச சார்பற்ற அமைப்பின் 5 பணியாளர்கள் மூதூரில் இராணுவம் என சந்தேகிக் கப்படுபவர்களினால் கொடூரமாக கொலை செய்யப்பட்டனர்.

**ஆகஸ்ட் – 05**

1806. இலங்கையில் முகமதியர்களுக்கான திருமணச் சட்ட விதிகள் அரசியல் நிர்ணய சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1930. சந்திரனில் காலடி வைத்த முதல் மனிதரான நீல் ஆம்ஸ்ரோங் பிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960. மேற்கு ஆபிரிக்காவில் உள்ள ஒரு நாடான புர்கினா பாசோ (Furkina Faso) பிரான்சிடமிருந்து விடுதலையடைந்தது.

1962. 17 மாதத் தேடுதலின் பின்னர் நெல்சன் மண்டேலா கைது செய்யப் பட்டார். இவர் 1990 வரை சிறைக் காவலில் இருந்தார்.

2009. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பாடசாலை நண்பரான குமரன் பத்மநாதன் (கே.பி) மலேசியாவில் இலங்கை புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

**ஆகஸ்ட் – 06**

1825. தென் அமெரிக்கா நாடான பொலீவியா எசுப்பானியாவிடமிருந்து சுதந்திரமரடைந்தது.

1881. மருத்துவ விஞ்ஞானியும் மற்றும் நுண்ணுயிர் கொல்லியான சிதை நொதியைக் கண்டுபிடித்தவரும், நோபல் பரிசு பெற்ற வருமான சேர் அலெக்சாண்டர் பிளமிங் பிறப்பு (இறப்பு 11.03. 1955).

1945. இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானின் ஹிரோஷிமா நகர் மீது அமெரிக்கா சின்னப்பையன் என்ற பெயரைக் கொண்ட அணுகுண்டை வீசியது. கிட்டத்தட்ட 70,000 பொதுமக்கள் ஒரே நாளில் கொல்லப் பட்டனர். இதன் தாக்கத்தினால் மேலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அடுத்த ஆண்டுகளில் இறந்தனர்.

1952. இலங்கைப் பல்கலைக்கழகம் கண்டி பேராதனைக்கு இடம் மாறியது.

1962. கரிபியக் கடலில் அமைந்துள்ளதும் 240கி.மீ நீளமும் 85கி.மீ அகலமும் கொண்ட ஓர் தீவான ஜமைக்கா ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை யடைந்தது.

1984. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் பாக்கு நீரினையை கடந்தும் 7 உலக சாதனைகளை நிகழ்த்தி கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்தவரான V.S. குமாரி ஆனந்தன் (ஆழிக்குமரன் ஆனந்தன்) ஆங்கில கால்வாயை நீந்திக் கடக்கும் வேளையில் குளிரால் இறந்தார்.

2012. அறிவியல் ஆராய்ச்சிக்கான பங்களிப்பு மற்றும் தனது அறிவியல் அனுபவத்தை பொதுமக்கள் நலனுக்காக பயன்படுத்தி வருகின்ற மைக்காக இந்திய கேரளா மாநில கொச்சியில் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் A.P.J. அப்துல் கலாமுக்கு சவ்ரா சம்ஸ்க்ருதி புரஸ்கார் விருது வழங்கி கௌரவிப்பு.

2015. புதிய சுயஸ் கால்வாய் திறக்கப்பட்டது பழைய சுயஸ் கால்வாயை யொட்டி புதிய சுயஸ் கால்வாய் 48000 கோடி ருபா செலவில் கட்டி முடிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆகஸ்ட் – 07**

1832. இலங்கையில் சேமிப்பு வங்கி ஆரம்பிக்கப்பட்டது.

1906. இந்தியாவில் ஆரம்பத்தில் பாவிக்கப்பட்ட ஒரு உத்தியோக பூர்வமற்ற கொடியான கல்கத்தா கொடி சுசீந்திர பிரசாத் போஸ் என்பவரால் வடிவமைக்கப்பட்டு கல்கத்தா நகரின் கிரீன் பார்க் சதுக்கத்தில் முதன் முதலில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

1941. நோபல் பரிசு பெற்ற பாரதத்தின் தேசியகவி ரவீந்திரநாத்தாகூர் இறப்பு (பிறப்பு 06.05.1861)

1948. முதல் தேர்வு (Test Much) துடுப்பாட்டத்தில் தலைமை தாங்கிய போட்டியிலும் தான் விளையாடிய முதல் போட்டியிலும் மற்றும் தான் விளையாடிய கடைசிப் போட்டி என மூன்றிலும் சதங்களைப் பெற்ற அபூர்வ சாதனையாளரான சர்வதேச புகழ்பெற்ற அவுஸ்ரேலியா துடுப் பாட்ட வீரர் கிரேக் சப்பல் பிறப்பு.

1966. இணைய பன்மொழிக் கலைக் களஞ்சியமான விக்கிப்பீடியா அமைப்பை உருவாக்கியவரான ஜம்மி வேல்ஸ் பிறப்பு.

1978 யாழ்ப்பாணம் பல்கழைக்கழகத்தின் மருத்துவ பீடம் கைதடியில் ஆரம்பிக்கப்பட்டது.

2012. சுமார் 2000 ஆண்டுகள் பழமைவாய்ந்த ரோமானியக் கப்பலின் பாகங்களை இத்தாலிய ஆழ்கடல் நீச்சல் வீரர்கள் கண்டுபிடித்தார்கள்.

**ஆகஸ்ட் – 08**

1942. பம்பாயில் கூட்டப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1950 இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டது. முதல் ஆளுனர் ஜோன் எக்ஸ்டர்.

1955 உலக சாதனை கின்னஸ் புத்தகம் வெளிவரத் தொடங்கியது.

1967. தென்கிழக்காசியா 10 நாடுகளின் பொருளாதார மற்றும் புவியியல் சார்ந்த அரசியல் கூட்டமைப்பான "தென்கிழக்காசியாவின் கூட்டமைப்பு" (ASEAN) அமைப்பினை இந்தோனேசியா மலேசியா பிலிப்பைன்ஸ் சிங்கப்பூர் தாய்லாந்து ஆகிய நாடுகள் இணைந்து அமைத்தன.

1990. ஈராக் குவைத்தைக் கைப்பற்றி அதனைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது.

1992. யாழ்ப்பாணம், அராலியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் இலங்கை இராணுவ வட பிராந்தியத் தளபதிமேயர் கொப்பேக்கடுவ கொல்லப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007 நாசா விண்வெளி மையத்திலிருந்து அனுப்பப்பட்ட 7 விண்வெளி வீரர்கள் அனைத்துலக விண்வெளி மையத்துக்கு அனுப்பப்பட்டனர்.

2008. 29வது ஒலிம்பிக் போட்டிகள் சீனத் தலைநகர் பீஜிங்கில் கோலாகலமாக ஆரம்பம். 24.08.2008 வரை நடைபெற்ற இப்போட்டியில் சீனா 51 தங்கம், 21 வெள்ளி, 28 வெண்கலமாக மொத்தம் 100 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முதலிடத்தையும் ஐக்கிய அமெரிக்க 36 தங்கம், 38 வெள்ளி, 36 வெண்கலம் உட்பட மொத்தம் 110 பதக்கங்களையும் ரஷ்யா 23 தங்கம், 21 வெள்ளி, 29 வெண்கலம் உட்பட மொத்தம் 73 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன.

**ஆகஸ்ட் – 09**

1892 தோமஸ் அல்வா எடிசன் தனது இருவழி தந்திக்கான காப்புரிமத்தை பெற்றார்.

1925 அறிவார்ந்த ஒத்துழைப்புக்கானஅனைத்துலக நிறுவனம் I.C.I.C நிறுவப் பட்டது. இது செயலாக்க நிறுவனமாக நிறுவப்பட்டது.

1942. இந்தியா அஹிம்சைப் போராட்ட வீரர் மகாத்மா காந்தி பம்பாயில் கைது செய்யப்பட்டார்.

1945. இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானிய நகரான நாகசாக்கியின் மீது அமெரிக்கா வீசிய கொழுத்த மனிதன் எனப் பெயரிடப்பட்ட அணுகுண்டு 70,000 முதல் 90,000 வரையான பொதுமக்களை அதே இடத்தில் கொன்றது

1945. ஜப்பான் மன்னர் ஹிரோ ஹிட்டோ ஜப்பான் வானொலி மூலம் தனது சரணாகதியை அறிவித்தார். ஜப்பான் மன்னர் தனது வாழ் நாளில் ரேடியோவில் பேசியது இதுவே முதல் தடவையாகும்.

1965. சிங்கப்பூர் மலேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து தனி நாடாகியது.

1991. யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஜூலை 10 இல் ஆரம் பித்த ஆனையிறவு இராணுவ முகாமின் மீதான தாக்குதல் முடிவுக்கு வந்தது. எனினும் 2000ம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீளத் தாக்குதல் மேற்கொண்டு தளத்தைக் கைப்பற்றினர்.

**ஆகஸ்ட் – 10**

1519. மகலனின் 5 கப்பல்கள் உலகைச் சுற்றி வர செவில் நகரில் இருந்து புறப்பட்டன.

1809. தென் அமெரிக்காவின் வடமேற்கு முனையில் அமைந்துள்ள "ஈக்குவ டோர்" விடுதலையடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1948. இந்தியப் பிரதமர் ஜவர்ஹர்லால் நேரு இந்தியாவின் அணுசக்திப் பேரவையை (Atomic Energy Commision) துவக்கி வைத்தார்.

2000. இலங்கையின் 8வது (16வது) பிரதமராக இரத்தினசிறி விக்கிரமநாயக்க பதவியேற்றார் (9.12.2001 வரை).

2000. உலக மக்கள் தொகை 6 பில்லியனைத் தாண்டியது.

2010. கிரிக்கெட் விளையாட்டினை நேரடியாகவும் அதனை மறு ஒளி பரப்புமாக ஒளிபரப்பும் Ten Cricket முதல் ஒளிபரப்பினை ஒளிபரப்பியது.

**ஆகஸ்ட் – 11**

1747. கண்டி நாயக்க மன்னன் ஸ்ரீ விஜய ராஜசிங்கன் இறப்பு.

1812. இலங்கையில் தாவரவியற்பூங்கா அமைக்கப்பட்டது.

1890. ஆங்கில ஒக்ஸ்போர்ட் இயக்கத் தலைவர்களில் ஒருவரான ஜோன் ஹென்றி நியூமன் இறப்பு (பிறப்பு - 1801).

1960. ஆபிரிக்காவில் உள்ள நாடான "சாட்" பிரான்சிடமிருந்து விடுதலையடைந்தது.

2006. இலங்கையின் வடபுலத்தில் பணியிலீடுபட்டு வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் அரசின் அறிவிப்புக்கமைய நிறுத்தப்பட்டது.

2006. யாழ்ப்பாணக் குடாநாட்டையும் இலங்கையின் தென்பகுதியையும் இணைக்கும் A9 வீதி மூடப்பட்டது.

2009. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவினால் இலங்கையிலே மிகப் பெரிய கொக்காவில் தொலைத் தொடர்பு கோபுரத்தின் அடிக்கல் நாட்டப்பட்டது. இக்கோபுரத்திற்கு 450 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டது. அத்தோடு இதன் உயரம் 174m ஆகும்.

2010. கற்ற பாடங்கள் மற்றும் மீள் இணக்கப்பாட்டு ஆணைக்குழு LLRC இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டது.

2012. இலங்கையின் ஏழு மாகாணங்களை பிரதிநித்துவப்படுத்தும் வகையில் இலங்கை பிரீமியர் லீக் LLRC துடுப்பாட்ட போட்டிகள் தலைநகர் கொழும்பில் ஆரம்பம்.

**ஆகஸ்ட் – 12** ✱ அனைத்துலக இளையோர் தினம் (International Youth Day) இளைஞர்களின் அனைத்துலக மட்டத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அந்தந்த நாடுகளின் அரசுகளுக்கு சந்தர்ப்பம் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டு கொண்டாடப்படுகின்றது. இது 1999 ஐ.நா சபையால் பிரகடனப்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1927. முதலாம் உலகப் போர் பற்றிய ஆங்கில ஊமை திரைப்படமான விங்ஸ் (Wings) திரையிடப்பட்டது.

1953. இலங்கையின் முதலாவது அவசரகாலச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதற்கான காரணம் 1 இறாத்தல் அரிசி 25 சதத்திலிருந்து 70 சதத்திற்கு உயர்த்தப்பட்டதை எதிர்த்து கடையடைப்பை மேற்கொண்டதன் காரணமேயாகும். இவ் அவசரகாலச் சட்டம் செப்டம்பர். 11.1953 வரை 29நாட்கள் அமுலில் இருந்தது.

1960. உலக நாயகன் கமல்ஹாசன் சிறுவயதில் நடித்த களத்தூர் கண்ணம்மா திரைப்படம் திரையிடப்பட்டது.

1978. யப்பானும் - சீனாவும் சமாதான நட்புறவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

1981. IBM தனி மேசைக் கணினி வெளியிடப்பட்டது.

1985. திம்பு மாநாடு இரண்டாவது தடவையாக கூட்டப்பட்டது. அரசின் சார்பில் கலந்து கொண்டவர்கள் தமிழ் அமைப்புகளின் கோரிக்கைகள் எதையும் ஏற்கமுடியாது என கூறினார்கள்.

2005. இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொழும்பில் தனது வீட்டில் உள்ள நீச்சல் தடாகத்தில் நீராடும் போது இனந்தெரியாத துப்பாக்கி (பிறப்பு 12.4.1932) தாரிகளால் சுடப்பட்டு இறந்தார்.

2012. இந்திய சென்னை C.A மைதானத்தில் கலைஞர் மு. கருணாநிதியால் முதலாவது டெசோ மாநாடு ஆரம்பம்.

**ஆகஸ்ட் – 13** ✱ அனைத்துலக இடதுகை பழக்கமுடையோர் தினம் (Internationaal Lefthanders Day) - "சர்வதேச இடக்கை பழக்கத்தவரின் நிறுவனம்" கொண்டாடி வருகின்றனர். முதன் முதலில் 1976 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது.

1849. யாழ்ப்பாணத்தில் பதில் மறை மாவட்டம் நிறுவப்பட்டது.

1889. அமெரிக்க நாட்டைச் சேர்ந்த வில்லியம் க்றே என்பவர் நாணயம் உட்செலுத்தி அழைப்பை ஏற்படுத்தகூடிய தொலைபேசிக்கான (Coin - Operated telephone) காப்புரிமையை பெற்றார்.

1954. பாகிஸ்தான் தனது தேசிய கீதத்தை முதன் முறையாக வானொலியில் ஒலிபரப்புச் செய்தது.

1960. மத்திய ஆபிரிக்கக் குடியரசு பிரான்சிடமிருந்து விடுதலையடைந்தது.

1961. கிழக்கு மேற்கு ஜேர்மனியை பிரிக்கும் பேர்லீன் சுவரின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹம்பாந்தோட்டை மத்தலயில்
புதிதாக நிர்மாணிக்கப்பட்ட
விமான நிலையத்தின்
திறப்பு விழாக் காட்சிகள்




2004. 28வது ஒலிம்பிக் போட்டிகள் கிரீஸ் எதென்ஸ் நகரில் கோலாகலமாக ஆரம்பம். 29.08.2004 வரை நடைபெற்ற இப்போட்டியில் ஐக்கிய அமெரிக்க 35 தங்கம், 40 வெள்ளி, 26 வெண்கலமாக மொத்தம் 101 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முதலிடத்தையும் சீனா 32 தங்கம், 17 வெள்ளி, 14 வெண்கலம் உட்பட மொத்தம் 63 பதக்கங்களையும் ரஷ்யா 28 தங்கம், 26 வெள்ளி, 38 வெண் கலம் உட்பட மொத்தம் 92 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப் பட்டியலில் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்க வைத்துக் கொண்டன.

2007. சர்வகட்சி குழு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் நியமிக்கப்பட்டது.

**ஆகஸ்ட் – 14**

1908. முதலாவது அழகு ராணி போட்டி இங்கிலாந்தில் போக்ஸ்டன் நகரில் இடம் பெற்றது.

1911. இந்திய ஆன்மிகத்தை அடிப்படையாக கொண்டு சமுதாய பணியாற்றிய அருட்தந்தை வேதாந்திரி மகரிஸி பிறப்பு (இறப்பு 28.03.2006).

1945. நிபந்தனையற்ற ரீதியில் சரண் அடைவதாக ஐப்பானிய பேரரசன் ஹிரோஹிட்டோ அறிவித்தார். அதனுடன் இரண்டாம் உலகப்போர் முடிவுக்குவந்தது.

1947. பாகிஸ்தான் ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1960. மத்திய ஆபிரிக்காவில் அமைந்துள்ள கொங்கோ விடுதலை யடைந்தது.

1979. இலங்கையின் மாக்சியவாதி கலாநிதி N.M. பெரேரா இறப்பு (பிறப்பு 06.06.1905).

1990. இந்திய துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் இங்கிலாந்து அணிக்கு எதிரான சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆட்டமிழக்காது 119 ஓட்டங்களைப் பெற்று தனது முதல் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் சதத்தினை பதிவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2001. இலங்கை துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரா காலி சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கில் இந்திய அணிக்கு எதிரான சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 105 ஓட்டங்களைப் பெற்று தனது முதல் சர்வ தேச டெஸ்ட் கிரிக்கெட் சதத்தினை பதிவு செய்தார். இப்போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்தது.

2001. அமெரிக்கா சூரிய சக்தியில் இயங்கும் விமானி இல்லாத ஹீலி யோஸ் என்ற விமானத்தை வெற்றிகரமாக வானில் செலுத்தி சாதனை படைத்தது.

2006. இலங்கையின் முல்லைத்தீவில் செஞ்சோலை சிறார் இல்லம் மீது இலங்கை இராணுவத்தினர் நடத்தியவிமானத் தாக்குதலில் 61 பாட சாலை சிறுமிகள் கொல்லப்பட்டு 60 பேர் படுகாயமடைந்தனர்.

**ஆகஸ்ட் – 15**

1769. மாவிரன் நெப்போலியன் பிறப்பு

1915. பசுபிக் பெருங்கடலையும், அத்திலாந்திக் பெருங்கடலையும் - அமெரிக்கக் கண்டங்களிடையே இணைக்கும் செயற்கைக் கால் வாயான பனமா கால்வாய் திறக்கப்பட்டது.

1945. ஜப்பான் சரணடைந்தவுடன் இரண்டாம் உலகப்போர் முடிவுற்றது.

1945. வடகொரியா சுதந்திரமடைந்தது.

1945. தென்கொரியா சுதந்திரமடைந்தது.

1948. கிழக்காசியாவில் உள்ள தென்கொரியா ஜப்பானிடமிருந்து விடுதலை யடைந்தது.

1947 முகமது அலி ஜின்னா பாகிஸ்தானின் முதலாவது மகா தேசாதிபதியாக பதவியேற்பு.

1947. இந்தியா பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்று பொது நலவாய அமைப்பின் கீழ் தனி நாடாகியது. ஜவகர்லால் நேரு முதலாவது பிரதம அமைச்சர் ஆனார் (மே.27.1964) இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர் ஆவார்.

1969. இந்திய அரசின் முதன்மை தேசிய விண்வெளி முகாமையான இந்திய விண்வெளி ஆய்வு மையம் (Space Research or Ganization) ஆரம்பம்.

1975. வங்களாதேசத்தில் இடம்பெற்ற இராணுவ சதிப்புரட்சியில் அதிபர் ஷேக் முஜிபுர் ரகுமான் உட்பட அவரது குடும்பத்தினர் கொல்லப் பட்டனர்.

1975. சென்னை தொலைக்காட்சி நிலையம் தனது சேவையை ஆரம்பித்தது.

1977. டாக்டர்.செர்ரி ஆர் எக்மன் என்ற அமெரிக்க வானியலாளர் இனம் புரியாத ஒரு வலுவான குறுகிய வரிசை வானொலி சமிக்ஞையான வாவ் சமிக்ஞை (Wow! Signal) கண்டறிந்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1977. இலங்கையில் தமிழருக்கு எதிரான இனப்படுகொலை ஆரம்பித்தது. கொழும்பிலும் பிற நகரங்களிலும் 400ற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டு 10,000 பேர் வரை காயமடைந்ததோடு அகதி களாயினர்.

1997. இந்தியாவின் சுதந்திர பொன்விழா தினம் கொண்டாடப்பட்டது.

**ஆகஸ்ட் – 16**

1886. இந்தியாவின் தலைசிறந்த ஆன்மிகவாதியான ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர் இறப்பு (பிறப்பு-08.02.1836).

1930. முதலாவது கொமன் வேல்த் (Common Wealth Games) போட்டிகள் நியுசிலாந்து ஹமில்டன் நகரில் ஆரம்பம். ஆறு விளையாட்டுக் களை கொண்டதாக இவ்விளையாட்டுத் தொடர் அமைந்தது.

1971. இலங்கை தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினரும், தமிழர் நலன் கருதி தன்நலம் பாராது உழைத்த இரும்பு மனிதன் டாக்டர் I.M.V. நாகநாதன் பிறப்பு (இறப்பு 31.01.1906).

2003. சவூதியில் தஞ்சமடைந்திருந்த உகண்டா ஜனாதிபதி, உலகின் அதி பயங்கர கொடுங்கோலர்களில் ஒருவருமான இடி அமீன் இறப்பு (பிறப்பு-1924).

**ஆகஸ்ட் – 17**

1807 றொபேட் புலட்டனின் முதலாவது அமெரிக்க நீராவி படகு நியூயோர்க் கிலிருந்து புறப்பட்டது. இதுவே உலகின் முதலாவது வர்த்தக நீராவிப் படகு ஆகும்.

1945. இந்தோனேசியா நெதர்லாந்திடமிருந்து விடுதலையடைந்தது.

1947. இந்தியாவையும் பாகிஸ்தானையும் பிரிக்கும் ரொட் கிலிப் கோடு வெளியிடப்பட்டது.

1960. காபொன் பிரான்சிடமிருந்து விடுதலையடைந்தது.

1977. அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் வைத்து தமிழர்கள் தாக்கப் பட்டதை தொடர்ந்து இனக்கலவரம் தொடங்கப்பட்டது.

1982. முதலாவது இறுவட்டு (CD) ஜேர்மனியில் வெளியிடப்பட்டது.

2015. 15வது பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது ஐ.தே.கட்சி வெற்றி பெற்றது.

**ஆகஸ்ட் – 18**

1945. இந்திய இராணுவத் தலைவர் இந்திய விடுதலைப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் தாய்வானில் விமான விபத்தில் கொல்லப் பட்டதாக அறிவிக்கப்பட்டது. (பிறப்பு 23.01.1897).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987. இலங்கைப் பாராளுமன்றத்துக்குள் வெடி குண்டு வீசப்பட்டதில் பிரதமர் R. பிரேமதாஷா உட்பட 8 பேர் காயமடைந்தனர்.

2007. சென்னையில் தமிழ் செம்மொழி தமிழாய்வு நிறுவனம் ஆரம்பிக் கப்பட்டது.

**ஆகஸ்ட் – 19**

- உலக புகைப்பட தினம் (World Photograph Day) - புகைப்படங்களின் சிறப்பையும் புகைப்படக்காரர்களின் திறமையையும் கொண்டாடும் வகையில் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது.
- சர்வதேச மனித நேய தினம். (World Humanitarian day. 2009 முதல் கொண்டாடப்படுகின்றது.)

1871. ஆகாய விமானத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய ரைட் சகோதரர் களில் ஒருவரான ஒர்லில் ரைட் பிறப்பு

1895. கொழும்பு தலைமை அஞ்சல் அலுவலகம் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

1919. ஆப்கானிஸ்தான் ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை யடைந்தது.

1946. அமெரிக்கா 42வது குடியரசுத் தலைவர் பில் கிளின்டன் அமெரிக்கா ஆர்கன்சாஸ் மாநிலத்தில் ஹோப் என்ற கிராமத்தில் பிறப்பு. (இவரது இளமைப் பெயர் வில்லியம் ஜெபர்சன் பிளித் இவரது தந்தையார் இவர் பிறப்பதற்கு முன்பு காலமானார்.இவரது தாயார் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் அவரது பெயரையும் சேர்த்து வில்லியம் பில் கிளின்டன் என்ற பெயர் இவருக்கு சூட்டப்பட்டது. இவர் 46வது வயதில் ஜனாதிபதியானார்).

1960. சோவியத்தின் ஸ்புட்னிக் - 5 விண்கலம் பெல்கா, ஸ்ட்ரெல்கா என்ற இரு நாய்களையும், 42 எலிகளையும், பல வகைத் தாவரங்களையும் கொண்டு சென்றது.

1991. ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி ஒன்றில் குற்றஞ் சாட்டப்பட்ட சோவியத் அதிபர் மிக்கைல் கொர்பசோவ் ''கிறிமியா'' என்ற சுற்றுலா மையத்தில் ஓய்வெடுக்கும் போது கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப் பட்டார். எனினும் அவர் மூன்று நாட்களில் மீண்டும் பதவிக்கு வந்தார்.

1994. இலங்கையின் 6வது (14வது) பிரதமராக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பதவியேற்பு 14-11-1994 வரை.

**ஆகஸ்ட் – 20**

1858. சார்ள்ஸ் டார்வின் இயற்கைத் தேர்வு மூலமான கூர்ப்புக் கொள்கையை வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1917. இலங்கையில் 1 ரூபா தாள் நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டது.

1944. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் முதல் மகனாக ராஜீவ் காந்தி பிறப்பு (இறப்பு - 21.05.1991).

1948. இலங்கை நாடாளுமன்றத்தில் "இலங்கை குடியுரிமை சட்டம்" கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் 10 இலட்சம் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சாவளித் தமிழர்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர்.

1977. விண்ணில் நெடுந்தூரம் சென்று ஆய்வு நடத்த அமெரிக்காவினால் விண்வெளி வாகனம் வொயேஜர் - 2 ஏவப்பட்டது.

1993. பாலஸ்தீனர்களுக்கு சுயாட்சி வழங்குவதற்கான ஏற்பாடுகள் நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்துடன் நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் உள்ள அந்நாட்டு வெளியுறவு அமைச்சு கட்டிடத்தில PLO பிரதிநிதி களும் இஸ்ரேலிய பிரதிநிதிகளும் பேச்சு வார்த்தை நடத்தினர்.

2000. இலங்கை தொலைக்காட்சி சேவையான Eye Channel ஆரம்பிக்கப் பட்டது.

2015 உலகில் 4வது தடவையாக பிரதமர் பதவியை வகிக்கும் ஒரே ஒரு பிரதமராக ரணில் விக்கிரமசிங்க ஆவார். ஐ.தே.கட்சி தேர்தல் 17-08-2015.

**ஆகஸ்ட் – 21**

1610. தொலை நோக்கு கருவியை கலிலியோ கலிலி உருவாக்கினார்.

1901. தொடுகை வில்லையைக் கண்டுபிடித்த ஜேர்மனியைச் சேர்ந்தவரான அடோல்ப்பிக் இறப்பு (பிறப்பு 03.09.1829).

1920 சேர். ஏ. கனகசபை இலங்கையின் அரசியல் நிர்ணய சபைக்கு தமிழ்ப் பிரதிநிதியாக தெரிவானார்.

1959. அமெரிக்காவின் 50வது மாநிலமாக ஹலாய் இணைக்கப்பட்டது.

1977. இரண்டாவது இனக்கலவரம் நடைபெற்றது. தமிழ் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டார்கள்.

1993. சகல விளையாட்டுக்களையும் நேரடியாகவும் மறு ஒளிபரப்பாகவும் 24 மணி நேரமும் ஒளிபரப்புச் செய்யும் Star Sports தொலைக்காட்சிச் சேவை தனது முதல் ஒளிபரப்பை ஆரம்பித்தது.

**ஆகஸ்ட் – 22** ✱ செஞ்சிலுவைச் சங்கம் ஆரம்பம். 12 நாடுகள் இணைந்து ஹென்றிடி யூனார்ட் தலைமையில் ஜெனீவாவில் செஞ் சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848. நியு மெக்சிக்கோ ஐக்கியஅமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது.

1872. இலங்கையில் முதன் முறையாக தபால் அட்டை வெளியிடப்பட்டது.

1877. கீழைத்தேய கலைஞர்களுக்கும், இந்துமதத்திற்கும் சிறந்த தூதுவராக விளங்கிய கலாயோகி ஆனந்த குமாரசுவாமி பிறப்பு (இறப்பு 09.09.1947).

1911. உலகின் மிகப் பிரபல்யமான மோனாலிசா ஓவியம் பிரான்ஸ் தலைநகர் பாரிஸின் லூவர் அருங்காட்சியத்தில் காணாமல் போனது. பின்னர் இவ் ஓவியம் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

1926. தென்னாபிரிக்கா ஜெகனஸ்பேர்க்கில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

1985. யுத்த நிறுத்த காலத்தில் வவுனியாவில் பாதுகாப்பு படையினர் பொது மக்களை தாக்கியதைத் தொடர்ந்து திம்பு பேச்சு வார்த்தையிலிடுபட்ட தமிழர் அமைப்புகள் பேச்சுவார்தையை முறித்து மாநாட்டை விட்டு வெளியேறினர்.

1995. மக்கள் வங்கியின் துணை நிறுவனமான பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. 31.05.1996ல் தனது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

**ஆகஸ்ட் – 23** ✸ அடிமை வணிகத்தையும் அதன் ஒழிப்பையும் நினைவூட்டும் சர்வதேச தினம் - 1791 ஆகஸ்ட் 22ம் திகதி இரவும் ஆகஸ்ட் 23ம் திகதியும் தற்போதைய ஹெய்டி இல் (Island of Saint Domingue) இடம்பெற்ற அடிமை வியாபாரத்திற்கு எதிரான கிளர்ச்சியையும் இதனால் ஏற்பட்ட விளைவுகளையும் நினைவு கூரும் வகையிலேயே இத்தினம் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டு கொண்டாடப்படுகின்றது.

1944. ருமேனியா விடுதலையடைந்தது.

1947. இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத் தேர்தல் ஆரம்பம். இத் தேர்தல் 20.09.1947 வரை நடைபெற்றது. அத்தோடு இலங்கை நாடாளுமன்றத்தினால் பிரதிநிதிகள் சபைக்கு 95 உறுப்பினர் களைத் தெரிவு செய்ய இத்தேர்தல் நடாத்தப்பட்டது. இதில் ஐக்கிய தேசியக் கட்சி 42 ஆசனங்களைக் கைப்பற்றி ஆட்சியை அமைத்தது.

1952. அரபு நாடுகளின் கூட்டமைப்பான அரபு லீக் ஆரம்பிக்கப்பட்டது.

1962. அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உலகின் முதல் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பு ''டெஸ்ட் ஸ்டார்'' துணைக் கோளின் உதவியுடன் ஒளிபரப்பப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆகஸ்ட் – 24**

1875. கப்டன் மத்தியு லெப் அட்லாண்டிக் பெருங்கடலில் பெரிய பிரித் தானியாத் தீவையும், வடக்கு பிரான்சையும் பிரிக்கும் நீரினையான ஆங்கில கால்வாயை நீந்திக் கடந்தார்.

1929. பாலஸ்தீன தலைவரும், அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற வருமான யாசிர் அரபாத் பிறப்பு (இறப்பு 11.11.2004).

1949. நெட்டோ அமைப்பை உருவாக்குவதற்கான ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது.

1969. இந்தியாவின் 4வது குடியரசு தலைவராக வி.வி.கிரி பதவியேற்றார். (ஆகஸ்ட்.24.1974வரை).

1974. இந்தியாவின் 5வது குடியரசு தலைவராக பக்ருதின் அலி அகமது பதவியேற்பு. (பெப்ரவரி.11.1977வரை).

1991. கிழக்கு ஐரோப்பாவில் உள்ள நாடான உக்ரேன் சோவியத் ஒன்றியத் திடமிருந்து விடுதலையடைந்தது.

2006. சூரியக் குடும்பத்தில் இரண்டாவது பெரிய குறுங்கோளும், சூரியனை நேரடியாக சுற்றிவரும் பத்தாவது பெரிய விண்பொருளுமான புளூட்டோ ஒரு கோள் அல்லவென அறிவிக்கப்பட்டது.

2014. இலங்கையில் முதல் முறையாக முஸ்லீம் பெண் ஒருவர் இராணு வத்தில் இணைப்பு. (M.Rizana - அம்பாறை)

**ஆகஸ்ட் – 25**

1825. தென் அமெரிக்க நாடான உருகுவே பிரேசிலிடமிருந்து விடுதலை யடைந்தது.

1830. பெல்ஜியப் புரட்சி ஆரம்பமானது.

1867. மின்காந்தவியல், மின்வேதியியல் ஆகிய துறைகளுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்தவரும், சோதனைச்சாலைகளில் சூடாக்குவதற்கான ஒரு கருவியாக உலகலாவிய முறையில் பயன்படுகின்ற ''பன்சன் சுடரடுப்பின்'' ஆரம்ப வடிவத்தை கண்டு பிடித்த வருமான விஞ்ஞானி மைக்கல் பரடே இறப்பு (பிறப்பு 22.09.1791).

1906. ''அருள்மொழி அரசு'' என்றும் ''திருப்புகழ் ஜோதி'' என்றும் அனை வராலும் பாராட்டப்பட்ட சிறந்த முருக பக்தரான திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் பிறப்பு (இறப்பு 07.11.1993).

1960. 17வது ஒலிம்பிக் போட்டிகள் இத்தாலி ரோம் நகரில் கோலாகலமாக ஆரம்பம். 11.09.1960 வரை நடைபெற்ற இப்போட்டியில் சோவியத் யுனியன் 43 தங்கம், 29 வெள்ளி, 31 வெண்கலமாக மொத்தம் 103 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முதலிடத்தையும் ஐக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க 34 தங்கம், 21 வெள்ளி, 16 வெண்கலம் உட்பட மொத்தம் 71 பதக்கங்களையும் இத்தாலி 13 தங்கம், 10 வெள்ளி, 13 வெண்கலம் உட்பட மொத்தம் 36 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன.

2009. ஐக்கியராச்சியத்தை தளமாகக் கொண்ட சனல் 4 செய்தி ஊடகம். இலங்கை படை வீரர்களால் பல சிறைக் கைதிகளின் கைகள் பின்னால் கட்டப்பட்டு சடுதியாக மரணதண்டனை நிறைவேற்றப்படும் வீடியோ காட்சிகள் ஒளிபரப்பியது.

2014. இலங்கையில் மிதக்கும் சந்தை கொழும்பு புகையிரத நிலையத்திற்கு அண்மையில் சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அவர்களால் திறந்து வைக்கப்பட்து.

2014. அநுராதபுரம் சிகிரியா நகரங்களில் பாதுகாப்புக் கமரா பொருத்தப் பட்டுள்ளது.

**ஆகஸ்ட் – 26**

1910. அல்பேனிய உரோமன் கத்தோலிக்க அருட்சகோதரி, நோபல் பரிசு பெற்றவருமான அன்னை தெரேசா பிறப்பு (இறப்பு 05.09.1997).

1920. ஐக்கிய அமெரிக்காவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப் பட்டது. 19வது திருத்த சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

1927. இலங்கையின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற எதிர்க்கட்சித்தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலை வருமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டை பண்ணாகத்தில் பிறப்பு (இறப்பு 13.07.1989).

1952. ஈழ விடுதலைப்போராட்டத்தில் சயனைட் அருந்தி உயிர் நீத்த முதலாவது போராளி தியாகி பொன்னுத்துரை சிவகுமாரன் பிறப்பு (இறப்பு 05.06.1974).

1965. இந்தியாவில் ஹிந்தி ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டது.

1972. 20வது ஒலிம்பிக் போட்டிகள் மேற்கு ஜேர்மனி முனீச் நகரில் கோலா கலமாக ஆரம்பம். 10.09.1972 வரை நடைபெற்ற இப் போட்டியில் சோவியத் யூனியன் 50 தங்கம், 27 வெள்ளி, 22 வெண்கலமாக மொத்தம் 99 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப் பட்டியலில் முதலிடத் தையும் ஐக்கிய அமெரிக்க 33 தங்கம், 31 வெள்ளி, 30 வெண்கலம் உட்பட மொத்தம் 94 பதக்கங்களையும் கிழக்கு ஜேர்மனி 20 தங்கம், 23 வெள்ளி, 23 வெண்கலம் உட்பட மொத்தம் 66 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைத் தக்கவைத்துக் கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1992. உலகிலேயே மிகப் பெரிய அளவில் நடந்த கூட்டுத் திருமணம் தென் கொரியா சீயோல் ஒலிம்பிக் விளையாட்டரங்கில் ஒரே சமயத்தில் 20,000 ஜோடிகளுக்கு நடந்தது.

**ஆகஸ்ட் – 27**

1859. ஐக்கிய அமெரிக்க மாநிலங்களில் ஒன்றான பென்சில்வேனியாவில் "டிட்டுஸ்வில்" என்ற இடத்தில் பெற்றோலியம் கண்டு பிடிக்கப்பட்டது. இதுவே உலகில் முதலாவது எண்ணெய் கிணறு ஆகும்.

1939. உலகின் முதலாவது ஜெட் விமானம் சேவைக்கு விடப்பட்டது.

1955. உலக சாதனை கின்னஸ் புத்தகம் 197 பக்கங்களுடன் முதல் பதிப்பு வெளியிடப்பட்டது. லண்டனில் நோரிஸ் மெக்வைட்டர், ரோஸ் மெக் வைட்டர், கியூக்பிவர் மூவரும் இணைந்து இப்புத்தகத்தை உருவாக்கினார்கள்.

1957. மலேசியா அரசியலமைப்புச் சாசனம் அமுலானது.

1979. ஆங்கிலக் கடற்படைத் தளபதியும், பிரித்தானிய இந்தியாவின் கடைசி அரசு பிரதிநிதியாகவும், விடுதலை பெற்ற இந்தியாவின் முதலாவது ஆளுநராகவும் இருந்தவரான மவுண்ட்பேட்டன் பிரபு அயர்லாந்தில் தனது விடுமுறையைக் கழித்துக் கொண்டிருக்கும் போது ஐரியக் குடியரசு இராணுவத்தினரின் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார் (பிறப்பு-25.06.1900).

1991. கிழக்கு ஐரோப்பா நாடுகளால் சூழப்பட்ட ஒரு நாடான மால் டோவா சோவியத் ஒன்றியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

2003. செவ்வாய்க் கோள் பூமிக்கு அருகில் 55,758,006 கிலோமீட்டர் தூரத்தில் 60,000 ஆண்டுகளுக்குப் பின்னர் வந்தது.

2014 யாழ்மாவட்டம் அச்சுவேலியில் 1971ல் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில் பேட்டை யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீண்டும் இந்திய அரசினால் 275 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப் பட்டது.

**ஆகஸ்ட் – 28**

1349. கொள்ளை நோயைக் காரணம் காட்டி ஜேர்மனியின் மாயின்ஸ் நகரில் 6ஆயிரம் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1511. போர்த்துக்கீசர் மலைக்காவைக் கைப்பற்றினர்.

1922. உலகில் முதன் முதலாக வானொலியில் வர்த்தக ஒலிபரப்பு ஆரம்பமானது.

1950. இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1963. ஐக்கியஅமெரிக்காவில் சமூக உரிமைக்காக போராடிய மாபெரும் ஆபிரிக்கா - அமெரிக்கா தலைவர் மார்டின் லூதர் கிங் 2இலட்சம் பேருடன் ''என் கனவு யாதெனில்'' என்ற புகழ் பெற்ற வார்த்தை களுடன் சொற் பொழிவாற்றினார்.

1990. ஈராக் தனது 19வது மாநிலமாக குவைத்தை பிரகடனம் செய்தது.

1996. வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ் இளவரசி டயானா ஆகியோருக்கிடையில் மணமுறிவு ஏற்பட்டது.

2010. 5000 ரூபா நாணயக்குற்றி இலங்கை மத்திய வங்கியின் 60வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு வெளியிடப்பட்டது.

**ஆகஸ்ட் – 29**

1658. புரெட்டடஸ்தாந்து சீரமைப்பு யாழ்ப்பானத்தில் முதன் முதலாக வண டாக்டர். பால்டியஸ் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

1782. இலங்கை திருகோணமலை கோட்டையை பிரெஞ்சுக்கார் பிரித்தானி யரிடமிருந்து மீளக் கைப்பற்றினர்.

1893. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி முதன் முதலில் ஆரம்பிக்கப் பட்டது. இக்கல்லூரி கொழும்பு மருதானையில் அமைந்துள்ளது.

1898. கோட் லீப் டாயிம்லர் மோட்டார் சைக்கிளுக்கான காப்புரிமையைப் பெற்றார்.

1910. ஐப்பானியர் கொரியாவின் பெயரை ''சோ சென்'' என மாற்றினர்.

1931 கவிஞர் வாலி பிறப்பு (இறப்பு 18.07.2013)

1944. இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமை யில் ஆரம்பிக்கப்பட்டது. வெள்ளவத்தையிலுள்ள சைவ மங்கையர் கழகத்தில் நடைபெற்றது.

1958. அமெரிக்க புகழ் பெற்ற பொப் இசைப்பாடகர் மைக்கல் ஜாக்சன் பிறப்பு (இறப்பு 25.06.2009).

1976. அணிசேரா இயக்கத்தின் தலைவர்கள் பங்கேற்ற உச்சி மாநாடு இலங்கையில் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

1980. இலங்கையின் முன்னால் பிரதமர் திருமதி. ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா வின் குடியுரிமையை பறிப்பதற்கான குடியுரிமைத் தடைச் சட்டம் J.R. ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக்கட்சி அரசினால் கொண்டுவரப்பட்டது.

1996. இலங்கைப் பாராளுமன்றத்தில் மனித உரிமைகள் சட்டம் இறுதிப் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆகஸ்ட் – 30** ✱ அனைத்துலக காணமற் போனோர் தினம் (International Day of the Disappeared) - உலகின் பல நாடுகளிலும் காவற்துறையினராலோ அல்லது பாதுகாப்பு படையின ராலோ பல்வேறு காரணங்களுக்காகவும் கைது செய்யப் பட்டு காணமற்போனோர் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

1835. அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ன் நகரம் அமைக்கப்பட்டது.

1875. ஈழத்தின் தமிழறிஞரும், பன்மொழிப்புலவரும் மற்றும் தமிழின் தொன்மையை உலகிற்கு எடுத்தியம்பியவர்களுள் ஒருவரான நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் பிறப்பு (இறப்பு 22.01.1947).

1913. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவரும், இலங்கை வாழ் இந்தியத்தமிழர்களது முக்கிய அரசியற் தலைவர்களில் ஒருவரும் மற்றும் இலங்கை அரசின் அமைச்சரவையில் வயது கூடிய அமைச்ச ராக இருந்தவரும் அத்தோடு தொடர்ந்து 21 வருடங்கள் இலங்கை பாராளுமன்றில் அமைச்சராக பதவி வகித்த வருமான சௌமிய மூர்த்தி தொண்டமான் பிறப்பு (30.10.1999).

1918. சோவியத் கம்யூனிசப் புரட்சித் தலைவர் விளாடிமிர் லெனின் சுடப் பட்டுப் படுகாயம் அடைந்தார்.

1945 பிரித்தானியாவிடம் இருந்து ஹொங்ஹொங்கை ஜப்பான் விடுவித்தது

1957. தென்னிந்திய தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகரும் பாட கருமான கலைவாணர் என்.எஸ். கிருஸ்ணன் இறப்பு (பிறப்பு 29.11.1908).

1984. டிஸ்கவரி விண்னோட்டம் தனது முதலாவது பயணத்தை ஆரம்பித்தது.

2012. ஈரான் தலைநகர் தெஹ்ரானில் பல உலக நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் அணி சேரா நாடுகளின் 16வது உச்சி மாநாடு ஆரம்பம்.

**ஆகஸ்ட் – 31** ✱ மலேசிய தேசிய தினம்

1870. இத்தாலியைச் சேர்ந்த் கல்வியாளர், இத்தாலியில் மருத்துவ பட்டம் பெற்ற முதல் பெண்ணுமான மற்றும் சிறுகுழந்தைகளை பயிற்று விக்க ஒரு புதிய முறையை உருவாக்கியவருமான Dr. மரியா மொண்ட்டிசோரி பிறப்பு (இறப்பு 06.05.1952).

1955. சூரிய சக்தியில் இயங்கும் முதல் கார் அமெரிக்காவில் மக்களுக்கு இயக்கிக் காண்பிக்கப்பட்டது.

1957. தென் கிழக்காசியா நாடான மலேசியா ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1962. அமெரிக்க கண்டத்தில் இருக்கும் கரிபியன் பிரதேசத்தில் உள்ள இரு தீவுகளை முதன்மை நிலப்பகுதியாக கொண்ட டிரினிடாட் மற்றும் டொபாகோ குடியரசு ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1978. இலங்கையில் ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திய புதிய அரசியல் யாப்பு வெளியிடப்பட்டது.

1979. தமிழ் திரைப்பட முன்னனி இசையமைப்பாளர்களில் ஒருவரும் இசைஞானி இளையராஜாவின் இளைய மகனுமாகிய யுவன் சங்கர்ராஜா தமிழ் நாடு சென்னையில் பிறந்தார்.

1991. மத்திய ஆசிய நாடான கிர்கிசுத்தான் சோவியத் ஒன்றியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1997. வேல்ஸ் இளவரசி டயானா தலைநகர் பாரிஸில் கார் விபத்தில் உயிரிழந்தார். (பிறப்பு-01.07.1961).

2014. ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை பதவியிலிருந்து ஓய்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்டம்பர்

## செப்டம்பர் – 01

1939. நாசி ஜேர்மனிய, போலாந்து படையெடுப்புடன் இரண்டாம் உலகப் போர் ஆரம்பம். 02.09.1945 வரை நடைபெற்ற போரில் படையினர் பொதுமக்கள் என நேச நாட்டிலிருந்து 50,000,000 பேரும் அச்சு நாட்டிலிருந்து 12000,000 பேரும் இறப்பு.

1969. கேணல் அல் கடாபி புரட்சியின் மூலம் லிபியாவின் ஆட்சியைக் கைப்பற்றினார்.

1979. எயார்லங்கா (Airlanka) விமானசேவை நிறுவப்பட்டது.

1980. உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழக ஆரம்பக் கர்த்தாவும் தமிழ் பேரறிஞரு மான வணபிதா தனிநாயகம் அடிகளார் இறப்பு. (பிறப்பு - 02.08.1913).

1985. அமெரிக்கா - பிரெஞ்சு கூட்டு முயற்ச்சியில் உலகப் பயணிகள் கப்பலான டைட்டானிக் கப்பலின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

1991. ஆசியாவில் உள்ள ஒரு நிலஞ்சூழ் நாடான உஸ்பெகிஸ்தான் சோவியத் ஒன்றியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1997. சர்வதேச 24 மணி நேர தொலைக்காட்சி சேவையான National Geographic Channel தனது முதல் ஒளிபரப்பை ஆரம்பித்தது.

2014 ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளராக ஜோர்தான் இளவரசர் செய்து அல் குசைன் (Zaid Al Huzen) நியமனம்.

## செப்டம்பர் – 02

1942. இங்கிலாந்து தலைநகர் லண்டனில் அமைந்துள்ள நாடக அரங்குகள் அனைத்தையும் மூடிவிட நாடாளுமன்றம் உத்தரவிட்டது

1945. தென்கிழக்காசியாவில் உள்ள ஒரு கம்யூனிச நாடான வியட்நாம் பிரான்சிடமிருந்து விடுதலையடைந்தது.

1951. S.W.R.D.பண்டாரநாயக்காவினால் இலங்கை சுதந்திரக் கட்சியை அமைக்கப்பட்டது.

1965. பாகிஸ்தான் படையினர் இந்தியாவின் காஷ்மீருக்குள் நுழைந்தனர்.

1970. இந்தியா தமிழ் நாட்டின் எல்லையான கன்னியாகுமாரி வந்த சுவாமி விவேகானந்தர் கடலுக்குள் நீந்தி சென்று அங்கிருந்த பாறையில் மூன்று நாட்கள் கடும் தவம் இருந்த இடத்தில் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988 இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப் பட்டது.

2011 யாழ்ப்பாணம் பழைய கச்சேரி வழாகத்திலுள்ள பழைய கச்சேரி (தேர்தல் அலுவலகம்) தொல் பொருள் சின்னமாக பிரகடனப்படுத்தப் பட்டது.

**செப்டம்பர் – 03**

1658. இங்கிலாந்தின் முடி ஆட்சியை நீக்கியவரும், இங்கிலாந்தின் பெருந் திறமை வாய்ந்த எழுச்சியூட்டும் இராணுவத் தலைவரும் மற்றும் உள்நாட்டுப் போரின் போது நாடாளுமன்ற படைகளுக்குத் தலைமை தாங்கி போரிட்டு வெற்றி தேடித்தந்த செயல் வீரருமான ஆலிவர் கிரொம் வெல் இறப்பு (பிறப்பு-25.04.1599).

1866. இலங்கைக் காவல் துறைப்படை (Police) ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது பொலிஸ்மா அதிபராக J.W.R. கெம்பிள் நியமிக்கப் பட்டார்.

1939. இரண்டாம் உலகப்போரின் போது போலாந்து மீதான ஜேர்மனியின் முற்றுகையையடுத்து பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகியன ஜேர்மனி மீது போர் தொடுத்தன.

1940. மத்திய கிழக்கில் மற்றும் மேற்காசியாவில் உள்ள ஒரு அமீரக நாடான கட்டார் (Qatar) பஹ்ரைனிடமிருந்து விடுதலையடைந்தது.

1971. பிரித்தானியாவிடமிருந்து கட்டார் நாடு சுகந்திரமடைந்தது.

2012. இலங்கை கிழக்கு மாகாணத்தில் காலை 10.09 சுபநேரத்தில் தமிழ் தொலைக்காட்சி சேவையான வசந்தம் Tv ஆரம்பிக்கப்பட்டது.

2015 இலங்கையின் எட்டாவது பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

**செப்டம்பர் – 04**

1884. குற்றவாளிகளை ஆவுஸ்ரேலியாவுக்கு அனுப்பும் கொள்கையை பிரித்தானியா கைவிட்டது.

1953. அமெரிக்க நீச்சல் விராங்கனை ஃனோரன்ஸ் ச்செட்லிக் ஆங்கில கால்வாயில் நீந்தி சாதனை படைத்தார்.

1956 வன்தட்டு நினைவகத்தை கொண்ட உலகின் முதலாவது கணினியை IBM அறிமுகப்படுத்தியது

1978. இந்தியாவின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான அண்ணா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014 இலங்கையிலுள்ள சகல பொலிஸ்நிலையங்களையும் இணைக்கும் VPN (Virtual Private Network) வலையமைப்பு அறிமுகம்.

**செப்டம்பர் – 05**

1698. ரஷ்யப் பேரரசர் முதலாம் பீட்டர் தாடி வைத்திருப்பவர்களுக்கு வரி அறவிட உத்தரவிட்டார்.

1872. எட்டயபுரத்தில் தந்தை உலகநாதபிள்ளைக்கும் தாய் பரமாயி அம்மாளுக்கும் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரபிள்ளை பிறப்பு (இறப்பு 11.11.1938).

1961. அணிசேரா நாடுகளின் முதலாவது மாநாடு பெல்கிறேட்டில் இடம்பெற்றது.

1972. ஜேர்மனியில் இடம்பெற்ற 20வது ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றிய இஸ்ரேலிய வீரர்களின் மீது பாலஸ்தீனம் தாக்குதல்.

1997 அன்னை திரேசா கல்கத்தாவில் இறப்பு (27.08.1910).

**செப்டம்பர் – 06**

1522. பேடினண்ட் மகலனின் விக்டோரியா கப்பல் உயிர் தப்பிய 18 பேருடன் ஸ்பெயினை வந்தடைந்து, முதன் முதலில் உலகைச் சுற்றி வந்த கப்பல் என்ற பெருமையையும் பெற்றது.

1873. நுவரகளவியா என அழைக்கப்பட்ட அநுராதபுர மாவட்டம் வட மாகாணத்திலிருந்து பிரிக்கப்பட்டு வடமத்திய மாகாணம் என்ற பெயரில் தனிமாகாணம் உருவாக்கப்பட்டது. J.E. டிக்சன் முதலாவது அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

1880. உலக பிரபலமான கிரிக்கெட் மைதானங்களுள் ஒன்றான இங்கிலாந்து லண்டன் The Kia Oval மைதானத்தில் முதல் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டி விளையாடப்பட்டது.

1946. இலங்கையின் அரசியல் கட்சியாக ஐக்கிய தேசிய கட்சி D.S. சேனநாயக்காவினால் ஆரம்பிக்கப்பட்டது.

1968. தெற்கு ஆபிரிக்காவில் உள்ள சிறிய நாடான சுவிற்சர்லாந்து ஐக்கிய இராச்சியத்திடமிருந்து சுதந்திரமடைந்தது.

1997. வேல்ஸ் இளவரசி டயானாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. 2.5பில்லியன் மக்கள் தொலைக்காட்சி மூலம் இந்நிகழ்வைப் பார்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செப்டம்பர் – 07**

1822. தென் அமெரிக்காவில் மிகப்பெரியதும் மிகுந்த மக்கள் தொகையைக் கொண்டதும் மற்றும் பரப்பளவின் அடிப்படையிலும் மக்கள் தொகை அடிப்படையிலும் உலகிலேயே ஐந்தாவது பெரிய நாடான பிரேசில் போர்த்துக்கல்லிடமிருந்து விடுதலையடைந்தது.

1936. ஐக்கிய அமெரிக்காவிலுள்ள கூவர் அணை (போல்ட்டர் அனண) தொழிற்பட ஆரம்பித்தது.

1973. உலக பிரபலமான கிரிக்கெட் மைதானங்களுள் ஒன்றான இங்கிலாந்து லண்டன் The Kia Oval மைதானத்தில் முதல் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி விளையாடப்பட்டது.

1978. ஐ.தே. கட்சியினால் புதிய அரசியல் யாப்பு அறிவிக்கப்பட்டது. தமிழ் மொழிக்கு தேசிய மொழி அந்தஸ்த்து வழங்கப்பட்டது. வேறு எவையும் வழங்கப்படவில்லை

1978. இலங்கையில் தமிழிழ விடுதலைப்புலிகளுக்கான தடைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

1979. இலங்கையில் பயங்காரவாத சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

1996. போலியோ சொட்டு மருந்து குழந்தைகளுக்கு இலவசமாக கொடுக்கும் திட்டம் உலகம் முழுவதும் நடத்தப்பட்டது.

1998. அமெரிக்காவில் தலைமையிடத்தைக்கொண்டு செயல்ப்படும் ஓர் சர்வதேச நிறுவனமான கூகிள் (Google) ஆரம்பிக்கப்பட்டது.

2004. சர்வதேச கிரிக்கெட் சபையினால் முதலாவது Icc Awards விருது வழங்கும் நிகழ்வு இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நடைபெற்றது.

2011. ''எப்பொழுது அவர்களுக்கு நீதி கிடைக்கும்?'' கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தோல்விகள் என்று அனைத்துலக மன்னிப்பு அவை அறிக்கையை வெளியிட்டது. (இவ் அறிக்கை 69 பக்கங்களை கொண்டது இவை தொடர்பான செய்திகள் BBC ராய்டர் A.F.B உட்பட பல அனைத்துலக ஊடகங்களிலும் வெளி வந்திருந்தன.)

2014 ஜப்பான் நாட்டின் பிரதமர் 24 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கை வருகை.

**செப்டம்பர் – 08** ✸ அனைத்துலக எழுத்தறிவு தினம் - எழுத்தறிவின் முக்கியத்துவத்தை தனிப்பட்ட மக்களும் சமூகத் திற்கும், அமைப்புக்களுக்கும் அறிய வைப்பதன் நோக்கமாக கொண்டாடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1926. முதலாம் உலகப்போர் முடிந்த பின்னர் உருவான ''நாடுகளின் கூட்டமைப்பு''ல் ஜேர்மனி சேர்ந்து கொண்டது.

1959. ''ஆசிய தொழினுட்பக் கழகம்'' தாய்லாந்து தலைநகரான பாங்கொங்கில் நிறுவப்பட்டது.

1960. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் கணவர் பெரோஸ் காந்தி 48 வயதில் மாரடைப்பால் இறப்பு (பிறப்பு-12.09.1912).

1965. உலக வங்கி அறிவு தினம் ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார நிறுவனத்தால் (Unesco) பிரகடனப்படுத்தப்பட்டது. 1966லிருந்து அனுஷ்டிக்கப்படுகிறது.

1991. தென்கிழக்கு ஐரோப்பாவில் பால்கன் குடாவில் அமைந்துள்ள நாடான மாக்கடோனியாக் குடியரசு யுகொஸ்லாவியாவிடமிருந்து விடுதலை யடைந்தது.

2001. இனவாதத்துக் கெதிரான முதலாவது உலக மாநாடு தென் ஆபிரிக்கா வின் டர்பன் நகரில் நடைபெற்றது.

2008. இந்தியாவின் தமிழகத்தைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற வயலின் இசைக்கலைஞர் குன்னக்குடி வைத்தியநாதன் இறப்பு (பிறப்பு 02.03. 1935).

2010. இலங்கையில் 18வது அரசியல் யாப்புச் சட்டம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.

2012. இந்தியா சென்னை உயர்நீதிமன்றத்தின் 150வது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி முன்னிலையில் கோலாகல ஆரம்பம்.

## செப்டம்பர் – 09

1850. ஐக்கிய அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலம் 32வது மாநிலமாக இணைந்தது.

1947 ஆனந்த குமாரசாமி இறப்பு 1877

1948. கிழக்கு ஆசியாவில் உள்ள கொரிய தீபகற்பத்தின் வடபகுதியில் அமைந்துள்ள நாடான வடகொரியா விடுதலையடைந்தது.

1962 உகண்டா சுதந்திர தினம்.

1976. சீன மார்க்சியக் கொள்கையாளர், போர் வீரர், கவிஞர் மற்றும் இராஜ தந்திரியான மா.சே. துாங் இறப்பு (பிறப்பு-26.12.1893).

1991. மத்திய ஆசியாவில் உள்ள மலைப்பாங்கான நாடான தாஜிகிஸ்தான் பிரான்ஸ்சிடமிருந்து விடுதலையடைந்தது.

2003. ஐதரசன் குண்டின் தந்தை என்று அறியப்படும் அமெரிக்காவைச் சேர்ந்த எட்வர்ட் டெல்லர் இறப்பு (பிறப்பு-15.01.1908).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009. பங்களாதேஷில் நடைபெற்ற 11வது சர்வதேச சுதாசின குறும்பட திரைப்பட விழாவில் சிறந்த கதைப் படத்துக்கான விருதினைப் பெற்ற ஈழத்து குறும்படமான ''வன்னி எலி'' திரையிடப்பட்டது.

2010. இலங்கை அரசியலமைப்பின் 18வது சீர்திருத்தம் பாராளுமன்றத்தில் 161 ஆதரவு வாக்குகளினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சாவினால் நிறைவேற்றப்பட்டது.

2012. இந்தியா ஆராய்ச்சி மையமான ''இஸ்ரோ'' தனது 100வது ரொக் கட்டை விண்வெளிக்கு அனுப்பியது. (கல்வி காலநிலை மற்றும் ஒளிபரப்பு பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு ஆய்வுகளுக்காக ''இஸ்ரோ'' இதற்கு முதல் 62 செயற்கை கோள்களையும் 37 ரொக்கட்டுக்களையும் விண்வெளிக்கு அனுப்பியது.)

2014 இலங்கையில் ஓய்வூதியம் பெறுவோர் தமது வங்கிக் கணக்குகளின் மூலம் ஓய்வூதியம் பெறும் நடைமுறை அறிமுகம்.

## செப்டம்பர் – 10

1846. எலியாஸ் ஹோப் தையல் இயந்திரத்திற்கான காப்புரிமத்தை பெற்றார்.

1858. 55 பண்டோரா என்ற சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டது.

1898. ஆஸ்திரியாவின் அரசி எலிசபெத் சுவிஸ்சர்லாந்து ஜெனீவா நகரில் வைத்து ''லுயிஜி லூச்சினி'' என்ற தீவரவாதியினால் கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். (பிறப்பு 24.04.1854)

1943 jaffna hindu ladies college ஆரம்பிக்கப்பட்டது

1951. பிரித்தானியா ஈரான் மீது பொருளாதாரத் தடையை விதித்தது.

1967. ஐபிரிய குடாநாட்டின் முனையில் ஜப்ரல்டார் நீரிணையில் அமைந்துள்ள கிப்ரல்டார தேசிய தினம்.

1983. மகாத்மா காந்தி பற்றிய ஆவணப்படத்தை முதன் முதலில் தயாரித்த ஏ.கே. செட்டியார் இறப்பு (பிறப்பு 03.12.1911).

1988. ஏழாவது முறையாக சிங்கப்பூர் பிரதமராக லீ குவான் யு பதவியேற்பு.

1988. இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்து தமிழ் மாநிலம் அமைக்கப்பட்டது.

1989. இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படை அனைத்தும் 31 டிசம்பருக்கு முன் வாபஸ் பெறப்படும் என்ற ஒப்பந்தம் இந்திய - இலங்கை அரசுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது.

2002. சுவிஸ்சர்லாந்து ஐக்கிய நாடுகளில் இணைந்து கொண்டது.

2008. சர்வதேச கிரிக்கெட் சபையினால் ஐந்தாவது Icc Awards விருது வழங்கும் நிகழ்வு ஐக்கிய எமிரேட்ஸ் தலைநகர் டுபாயில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JFL

**செப்டம்பர் – 11**

1609. ஹென்றி ஹட்சன் "மான்ஹட்டன்" தீவை கண்டுபிடித்தார்.

1893. முதலாவது உலக சமய நாடாளுமன்ற மாநாடு சிக்காக்கோவில் ஆரம்ப மாகியது.

1921. கவிஞர், எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர், விடுதலைவீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதியான மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இறப்பு (பிறப்பு 11.12.1882).

1948. இந்தியா பிரிக்கப்பட்டு பாகிஸ்தான் என்ற தனிநாடு பிறந்த பின் பாகிஸ்தான் நாட்டு தந்தை என்றழைக்கப்படும் முகம்மது அலி ஜின்னா இறப்பு (பிறப்பு 27.12.1876).

1957. தாலித் மக்களின் உரிமைக்காக போராடிய தலைவர் இம்மானுவேல் சேகரன் இறப்பு (பிறப்பு 09.10.1924).

1993. சீன தடகள ஓட்ட வீராங்கனை கியு யங்சியா (Qu Yunxia) சீன பீஜிங் நகரில் நடைபெற்ற Chinnes National போட்டியில் 1500m ஓட்டத்தினை 3:50:46 விநாடிகளில் கடந்து சாதனை.

2001. ஐக்கியஅமெரிக்கா நியுயோர்க் நகரின் மன் ஹட்டன் தீவுப் பகுதியில் கம்பீரமா காட்சியளித்த உலக வர்த்தக மையத்தின் வடக்கு மற்றும் தென் பகுதியில் ஓசாமா பின்லாடன் தலைமை யிலான அல்கொய்தா அமைப்பினர் விமானத்தைக் கொண்டு தாக்குதல் நடத்தியதில் இரண்டு மணி நேரத்தில் புகை மண்டலத்துக்கு இடையே 110 மாடிகளை கொண்ட இரட்டைக் கோபுரங்கள் சரிந்ததோடு ஏறத்தாழ 3000 பேர் வரை இறந்தனர்.

2007. முதலாவது சர்வதேச T20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் தென்னாபிரிக்காவில் கோலாகலமாக ஆரம்பம்.

2012. புற்றுநோயிலிருந்து மீண்டதன் பின்னர் தனது முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் இந்திய துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங் பங்கேற்பு. நியுசிலாந்து அணிக்கெதிரான இப்போட்டியில் இந்திய அணி 1 ஓட்டத் தினால் தோல்வியடைந்தது.





லண்டன் நகரத்தின் தோற்றம் பாய்மர படகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செப்டம்பர் – 12** ✱ 490.கிமு. கிரேக்கம் மரதன் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் பாரசீகத்தை தோற்கடித்து ''பிடிப்பிடஸ்'' என்ற கிரேக்க வீரன் இவ் வெற்றிச் செய்தியை தெரிவிக்க நெடுந்தூரம் ஓடினான் (மரதன் ஓட்டப் போட்டிக்கு இதனாலேயே இப் பெயர் சூட்டப்பட்டது)

1912 இந்திய அரசியல் ஞானி இராராஜி பிறப்பு (24.12.1972)

1974. ஆபிரிக்கா கண்டத்திலே மூன்றாவது பெரிய மக்கள் தொகையைக் கொண்ட நாடான எதியோப்பியா தேசிய தினம்.

1977. தென்னாபிரிக்காவின் நிறக்கொள்கைக்கெதிராக போராடிய ஸ்டீவ் பைக்கோ பொலிஸாரின் காவலில் இருந்த போது கொல்லப்பட்டார்.

1970. சந்திரனிலிருந்து முதன் முதலில் விண்கற்கள் கொண்டுவந்த விண்கலம் லூனா - 16 சந்திரனில் தரை இறங்கியது.

1980. துருக்கியில் இராணுவப் புரட்சி ஆரம்பம்.

1988. யாழ்ப்பாண மாநகர சபையின் தற்காலிக கட்டடமான நல்லூர் கோவில் பண்டார குளம் காணியில் அமைக்கப்பட்ட பொது நூலகம் திறக்கப்பட்டது.

2011. சர்வதேச கிரிக்கெட் சபையினால் எட்டாவது Icc Awards விருது வழங்கும் நிகழ்வு இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நடைபெற்றது.

**செப்டம்பர் – 13**

1814. அமெரிக்க தேசிய கீதம் முதன் முதலாக பாடப்பட்டது.

1949. இலங்கை, இத்தாலி, பின்லாந்து, ஐஸ்லாந்து, ஜோர்தான் ஆகிய நாடுகள் ஐ.நாவில் உறுப்புரிமை பெறுவதை நிறுத்த சோவியத் ஒன்றியம் தனது தடை அதிகாரத்தைப் பயன்படுத்தியது.

1993. பலஸ்தீனமும் இஸ்ரேலும் அமெரிக்காவில் சமாதான உடன்படிக் கையை செய்து கொண்டன.

2012. ஐக்கிய அமெரிக்க வாஷிங்டன் நகரில் உள்ள தேசிய கதீட்ரல் தேவால யத்தில் நடந்த சிறப்புப் பிரார்த்தனையைத் தொடர்ந்து 25.08.2012ல் இறந்த சந்திரனில் முதல் காலடி வைத்த பெருமையை பெற்றவரான நீல் ஆம்ஸ்ரோங் உடல் கடலில் அடக்கம் செய்யப்பட்டது.

2012. இங்கிலாந்து தலைநகர் லண்டனில் அமைந்துள்ள உலகப் புகழ் பெற்ற பிக் பென் கோபுரத்திற்கு எலிசபெத் ராணியின் பெயர் சூட்டப்பட்டது.

**செப்டம்பர் – 14**

1752. பாப்பரசர் கிரிகோரியன் நாட்காட்டியை பிரித்தானியர் ஏற்றுக் கொண் டனர். இதன் படி புதிய நாட்காட்டியில் 11 நாட்களை அது இழந்தது. இதன்படி முன்னைய நாள் செப்டம்பர் 3 ம் திகதி ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1853. இலங்கை தேசிய தலைவர் சேர். பொன்னம்பலம் அருணாசலம் பிறப்பு (இறப்பு 09.01.1924).

1917. ரஷ்யா அதிகாரபூர்வமாக குடியரசாகியது.

1960. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (OPEC) உருவாக்கப்பட்டது.

1981. உலகிலேயே மிக வேகமாகச் செல்லும் ''புல்லட் ரயில்'' பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் விடப்பட்டது.

1999. யுனெஸ்கோவினால் இலங்கையின் சமாதான நகரமாக திருகோண மலை அறிவிக்கப்பட்டது.

2005. தமிழ் நாட்டு அரசியல் கட்சியான தேசிய முற்போக்கு திராவிடக்கழகம் (தே.மு.தி.க) விஜயகாந் தலைமையில் மதுரையில் தொடங்கப்பட்டது.

2013. கிளிநொச்சி வரையிலான புகையிரத பாதை மீளநிர்மாணம் செய்யப்பட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**செப்டம்பர் – 15** ✸ அனைத்துலக மக்களாட்சி தினம் - ஜனநாயகத்தை ஊக்குவிக்கும் முகமாகவும் அபிவிருத்தி செய்யவும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரம் போன்றவற்றிற்குரிய கௌரவத்தை கொடுக்கும் முகமாக கொண்டாடப்படுகின்றது.

1821. மத்திய அமெரிக்காவில் உள்ள நாடுகளான கோஸ்ட்டாரிக்கா, எல்சல்வடோர், குவாத்தமாலா, ஹொண்டுராஸ் மற்றும் நிக்கராகுவா எசுப்பானியாவிடமிருந்து விடுதலையடைந்தது.

1916. உலகிலேயே முதல் முறையாக பிரிட்டிஷ் இராணுவம் பீரங்கி ஆயுதத்தை பயன்படுத்த ஆரம்பித்தது.

1928. அலெக்சாண்டர் பிளெமிங் ''பென்சிலின்'' மருந்தை கண்டுபிடித்தார்.

1950. தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்த மறைமலை அடிகள் இறப்பு (பிறப்பு15.07.1876).

1981. இந்திய தமிழ் நாட்டு பல்கலைக்கழகங்களில் ஒன்றான தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம் ஆரம்பம். (26-9-1987ல் இறப்பு)

1987. இந்திய அமைதிப்படைக்கு எதிராக திலீபன் என்றழைக்கப்படும் ''பார்த்திபன் இராசையா'' உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

1998. இலங்கைத் தமிழருக்கெதிரான இனக்கலவரம் 1998ஆம் ஆண்டு இலங்கை தென்பகுதி முழுவதும் தமிழர்கள் தாக்கப்பட்டனர்.

2000. 27வது ஒலிம்பிக் போட்டிகள் அவுஸ்திரேலியா சிட்னி நகரில் கோலா கலமாக ஆரம்பம். 01.10.2000வரை நடைபெற்ற இப் போட்டியில் ஐக்கிய அமெரிக்க 37 தங்கம், 24 வெள்ளி, 33 வெண்கலமாக மொத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முதலிடத்தையும் ரஷ்யா 32 தங்கம், 28 வெள்ளி, 29 வெண்கலம் உட்பட மொத்தம் 89 பதக்கங்களையும் சீனா 28 தங்கம், 16 வெள்ளி, 14 வெண்கலம் உட்பட மொத்தம் 58 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன.

2007. இந்தியத் தமிழ் நாடுச் சென்னையை தலைமையகமாகக் கொண்டு கலைஞர் தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவை ஆரம்பிக்கப்பட்டது.

2010. தமிழக மக்களால் "அண்ணா" என அழைக்கப்படும் முன்னாள் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு C.N. அண்ணாத்துரை அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழக முதலமைச்சர் டாக்டர் மு.கருணாநிதி அவர்களால் அண்ணா நூற்றாண்டு நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

2012. சர்வதேச கிரிக்கெட் சபையினால் ஒன்பதாவது Icc Awards விருது வழங்கும் நிகழ்வு இலங்கை தலைநகர் கொழும்பில் நடைபெற்றது.

2012. யாழப்பாண புற்று நோய் வைத்தியசாலைக்கு தெல்லிப்பளையில் அடிக்கல் நாட்டல். (19.01.2014 இல் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வினால் திறப்பு)

2013 கொழும்பு-கிளிநொச்சி புகையிரத சேவை 24 வருடங்களின் பின்னர் ஆரம்பம்.

**செப்டம்பர் – 16** ✱ உலக ஓசோன் பாதுகாப்பு தினம்

1810. வட அமெரிக்கக் கண்டத்திலுள்ள ஒரு கூட்டாச்சி அரசமைப்புக் குடியரசு நாடான மெக்சிக்கோ எசுப்பானியாவிடமிருந்து விடுதலை அடைந்தது.

1852. லண்டனில் மன்செஸ்டர் நகரில் உலகின் முதலாவது இலவச நூல் நிலையம் அமைக்கப்பட்டது.

1889. உலகில் முதல் முறையாக பெண் ஜெட் விமானிகளாக இந்தியப் பெண்கள் பணியாற்றினார்கள். விமானிகளாக செலிதாமினி தேஸ்முக் மற்றும் நிவேகிதா பாஸின் ஆகிய இரு பெண் விமானிகள் 126 பயணி களுடன் கோவாவிற்கு சென்றனர்.

1916. இந்தியாவின் புகழ்பெற்ற கர்நாடக இசைப்பாடகி M.S. சுப்புலட்சுமி பிறப்பு (இறப்பு 11.12.2004).

1963. மலாயா, சிங்கப்பூர், போர்ணியோவின் சாபா, சரவாக் ஆகியன இணைந்து மலேசியா உருவாக்கப்பட்டது.

1975. பாப்புவா, நியூகினியா ஆவுஸ்திரேலியாவிடமிருந்து சுதந்திரமடைந்தது.

1987. ஓசோன் படலத்தை பாதுகாக்கும் பிரகடனம் மொண்ட்றியஸ் நகரில் கைச்சாத்திடப்பட்டது. (மொன்றியஸ் ஒப்பந்தம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000. இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் M.H.M. அஷரப் உலங்கு வானூர்த்தி விபத்தில் கொல்லப்பட்டார் (பிறப்பு 23.10.1948).

2002. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரம சிங்க அரசுக்கு மிடையே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுவார்த்தை தாய்லாந்தின் சட்டாஹிப் நகரில் ஆரம்பமாகியது.

2002. அரசுக்கும் தமிழிழ விடுதலைப் புலிகளுக்குமிடையேயான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 3 நாள் பேச்சுவார்த்தை தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்கொக்கில் நோர்வே நாட்டின் தூதுக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்ரன் பாலசிங்கமும் திருமதி அடேல் அன்ரன் பாலசிங்கமும் கலந்து கொண்டனர்.

2007. சர்வதேச T20 கிரிக்கெட் போட்டி வரலாற்றிலே முதன்முறையாக ஆவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் பிரெட் லீ பங்களா தேஷ் அணிக்கு எதிரான போட்டியில் தொடர்ந்து மூன்று வீரர்களை ஆட்டமிழக்கச் செய்து ''ஹட்ரிக்'' சாதனை.

2009. இந்திய தமிழக பேச்சாளர் மற்றும் எழுத்தாளரான தென்கச்சி கோ. சுவாமிநாதன் இறப்பு.

2010. இலங்கையின் இறுதி கட்ட யுத்தத்தின் (2009) போது இடம் பெற்றவை என கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடு நிபுணர்கள் விசாரணைக் குழுவை ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூன் நியமித்தார்.

## செப்டம்பர் – 17

1858. ஆழ்கடல் தொலைத்தந்திச் சேவை இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது.

1879. திராவிடக் கழகத்தலைவர் பெரியார் ஈ.வே. இராமசாமி பிறப்பு (இறப்பு 24.12.1973).

1906. இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி J.R. ஜயவர்த்தனா பிறப்பு (இறப்பு 01.11.1996).

1949. E.V. இராமசாமியாரால் தொடங்கப்பட்ட திராவிடக் கழகத்திலிருந்து C.N. அண்ணாத்துரையும் வேறு சில தலைவர்களும் கருத்து வேறுபாடு காராணமாக பிரிந்து பவளக்காரர் தெரு ஜார்ஜ்டவுண் சென்னையில் திராவிடர் முன்னேற்றக் கழக (தி.மு.க) கட்சியினை தொடங்கினார்.

1950 இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிறப்பு.

1956 அவுஸ்திரேலியாவில் முதல்முதலாக தொலைக்காட்சி காண்பிக்கப் பட்டது.

1957 ஐக்கிய நாடுகளில் சபையில் மலேசியா இணைந்து கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1959. இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கு. வன்னிய சிங்கம் இறப்பு (பிறப்பு 03.10.1911).

1982. இலங்கை முதலாவது அரசுத் தலைவர் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் கொழும்பு மாநகரசபை மண்டபத்தில் காலை 8.00மணி முதல் 11 மணி வரை தேர்தல் ஆணையாளர் திரு.சந்திரானந்த டிசில்வா அவர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினூடாக ஆறு வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்தன.

1988. 24வது ஒலிம்பிக் போட்டிகள் தென்கொரியா சியேல் நகரில் கோலா கலமாக ஆரம்பம். 02.10.1988 வரை நடைபெற்ற இப்போட்டியில் சோவியத் யுனியன் 55 தங்கம், 31 வெள்ளி, 46 வெண்கலமாக மொத்தம் 132 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப் பட்டியலில் முதலிடத் தையும் கிழக்கு ஜேர்மனி 37 தங்கம், 35 வெள்ளி, 30 வெண்கலம் உட்பட மொத்தம் 102 பதக்கங்களையும் ஐக்கியஅமெரிக்கா 36 தங்கம், 31 வெள்ளி, 27 வெண்கலம் உட்பட மொத்தம் 94 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப் பட்டியலில் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன.

2004. இந்தியாவில் தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

2009. இலங்கை தொலைக்காட்சி சேவையான Siyatha Tv மற்றும் Vettri Tv ஆரம்பிக்கப்பட்டது.

2014 இலங்கை கொழும்புத் துறைமுக நகர் கட்டுமான பணிகள் இலங்கை சீன ஜனாதிபதிகளினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 15 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு.

## செப்டம்பர் – 18

1502. கிறிஸ்தோபர் கொலம்பஸ் தனது நான்காவதும் கடைசியுமான கடற் பயணத்தின் போது கொஸ்டாரிக்காவில் தரையிறங்கினர்.

1709 ஆங்கிலத்தில் முதன் முதலில் (Dictionary) எனப்படும் அகராதியை உருவாக்கியவரான சாமுவேல் ஜோன்சன் பிறப்பு.

1809. லண்டனில் ரோயல் ஒப்பரா மாளிகை திறக்கப்பட்டது.

1810. சிலியில் முதலாவது அரசு அமைக்கப்பட்டது.

1919. நெதர்லாந்தில் முதல்முதல் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1968. இந்திய உளவுத்துறை "றோ" அமைப்பு உருவாக்கம்.

1978. பிரபல பகுத்தறிவுவாதியான ஆபிரகாம் தோமஸ் கோவூர் இறப்பு (பிறப்பு 10.04.1898).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991. போதை மருந்து கடத்திய குற்றச்சாட்டுக்காக ஆர்ஜென்டினாவின் முன்னனி கால்பந்தாட்ட வீரர் மரடோனாக்கு இத்தாலி அரசு சிறைத் தண்டனை விதித்தது.

2012. நான்காவது சர்வதேச T20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இலங்கையில் கோலாகலமாக ஆரம்பம்.

**செப்டம்பர் – 19**

1893. நியூசிலாந்து பெண்களிற்கு வாக்குரிமை வழங்கியது. அத்தோடு பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய முதலாவது நாடு என்ற பெருமை யையும் பெற்றது.

1893. சைவ சமயத்தின் முன்னோடியான சுவாமி விவேகானந்தர் சிக்காக் கோவில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் உலகப் புகழ்பெற்ற சொற் பொழிவை நிகழ்த்தினார்.

1945. இந்தியாவுக்கு சுதந்திரம் அளிப்பதாக பிரிட்டிஷ் அரசு வாக்குறுதி அளிப்பு.

1957. ஐக்கிய அமெரிக்க நிலத்துக்கடியில் தனது முதலாவது அணுகுண்டை பரிசோதனை செய்தது.

1965. அமெரிக்க விண்வெளி வீராங்கனையும், விண்வெளியில் பயணம் செய்த பெண்களில் அதிக நேரம் விண்வெளியில் பயணம் செய்த சாதனையை (195நாட்கள்) கொண்டவரும் மற்றும் கப்பல்படை அதிகாரியுமான சுனிதா வில்லியம்ஸ் பிறப்பு.

1968. போட்டோக் கொப்பி இயந்திரத்தைக் கண்டுபிடித்த செஸ்டர் கார்ல்சன் நியுயோர்க நகரில் இறப்பு.

1980. தமிழிசை நாடக கலைஞர் K.P. சுந்தராம்பாள் இறப்பு (பிறப்பு 10.10. 1908).

1983. அமெரிக்க கண்டத்தில் கரிபியக் கடலில் இரு தீவுகளை முதன்மை நிலப்பகுதியாக கொண்ட நாடான ''செயின்ட்கிட்ஸ் நெவிஸ்'' ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

2014 பிரித்தானியாவிடமிருந்து தனிநாடாக ஸ்கொட்லாந்து இயங்கு வதற்கு மக்களிடையே நடாத்தப்பட்ட வாக்களிப்பில் 55% மக்கள் எதிர்ப்பு தெரிவிப்பு.

**செப்டம்பர் – 20**

1519. போர்த்துக்கீச மாலூமியான பேர்டினண் மகலன் 270 பேருடன் ஸ்பெயின் நாட்டின் சான்லூகர்டி பரமேடா என்ற இடத்திலிருந்து உலகைச் சுற்றிவர புறப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1872. களனி நதி மீதான 244m (800 அடி) நீளமான பாலத்தின் ஒரு பகுதி பெய்த மழையின் காரணமாக தொடர் வண்டி என்ஜின் ஒன்றுடனும் அதன் பணியாளர் குழுவுடனும் முறிந்து வீழ்ந்தது. பின்னர் அப்பாலம் 1902ல் புணரமைக்கப்பட்டது.

1878. சென்னையை தலைமையிடமாகக் கொண்டு பிரசுரிக்கப்படும் ஆங்கில மொழி செய்தித்தாளான "The Hindu" இதழ் வெளியிடப்பட்டது.

1933. பெண் விடுதலைக்கு போராடிய அன்னி வுட் பெசண்ட் அம்மையார் இறப்பு (பிறப்பு 01.10.1847)

1982. சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டி வரலாற்றிலே முதன் முறையாக பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர் ஜலில் உட் டின் (Jalah-Ud-Din) ஆவுஸ்ரேலியாவுக்கு எதிரான போட்டியில் தொடர்ந்து மூன்று வீரர்களை ஆட்டமிழக்கச் செய்து ''ஹட்ரிக்'' சாதனை.

1989. இந்திய அமைதிப்படை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிரான சகல நடவடிக்கைகளையும் நிறுத்த முடிவு.

1932. மகாத்மா காந்தி புனே சிறையில் உண்ணா நோன்பை ஆரம்பித்தார்.

2010. ஐக்கியநாடுகள் சபையின் 65வது உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான குழுவினர் ஐக்கிய அமெரிக்க தலைநகர் நியூயோர்க் நகருக்கு பயணம்.

**செப்டம்பர் – 21** ✱ உலக அமைதி (சமாதான) தினம் (International Day of Peace) - ஐக்கியநாடுகளின் பொது அவையின் பிரகடனத்தின் மூலம் அனைத்து ஐக்கியநாடுகளின் உறுப்பு நாடுகளிலும் கொண்டாடப்படுகின்றது.

1792. பிரான்சில் முடியாட்சி அகற்றப்பட்டு குடியரசு அமைக்கப்பட்டது.

1921 உலக நாடுகளின் சங்கம் அனைத்துலக அறிவுசார் ஒத்துழைப்புக்காக ஆணைக்குழு ஒன்றை உருவாக்க தீர்மானம் எடுத்தது. இதன் விளைவே யுனஸ்க்கோ தோற்றமாகும்.

1940. 12வது ஒலிம்பிக் போட்டிகள் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற இருந்தது ஆனால் இரண்டாம் உலகப் போரின் காரணமாக போட்டிகள் அனைத்தும் நடைபெறவில்லை.

1964. தெற்கு ஐரோப்பாவில் மத்திய தரைக்கடலில் அமைந்துள்ள மக்கள் தொகை அடர்த்தி கூடிய தீவான ''மோல்ட்டா'' ஐக்கியஇராச்சியத் திடமிருந்து சுதந்திரமடைந்தது.

1981. மத்திய அமெரிக்காவில் ஆங்கிலம் பேசும் ஒரே நாடான ''பெலீசு'' ஐக்கியஇராச்சியத்திடமிருந்து சுதந்திரமடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவில் முதல் சோதனைக்குழாய் குழந்தை பெய்ஜிங் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் பிறப்பு.

1989. இலங்கையின் மனித உரிமை செயற்பாட்டாளரும், பெண் உரிமை செயற்பாட்டாளருமான ராஜினி திரணகம யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார் (பிறப்பு 23.02.1954).

1991. ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் எல்லையில் காக்கசஸ் மலைத் தொடரில் அமைந்த நாடான "ஆர்மீனியா குடியரசு" சோவியத் ஒன்றியத்திடமிருந்து சுதந்திரமடைந்தது.

2001. தமிழக முதல்வராக ஓ. பன்னீர்செல்வம் பதவியேற்பு. (24.2.2002 வரை)

2008. இலங்கையின் நான்காவது ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க இறப்பு (பிறப்பு 15.02.1916).

2012. உலகக்கிண்ண T20 போட்டியில் பங்களாதேஷ் அணிக்கெதிராக நியுசிலாந்து அதிரடித் துடுப்பாட்ட வீரர் பிரண்டன் மக்கலம் (Brendon Mccullum) 58 பந்துகளை எதிர்கொண்டு 123 ஓட்டங்களைப் பெற்று தனிநபர் பெற்ற அதிகூடிய ஓட்டமாக T20 வரலாற்றில் சாதனை.

2013. வடக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தல் நடைபெற்றது. இதில் தமிழ் தேசிய கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றது. அதிகூடிய வாக்குகளால் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் வெற்றியிட்டினார். இவரே முதலமைச்சராவர்.

## செப்டம்பர் – 22

1499. நிலப்பகுதிகளாலும் ஆல்ப்ஸ் மலையாலும் சூழப்பட்ட மத்திய ஐரோப்ப நாடான சுவிஸ்சர்லாந்து விடுதலை பெற்று தனி நாடாகியது.

1908. ஐரோப்பாவின் தென் கிழக்கே அமைந்துள்ள "பல்கோரியா" உதுமானிய பேரரசிடமிருந்து விடுதலையடைந்தது.

1960. மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ளதும் மற்றும் ஆபிரிக்காவில் பெரிய நாடானதுமான "மாலி" பிரான்சிடமிருந்து விடுதலை யடைந்தது.

1980. ஈராக் இராணுவம் ஈரான் மீது போர் தொடுத்தது

1981. மணிக்கு 270 கிலோமீட்டர் வேகத்தில் செல்லும் D.G.V அதிவேக ரயில் பிரான்ஸ் தலைநகர் பாரிஸிலிருந்து லியான்ஸ்க்கு பயணம்.

## செப்டம்பர் – 23

'99 இலங்கையில் அரச ஆணைப்படி சித்திரவதை மற்றும் கொடுரமான தண்டனைகள் நிறுத்தப்பட்டன. மத சுதந்திரம் அமுலுக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1846. நெப்டியூன் கோள் பிரெஞ்சு வானியலாளர் உர்பெயின் ஜோசப் மற்றும் பிரித்தானிய வானியலாளர் ஜோன் அடம்ஸ் ஆகியோரால் கண்டு பிடிக்கப்பட்டது

1932. அரேபியக் குடாநாட்டின் மிகப் பெரிய நாடான சவூதி அரேபியா தேசிய தினம்.

1941. ஐக்கிய நாடுகள் அவையின் மன்றத்தின் மனித உரிமைக்கான ஆணை யாளர் மற்றும் முன்னாள் தென்னாபிரிக்க நீதிபதி நவநீதம்பிள்ளை பிறப்பு.

1964 சிவயோகர் சுவாமி மறைவு (29.05.1872)

1965. காஷ்மீர் பிரச்சனையை மையமாக வைத்து இந்திய பாகிஸ்தான் போர் ஆரம்பம்.

1986. இலங்கையின் கொழும்பில் தேசிய இயற்கை வரலாற்று நூதனசாலை பொது மக்களுக்கு திறந்து விடப்பட்டது.

2010. விளையாட்டுக்களை நேரடியாகவும் மறுஒளிபரப்பாகவும் 24 மணி நேரமும் ஒளிபரப்புச் செய்யும் **Ten Action** தொலைக்காட்சி சேவை முதல் ஒளிபரப்பினை ஆரம்பித்தது. இத்தொலைக்காட்சி பெரும் பான்மையாக கால்பந்தாட்டத்தையே ஒளிபரப்புச் செய்கின்றது.

## செப்டம்பர் – 24

1840. இலங்கை வங்கி அமைக்கப்பட்டது.

1898. இணுவிலில் பெண்களுக்கான மற்லியோட் மருத்துவமனையை அமெரிக்க மிஷன் நிறுவியது.

1948. மோட்டார் வாகன கைத்தொழிலின் முன்னோடியான "ஹொண்டா" நிறுவனம் அமைக்கப்பட்டது.

1973. மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ளதும் ஆபிரிக்கா கண்டத்திலே மிகச் சிறி நாடான "கினி-பிசாவு" நாட்டின் தேசிய தினம்.

2006. தென்னிந்திய பிரபல நடிகையும் நாட்டிய பேரொளி எனப்பெயர் பெற்றவருமான பத்மினி இராமச்சந்திரன் இறப்பு (பிறப்பு 12.06.1932).

2007. முதலாவது சர்வதேச T20 உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டி தென்னாபிரிக்கா ஜெகனஸ் பேர்க் மைதானத்தில் பாகிஸ்தான் - இந்திய அணிகள் மோதல். முதலில் துடுப்பெடுத் தாடிய இந்திய அணியினர் 20 ஓவர்கள் நிறைவில் 5விக்கெட்டுக் களை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றனர். வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியினர் 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்கள் மாத்திரமே பெற்றதினால் இந்திய அணியினர் 5 ஓட்டங் களினால் வெற்றி பெற்று முதலாவது சர்வதேச T20 உலகக் கிண்ணத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவீகரித்துக் கொண்டனர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இர்பான் பதான் தெரிவானார்.

**செப்டம்பர் – 25**

1690. அமெரிக்காவின் முதலாவது தினசரிப் பத்தரிகையாக பப்ளிக் ஆக்யூரஸ்'' வெளியிடப்பட்டது.

1959. இலங்கையின் முன்னாள் பிரதமர் S.W.R.D. பண்டாரநாயக்க, சோமதேர என்ற பிக்குவினால் சுடப்பட்டு படுகாயமடைந்து அடுத்த நாள் இறந்தார்.

1962. அல்ஜீரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்கப்பட்டது.

2014 உலக மருந்தாளர் தினம் 2010ம் ஆண்டிலிருந்து அனுஷ்டிக்கப்படுகிறது. இலங்கையில் முதல்முதலாக 2014லிருந்து அனுஷ்டிக்கப்படுகிறது

**செப்டம்பர் – 26**

1890. கர்நாடக இசையில் பல இராகங்களில் 2500க்கும் அதிகமான கீர்த்தனை களை இயற்றி புகழ் சமைத்த இசை அறிஞர் பாபநாசம் சிவன் பிறப்பு (இறப்பு 10.10.1973).

1932. இந்தியாவின் 14வது பிரதமர் மன்மோகன் சிங் பிறப்பு.

1947. இலங்கை சுதந்திரமடைந்தபோது நிதியமைச்சராக பதவி வகித்தவர் J.R. ஜெயவர்த்தன அவர்கள் ஆவார்.

1947. இலங்கையின் முதலாவது சுகாதார கல்வி இராசாங்கம் அமைச்சர் EA Nugawela ஆவார். ஐ.தே.கட்சியை சேர்ந்தவர் - 1947 - 1953

1954. கவி மணி தேசிக விநாயகம்பிள்ளை இறப்பு (பிறப்பு 27.08.1876).

1959. இலங்கையின் 4வது பிரதமர் S.W.R.D. பண்டாரநாயக்க முதல் நாள் சுடப்பட்டு படுகாயமடைந்த நிலையில் இறப்பு (பிறப்பு 08.01.1899).

1959. இலங்கையின் 5வது பிரதமராக விஜயானந்த தஹநாயக்க பதவியேற்பு (21.3.1960 வரை)

1981. பிரபல அமெரிக்க டெனிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் பிறப்பு.

1984. ஐக்கியஇராச்சியம் ஹொங் ஹொங்கை சீனாவிடம் கையளிக்க ஒப்புக் கொண்டது.

1987. தமிழீழ விடுதலைப் புலிகளின் லெப்டினன் கேணல் யாழ் மாவட் அரசியல் துறைப் பொறுப்பாளர் திலீபன் என்று அழைக்கப்படும் பார்த்திபன் இராசையா இந்திய அமைதிப் படையிடம் ஐந்து கோரிக்கை களை முன்வைத்து நீரும் அருந்தா உண்ணா நோன்பு இருந்து உயிரிழப்பு (பிறப்பு-27.11.1963).

1990. தமிழீழ விடுதலைப் புலிகளால் யாழ்ப்பாண கோட்டை இலங்கை இராணுவத்தினரிடமிருந்து கைப்பெற்றப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007. ஐக்கிய நாடுகள் சபையில் தமிழ் கூட்டமைப்பையும் ஐக்கிய தேசிய முன்னணியும் ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்ற இருந்த நேரம் Blood Brothers எனும் இரத்தச் சகோதரர்கள் அறிக்கையை வெளியிட்டனர். கூட்டம் நடைபெறவில்லை.

2007. ஐக்கிய நாடுகள் சபையில் 61வது கூட்டத்தொடரில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிங்கள மொழியில் உரையாற்றினார். இவரே சிங்கள மொழியில் முதன் முதலாவதாக உரையாற்றியவராவார்.

**செப்டம்பர் – 27** ✱ உலக சுற்றுலா தினம் (World Tourism Day) - சுற்றுலா வின் முக்கியத்து வத்தை உலகமெங்கும் எடுத்துக் காட்டவும் சுற்றுலா எப்படி மக்களின் சமூக கலாசார அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை எடுத்துக்காட்ட கொண்டா டப்படுகின்றது.

1821. வட அமெரிக்கக் கண்டத்திலுள்ள ஒரு கூட்டாச்சி அரசமைப்புக் குடியரசு நாடான மெக்சிக்கோ ஸ்பெயினிடமிருந்து விடுதலையடைந்தது.

1825. ஜோர்ஜ் ஸ்டீபன்சன் வடிவமைப்பில் உருவான உலகின் முதலாவது நீராவி ரெயில் இங்கிலாந்திற்கும் ஸ்டாக்டன் டார்விங்டன் நகருக்கும் இடையே சேவைக்கு விடப்பட்டது.

1905. கணிதவியலாளர் லெபேர்ட் ஐன்ஸ்டைன் முதற் தடவையாக $E=MC^2$ என்ற சமன்பாட்டை அறிமுகப்படுத்தினார்.

1933. தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகரும் நகைச்சுவையிலும் குணச் சித்திர நடிப்பிலும் பல சாதனைகள் படைத்தவரும் மற்றும் 1000 திரைப்படங்களுக்கு மேல் நடித்த பெருமைக்குரியவரான நாகேஷ் பிறப்பு (இறப்பு 31.01.2009).

1998. இலங்கை அரச படையினரால் கைப்பற்றப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய நகரான கிளிநொச்சியை மீளக் கைப் பற்றும் நோக்குடன் தமிழீழ விடுதலைப் புலிகளால் திட்டமிட்டு நடத்தப்பட்ட வலிந்த இராணுவ நடவடிக்கையான ''ஓயாத அலைகள் இரண்டு'' போர் ஆரம்பிக்கப்பட்டது. 29.09.1999 வரை நடைபெற்ற இப்போரில் தமிழீழ விடுதலைப்புலிகள் கிளிநொச்சி நகரை மீளக் கைப்பற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செப்டம்பர் – 28**

1795. யாழ்ப்பாணத்தை ஜெனரல் ஸ்டுவர்ட் தலைமையிலான பிரித்தானியாப் படைகள் கைப்பற்றினர்.

1835 சீரடி சாயி பாபா தோற்றம் (இறப்பு 15.10.1918)

1895 நுண்ணுயிரியலின் தந்தை என அழைக்கப்படும் பிரெஞ்சு அறிவியலாளர் லூயி பாஸ்டர் இறப்பு தான் கண்டுபித்த தடுப் பூசி மருந்தை விசர்நாய் ஒன்றினால் கடிக்கப்பட்ட 9 வயதுச் சிறுவனுக்கு ஏற்றி வெற்றிகரமாக சோதனை செய்தார். (பிறப்பு 27.12.1822)

1895. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தற்போதைய கட்டடம் அமைக்கப் பட்டது.

1928. சேர். அலெக்சாண்டர் பிளெமிங் பென்சிலின் மருந்தை கண்டு பிடித்தார்.

1929. இந்தியாவின் மிகப் புகழ் பெற்ற பாடகியும் இசைக்குயில் எனப் போற்றப்படுபவரும் இந்திய குடிமக்களுக்கு வழங்கப்படும் மிக உயர் விருதான பாரத ரத்ன விருதினை பெற்றவருமான லதா மங்கேஸ்கர் பிறப்பு.

1971. 1970ம் ஆண்டு இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைமையிலான இடது சாரிக் கூட்டணி நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதை அடுத்து செனட் சபையை கலைக்கும் தீர்மானத்தை பிரதிநிதிகள் சபையில் கொண்டு வந்து இத் தீர்மானத்தின் மீதான இரண்டாவது வாசிப்பு நிறைவேற்றப்பட்டதையடுத்து "செனட் சபை" தனது கடைசி அமர்வை நடத்தியது.

1978. உரோம கத்தோலிக்க திருச்சபையின் 263வது திருத்தந்தை பாப்பரசர் முதலாம் அருளப்பர் சின்னப்பர் இறப்பு (பிறப்பு 17.10.1912).

1985. உலக சாதனையாக இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 10 பேர் கொண்ட குழு படகில் உலகத்தை 16 மாதங்களில் சுற்றி வந்தனர்.

1988. உணவு, நீராகாரமின்றி மரணித்த தமிழிழ விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திலீபன் அவர்களுக்கு யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் தென்மேற்குப் பக்கத்தில் நினைவுத்தூபி யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் அவர்களால் நிறுவப்பட்டது.

2015 இந்தியாவின் முதலாவது விண்வெளி அவதான செய்மதியான அஸ்ரோசட் ஏவப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செப்டம்பர்** – 29 உலக இருதயதினம் World Hearts day

1833. மூன்று வயதுள்ள இரண்டாம் இசபெல்லா ஸ்பெயின் அரசியாக முடி சூடினார்.

1885. உலகின் முதலாவது மின்சார வண்டியான டிராம் இங்கிலாந்து பிளாக் புல் நகரில் சேவையை ஆரம்பித்தது.

1938. ஜேர்மன் சுடேட்டன் பிரச்சனைக்கு தீர்வு காணும் முகமாக பிரித் தானிய,ஜேர்மனி ஆகிய நாடுகள் மியுனிக் நகரில் ஒன்று கூடின.

1969. இலங்கையில் இலவச கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தியவரும் இலங்கையின் கல்வித்துறையின் தந்தையாக வர்ணிக்கப்படும் வருமான கிறிஸ்தோபர் வில்லியம் விஜயகோன் கன்னங்கரா "C.W.W. கன்னங்கரா" இறப்பு (பிறப்பு-14.10.1884).

**செப்டம்பர்** – 30 சர்வதேச மொழி பெயர்ப்பு தினம் World Translation Day

1882. உலகின் முதலாவது நீர் மின் உற்பத்தி நிலையம் ஐக்கிய அமெரிக்கா வில் அமைக்கப்பட்டது.

1961. உலக வணிகத்தையும் பொருளியல் வளர்ச்சியையும் தூண்டிட 34 நாடுகளால் நிறுவப்பட்ட ஒரு சர்வதேச நிறுவனமான "பொருளியல் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு (OECD) Organisation for Economic Co – Operetion and Development ஆரம்பம்.

1966. முற்றிலும் பிற நாடுகளால் சூழப்பட்ட தென் ஆபிரிக்க நாடான "போட்ஸ்வானா" ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1967. இலங்கை வானொலி சேவை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனமாக பெயர் மாற்றம் பெற்றது

2002. "நானும் தமிழும்" எனும் தலைப்பில் 7மணி 40 நிமிடம் தொடர்ச்சி யாக பேசி "ஷோக்கல்லோ சண்முகம்" எனும் இலங்கையர் சாதனை படைத்தார்.

2003. உலகளாவிய ரீதியில் தன்னார்வலர்களால் விடுதலை மனப் பாங்குடன் ஒருங்கிணைந்து உருவாக்கப்படும் ஓர் இணைய பன்மொழிக் கலைக் களஞ்சியத்திட்டமான "தமிழ் விக்கிப்பீடியா" ஆரம்பிக்கப்பட்டது.

2004 புகழ்பெற்ற சிங்கள திரைப்பட நடிகர் காமினி பொன்சேகா இறப்பு (பிறப்பு 21.03.1936) சினிமாத்துறையில் நடிகராக மட்டுமின்றி தயாரிப் பாளராக இயக்குனராக பாடலாசிரியராக இருந்தவர்

2010. சுமார் 60 ஆண்டுகளுக்குப் பின்னர் பாமர் மசுதி இடிப்பு வழக்குக்கு அகலபாத் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்டோபர்

**அக்டோபர் – 01** ✱ உலக வதிவிட தினம்

✱ உலக சிறுவர் தினம்.

1799. இந்திய புதுக்கோட்டை மன்னர் விஜயரகுநாத தொண்டமானால் வீரபாண்டிய கட்டப்பொம்மன் கைது.

1854. இந்தியாவில் அஞ்சல் துறை ஏற்படுத்தப்பட்டது.

1869- உலகின் முதல் தபால் அட்டை ஆஸ்திரியாவில் வெளியிடப்பட்டது.

1880. முதலாவது மின் விளக்கு தொழிற்சாலை தோமஸ் அல்வா எடிசனால் ஆரம்பிக்கப்பட்டது.

1927. 300ற்கு மேற்பட்ட திரைப்படங்களை நடித்த தென்னிந்திய திரைப்பட நடிகர் சிவாஜி கணேசன் என்று அழைக்கப்படும் சின்னையாப்பிள்ளை கணேசன் பிறப்பு (இறப்பு 21.07.2001).

1983. தமிழிழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் மதிவதனிக்கும் தமிழ் நாட்டில் திருமணம் நடை பெற்றது.

1985. இலங்கையின் கல்வித் துறையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதான கல்வியல் கல்லூரிகள் (College of Education) என்னும் முறைமை அறிமுகம் செய்யப்பட்டது.

1986. 01.08.1981ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்புப் பல்கலைக் கழகக் கல்லூரி கிழக்குப் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப்பட்டது.

1949. சீன மக்கள் குடியரசு தேசிய தினம்.

1953. இந்தியாவின் தென் மாநிலங்களுள் ஒன்றான ஆந்திர மாநிலம் உதய மாகியது. இம் மாநிலம் இந்தியாவின் நான்காவது பெரிய மாநிலமாகும்.

1958. இலங்கை தலைநகர் கொழும்பு துறைமுகம் தேசிய மயமாக்கப் பட்டது.

1960. ஆபிரிக்கா கண்டத்தில் மக்கள் தொகை கூடிய நாடான நைஜீரியா ஐக்கியஇராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1991. தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டைக்காடு இராணுவ காவல் அரண் களை தாக்கி ஆயுதங்களை கைப்பற்றினர்

1992. இலங்கையின் பிரதேச செயலக நிர்வாகக் கட்டமைப்பு 1992ம் ஆண்டு 58ம் இலக்க சட்டத்திற்கமைய ஆரம்பிக்கப்பட்டது.

2001. இந்திய விளையாட்டுத் தொலைக்காட்சி சேவையான Neo Sports Nimbus Communication ஆல் முதல் ஒளிபரப்பு ஆம்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006. இந்திய சென்னை மாநகரிலிருந்து 170கி.மீ. தொலைவில் வங்கக் கடலோரத்தில் அமைந்த இந்திய நடுவண் அரசின் ஒன்றியப் பகுதியான பாண்டிச்சேரி மாநிலத்தின் பெயர் புதுச்சேரி என பெயர் மாற்றம் பெற்றது.

2009. சர்வதேச கிரிக்கெட் சபையினால் ஆறாவது Icc Awards விருது வழங்கும் நிகழ்வு தென்னாபிரிக்க ஜெகனஸ்பேர்க் நகரில் நடைபெற்றது.

2010. இந்திய தமிழ் சினிமா வரலாற்றில் ஆங்கிலத் திரைப்படங்களுக்கு ஒப்பாக சுப்பர் ஸ்டார் ரஜனிகாந் நடிப்பில் எந்திரன் திரைப்படம் திரையிடப்பட்டது. (தமிழ், ஹிந்தி, தெலுங்கு ஆகிய மூன்று மொழி களிலும் வெளிவந்ததோடு மொத்த வருமானமாக 375 கோடியை வசூலித்தது).

**அக்டோபர் – 02** ✱ அனைத்துலக வன்முறையற்ற தினம் (International Day of Non-Violence) - உலகில் வன்முறையை ஒழித்து அமைதியை நிலை நாட்ட மகாத்மா காந்தி அரும் பாடுபட்டதை கௌரவிக்கும் பொருட்டு அவர் பிறந்த நாளை தேர்ந்தெடுத்து கொண்டாடப்படுகின்றது.

1815. இலங்கையில் புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது புகையிர சேவை கொழும்புக்கும் அம்பேபுஸ்வைக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்டது.

1833. இலங்கையின் அரச அதிபர் முறை உருவானது முதலாவது அரச அதிபராக கலக்டராக பதவி வகித்த பேர்சிவல் அக்லன்ட்டைக் பதவி ஏற்றார்.

1869. விடுதலை பெற்ற இந்தியாவின் தந்தை என போற்றப்படும் மகாத்மா காந்தி பிறப்பு. (இறப்பு 02.10.1948).

1870. ரோம நகரை மீண்டும் இத்தாலியுடன் இணைப்பதற்கு ஆதரவாக மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்தனர்.

1903 யாழ்ப்பாணத்தில் SS Jaffna என்ற பயணிகள் கப்பல் தனது வெள்ளோட் டத்தை ஆரம்பித்தது

1904. இந்தியக் குடியரசின் இரண்டாவது பிரதமர் ஸ்ரீலால் பகதூர் சாஸ்திரி பிறப்பு (இறப்பு 11.01.1966).

1941. இரண்டாம் உலகப்போரில் ஜேர்மனி நாசிப்படைகள் மொஸ்கோவுக்கு எதிரான தாக்குதலை ஆரம்பித்தன.

1958. மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடான "கினி" பிரான்சிடமிருந்து விடுதலையடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971. இலங்கை அரசியலமைப்பு மற்றும் சுதந்திர திருத்த சட்டமூலம் 36-1971 (CeylonConstitution and Independence) Amendment Act No36 of 1971) என்ற சட்டமூலத்துக்கு பிரித்தானியாவின் அரச அங்கீகாரம் கிடைத்ததையடுத்து சோல்பரி அரசியலமைப்பு 8வது திருத்தமாக நிறைவேற்றப் பட்டது.

1971. இலங்கையில் சோல்பரி அரசியலமைப்பின் 8ஆம் திருத்தம் கொண்டு வரப்பட்டு செனட் சபை (Senate of Ceylon) கலைக்கப்பட்டது.

1975. இந்திய அரசியல்தலைவரும் தமிழ் நாடு முன்னாள் முதலமைச் சருமான காமராஜர் மாரடைப்பால் இறப்பு (பிறப்பு 15.07.1903).

1980. இலங்கை அரசியல் தலைவர் சேர்.ஜோன் கொத்தலாவல இறப்பு (பிறப்பு 04.04.1897).

2007. ஐஸ்லாந்து நாட்டு பிரதான இராஜதந்திரி பிஜானி வெஸ்ற்மான் உல்லாச பயணியாக வந்து கிளிநொச்சிக்கு சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனை சந்தித்தார்.

**அக்டோபர் – 03** ✱ உலக வசிப்பிட தினம்.

1932. மேற்கு ஆசியாவிலுள்ள மத்திய கிழக்கு நாடான "ஈராக்" பிரித்தானியா விடமிருந்து விடுதலையடைந்தது.

1942. ஜேர்மனி முதன் முதலாக "A2" வகை ரொக்கட்டை பரிசீலித்தது.

1990. கிழக்கு ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு மேற்கு ஜேர்மனியுடன் இணைந்தது.

2001. இலங்கையில் அரசியல் அமைப்பில் 17வது சீர்திருத்தம் பாராளு மன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.

**அக்டோபர் – 04** ✱ உலக விலங்கு தினம் (World Animal Day) - இயற்கை ஆர்வலரும் விலங்குகளின் தெய்வமாக மதிக்கப்படும் வருமான பிரான்சிஸ் அசிசி என்பவரின் வணக்க நிகழ்வு அக்டோபர் 4இல் வருவதால் இந்நாளை உலக விலங்கு தினமாக கொண்டாடுகின்றனர்.

1537 மத்தியு பைபிள் எனப்படும் முதலாவது முழுமையான ஆங்கில விவிலிய நூல் அச்சிடப்பட்டது.

1582. கிரெகொரியின் நாட்காட்டி பாப்பரசர் 13ம் கிரெகொரியால் அறிமுகப் படுத்தப்பட்டது. இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் ஐப்பசி-04க்குப்பின் நேரடியாக ஐப்பசி-15 என நாட்காட்டி மாற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1824. வட அமெரிக்க கண்டத்திலுள்ள கூட்டாச்சி அரசமைப்புக் குடியரசு நாடான மெக்சிக்கோ குடியரசானது.

1957. பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கு எதிராக எதிர்க் கட்சித் தலைவராக இருந்த ஜே.ஆர். ஜயவர்த்தனாவினால் கடவுளின் ஆசிர்வாதம் வேண்டி கண்டி நோக்கி நடைப்பயணம் ஆரம்பிக்கப் பட்டது.

1957. ரஷ்ய முதலாவது செயற்கை ஆளில்லாத செய்மதி ஸ்புட்னிக் - 1 பூமியை சுற்றிவர விண்ணுக்கு அனுப்பியது.

1966. தென்னாபிரிக்காவினால் சூழப்பட்ட நாடான "லெசோத்தா" ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1977 இலங்கையின் 1972 வது அ. அமைப்பு சட்டத்தில் 2வது திருத்தத்தில் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை அங்கீகரிக்கப்பட்டது.

2007. தேசிய ஏர் பூட்டும் விழா முதன் முதலில் நிகலாடியா நாகெல்லாகம வெகரகம வயல் வெளியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

**அக்டோபர் – 05** ✸ உலக ஆசிரியர் தினம் 1994

1895. இலங்கையின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள மன்னார் பகுதியை ஆங்கிலேயர் கைப்பற்றினர்.

1848. மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை டாக்டர். கிறீன் என்பவரால் அமைக் கப்பட்டது. இதுவே யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட முதலாவது டிஸ்பென்சரி ஆகும்.

1944. பிரான்சில் பெண்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர்.

1910. ஐரோப்பியக் கண்டத்தின் தென்மேற்கு பகுதியில் உள்ள நாடான போரத்துக்கல் - குடியரசாகியது.

1978. அரசாங்க சேவையில் நியமனம் பெறும் பெண் உத்தியோகத்தர்கள் சகலரும் 07.02.1978ம் திகதி ஓய்வூதிய திணைக்களத்தின் 42ம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் ஓய்வூதிய உரித்துடைய பதவியில் நியமிக்கப் பட்டனர்.

1987 தமிழிழ விடுதலைப் புலிகள் இந்திய அமைதி காக்கும் படையின ரோடு ஒத்துழையாமையை அறிவித்தனர். இதன் காரணமாக இரு பகுதியினருக்குமிடையில் போர் மூண்டது.

1987. தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் 12 பேர் இந்தியப் படையின் காவலில் இருக்கும் போது நஞ்சருந்தி மரணமானார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அக்டோபர் – 06** ✱ இலங்கையின் ஆசிரியர் தினம்

1889. தோமஸ் அல்வா எடிசன் தனது முதலாவது அசையும் படத்தைக் காண்பித்தார்.

1927. உலகின் முதல் பேசும் படமான ''ஜாஸ் சிங்கர்'' திரையிடப்பட்டது.

1974. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கா அவர்களினால் திறந்து வைக்கப் பட்டது. (இது 1972இல் யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரியாக வட்டுக் கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டது.)

1994 சர்வதேச ஆசிரியர் தினத்தில் இலங்கையில் ஆசிரியர் சேவை உருவாக் கப்பட்டது.

1995. சூரியனுக்கு அடுத்ததாக கோளைத் தன்னகத்தே கொண்ட பெரும் விண்மீன் ''51 பெகாசி'' கண்டறியப்பட்டது.

1995. இலங்கை ஆசிரியர் சேவை சர்வதேச ஆசிரியர் தினத்தில் அங்குரார்ப் பணம் செய்யப்பட்டது.

2010. சர்வதேச கிரிக்கெட் சபையினால் ஏழாவது Icc Awards விருது வழங்கும் நிகழ்வு இந்திய பெங்களூர் நகரில் நடைபெற்றது.

**அக்டோபர் – 07**

1769. ஆங்கிலேய நாடுகள் பயணி கப்டன் ஜேம்ஸ் குக் நியூசிலாந்தைக் கண்டுபிடித்தார்.

1874. யாழ்ப்பாணத்துக்கான தந்தி இணைப்பு அநுராதபுரம் வரை நீடிக்கப் பட்டது.

1942. அமெரிக்கா பிரித்தானியா ஆகிய நாடுகள் ஐக்கியநாடுகள் சபையை ஆரம்பிக்கப் போவதாக அறிவிப்பு.

1949. ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு உருவாக்கப்பட்டது.

1950. சீனா திபெத்து மீதான தாக்குதலை ஆரம்பித்தது.

1952. ரஷ்யா முன்னாள் அதிபர் விளாடிமீர் புட்டின் பிறப்பு.

2012. அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சர்வதேச கிரிக்கெட் நடுவரான சைமன் ரௌபல் நடுவர் பணியிலிருந்து ஓய்வு இவர் (2004, 2005, 2006, 2007, 2008ம்) ஆண்டு வரையிலான தொடர்ந்து 5வருடங்கள் சர்வதேச கிரிக்கெட் சபையின் சிறந்த நடுவர் விருதினை தொடர்ச்சியாக வெற்றி கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2013 வடக்குமாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ்தேசிய கூட்டமைப்பு முதன்மை வேட்பாளர் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அக்டோபர் – 08**

1921. இந்தியா மும்பையில் அந்நிய நாட்டுத் துணியை மகாத்மா காந்தி தீ வைத்துக் கொளுத்தினார்.

1932. இந்திய விமானப்படை நிறுவப்பட்டது.

1958. பாகிஸ்தானில் முதல் இராணுவப் புரட்சி ஏற்பட்டது. இப்புரட்சியில் அயுப்கான் ஆட்சியைக் கைப்பற்றினார்.

1967. கொரில்லா தலைவர் சே. குவேராவும் அவரது சகாக்களும் பொலிவியா வில் கைதானார்கள்.

1991. ஐரோப்பாவும் நடுக்கடல் நாடுகள் பகுதியும் பால்க்கனும் கூடுமிடத்தில் அமைந்துள்ள சிறு நாடான "குரொவாசியா" யுகோஸ்லாவியாவிட மிருந்து விடுதலையடைந்தது.

1997. இணைய மூலமான மின்னஞ்சல் சேவையான Yahoo! Mail ஆரம்பிக்கப் பட்டது.

2007. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பின் ஆணை யாளர் இலங்கை அரசின் அழைப்பை ஏற்று இலங்கைக்கு விஜயம் செய்தார்.

2009. முதலாவது சம்பியன் லீக் T20 (Champion Leaque Twenty 20) கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவில் கோலாகலமாக ஆரம்பம்.

**அக்டோபர் – 09** ✱ உலக அஞ்சல் தினம் 1874.

1003. லெயில் எரிக்சன் கனடாவில் லோன்ஸ் ஓக்ஸ் மெடோஸ் என்ற இடத்தில் தரையிறங்கியதன் மூலம் அமெரிக்காவில் காலடி வைத்த முதலாவது ஐரோப்பியர் என்ற பெருமையைப் பெற்றார்.

1835. இலங்கை மிகப் பிரபல பாடசாலையான கொழும்பு றோயல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

1874. உறுப்பு நாடுகளிடையே அஞ்சல் கொள்கைகளையும் உலகளாவிய அஞ்சல் முறைமைகளையும் ஒருங்கிணைக்க சுவிற்சர்லாந்தின் பேர்ன் நகரில் ஐக்கிய நாடுகள் சபையினால் சர்வதேச அஞ்சல் ஒன்றியம் நிறுவப்பட்டது.

1949. இலங்கை இராணுவம் நிறுவப்பட்டது.

1962. தென் அமெரிக்காவின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள ஒரு குடியரசு நாடான உகண்டா தேசிய தினம்.

1967. கொரில்லா தலைவர் சே குவாரா பொலிவியாவில் முதல் நாள் கைது செய்யப்பட்டு புரட்சியைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981. பிரான்சில் மரணதண்டனை நிறுத்தப்பட்டது.

1987. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகங்களான நிதர்சனம் தொலைக் காட்சி, முரசொலி பத்திரிகை அலுவலகங்கள் இந்திய இராணுவத்தால் தகர்க்கப்பட்டது.

2010. இலங்கை மாபெரும் தேநீர் கோப்பைக்குரிய கின்னஸ் சாதனையை நிகழ்த்தியது. இதன் மூலம் அமெரிக்க முன்னர் நிகழ்த்திய சாதனையை முறியடித்தது.

**அக்டோபர் – 10**

- உலக மனநல தினம்
- உலக குடியிருப்பு தினம்
- உலக ஓசோன் தினம்
- உலக மரண தண்டனை எதிர்ப்பு தினம் (World Day Against the Death Penalty) - மரண தண்டனைக்கு எதிரான உலகக் கூட்டமைப்பு என்ற அமைப்பு இந் நிகழ்வை முன்னெடுத்து வருகின்றது. குற்றம் புரிந்தவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனைகளில் மிக கொடுமையான தண்டனையான மரண தண்டனை யைக் கொண்டுள்ள சில நாடுகளும் அதைக் கைவிட வேண்டும் என்ற நோக்கிலே ''மரண தண்டனை எதிர்ப்பு தினம்'' கடைப்பிடிக்கப்பட்டு கொண்டா டப்படுகின்றது.

1908. தமிழிசை நாடகம் அரசியல் திரைப்படம் ஆன்கம் என பல துறைகளில் புகழ் பெற்ற கே.பி. சுந்தராம்பாள் என அறியப்படும் கொடுமுடி பாலாம்பாள் சுந்தராம்பாள் பிறப்பு (இறப்பு 19.09.1980).

1949. இலங்கையில் புதிய இராணுவம் உருவாக்கப்பட்டது.

1960. தென்னிந்திய தமிழ் திரைப்பட நகைச் சுவை நடிகர் வடிவேல் தமிழ் நாடு மதுரையில் பிறப்பு.

1964. 18வது ஒலிம்பிக் போட்டிகள் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கோலாகலமாக ஆரம்பம். 24.10.1964 வரை நடைபெற்ற இப் போட்டி யில் ஐக்கியஅமெரிக்கா 36 தங்கம், 26 வெள்ளி, 28 வெண்கலமாக மொத்தம் 90 பதக்கங்களை சுவீகரித்துப் பதக்கப் பட்டியலில் முதலிடத் தையும் சோவியத் யூனியன் 30 தங்கம், 31 வெள்ளி, 35 வெண்கலம் உட்பட மொத்தம் 96 பதக்கங்களையும் ஜப்பான் 16 தங்கம், 5 வெள்ளி, 8 வெண்கலம் உட்பட மொத்தம் 29 பதக்கங்களையும் சுவீகரித்துப் பதக்கப்பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களைத் தக்கவைத்துக் கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970. அமைதிக்கடலின் தெற்கே அமைந்துள்ள தீவு நாடான "பிஜி" ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1987. யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்தியா அமைதிப் படையினருக்கும் இடையில் போர் ஆரம்பமானது.

2000. இலங்கையில் மூன்று முறை பிரதமராக இருந்தவரும் உலகின் முதல் பெண் பிரதமருமான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இறப்பு (பிறப்பு 17.04.1916).

2000. இலங்கையில் 11வது பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது. இதில் ஐக்கியதேசியக் கட்சி கூடிய ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைத்தது.

**அக்டோபர் – 11**

- உலக பெண்பிள்ளைகள் தினம்
- சர்வதேச பெண் பிள்ளையின் தினம் ஐ.நா. சபை அமைப்பினால் சர்வதேச தினம் கொண்டாடுவதற்கு பிரேரிக்கப்பட்டது. 2011இல் நியூயோர்க் நகரத்தில் நடைபெற்ற 55வது அமர்வில்

1582. கிரெகொரியின் நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந்நாள் இடம்பெறவில்லை.

1737. இந்தியா கல்கத்தாவில் ஏற்பட்ட பூகம்பத்தில் 3 இலட்சம் மக்கள் பலி.

1820. ஈழத்தின் தமிழறிஞர் தமிழாசிரியர் இதழாசிரியர் புலவரான ஆணல்ட் சதாசிவம் பிள்ளை பிறப்பு (இறப்பு 20.02.1896).

1826. தமிழ் புதினப் பத்திரிகை முன்னோடியான மாயுரம் வேதநாயகம் பிள்ளை பிறப்பு (இறப்பு 21.07.1889).

1852. ஆவுஸ்திரேலியாவின் மிகப்பழைமையான சிட்னி பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

1958. நாசாவின் முதலாவது விண்கலம் பயனியர் - 1 சந்திரனை நோக்கி ஏவப்பட்டது. இது சந்திரனை அடையாமல் 2 நாள்களில் பூமியில் விழுந்து எரிந்தது.

1968. நாசா முதற்தடவையாக 3 விண்வெளி வீரர்களை அப்பலோ - 7 விண்கலத்தை விண்ணுக்கு ஏவியது.

1984. அமெரிக்க விண்வெளி வரலாற்றில் முதன் முறையாக சலஞ்சர் விண்வெளி ஓடத்தில் இருந்து அந்தரத்தில் இறங்கி விண்ணில் நடந்து சாதனை புரிந்தார் வீராங்கனை கத்ரின் சலிவன்.

1987. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய அமைதிப்படை பவான் நடவடிக்கை என்ற பெயரில் போரை ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005. சர்வதேச கிரிக்கெட் சபையினால் இரண்டாவது Icc Awards விருது வழங்கும் நிகழ்வு அவுஸ்ரேலிய சிட்னி நகரில் நடைபெற்றது.

2005. இலங்கை தொலைக்காட்சி சேவையான Tv Derana ஆரம்பிக்கப்பட்டது.

2012 சர்வதேச பெண் பிள்ளையின் தினம் முதன் முதலில் கொண்டாடப் பட்டது.

**அக்டோபர் – 12**

1605. இந்திய முகாலய பேரரசின் ஜலாலுதீன் முகம்மது அக்பர் இறப்பு (பிறப்பு 15.10.1542).

1798. இலங்கை பிரித்தானியாவின் அரச குடியேற்ற நாடாக அறிவிக்கப் பட்டது. பிரெடெரிக் நோர்த் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

1953. இலங்கையின் 3வது பிரதமராக ஜோன் கொத்தலாவல பதவியேற்பு 12.4.1956 வரை.

1964. சோவியத் ஒன்றியம் வாஸ் கோத் 1 என்ற விண்கலத்தை விண்ணுக்கு ஏவியதுமுதன் முதலில் பல வீரர்கள் ஒரே விண் கலத்தில் பயணித்தது. இதுவே முதல் தடவையாகும்.

1968. 19வது ஒலிம்பிக் போட்டிகள் மெக்சிக்கோ நகரில் கோலாகலமாக ஆரம்பம். 27.10.1968வரை நடைபெற்ற இப் போட்டியில் ஐக்கிய அமெரிக்க 45 தங்கம், 28 வெள்ளி, 34 வெண்கலமாக மொத்தம் 107 பதக்கங்களை சுவீகரித்துப் பதக்கப்பட்டியலில் முதலிடத்தையும் சோவியத்யூனியன் 29 தங்கம், 32 வெள்ளி, 30 வெண்கலம் உட்பட மொத்தம் 91 பதக்கங்களையும் ஜப்பான் 11 தங்கம், 7 வெள்ளி, 7 வெண்கலம் உட்பட மொத்தம் 25 பதக்கங்களையும் சுவீகரித்துப் பதக்கப்பட்டியலில் இரண்டாம், மூன்றாம் இடங்களைத் தக்கவைத்துக் கொண்டன.

1968. ஆபிரிக்கா கண்டத்தில் மிகச்சிறிய நாடுகளில் ஒன்றான ''எக்குவட் டோரியல்'' ஸ்பெயினிடமிருந்து விடுதலையடைந்தது.

1999. உலக மக்கள் தொகை 6 பில்லியனை எட்டியது.

2001. அமைதிக்கான நோபல் பரிசு ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் கோபி அனானுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

2004. இந்திய மத்திய அரசு அரசாணையால் தமிழ் செம்மொழி என வகைப் படுத்தப்பட்டது.

2005. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பிரபல அதிபர் கணபதி இராசதுரை அவர்கள் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த வாணி விழாவில் கலந்து கொள்ள சென்ற போது இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008. இந்திய தமிழ் தொலைக்காட்சி சேவையான Zee Tamil என்டெர் டெய்ன் மென்ட் நிறுவனத்தால் முதல் ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டது.

2014 வடமாகாணம் கிளிநொச்சி மாவட்ட செயலகம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் திறந்து வைக்கப்பட்டது.

**அக்டோபர் – 13**

1792. அமெரிக்க வெள்ளை மாளிகைக்கான அடிக்கல் வாஷிங்டனில் நாட்டப் பட்டது.

1884. அனைத்துலக நேரம் கணிக்கும் இடமாக கிறீன்விச் கோடு தெரிவு செய்யப்பட்டது.

1917. யாழ் மாநகர சபை மத்திய, மேற்கு, கிழக்கு என மூன்றாக பிரிக்கப் பட்டது

1943. இந்திய விடுதலை வீரர் சுபாஷ் சந்திரபோஸ் சிங்கப்பூரில் இந்திய விடுதலைக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

2002. இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையே திறந்த வான் ஒப்பந்தம் SKIES மேற்கொள்ளப்பட்டது.

2010. இந்தியத் தலைநகர் டில்லியில் நடைபெற்ற பொது நலவாயப் போட்டி யில் இலங்கை வீரர் மஞ்சு வன்னியராச்சி தங்கப்பதக்கம் வென்றார். 72 வருடங்களின் பின்னர் இலங்கை வீரர் பெற்ற முதல் தங்கமாகும்.

2014 செயலிழந்த கொழும்பு-யாழ்ப்பாணம் புகையிரத சேவை 24 வருடங் களுக்குப் பின் பளையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பிக்கப்பட்டது.

**அக்டோபர் – 14** ✱ உலக தரநிர்ணய தினம் World Standard Day) - சீர்தரத் துக்கான அனைத்துலக நிறுவனம் (ISO) அனைத்துலக மின் தொழில்நுட்ப ஆணையம் (IEC) அனைத்துலக தொலைத்தொடர்பு ஒன்றியம் (IDU) ஆகிய நிறுவனங் களின் வழிமுறைகளுக்கு உட்பட்டு உலகத் தரங்களை உருவாக்கப்பாடுபடும் தொழில்துறை வல்லுநர்களின் சேவையைப் பாராட்டவும் பொருள்கள் மற்றும் சேவை களில் விளங்க வேண்டிய சீரமைப்புத் தன்மையின் அவசியத்தை உலகளாவிய ரீதியல் வலியுறுத்தவும் ''உலக தரநிர்ணய தினம்'' கொண்டாடப்படுகின்றது.

1884 இலங்கையில் இலவசக் கல்வியை அறிமுகப்படுத்திய கல்வித்துறையின் தந்தை C.W.W. கன்னங்கரா தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1947. இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியாக D.S. சேனநாயக்க பதவி யேற்பு. 22.03.1952 வரை பதவியில் இருந்தார்.

1947. இலங்கை சுகந்திரமடையும் போது எதிர்கட்சி தலைவராக Dr.N.M. பெரேரா பதவிவகித்தார். (8.4.1952 வரை)

1947. தலைநகர் கொழும்பு காலி முகத்திடலில் முதலாவது பிரதிநிதிகள் சபை அமர்வு நடைபெற்றது. (House of Representatives of Ceylon).

1947 இலங்கையின் முதலாவது பாராளுமன்றம் கூடியது. அங்கத்தவர்கள் 101ஆகும். ஆளுநர் Henry Monek

1956. இந்தியத் தலித் தலைவர் அம்பேத்கர் தனது 385,000 ஆதரவாளர் களுடன் பௌத்தத்திற்கு மதம் மாறினார்.

1968. விண்ணிலிருந்து முதலாவது நேரடி தொலைக்காட்சி அஞ்சல் அப் போலோ 7 விண்கலத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டது.

1989. சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர் வசீம் அக்ரம் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியில் தொடர்ந்து மூன்று வீரர்களை ஆட்டமிழக்கச் செய்து ஹட்ரிக் சாதனை.

**அக்டோபர் – 15**
- உலககிராம பெண்கள் தினம்
- கை கழுவுதல் தினம்
- வெள்ளைப் பிரம்புதினம்

1542. இந்திய முகாலய பேரரசின் ஜலாலுதீன் முகம்மது அக்பர் பிறப்பு (இறப்பு 12.10.1542).

1582. கிரகொரியின் நாட்காட்டியை பாப்பரசர் பதின்மூன்றாம் கிரகொரியின் அறிமுகப்படுத்தினார். இத்தாலி, போலாந்து இஸ்பெயின் ஆகிய நாடுகளில் அக்டோபர் 4 இற்குப் பின்னர் நேரடியாக இன்றைய நாளிற்கு நாட்காட்டி மாற்றப்பட்டது.

1878. தோமஸ் அல்வா எடிசன் தனது மின்குமிழ் தயாரிக்கும் கம்பனியை ஆரம்பித்தார்.

1918. இந்துக்களும் இஸ்லாமியரும் புனித சாமியாராக போற்றும் சீரடி சாயி பாபா இறப்பு (பிறப்பு 28.09.1838).

1931. இந்தியாவின் 11வது குடியரசு தலைவரும் (2002-2009) அணு விஞ்ஞானியுமான Dr.A.P.J. அப்துல் கலாம் பிறப்பு. (இறப்பு 27.07.2015)

1978 தோமஸ் அல்வா எடிசன் தனது மின்குமிழ் தயாரிக்கும் கம்பனியை ஆரம்பித்தார்

2010. மனித உடலை இணையம் மூலம் முப்பரிமாணத் தோற்றத்தில் காண உதவும் மென் பொருளான கூகுள் உடல் உலாவி அல்லது கூகிள் பாடி பிரௌசர் (Google Body Browser) ஆரம்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமின் 79வது பிறந்த தினத்தில் உலக மாணவர் தினமாக ஐ.நா.சபை பிரகடனம்.

2012. பிரிட்டனுடன் கடந்த மூன்று நூற்றாண்டுகளாக இணைந்திருந்த ஸ்கொட்லாந்து தனிநாடாக பிரிப்பது தொடர்பான வாக்கெடுப்பு 2014ல் நடத்துவதற்குரிய உடன்பாடு கைச்சாத்தாகியது. இக்கைச்சாத்தை பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் ஸ்கொட்லாந்து தேசிய கட்சியினர் அமைச்சர் அபிலக்ஸ் சல்மான்ட் ஆகியோர் கைச்சாத் திட்டனர்.

2015. இலங்கையில் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு உருவாக்கப் பட்டது 11 பேர் உறுப்பினர்கள்

**அக்டோபர் – 16** ✱ உலக உணவு தினம் (World Food Day) - 1945 ஆம் ஆண்டில் இதே நாளில் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் "ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதை நினைவு கூற ஐக்கிய நாடுகள் அவை அங்கீகரித்து கொண்டாடப்படுகின்றது.

1793 ஆங்கிலேயருக்கு மண்டியிடமறுத்து கடைசிவரை தன் தாய்த்திரு நாட்டிற்காக போராடி தூக்கிலிடப்பட்ட மாவீரன் வீரபாண்டிய கட்ட பொம்மன மறைவு (03.01.1740)

1793. பிரான்சின் பதினாறாம் லூயி மன்னனின் மனைவி மரீ அன் டொனாக்கு கழுத்து வெட்டி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

1944. தமிழ் சினிமா வரலாற்றில் அதிக நாட்கள் ஓடிய திரைப்படமான (110 வாரங்கள்) தியாகராஜ பாகவதர் நடிப்பில் வெளிவந்த "ஹரிதாஸ்" திரைப்படம் திரையிடப்பட்டது.

1945. மக்களின் ஊட்ட நலன் போசாக்கை அதிகரிப்பதற்கும் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கும் வேளாண்மை (விவசாயம்) மற்றும் உணவுப் பொருட் தயாரிப்பு சந்தைப்படுத்தல் விநியோகம் போன்றவற்றுடன் கிராமங்களை விருத்தி செய்து பசி பட்டினியை இல்லாதொழிக்கும் நிறுவனமாக ஐக்கிய நாடுகள் அவையால் இத்தாலி ரோமை தலைமை யிடமாகக் கொண்டு "ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு நிறுவப்பட்டது.

1951. பாகிஸ்தான் முதலாவது பிரதமர் லியாகட் அலிகான் ராவல் பிண்டியில் சுட்டுக் கொல்லப்பட்டார் (பிறப்பு 02.10.1896).

1963. தமிழீழ விடுதலை புலிகளின் கடற்புலித் தலைவர் கேணல் சூசை எனப்படும் தில்லையம்பலம் சிவநேசன் பிறப்பு.

1964. மக்கள் சீனக் குடியரசு தனது முதலாவது அணு ஆயுதப் பரிசோதனையை மேற்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980. இலங்கை முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவே பண்டார நாயக்க பாராளுமன்றத்திலிருந்து நீக்கப்பட்டு 7ஆண்டுகள் தேர்தலில் போட்டி யிடுவதற்கு தடை விதிக்கப்பட்டது.

1990. தென்னாபிரிக்கா கறுப்பினத் தலைவர் நெல்சன் மண்டேலாவுக்கு பாரதரத்ன விருது வழங்கப்பட்டது.

2003. இணையத்தளமான தமிழ் விக்கிப்பீடியாவில் முதலாவது கட்டுரை ஈரானின் மனித உரிமைப்போராளியான "சிரின் எபாடி" பற்றி எழுதப் பட்டது.

2006. 1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அடுத்து இணைக்கப் பட்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பு செல்லுபடியற்றது என இலங்கை உயர் நீதிமன்றம் (நீதி அரசர் சரத் சில்வா) அறிவித்தது.

**அக்டோபர் – 17** ✱ உலக வறுமை ஒழிப்பு தினம் (International Day for the Eradication of Poverty) - உலகளாவிய ரீதியில் வறுமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி பசிப்பிணியில் இருந்து மக்களை விடுவிப்பதற்காக உலக வறுமை ஒழிப்பு தினம் கொண்டாடப்படுகின்றது.

1662. இங்கிலாந்தின் இரண்டாம் சார்ல்ஸ் டன்கேர்க் நகரை 40,000 பவுனிற்கு பிரான்சிக்கு விற்றான்.

1855. இலங்கை பிரதமரான சொலமன் டயஸ் பண்டார நாயக்கா மகா முதலியார் பட்டம் பெற்றார்.

1952. நடிகர் திலகம் சிவாஜிகனேசன் அறிமுகமான பராசக்தி திரைப்படம் வெளிவந்தது.

1972. தமிழ் நாட்டில் ஒரு முக்கிய கட்சியான அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் தமிழ் நாடு முதலமைச்சர் M.G. இராமச் சந்திரனால் நிறுவப்பட்டது.

1979. அன்னை திரேசா அமைதிக்கான நோபல் பரிசை பெற்றார்.

1981. தமிழ் நாட்டின் அரசவை கவிஞர் கண்ணதாசன் இறப்பு (பிறப்பு 24.06.1927).

1988. இலங்கை கொழும்பு நகரில் நீதிமன்ற கட்டட தொகுதி சீனமக்கள் குடியரசால் நிர்மாணிக்கப்பட்டு திறக்கப்ட்டது.

1995. இலங்கை அரசின் முப்படைகளும் இணைந்து யாழ்ப்பாணத்தில் சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர். இந் நடவடிக்கை மூலமே தமிழீழ விடுதலைப்புலிகளின் வசமிருந்த யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006. தமிழீழ விடுதலைப் புலிகளின் வானொலியான புலிகளின் குரல் வானொலி ஒலிபரப்பு நிலையம் இலங்கை அரசின் வான் குண்டுத் தாக்குதலில் முழுமையாக சேதமடைந்தது.

2014 இலங்கை இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவின் பெயர் வாக்காளர் படடியலிலிருந்து நீக்கம்.

2014 தமிழ் நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து பிணையில் செல்ல உயர் நீதிமன்றம் அனுமதி.

**அக்டோபர் – 18**

1867. ரஷ்யாவிடமிருந்து அலாஸ்கா மாநிலத்தை ஐக்கிய அமெரிக்கா 7.2 மில்லியன் டொலர் விலை கொடுத்து வாங்கியது.

1922. A.D.J.B. வானொலி பிரிட்டிஷில் ஆரம்பிக்கப்பட்டது.

1929. கனடாவில் பெண்களும் மனிதர்கள் என சட்டபூர்வமாக எழுதப்பட்டது.

1931. மின்குமிழை கண்டுபிடித்த அமெரிக்கா விஞ்ஞானியான தோமஸ் அல்வா எடிசன் இறப்பு (பிறப்பு 11.02.1847).

1954. முதலாவது திரான்சிஸ்டர வானொலி அறிமுகப்படுத்தப்பட்டது.

2004. இந்தியாவில் சந்தனக் கடத்தல் வீரப்பன் என்றழைக்கப்படும் T.R. முனிசாமி A.D.J.B. விஜயகுமார் தலைமையிலான சிறப்பு அதிரடிப் படையால் சுட்டுக்கொல்லப்பட்டார் (பிறப்பு-18.01.1952).

**அக்டோபர் – 19**

1976. குரங்கு இனமான சிம்பன்சி உலகில் அருகி வரும் மிருக இனமாக அறிவிக்கப்பட்டது.

2000. B.B.C யின் யாழ்ப்பாண ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் ஆயுதக் குழுவினரால் படுகொலை செய்யப்பட்டார்.

**அக்டோபர் – 20**

1469. சீக்கிய மதத்தை தோற்றுவித்தவ்ரான குரு நானக் தேவ் இறப்பு (பிறப்பு 22.09.1539).

1884. இலங்கையின் முதல் பிரதமர் D.S. சேனநாயக்கா ஹாபிடிகம பிரதேசத்தில் போதலேகம என்னும் ஊரில் எலிசபெத் பெரேரா தொள்ஸ் டெபர் என்பவருக்கு மகனாக பிறப்பு (இறப்பு 22.03.1952).

1890. இலங்கையின் முதல் பிரதம மந்திரி டி.எஸ். சேனநாயக்க பிறப்பு (இறப்பு 22.03.1962).

1947. வெளிர் நீல பின்னனியில் வெள்ளை நிற ஐக்கிய நாடுகள் சின்னம் கொண்ட ஐக்கிய நாடுகளின் கொடி அங்கீகரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1962. இந்தியா சீனா போர் ஆரம்பம் (21.10.1962 வரை இப்போர் நடைபெற்றது).

1973. அவுஸ்திரேலிய சிட்னி நகரத்தில் அமைந்துள்ள ஒப்ரோ மாளிகை திறந்து வைக்கப்பட்டது.

1982. இலங்கையில் முதன் முதலில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் J.R. ஜெயவர்த்தன வெற்றி பெற்றார்.

1998. இலங்கை தமிழ் தொலைக்காட்சி சேவையான சக்தி Tv ஆரம்பிக்கப் பட்டது.

2015 தமிழிழ விடுதலைப்புலிகளின் மகளிர் அணித் தலைவியான தமிழினி ஜெயக்குமாரன் புற்று நோயால் இறப்பு - கிளிநொச்சியில் இறுதிக் கிரியைகள் நடைபெற்றது.

**அக்டோபர்** – 21

1833. நோபல் பரிசினை உருவாக்கியவரும் டைனமட் வெடி மருந்தினை கண்டுபிடித்தவரும் மற்றும் சுவீடன் நாட்டு அறிவியலாளருமான ஆர்பிரட் நோபல் பிறப்பு (இறப்பு 10.12.1896).

1879. மின் விளக்கை கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசன் மின் குமிழை 13 மணி நேரம் எரிய வைத்தார்.

1944. முதலாவது கமிகசே ஜப்பானிய விமானத் தற்கொலைத் தாக்குதல் அவுஸ்திரேலியா கப்பல் மீது நடத்தப்பட்டது.

1945. பிரான்சில் முதல் தடவையாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப் பட்டது.

1950. இலங்கையின் முதன் முதலாக சீமெந்து உற்பத்தி காங்கேசன் துறையில் ஆரம்பிக்கப்பட்டது.

1983. இலங்கை பாராளுமன்றத்திலிருந்து தமிழ் அரசியல் தலைவர் அமிர்த லிங்கம் உட்பட 16 பேர் தமது பதவியினை இராஜினாமா செய்தனர்.

1987. ஈழப்போரின் போது யாழ்ப்பாண மருத்துவமனையில் இந்திய இராணு வத்தினர் சுட்டதில் மருத்துவர்கள், ஊழியர்கள், நோயாளிகள் உட்பட 21 பேர் கொல்லப்பட்டனர்.

2009. இலங்கை கொழும்பு காலி வீதியில் தெகிவளை சந்தியில் ஏற்படும் வாகன நெரிசலை குறைப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட தெகிவளை மேம்பாலம் மக்களின் பாவனைக்காக திறக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அக்டோபர் – 22**

1797. பதிவு செய்யப்பட்ட முதலாவது பரசூட் பாய்ச்சல் அன்ரே ஜக்கியுஸ் கர்னெரின் என்பவரால் பாரிஸ் நகரப்பூங்கா ஒன்றில் 3200 அடி உயரத்தில் இருந்து நிகழ்த்தப்பட்டது.

1828. இந்திய விடுதலைப் போராட்ட வீராங்கனை ஜான்சி ராணி லட்சுமிபாய் பிறப்பு (இறப்பு 18.06.1858).

1878. இங்கிலாந்தின் சால்போட் நகரில் செயற்கை ஒளியில் முதலாவது ரக்பி (Rugby) போட்டி நடைபெற்றது.

1953. தென்கிழக்காசியாவில் உள்ள நாடான லாவோஸ் பிரான்சிடமிருந்து விடுதலையடைந்தது.

2007. நான்காவது ஈழப்போரின் போது இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள அநுராதபுரம் வான் படைத்தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் சிறப்புக் கரும்புலி அணியினர் எல்லாளன் நடவடிக்கையை மேற்கொண்டனர். இத்தாக்குதல்களில் கரும்புலிகள் 21 பேரும், இலங்கை படையினர் 14 பேரும் கொல்லப்பட்டு பல வானூர்திகள் அழிக்கப்பட்டன. ஈழப் போர் தொடங்கிய வரலாற்றிலேயே கரும்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பெரிய தாக்குதல் இதுவென பதியப்பட்டுள்ளது.

**அக்டோபர் – 23**

1707. பெரிய பிரித்தானியாவில் முதல் பாராளுமன்றம் கூடியது.

1911 முதல் தடவையாக வானூர்தி ஒன்று போரில் பாவிக்கப்பட்டது. இத்தாலிய வானோடி லிபியாவில் இருந்து புறப்பட்டு துருக்கி இராணுவ நிலைகளை அவதானித்தது.

1917. ரஷ்ய புரட்சியாளரான விளாடிமீர் லெனின் அக்டோபர் புரட்சிக்கு அழைப்பு விடுத்தார்.

1931 ஜோர்ஜ் வாஷிங்டன் பாலம் திறக்கப்பட்டது.

1940. பிரபல பிரேசில் நாட்டின் கால்பந்தாட்ட வீரரும் கால்பந்தாட்ட உலகின் முடி சூடா மன்னனாக இன்றும் விளங்குபவரும் கால்பந்தாட்டத்தை அமெரிக்காவில் பிரபலப்படுத்தியவரும் உலக அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவரும் 22 ஆண்டு கால கால்பந்தாட்ட அத்தியாயத்தில் மொத்தம் 1282 கோல்களை புகுத்தியவரும் ஹட்ரிக் எனப்படும் ஒரே ஆட்டத்தில் தொடர்ந்து 3 கோல்களை போடுவதிலும் உலக சாதனை செய்தவரும் (மொத்தம் 92 ஹட்ரிக்) மூன்று முறை FIFA உலகக் கோப்பையை வென்ற ஒரே கால்பந்தாட்ட வீரரும் மற்றும் கால்பந்தாட்ட உலகின் மிகச்சிறந்த வீரராக கருதப்படுபவரும் "கறுப்பு முத்து" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழியர்களால் அழைக்கப்படுபவருமான பீலி (Edison Arantes do Nascimento) பிறப்பு.

1946 ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் முதலாவது கூட்டத் தொடர் நியூயோர்க் நகரில் ஆரம்பமானது.

1948. இலங்கையின் முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகர் எம்.எச்.எம். அஷ்ரப் பிறப்பு.

1991 இலங்கைத் தமிழிழப் போரில் அநாதைகளான பெண் பிள்ளைகளின் மறுவாழ்வுக்காக செஞ்சோலை சிறுவர் இல்லம் வடமாகாணம் முல்லை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினால் ஆரம்பிக்கப் பட்டது.

2006. இலங்கை சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக்கட்சியும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

2012. "சொயுஸ் TMA-06M" விண்கலம் அமெரிக்க விண்வெளி வீரரான கெவின் போர்ட் மற்றும் ரஷ்ய விண்வெளி வீரர்களான ஓலெக் நொவிட்ஸ்கி அத்தோடு எவஜெனி தரேல்கின் ஆகியோருடன் கஸகஸ் தானிலுள்ள பெய்கோனுர் விண்வெளி ஏவுதளத்திலிருந்து வெற்றி கரமாக ஏவப்பட்டது.

2012. கொஸ்தாரிக்காவை 6.6 ரிக்டர் அளவான பூமியதிர்ச்சி தாக்கியது.

2014 இலங்கையின் 28வது சட்டமா அதிபராக சொலிசிட்டர் ஜெனரல் yuwanianu wana sundara wijethilaka நியமனம்.

**அக்டோபர் – 24** ✱ உலக ஐக்கிய நாடுகள் தினம்

1857. உலகின் முதலாவது காற்பந்தாட்ட அணியான ஷெப்ல்ட் காற்பந்தாட்ட அணி இங்கிலாந்தில் உருவாக்கப்பட்டது.

1931. ஜோஜ் வாசிங்டன் பாலம் திறக்கப்பட்டது.

1945. நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் சபை அங்குரார்ப்பணம் செய்யப் பட்டது. உறுப்பு நாடுகள் 193 ஆகும். மொழி (6) Arabic, Chinese, English, French, Russian, Spanish.

1949. ஐக்கிய நாடுகள் தலைமை காரியாலத்திற்கான அடிக்கல் நாட்டப் பட்டது. 1951ல் முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

1957. இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் இ.ஜெயராஜ் பிறப்பு.

1964. தெற்கு ஆபிரிக்காவில் உள்ள நாடான "சாம்பியா" ஐக்கிய இராச்சியத் திடமிருந்து விடுதலையடைந்தது.

1995. ஐக்கிய நாடுகள் சபை பொன்விழா கொண்டாடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994. கொழும்பில் தேர்தல் கூட்டத்தில் நடந்த குண்டு வெடிப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கா உட்பட 51 பேர் கொல்லப்பட்டனர (பிறப்பு 20.03.1942).

**அக்டோபர் – 25**

1400. ஆங்கில இலக்கிய மேதை ஜெம்றி சோசர இறப்பு (பிறப்பு-1340).

1917. ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சி (பழைய ஜீலியன் நாட்காட்டியின் படி) இடம்பெற்றது. போல் ஷெவிக்குகள் குளிர்கால அரண்மனையைக் கைப்பற்றினர்.

1924. இந்தியாவில் சுதந்திர போராட்ட வீரர் சுபாஷ் சந்திரபோஸ் பிரித்தானியரால் சிறைப்பிடிக்கப்பட்டார்.

1971. சீனக் குடியரசு ஐக்கிய நாடுகள் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

1990. வடக்கு மற்றும் மத்திய யுரேசியாவில் அமைந்துள்ளதும் மற்றும் உலகிலே 9வது பெரிய நாடுமான கசக்ஸ்தான் குடியரசாகியது.

2000. இலங்கையில் பண்டாரவளை சிறைச்சாலை மீது சிங்களவர்கள் நடத்திய தாக்குதலில் தமிழ் அரசியல் கைதிகள் 26 பேர் கொல்லப்பட்டனர்.

2001. விண்டோஸ் XP வெளியிடப்பட்டது.

2010. இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்குக் குற்றச்சாட்டிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் முக்கிய உறுப்பினர்கள் பொட்டம்மான் மீதான குற்றச்சாட்டுக் களை இந்திய நீதிமன்றத்தினால் நீக்கப்பட்டன.

2010. இந்தோனேசியாவில் 7.7 ரிக்டர் அளவிலான பூகம்பம் நிகழ்ந்தது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியால் 41 பேர் பலியானதோடு 882 பேரைக் காணவில்லை.

2012. இந்தியன் பிரிமீயர் லீக் (IPl) கிரிக்கெட் போட்டியில் ஹைதரபாத் அணியின் உரிமத்தை சன் டிவி நிறுவனம் ஆண்டுக்கு 85.05 கோடி மதிப்பில் ஏலத்தில் எடுத்தது.

2013. வடக்கு மாகாண சபையின் முதலாவது கூட்டம் கைதடி மாகாண சபை கட்டடத்தில் நடைபெற்றது.

**அக்டோபர் – 26** ✱ உலக இணையதள தினம்

1876. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே தொடர்ந்து (Trail) சேவையை ஆரம்பிப்பதற்கான முடிவு பிரித்தானியா அரசரால் எடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1946. ஐக்கிய அமெரிக்காவின் செனட் சபை உறுப்பினர் மற்றும் 67வது ஐக்கிய அமெரிக்கா வெளியுறவு அமைச்சருமான ஹிலாரி கிளிண்டன் பிறப்பு.

1947. காஷ்மீர் மகாராஜா இந்தியாவுடன் காஷ்மீரை இணைக்க சம்மதம் தெரிவித்தார்.

1950. இந்தியாவில் புதிய அரசியல் யாப்பு அமுலுக்கு வந்தது.

1955. ஐரோப்பாவில் அமைந்துள்ள நாடான அவுஸ்திரியாவில் கடைசி கூட்டு படைகள் வெளியேறின தன்னை அணிசேரா நாடாக அறிவித்தது.

1977. பெரியம்மை நோய் தாக்கிய கடைசி நோயாளி சோமாலியாவில் அடையாளம் காணப்பட்டார். உலக சுகாதார ஸ்தாபனம் இந்நாளை பெரியம்மை நோயின் கடைசி நாளாக அறிவித்தது.

2010. இந்தோனேசிய மெராபி எரிமலை குமுறியதில் 25 பேர் பலி.

**அக்டோபர் – 27**

1275. நெதர்லாந்து நாட்டின் தலை நகரமான ஆம் ஸ்டர்டாம் நகரம் அமைக்கப் பட்டது.

1728. பிரித்தானியாவின் கடற்படைக் கப்டன் மற்றும் நாடுகாண் பயணியு மான ஜேம்ஸ் குக் பிறப்பு (இறப்பு 14.02.1779).

1944 அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி ஆரம்பம். சட்டமேதை ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையில்

1977. இலங்கை நம்பிக்கை நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார பிறப்பு.

1982. யாழ்ப்பாணம் சாவகச்சேரி காவல் நிலையம் தமிழீழ விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது.

1990. யாழ்ப்பாண மாவட்டத்தை தாயகமாக கொண்ட முஸ்லீம்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப் புலிகளால் வெளியேற்றப் பட்டனர்.

1991. மத்திய ஆசியாவில் அமைந்துள்ள நாடான துருக்மெனிஸ்தான் சோவியத் ஒன்றியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1993. இலங்கையில் பனை மரம் வெட்டுவதையும் பனை மரம் அழிக்கப் படுவதையும் தடுக்கும் சட்டம் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டது. (27.10.1993ல் விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது)

2013 கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அக்டோபர் – 28**

1886 1875ஆம் ஆண்டு சிலைக் கட்டுமானம் ஆரம்பித்து 1884ஆம் ஆண்டு சிலை முழுமையடைந்து பிரான்சிலிருந்து கப்பல் மூலம் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அமெரிக்கா மக்களுக்கு சுதந்திரதேவி சிலை சமர்பிக்கப்பட்டது.

1918 செக் குடியரசு சிலவாக்கியா சுதந்திரமடைந்தது.

1955 மைக்ரோ சொவ்ற் நிறுவன இயக்குனர் பில்கேட்ஸ். பிறப்பு.

1971. ஐக்கி இராச்சியம் தனது முதலாவது ''புரெஸ்பெரோ'' என்ற செய்மதியை விண்ணுக்கு அனுப்பியது.

2015. யப்பானில் றோபோக்கள் மட்டும் பணியாற்றும் ஹோட்டல் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. (HENN-NA- HOTEL)

2006. சுவிஸ்சர்லாந்து ஜெனிவாவில் இலங்கை அரசுக்கும் (இலங்கை சுதந்திரக் கட்சி) தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கிடையேயான இரண்டாம் சுற்று பேச்சு வார்த்தைகள் ஆரம்பம். (இப்பேச்சு வார்த்தை கள் 29.10.2006 வரை நடைபெற்றன).

**அக்டோபர் – 29**

1863 சுவிற்சர்லாந்தில் கூடிய 16 நாடுகளின் பிரதிநிதிகள் சர்வதேச செஞ் சிலுவைச் சங்கம் அமைக்க தீர்மானித்தனர்.

1922. முசோலினி இத்தாலியின் பிரதமரானார்.

1923. ஆசிய ஐரோப்பா கண்டங்களின் இடையே அமைந்துள்ள நாடான துருக்கி விடுதலையடைந்தது.

1960. பிரபல குத்துச் சண்டை வீரர் முகம்மது அலி தனது முதலாவது போட்டியில் பங்கேற்பு.

1969. உலகில் முதலாவதாக ஒரு கணிணியிலிருந்து வேறொரு கணிணிக்கான தொடுப்பு ARPA NET மூலம் இணைக்கப்பட்டது.

1998. அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் கிளென் முதிர்ந்த வயதில் (77 வயதில்) டிஸ்கவரி ஓடத்தில் விண்வெளி பயணத்தை மேற் கொண்டார். இவர் 1962 மெர்க்குரி விண்வெளி கலத்தில் பூமியை சுற்றி வந்து சாதனை படைத்தவருமாவார்.

2000. சார்ஜா மைதானத்தில் இந்திய அணிக்கு எதிரான ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் சனத் ஜயசுரிய 189 ஓட்டங்கள் குவிப்பு.

2012. 2008 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் ஆர்ஜென்டினா தேசிய கால்பந்தாட்ட அணிக்கு ஆர்மேண்டோ மரடோனா தலைமைப் பயிற்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளராக இருப்பார் என்று AFA தலைவர் கிரியோ க்ராண்டோனா அறிவிப்பு.

**அக்டோபர் – 30**

1945. ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா உறுப்பினராக இணைந்தது.

1960. ஆர்ஜென்டினாவின் முன்னாள் கால்பந்து வீரரும் நான்கு தடவை FIFA உலகக்கிண்ணப் போட்டியில் பங்குபற்றிய வருமான ஆர்மேண்டோ மரடோனா பிறப்பு.

1964. இலங்கையின் மலையகத் தமிழர்களை நாடு கடத்தும் சட்டமாக சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

1990. இலங்கையின் வடபுலம் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் தமிழீழ விடுதலை புலிகளினால் ஒரே நாளில் வெளியேற்றப் பட்டார்கள்.

1995. கனடாவில் இருந்து கியுபெக் மாநிலம் பிரிந்து செல்ல எடுக்கப்பட்ட மக்கள் வாக்கெடுப்பு தோற்கடிக்கப்பட்டது.

1995 யாழ் போதனா வைத்தியசாலை யுத்தத்தினால் இடம்பெயர்ந்து சாவகச் சேரிக்கு மாற்றப்பட்டது. (27-4-1996 மீள வந்தது.)

1997. தனது பிறந்த நாளன்று ஆர்மேண்டோ மரடோனா சர்வதேச கால் பந்தாட்டப் போட்டியிலிருந்து ஓய்வு.

1999. இலங்கையின் மலைநாட்டு அமைச்சர் மற்றும் தமிழர்களின் அரசியற் தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான் இறப்பு (பிறப்பு 30.08.1913).

**அக்டோபர் – 31** ✱ உலக சிக்கன தினம்

1931. இந்தியாவில் தமிழில் வெளிவந்த முதல் பேசும் படமான "காளிதாஸ்" திரையிடப்பட்டது.

1984. இந்திய பிரதமர் இந்திரா காந்தி மெய்ப் பாதுகாவலர்களால் சுட்டு கொல்லப்பட்டார். அதன் பின்னர் இடம்பெற்ற கலவரத்தில் 2000 சீக்கியர் கொல்லப்பட்டனர். (பிறப்பு 19.11.1917).

1984. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி மெய்ப்பாதுகாவலர்களால் கொல்லப் பட்டதும் அவரது மகன் ராஜீவ் காந்தி பிரதமராக பதவியேற்றார் (02.12.1989 வரை).

1995. இலங்கையின் வடபகுதியில் யாழ். மாவட்டத்தின் பிரிவான வலிகாமப் பகுதியிலிருந்து மக்கள் யுத்தம் காரணமாக தென்மராட்சி நோக்கி இடம் பெயர்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002. தாய்லாந்தின் நாக்ரோன் நகரில் இலங்கை அரசுக்கும் (ஐக்கிய தேசியக் கட்சி) தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே இரண்டாம் சுற்று பேச்சு வார்த்தைகள் ஆரம்பம். இப் பேச்சு வார்த்தையின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பிரதிநிதியான அன்ரன் பாலசிங்கம் ''தாங்கள் பொது அரசியலில் ஈடுபடுவதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்தார்''.

2009. யாழப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தினால் முதல்முறையாக இணைய வழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டது பீடாதிபதியாக பேராசிரியர் க. தேவராஜா அவர்களும் துனைவேந்தராக பேராசிரியர் நா. சண்முகலிங்கம் அவர்களும் நியமிக்கப்பட்டனர்.

2010. இசைப்புயல் A.R. ரஹ்மானுக்கு இந்திராகாந்தி ஒருமைப்பாட்டு விருது வழங்கி கௌரவிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர்

**நவம்பர் – 01**

1850. யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை ஆபத்துக்கு உதவும் வைத்திய சாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இதனை ஸ்தாபித்தவர் அரச அதிபராக இருந்த டைக் என்பவர் ஆவார் இவர் 09.10.1867ல் காலமானார்.

1904. இலங்கையின் வட மாகாணத்துக்கான தொடரூந்து சேவை ஆரம்பிக்கப் பட்டது. இது காங்கேசன்துறை - அநுராதபுரம் வரை சேவையில் ஈடுபட்டது.

1956. இந்தியாவில் மைசூர், கேரளம், மதராஸ் ஆகிய மாநிலங்கள் உருவாக்கப் பட்டன.

1956 இந்தியாவின் கன்னியாகுமாரி பிரதேசம் கேரள மாநிலத்தில் இருந்து பிரிந்து தமிழ் நாடு மாநிலத்துடன் புதிய மாவட்டமாக இணைந்து கொண்டது.

1957 உலகின் மிக நீளமான தொங்கு பாலமான மக்கினா பாலம் மிச்சிக்கன் மாநிலத்தில் அமைக்கப்பட்டது.

1973 இந்தியாவின் மைசூர் மாநிலம் கர்நாடக மாநிலமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1973. உலக அழகியும் நடிகையுமான ஐஸ்வர்யாராய் பிறப்பு.

1976. வெரித்தாஸ் வானொலி ஒலிபரப்பில் தமிழ்ப் பணி என்னும் பெயரில் தமிழ் ஒலிபரப்பு சேவை ஆரம்பிக்கப்பட்டது.

1981. கரிபியக் கடலில் அத்திலாந்திக் மாக்கடலின் எல்லையில் அமைந் துள்ள தீவு நாடான ''அன்டிகுவாவும் பர்படாவும்'' ஐக்கிய இராச்சியத் திடமிருந்து விடுதலையடைந்தது.

1987 இலங்கை இந்கிய ஒப்பந்தப்படி அரசியலமைப்பின் 13வது திருத்தம் உருவாக்கப்பட்டது.

1993. அரசியல் பொருளாதார நோக்கத்திற்காக ஐரோப்பிய ஒன்றியம் நிறுவப்பட்டது (The European Union) இதில் 27 நாடுகள் அங்கம் வகிக்கின்றனர்.

1996. இலங்கையின் முதலாவது ஜனாதிபதி. ஜீனியர் றிச்சாட் ஜயவர்த்தனா 90வது வயதில் இறப்பு (பிறப்பு 17.09.1906).

1998. மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999. இலங்கை இராணுவத்துக்கெதிராக தமிழீழ விடுதலைப் புலிகளினால் ''ஓயாத அலைகள் மூன்று'' நடவடிக்கையின் முதலாவது கட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந் நடவடிக்கை 10.11.1999 வரை நடைபெற்றது

2011 உலக சனத்தொகை எழுபது பில்லியனையடைந்தது. இலங்கையில் கொழும்பு காஷல் வீதியில் அமைந்துள்ள மருத்துவமனையில் அதி காலை 12.1 நிமிடத்துக்கு பிறந்த குழந்தை இந்த இலக்கையடைந்துள்ளது. 23 வயதுடைய டினுஷிகா என்ற பெண்ணுக்கே இக் குழந்தை பிறந்தது. உலகரீதியாக பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த டனிக்கா என்ற குழந்தையாகும்.

**நவம்பர் – 02**

1862. திருக்குடும்ப சகோதரிகளின் சபையானது இலங்கையில் முதற் பெண் துறவிகள் சபையாக யாழ் மண்ணில் தடம்பதித்தது.

1936. B.B.C நிறுவன தொலைக்காட்சி சேவை அறிமுகம்.

1936. கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது.

1950. ஐரிஷ் எழுத்தாளரும் நோபல் பரிசு பெற்றவருமான ஜோர்ஜ் பேர்னாட் ஷா இறப்பு (பிறப்பு 26.07.1856).

2000. சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு முதன்முதலில் விண்வெளி வீரர்கள் சென்றடைந்தனர்.

2007. இலங்கை வான்படையின் வான்குண்டுத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் உட்பட ஆறு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர் (பிறப்பு 1967).

2010. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கு பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் சிலை திறப்பு. லாக்சுடர்னோவ் நகரசபை உறுப்பினர் அந்தோனியோ ருசெல் திரை நீக்கம் செய்தார்.

**நவம்பர் – 03**

1618. இந்தியாவின் மொகாலய சக்கரவர்த்தி ஔரங்கசீப் பிறப்பு (இறப்பு 03.03.1707).

1913. ஐக்கிய அமெரிக்கா வருமான வரியை அறிமுகப்படுத்தியது.

1932. இலங்கை மட்டக்களப்பில் இந்திய அமைதிப்படைக்கு எதிராக சாகும் வரை உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த அன்னை புபதி பிறப்பு (இறப்பு 19.04.1988).

1957. உலகில் முதன் முதலில் மிருகம் ஒன்றை (லைக்கா நாய்) சோவியத் ஒன்றியம் ஸ்புட்னி - 2 விண் கப்பலில் விண்வெளிக்கு அனுப்பியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1963. திராவிட முன்னேற்ற கழக (தி.மு.க) செயற்குழு திராவிட நாடு, தனிநாடு கோஷத்தைக் கைவிடுவதாக அறிவித்தது.

1978. கரிபியன் கடலில் அமைந்திருக்கும் ஒரு தீவு நாடான "டொமினிக்கா" ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1988. இலங்கையின் தமிழ்க் குழுவான தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தினரால் மாலை தீவுகள் அரசை கைப்பற்ற எடுக்கப்பட்ட முயற்சி இந்திய இராணுவத்தினரால் 24 மணி நேரத்தில் முறியடிக்கப்பட்டது.

2001. இந்திய துடுப்பாட்ட வீரர் வீரேந்தர் சேவாக் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 105 ஓட்டங்களைப் பெற்று தனது முதல் டெஸ்ட் போட்டி சதத்தினைப் பெற்றுக் கொண்டார். இப்போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்தது.

2006. சர்வதேச கிரிக்கெட் சபையினால் மூன்றாவது Icc Awards விருது வழங்கும் நிகழ்வு இந்திய மும்பையில் நடைபெற்றது.

**நவம்பர் – 04**

1861. ஐக்கிய அமெரிக்காவின் வாஷிங்டன் மாநிலத்தின் அரசு சார்பு பல்கலைக் கழகமான வாஷிங்டன் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

1869. அறிவியல் இதழ் நேச்சர் முதற் தடவையாக வெளியிடப்பட்டது.

1921. ஜப்பானியப் பிரதமர் ஹரா தக்காஸி டோக்கியோவில் சுட்டுக்கொலை.

1946. ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ நிறுவனம் செயற்பட ஆரம்பித்தது.

1952 சர்வதேச சுங்க ஒத்துழைப்பு அமைப்பு அமைக்கப்பட்டது. 171 நாடுகள் அங்கத்துவமாக உள்ளது.

1967. நடிகர் எம்.ஜி. இராமச்சந்திரன் கொலை முயற்சி வழக்கில் நடிகர் எம்.ஆர். ராதாவுக்கு ஏழு ஆண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

**நவம்பர் – 05**

1861. அவுஸ்திரேலியாவில் மெல்பேர்னில் முதலாவது மெல்பேர்ன் கிண்ண குதிரைப் பந்தயப்போட்டி ஆரம்பமானது.

1913. ஐக்கிய இராச்சியம் சைப்பிரஸ் நாட்டை தன்னுடன் இணைத்துக் கொண்டது.

1999. இலங்கைப் படைகளுக்கெதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் தொடுத்த ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையின் முதலாவது கட்டம் ஏ-9 நெடுங்சாலையின் தெற்குப்புறமாக விளக்குவைத்த குளம் என்ற பகுதி கைப்பற்றப்பட்டதுடன் முடிவுக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006. 148 ஷியா முஸ்லீம்களை 1982இல் கொன்றதாக தொடரப்பட்ட வழக்கில் இடைக்கால ஈராக் அரசின் சிறப்பு நீதிமன்றம் முன்னாள் அதிபர் சதாம் ஹீசைனுக்கு மரண தண்டனை தீர்ப்பு அளித்தது.

**நவம்பர் – 06**

1860. ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் 16 வது ஜனாதிபதியாக தேர்ந் தெடுக்கப்பட்டார். இவரே குடியரசுக் கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட முதலாவது ஜனாதிபதியாவார்.

1861. கூடைப்பந்து கண்டுபிடிப்பாளர் ஜேம்ஸ் நெய்ஸ்மித் பிறப்பு (இறப்பு 28.11.1939).

1891. இலங்கை ஸ்டீம்ஷிப் கம்பனிக்கு சொந்தமான நீராவிக் கப்பல் லேடி ஹவ்லொக் முதன் முறையாக கொழும்பு வந்தடைந்தது.

1913. தென்னாபிரிக்காவில் மகாத்மா காந்தி இந்திய சுரங்கத் தொழிலாளர் களுடன் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட போது கைது செய்யப் பட்டார்.

2010. உலகின் மிகப் பெரிய இயேசு கிறிஸ்துவின் சிலை போலாந்தில் நிர்மாணம்.

2013 தமிழ்நாடு தஞ்சாவூரில் இலங்கையில் இறுதியுத்தம் நடைபெற்ற முல்லை மாவட்டத்தில் முள்ளி வாய்க்கால் நினைவு முற்றம் ப. நெடுமாறன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

2016. காலைக்கதிர் நாளிதழ் யாழ்ப்பாணத்தில் முதல்முதலாக வெளியீடு செய்யப்பட்டது. ஞாயிறு வாரமலராக இலவசமாக வெளியிடப்பட்டது.

**நவம்பர் – 07**

502 கடல் பயணியான கொலம்பஸ் ஹொண்டூரேஸ் கரையை அடைந்தார்.

1665. உலகின் பழமையானதும் இப்போதும் வெளிவரும் த லண்டன் கசெட் (The London Gazzette) முதலாவது இதழ் வெளியானது

1910. உலகின் முதலாவது விமான தபால் பொதி சேவை ரைட் சகோதரர் களால் ஓகையோவில் ஆரம்பிக்கப்பட்டது.

1917. ரஷ்யாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

1954. தென்னிந்திய திரைப்பட நடிகர் உலக நாயகன் கமல்ஹாசன் பிறப்பு.

1987. இலங்கை இந்திய தலைவர்கள் கைச்சாத்திட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்தும் கடப்பாட்டு ஒப்பந்தம் இரு நாட்டு தலைவர்களாலும் கைச்சாத்திடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL



1993. இந்திய ஆன்மீகவாதி திருமுருக கிருபானந்த வாரியார் இறப்பு (பிறப்பு - 1906)

**நவம்பர் – 08**

1680. இத்தாலிய தமிழறிஞர் வீரமா முனிவர் பிறப்பு (இறப்பு 04.02.1746).

1901. இலங்கையின் தமிழ் அரசியல் வாதியும் சட்ட மேதையும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஷ் கட்சியின் தலைவருமான ஜி.ஜி. பொன்னம்பலம் பிறப்பு (இறப்பு 09.12.1977).

1949 உலக நகர நிர்மான தினம் World Urban ISM Day

1987. நான்காவது உலகக்கிண்ண துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா அணியினர் 50 பந்து பரிமாற்ற நிறைவில் 05 விக்கட்டுக்களை இழப்பிற்கு 253 ஓட்டங்களை பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியினர் 50 பந்து பரிமாற்ற நிறைவில் 8 விக்கட்டுக்கள் இழப்பிற்கு 246 ஓட்டங்களை பெற்று 7 ஓட்டங்களினால் தோல்வியுற்றதால். முதலாவது தடவையாக உலகக்கிண்ணத்தை அவுஸ்ரேலியா அணியினர் கைப்பற்றினர். (08.10.1975 ஆரம்பமானது).

2016 அமெரிக்கா ஜனாதிபதித் தேர்தல் டொனால் ரம் வெற்றிபெற்று 4வது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

**நவம்பர் – 09**

1799. பிரெஞ்சுப் புரட்சி முடிவுக்கு வந்தது. மாவீரன் நெப்போலியன் பொனபர்ட் பிரான்சை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான்.

1859. பிரிட்டிஷ் இராணுவப் படையில் நடைமுறையில் இருந்து வந்த கசையடி தண்டனை முழுவதுமாக ஒழிக்கப்பட்டது.

1953. முற்காலத்தில் கம்புச்சியா என அறியப்பட்ட தென்கிழக்காசியா நாடான ''கம்போடியா'' பிரான்சிடமிருந்து விடுதலையடைந்தது.

1990. நேபாளத்தில் புதிய மக்களாட்சி அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப் பட்டது.

1994. இலங்கையின் மூன்றாவது நிறைவேற்று ஜனாதிபதித் தேர்தல் நடை பெற்றது. பொது ஜன ஐக்கியமுன்னனிக் கட்சியின் தலைவி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

2016 இந்தியாவில் பாவனையிலுள்ள ரூபா 1000/= ரூபா 500/= தாள் நாணயங்களை இந்திய அரசு சட்டபூர்வமாக தடைசெய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவம்பர் – 10** சர்வதேச அறிவியல் தினம்

1483. புரட்டஸ்தாந்து மதகுரு மார்னெ லூதர் பிறப்பு (இறப்பு 18.02.1546).

1919. ரஷ்யாவின் AK47 இயந்திர துப்பாக்கியை வடிவமைத்தவரான மிக்கையில் கலாஷ்னிகோவ் பிறப்பு. (இறப்பு 23.12.2013) AK47 அவதோமத் கலஷ்னிகோவா

1931. அணு குண்டு பற்றிய இரகசியங்களை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு.

1934. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் தேசப்பற்றாளர் பேராசிரியர் அ. துரைராஜா பிறப்பு. (இறப்பு 11.06.1994)

2006. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் வழக்கறிஞருமான நடராஜா ரவிராஜ் கொழும்பில் சுட்டுக்கொலை செய்யப்பட்டார் (பிறப்பு 25.05.1962).

2010. ஆசிய விளையாட்டுப் போட்டியில் 1000 தங்கப் பதக்கங்களை வென்று சீனா வரலாற்றுச் சாதனை.

2011. மாலைதீவில் 17வது சார்க் மாநாடு ஆரம்பமாகி நடைபெற்றது.

**நவம்பர் – 11**

1889. ஐக்கிய அமெரிக்காவின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள வாஷிங்டன் ஐக்கிய அமெரிக்காவின் 42வது மாநிலமாக இணைக்கப்பட்டது.

1918. ஐரோப்பாவில் உள்ள நாடான ''போலந்து'' ரஷ்ய அரசிடமிருந்து விடுதலையடைந்தது.

1918. முதலாவது உலகப் போர் முடிவுக்கு வந்தது.

1919. இலங்கையில் தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டது.

1933. ஆசியாவிலே பெரிய நூலகமான யாழ்ப்பாண பொது நூலகம் மு.ஆ. செல்லப்பாவினால் அமைக்கப்பட்டது.

1975. ஆபிரிக்காவின் மத்திய பகுதியின் தெற்கே அமைந்துள்ள நாடான ''அங்கோலா'' போர்த்துக்கல்லிடமிருந்து விடுதலையடைந்தது.

2004. பாலஸ்தீன விடுதலை இயக்க தலைவரான யாசீர் அரபாத் இறந்து விட்டதாக பாலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவித்தது (பிறப்பு 24.08.1929).

2010. அவுஸ்திரேலிய மண்ணில் முதல் முறையாக இலங்கை கிரிக்கெட் அணி ஒருநாள் தொடரை 2:1 என்ற ரீதியில் வெற்றி கொண்டது.

2010. பாகிஸ்தான் பொலிஸ் குற்றவியல் புலன் விசாரனை தலைமையகத்தின் மீது நடாத்திய குண்டுத்தாக்குதலில் 20 பேர் பலியான தோடு 100 பேர் படுகாயமடைமந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவம்பர் – 12**

1817. பஹாய் சமயத்தை தோற்றுவித்த பஹாவுல்லா பிறப்பு (இறப்பு 29.05.1892).

1847. சத்திர சிகிச்சையின் போது முதன் முதலில் குளோரோபோர்ம் பயன்படுத்தப்பட்டது.

1918. ஐரோப்பாவில் உள்ள நாடான ஆஸ்திரியா குடியரசு நாடாகியது.

1927. மகாத்மா காந்தி இலங்கைக்கான தமது முதலாவதும் இறுதியுமான பயணத்தை மேற்கொண்டார்.

1947. இலங்கை நாடாளுமன்றத்தில் மேலவையான இலங்கை செனட் சபை (Senate of Ceylon) முதல் தடவையாக கூடியது.

1989. தென்னிலங்கையின் உலப்பனையில் தமது தோட்ட வீட்டில் மறைந்திருந்த மக்கள் விடுதலை முன்னணி தலைவர் (J.V.P.) றோகண விஜேவீரா கைதானார்.

1994. இலங்கையின் 4வது நிறைவேற்று ஜனாதிபதியாக சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கா பதிவியேற்றார் (நவம்பர்.19. 2005 வரை). சுதந்திரகட்சி.

2001. இந்து சமய அமெரிக்க ஆன்மீகவாதி சத்குரு சிவாய சுப்ரமணிய சுவாமி இறப்பு (பிறப்பு- 05.01.1927).

2009. இலங்கையின் Prime தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டது.

2013. சனல்4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர் கலும் மக்ரே இலங்கைக்கு விஜயம்.

**நவம்பர் – 13** ✱ உலக அன்பு தினம்

1848. முதன் முதலாக பெண்கள் உரிமைகள் மகாநாடு நியூயோர்க்கில் நடைபெற்றது.

1927. 1924ம் ஆண்டு அரசியல் அமைப்பில் காணப்பட்ட குறைபாடுகளை உணர்ந்த தேசாதிபதி ஹியுகினி பேட்டின் சிபார்சிக்கமையவும் தேசிய காங்கிரஸ் மற்றும் தேசிய தலைவர்களின் கோரிக்கையை அடுத்தும் டொனமூர் குழுவினர் இலங்கை வருகை.

1935. தென்னிந்தியத் திரைப்படப்பின்னனி பாடகி பி. சுசீலா பிறப்பு.

1989. தென்னிலங்கையில் உலப்பனையில் தனது தோட்ட வீட்டில் முதல் நாள் கைது செய்யப்பட்டமக்கள் விடுதலை முன்னணியின் (J.V.P.) தலைவர் றோகண விஜயவீர இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப் பட்டார் (பிறப்பு 14.07.1943).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990. உலக வலைப்பின்னல் (www) ஆரம்பிக்கப்பட்டது.

1994. ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய சுவீடன் முடிவு.

2010. சுமார் 15 வருடங்களாக வீட்டுக் காவலில் அடைத்து வைக்கப்படடிருந்த மியான்மார் ஜனநாயக ஆதரவுக் கட்சித் தலைவி ஆங்சான் சூகி விடுதலை செய்யப்பட்டார்.

2012. மியான்மார் எதிர்க்கட்சித் தலைவி ஆங் சாங் சூகி 40 ஆண்டுகளுக்குப் பின் இந்தியா பயணம்.

2013- இலங்கையில் பொதுநலவாய மாநாடு நவம்பர் 13 முதல் நவம்பர் 15 வரை நடைபெற்றது.

**நவம்பர் – 14**

1918. செக்கோஸ்லாவோக்கியா குடியரச நாடாகியது.

1987. இலங்கையின் அரசியலமைப்பின் 13வது திருத்த சட்டமூலத்துக்கு அமைவாக தமிழ் மொழி அரச கரும மொழியாகவும் ஆங்கில மொழி இணைப்பு மொழியாகவும் இருத்தல் வேண்டுமென்று அமுல்ப்படுத்தப் பட்டது.

1994 கடல் எல்லை தொடர்பாக சர்வதேச சமுத்திர சட்டம் உலகம் முழுவதும் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் வகையில் 1982-12-10 திகதி முதல் இலங்கையும் கைச்சாத்திட்டது.

1996. இந்திய தமிழ் நாட்டு பல்கலைக்கழகங்களில் ஒன்றான டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

1994. இலங்கையில் 7வது பிரதமராக சிறிமாவோ ரத்வத்தை பண்டாரநாயக்க பதவியேற்பு 10.08.2000 வரை.

2012. இஸ்ரேல் பலஸ்தீன காஷா நகரில் நடத்திய வான் தாக்குதலில் ஹமாஸ் போராளிகளின் குழுவின் பிராந்திய உயர்மட்ட இராணுவக் கட்டளைத் தளபதியான அஹ்மட் ஜபாரி கொல்லப்பட்டார்.

2004 இலங்கையின் 4வது அதி வேக வீதியின் நிர்மாணப் பணிகள் 10 மணிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் ஆரம்பிக்கப்பட்டது. 300 கிலோமீற்றர் தூரம். 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்.

**நவம்பர் – 15**

1505. போர்த்துக்கேய மாலுமியும் நாடுகாண் பயணியுமான லோரன்ஸ் டி அல்மெய்டா, கொழும்பை வந்தடைந்து ஐரோப்பியக் குடியேற்றத்தை ஆரம்பித்தார்.

1889. தென் அமெரிக்காவில் மிகப் பெரியதும் மிகுந்த மக்கள் தொகை கொண்டதும் மற்றும் பரப்பளவின் அடிப்படையிலும் மக்கள் தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலும் உலகிலேயே ஐந்தாவது பெரிய நாடான "பிரேசில" குடியரசானது.

1948. இலங்கை பிரித்தானியரிடமிருந்து விடுதலை பெற்றதும் குடிமக்கள் யாரென வரையறுப்பதற்காக இலங்கை குடியுரிமைச் சட்டம் ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

1948. மலையகத் தமிழர்களது வாக்குரிமை மற்றும் குடியுரிமை பறிக்கப் பட்டது.

1949. நாதுராம் கோட்சே, நாராயண் ஆப்டே ஆகியோர் மகாத்மா காந்தியைக் கொலை செய்ததற்காகத் தூக்கிலிடப்பட்டனர்.

1987. 6வது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு கோலலம்பூரில் நடைபெற்ற (15-19).

1988. பாலஸ்தீன நாடு பாலஸ்தீன கவுன்சிலால் அறிவிக்கப்பட்டது.

2007. ஐக்கிய அமெரிக்காவில் தமிழர் புனர் வாழ்வுக்கழகம் (TRO) தடை செய்யப்பட்டதோடு சொத்துக்களும் முடக்கப்பட்டது.

2009. இந்திய துடுப்பாட்ட வீரர் சச்சின் ரமேஷ் டெண்டுல்கர் இருபதாண்டு களை சர்வதேச கிரிக்கெட்டில் நிறைவு செய்தார்.

2010. சீனா குடியிருப்பு மாடிக்கட்டடத்தில் தீ அனர்த்தம் ஏற்பட்டதில் 53 பேர் பலி.

2010. இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பதவியேற்பை முன்னிட்டு 11 நிமிடங்களில் 11 இலட்சம் மரக்கன்றுகளை நடும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2012. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது வருட பதவியேற்பு நிகழ்வையும் 67வது பிறந்த தினத்தையும் முன்னிட்டு நாடு பூராகவும் சுமார் 11 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டதாக சுற்றாடல் அமைச்சு தெரிவிப்பு.

2012. இலங்கையின் மாகாண ஆளுநர்களின் 15வது மாநாடு யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் கோலாகலமாக நடைபெற்றது.

2013. 24வது பொதுநலவாய மாநாடு இலங்கையில் 15 நவம்பர் வரை நடைபெற்றது.

2013. இலங்கையில் பொதுநலவாய ஞாபகார்த்தமாக புதிய 500 ரூபா தாள் வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவம்பர் – 16** ✱ உலக சகிப்புத்தன்மை தினம் (International Day for Tolerance) - மக்களிடையே சகிப்புணர்வின்மையின் பயங்கரமான விளைவுகளையும் சகிப்புத்தன்மை மற்றும் அகிம்சையின் தேவையை அவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக உலக சகிப்புத்தன்மை தினம் கொண்டாடப்படுகின்றது.

1846. இலங்கையில் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது.

1945. ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய துணை நிறுவனங்களில் ஒன்றான ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு (Unesco) ஆரம்பிக்கபட்டது.

2002. சார்ஸ் நோய் முதன் முதலில் சீனாவில் கண்டறியப்பட்டது.

2012. ரயில் பாதை அமைக்கும் பணிகள் யாழ்ப்பாண குடா நாட்டில் ஆரம்பம். இத்திட்டம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு சுமார் பத்து மாத இடைவெளியின் பின்னர் செயற்பாட்டுக்கு வந்துள்ளது.

**நவம்பர் – 17** ✱ அனைத்துலக மாணவர் தினம் (International Student Day) - 1939 ஆம் ஆண்டில் இதே நாளில் செக்கோசில வாக்கியாவின் தலைநகர் பிராக்கில் சார்ல்ஸ் பல்கலை கழகத்தில் இடம்பெற்ற மாணவர் போராட்டம் நாசிப் படைகளினால் நசுக்கப்பட்டமை போராட்டத்தின் முடிவில் ஜான் ஓப்ளெட்டல் மற்றும் ஒன்பது மாணவ தலைவர்கள் தூக்கிலிடப்பட்டமை செக்கோசிலவாக்கியா ஆக்கிரமிப்புக்குள்ளாமை போன்ற நிகழ்வுகளின் ஞாப கார்த்தமாக ''அனைத்துலக மாணவர் தினம்'' கொண்டா டப்படுகின்றது.

1831. ஈக்குவடோர் மற்றும் வெனிசுவேலா ஆகியன கொலாம்பியாவில் இருந்து பிரிந்தன.

1869. மத்திய தரைக்கடலையும் செங்கடலையும் இணைக்கும் சுயஸ் கால்வாய் திறக்கப்பட்டது. இதன் மூலம் ஐரோப்பாக் கண்டத்திலிருந்து ஆசியா விற்கான கப்பல் போக்குவரத்து வெகுவாகச் சுருக்கமடைந்தது.

1880. பிரிட்டன் லண்டன் பல்கலைகழகத்தில் முதன்முதலாக 3 பெண்களுக்கு B.A பட்டம் வழங்கப்பட்டது.

1920. தென்னிந்தியத் திரைப்பட நடிகர் ''காதல் மன்னன்'' என்றழைக்கப் படும் ஜெமினி கணேசன் பிறப்பு (இறப்பு 22.03.2005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1933. ஐக்கிய அமெரிக்கா சோவியத் ஒன்றியத்தை அங்கீகரித்தது.

1950. 14ஆவது தலாய்லாமா டென்சின் கியாட்சோ தனது 15ஆவது வயதில் திபெத்தின் அரசுத் தலைவரானார்.

1957. கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் இலங்கை அரசுக்கு சொந்தமானது.

1970. "லூனா கோடி" எனும் முதலாவது ஆளற்ற விண்வெளி ஓடம் சந்திரனில் தரை இறங்கியது

2003. ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தின் ஆளுநராக ஆர்னோல்ட் ஸ்வார்செனேகர் பதவியேற்பு

2009. ஈழத்து இலவச இணைய செய்தி நிறுவனமான "புதினப் பலகை" ஆரம்பிக்கப்பட்டது.

2010. இலங்கையின் தேசிய உணவாக பாற்சோறு பிரகடனப்பத்தப்பட்டது.

2012 முதல் முறையாக இலங்கை இராணுவத்துக்கு தமிழ்ப் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

2014 இலங்கையில் 25 மாவட்டங்களையும் இணைத்ததாக 25 மாவட்டங்களுக்கும் தனித்தனியாக பத்து ரூபா நாணயக்குற்றிகள் வெவ்வேறு வெளியிடப்பட்டுள்ளது.

**நவம்பர் – 18**

1477. இங்கிலாந்தில் அச்சிடப்பட்ட முதலாவது நூலான "Dictes or Sayengis of the Philosophres" வில்யம் கக்ஸனால் வெளியிடப்பட்டது.

1883. அமெரிக்கக் கண்ட நாடுகளை கனடாவும் ஐக்கியஅமெரிக்காவும் ஒரே நேர எல்லைகளை வகுத்துக் கொண்டன.

1923. விண்வெளிக்குச் சென்ற முதலாவது அமெரிக்கர் அலன் ஷெப்பர்ட் பிறப்பு (இறப்பு 21.07.1998).

1936. கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம்பிள்ளை இறப்பு (பிறப்பு 11.12.1872).

1945. இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டை விரகொட்டிய என்ற இடத்தில் பிறப்பு.

1981 இலங்கையில் குடும்ப நீதி மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1991. தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ காவல்துறையினர் முதலாவது அணிப் பயிற்சி முடிந்து வெளியேறினர்.

2002 சென்னையில் புறநகர் பேரூந்து சேவைக்கான புதிய பேரூந்து நிலையம் கோயம்பேடு என்ற இடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

2007. பலஸ்தீனத்தில் நகர சபைக்குட்பட்ட வீதிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பெயர் அவரின் பிறந்த நாளில் சூட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜப்பான் நாட்டு மக்களின் கலாசாரம்

2009. இலங்கை தொலைக்காட்சி சேவையான N Tv ஆரம்பிக்கப்பட்டது.

2010. இலங்கையில் ஹம்பாந்தோட்டையில் உள்ள மாகம்புர என்னும் இடத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் செயற்கை துறைமுகம் சீனாவின் உதவியுடன் திறக்கப்பட்டது.

2015 இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை நீக்கம் . புதிய தேர்தல் முறைமை அறிமுகம் ஆகியவற்றுக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்தது.

**நவம்பர் – 19** ✸ உலக மலசல கூட தினம்

1835. இந்தியா ஜான்சி நாட்டின் ராணி லட்சுமிபாய் பிறப்பு (இறப்பு 17.06.1858).

1917. இந்தியா பிரதமர் ஜவஹர்லால் நேருவின் மகளாக இந்திரா பிரிய தர்சினி காந்தி அகலகாபாத் ஆனந்த பவனில் பிறப்பு (இறப்பு 31.10.1984).

1946. ஆப்கானிஸ்தான் ஐஸ்லாந்து சுவீடன் ஆகியன ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் இணைந்து கொண்டன.

1976. அமெரிக்க மென் பொருள் வடிவமைப்பாளரும் தொழிலதிபரும் மற்றும் டிவிட்டர் (Twitter) இலவச சமூக வலைத்தளத்தின் இயக்குனரு மான ஜேக் டோர்சே ஐக்கிய அமரிக்க செயின்ட்லூயிஸ் நகரில் பிறப்பு.

1988 இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றது. வரதராசப் பெருமாள் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டார்.

1991. தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ காவல்துறை ஆரம்பம்.

1994. தென்ஆபிரிக்காவில் நடைபெற்ற உலக அழகிப்போட்டியில் இந்திய அழகி ஐஸ்வர்யாராய் வெற்றி பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005. இலங்கையில் ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. நிறைவேற்று ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ச பதவியேற்பு.

2006. ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ச பதவியேற்றதன் முதலாம் ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமாக வீரவல சர்வதேச விமான நிலையத்திற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் அடிக்கல் நாட்டப்பட்டது.

2008. ஸ்கொட்லாந்துக்கு எதிராக க்ளாக்ஸ்கோவ் நகரின் ஹம்வ் டென் பார்க் என்ற இடத்தில் முதன்முறையாக ஆர்மேண்டோ மரடோனா பயிற்சியாளராக கடமையாற்றியிருந்தார். இப் போட்டியில் ஆர்ஜென்டினா 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இம் மைதானத்தில்தான் ஆர்மேண்டோ மரடோனா 1979ம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் தனது முதல் கோலை அடித்தது குறிப்பிடத்தக்கது.

2008. தென்னிந்திய திரைப்பட நடிகர் M.N. நம்பியார் இறப்பு (பிறப்பு 21.05.1919).

2010. இலங்கை ஜனநாயக சோசலிய குடியரசின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆறாவது ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவிப் பிரமாணம்.

**நவம்பர் – 20**

1917. ஐரோப்பா கண்டத்தில் உள்ள நாடான உக்ரேன் குடியரசாக அறிவிக்கப் பட்டது.

1967. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட "ரோஹினி" என்ற முதல் ராக்கட் தும்பாலிலிருந்து ஏவப்பட்டது.

1989 சர்வதேச சிறுவர் சாசனம் 139 நாடுகள் ஒன்று சேர்ந்து ஜெனிவாவில் கைச்சாத்து.

1998. இலங்கையில் சக்தி FM வானொலி ஆரம்பிக்கப்பட்டது.

1999. மன்னார் மடு தேவாலயம் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

**நவம்பர் – 21** ✱ உலக தொலைக்காட்சி தினம் (World Television Day) - உலக நாடுகள் அமைதி பாதுகாப்பு பொருளாதாரம் சமூக மாற்றங்கள் மற்றும் தமது கலை கலாசார தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை தமக்கிடையே பரிமாற்றிக் கொள்ள உலக தொலைக்காட்சி தினம் கொண்டாடப்படுகின்றது.

1791. மாவீரன் நெப்போலியன் பொனபார்ட் பிரெஞ்சு இராணுவத்தின் தளபதியானார்.

1818. கண்டிப் பிரகடனம் 56 வாசகங்களை உடையதாக வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1877. ஒலியைப் பதியவும் கேட்கவும் உதவக்கூடிய போம்னாகிராப் என்ற கருவியை தாம் கண்டுபிடித்ததாக தோமஸ் அல்வா எடிசன் அறிவித்தார்.

1936. உலகின் முதல் தொலைக்காட்சி லண்டனில் தொடங்கப்பட்டது.

1947. இந்தியா விடுதலை அடைந்த பின்னர் முதன் முறையாக அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. ஜெய் ஹிந் என்ற வார்த்தையுடன் வெளியிடப் பட்ட முதல் அஞ்சல் தலையின் விலை மூன்றரை அணா.

1990. தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடி 1977ம் ஆண்டு தொடக்கம் இருந்து வருகின்றது. ஆனால் தமிழீழ விடுதலைப் போரில் மரண மடைந்தவர்களை நினைவு கூர்ந்த இரண்டாவது மாவீரர் நாளில் முதல் தடவையாக தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனது பாசறையில் ஏற்றி வைக்கப்பட்டது.

1990. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் மாவீரர் நாள் வாரம் தொடங்கும் நாளன்று ''புலிகளின் குரல்'' ஈழ வானொலி ஆரம்பிக்கப்பட்டது.

2005. இலங்கையின் 11வது பிரதமராக இரத்தின சிறிவிக்கிரம நாயக்க பதவிற்பு 21.04.2010 வரை

2012. 26.11.2008ம் ஆண்டு நடைபெற்ற மும்பைத் தொடர் குண்டுத் தாக்குதல் குற்றவாளியான அஜ்மல் கசாப் 7.30 மணிக்கு இந்திய புனேயில் உள்ள ஏர்வாடா சிறையில் தூக்கிலிடப்பட்டார்.

**நவம்பர் – 22**

1908. அல்பேனிய எழுத்துக்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.

1943. மத்திய கிழக்கில் அமைந்துள்ள ஓர் சிறு நாடான லெபனான் பிரான்சி டமிருந்து விடுதலையடைந்தது.

1951. ''நமோ நமோ மாதா'' எனத் தொடங்கும் இலங்கை தேசிய கீதத்துக்கு முறைப்படியான அங்கீகாரம் கிடைத்தது.

1956. 16வது ஒலிம்பிக் போட்டிகள் அவுஸ்திரேலிய மெல்பேர்ன் நகரில் கோலாகலமாக ஆரம்பம். 08.12.1956வரை நடைபெற்ற இப்போட்டி யில் சோவியத் யுனியன் 37 தங்கம், 29 வெள்ளி, 32 வெண்கலமாக மொத்தம் 98 பதக்கங்களை சுவீகரித்து பதக்கப் பட்டியலில் முதலிடத் தையும் ஐக்கிய அமெரிக்க 32 தங்கம், 25 வெள்ளி, 17 வெண்கலம் உட்பட மொத்தம் 74 பதக்கங்களையும் அவுஸ்ரேலிய 13 தங்கம், 8 வெள்ளி, 14 வெண்கலம் உட்பட மொத்தம் 35 பதக்கங்களையும் சுவீகரித்து பதக்கப்பட்டியலில் முறையே இரண்டாம், மூன்றாம் இடங் களை தக்கவைத்துக் கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1963. அமெரிக்காவின் 35வது குடியரசுத்தலைவர் ஜோன்.எவ். கெனடி இறப்பு (பிறப்பு 29.05.1917).

1974. ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் பார்வையாளர் அந்தஸ்தை பெற்றது.

1976. இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் மு. திருச்செல்வம் இறப்பு (பிறப்பு 1907).

2005. ஜேர்மனியின் முதலாவது பெண் அதிபராக (சான்சிலர்) ஏங்கலா மேர்க்கெல் தெரிவு செய்யப்பட்டார்.

2007. இலங்கை அரசு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு தடைவிதித்தது.

**நவம்பர்** – 23

1926. தென்னிந்திய ஆன்மீக குரு சத்திய சாயிபாபா ஆந்திர மாநிலத்தில் புட்டபத்தியில் பிறப்பு (இறப்பு 24.04.2011).

1971. மக்கள் சீன குடியரசின் பிரதிநிதிகள் முதல் தடவையாக ஐக்கிய நாடுகள் அவையில் சீனாவுக்காக பிரதிநிதித்துவப்படுத்தியது.

1978. இலங்கை கிழக்கு மாகாணத்தில் பெரும் சூறாவளி தாக்கி பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.

1990. தமிழீழ விடுதலைப் புலிகள் மாங்குளம் இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தி அதனை முழுமையாகக் கைப்பற்றினர்.

2007. இந்திய தமிழ் நாட்டில் அரியலூர் மாவட்டம் உருவாக்கப்பட்டது.

2009. இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷாவின் முதலாவது ஆட்சிக் காலம் (2011) நிறைவடைவதற்கு முன்னதாகவே புதிய ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு நாள் அறிவிக்கப்பட்டது.

**நவம்பர்** – 24

1859. சார்ல்ஸ் டார்வின் ''உயிரினங்களின் தோற்றம்'' என்னும் நூலை வெளியிட்டார். இப்பிரதிகள் முதல் நாளிலேயே விற்பனையாகின.

1910 சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 21 ஆக அதிகரிக்கப்பட்டது.

1950 கல்லோயா அபிவிருத்திச் சபை நிறுவப்பட்டது.

1963. அமெரிக்காவின் 35வது ஜனாதிபதி ஜோன் எப் கென்னடியை சுட்டுக் கொன்றதாக கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டிருந்த லீ ஹார்வி ஆவோல்ட் சிறையில் சுட்டுக்கொலை.

1969. சந்திரனுக்கு சென்ற அப்பலோ விண்கலம் 3 விண்வெளி வீரர்களுடன் பசுபிக்கடலில் பாதுகாப்பாக இறங்கியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KO JP

1992. யாழ்ப்பாணம் பலாலி வான் படைத்தளத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ வேலி தமிழீழ விடுதலைப் புலிகளால் தகர்க்கப் பட்டது.

**நவம்பர் – 25** ✱ பெண்களுக்கு எதிரான அனைத்துலக வன்முறை ஒழிப்பு தினம் (International Day for the Elimination of Violence Against Women) - பெண்களுக்கு எதிரான வன்முறைகளை வெளி உலகிற்கு காட்டி அதற்கான நியாயமான தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்காக பெண்களுக்கு எதிரான அனைத்துலக வன்முறை ஒழிப்பு தினம் கொண்டாடப்படுகின்றது.

1865 கொழும்பு மாநகரசபை நிறுவப்பட்டது.

1975. தென் அமெரிக்காவின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள நாடான சுரிநாம் நெதர்லாந்திடமிருந்து விடுதலையடைந்தது.

1984. 1000வது சர்வதேச துடுப்பாட்ட (Test Much) போட்டி பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கிடையில் ஆரம்பம். 29.11.1984 வரை நடைபெற்ற இப் போட்டியில் பாகிஸ்தான் அணி 7விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

1992. செக்கோ ஸ்லோவாக்கியாவின் நாடாளுமன்றம் நாட்டை செக்குடியரசு ஸ்லோவாக்கியா என இரண்டாக 1993ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து பிரிக்க முடிவெடுத்தது.

2008. வங்களா விரிகுடாவில் ஏற்பட்ட ஏழாவது புயலான நிஷாப் புயல் இலங்கையையும் இந்தியாவையும் தாக்கியது.

2016 பிடல்காஸ்ரோ இன்று வெள்ளிக்கிழமை இரவு 90 வயதில் இரைப்பை கோளாறினால் இறப்பு (13.8.1926)

**நவம்பர் – 26**

1930. இலங்கை தமிழ் தலைவர் சேர்.பொன் இராமநாதன் இறப்பு (பிறப்பு 16.04.1851)

1941. பிரான்சிடமிருந்து லெபனான் ஒருதலைப்பட்சமாக விடுதலையைப் பிரகடனப்படுத்தியது.

1949. இந்திய அரசியல் சட்டம் நிர்ணயம் செய்யப்பட்டது.

1954. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பிறப்பு.

1979 ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து 21 ஆண்டுகள் ஒதுக்கி வைக்கப்பட்ட சீனா மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007. தமிழீழ விடுதலைப் புலிகளின் வானொலி நிலையத்தை இலங்கை இராணுவம் குண்டு வீசி தாக்கியது.

2008. பாகிஸ்தானிலிருந்து இயங்கிவரும் லஸ்-தொய்பா தீவிரவாதிகள் இந்தியா மும்பையில் புகுந்து முக்கிய இடங்களை தாக்கியதில் 166 பேர் கொல்லப்பட்டனார்.

**நவம்பர் – 27**

1895. பாரிசில் நோபல் பரிசினை அறிமுகப்படுத்தியவரான ''அல்பிரட் நோபல்'' நோபல் பரிசுக்கான திட்டத்தை தெரிவித்து தனது சொத்துக் களை அப் பரிசுக்கான மூலதனமாக அறிவித்தார்.

1935. இலங்கை இரத்மலான விமான நிலையத்தில் முதலாவது விமானம் மதராசில் (சென்னை) இருந்து வந்து இறங்கியது. (இவ்விமான நிலையமே இலங்கையின் ஒரேயொரு சர்வதேச விமான நிலைய மாக முன்னர் இருந்தது மற்றும் இதன் ஒடுபாதை 1833m நீளமானது.)

1985. யாழ்ப்பாணத்தில் தமிழ் தினசரி பத்திரிகை உதயன் வெளிவர ஆரம்ப மானது.

1998. மாவீரர் தின உரையின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வான் புலி படைப்பிரிவு தொடர்பான முதல் அதிகாரப்பூர்வமான அறிவிப்பை வெளியிட்டார். அந்நிகழ்வின் போது வான் புலிகளுக்கு சொந்தமான வான் கலத்திலிருந்து பூக்கள் தூவப்பட்டதாக நேரில் பார்த்தவர்களுடைய அனுபவங்கள் பதிவு செய்யப்பட்டன.

2006. கனடாவில் பிரெஞ்சு மொழி பேசும் மக்களை பெரும்பான்மையாக கொண்டகியூபெக் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தனியான ''தேச இனம்'' என்ற அங்கீகாரத்தை கனடிய நாடாளுமன்றம் வழங்கியது.

2010. பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி ஸர்தாரி நான்கு நாட்கள் விஜயமாக இலங்கை வருகை

2010. இந்திய வெளிவிகார அமைச்சர் கிருஷ்ணா இலங்கைக்கான இந்திய தூதுவராலயத்தின் பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் திறந்து வைப்பு.

2011. தலைநகர் கொழும்பு ஹொட்டாவையிலிருந்து - காலி பின்னத்துவ வரை நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது அதிவேக நெடுஞ்சாலை (95.3 நீளம் கொண்டது) ஜனாதிபதி மகிந்த ராஜபக்சா வினால் திறக்கப்பட்டது.

2012. இலங்கை தனது முதலாவது செய்மதியான சுப்றீம் செட்-1 ஐ சீனா விலிருந்து விண்ணுக்கு அனுப்பியது. இதற்கான செலவு ரூபா 4200

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி (42000 மில்லியன்) இலங்கை பெறுமதியாகும். இதற்கான நிதியை சீனா கடனாக வழங்கியது. இவ் செய்மதியை அனுப்பியதன் மூலம் தெற்காசியாவில் மூன்றாவது நாடாகவும் உலகில் 45வது நாடாகவும் இடம்பிடித்துள்ளது.

2015. கிறிக்கற் வரலாற்றில் முதல் முறையாக இரவு பகல் ரெஸ் போட்டி இலங்கையில் நடைபெற்றது.

**நவம்பர் – 28**

1893. நியூசிலாந்தில் முதல் முறையாக பெண்கள் வாக்களித்தனர்.

1821. மத்திய அமெரிக்காவின் தென் முனையில் அமைந்துள்ளதும் தரை வழியாக மத்திய அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் இணைக்கும் கடைசி மத்திய அமெரிக்கா நாடான ''பனாமா'' எசுப்பானியாவிடமிருந்து விடுதலையடைந்தது.

1893. காவாய் இராச்சியத்தை ஐக்கியஇராச்சியம் மற்றும் பிரான்ஸ் நாடு ஆகியன விடுதலை அடைந்த தனிநாடாக அங்கீகரித்தன.

1912. தென் கிழக்கு ஐரோப்பா நாடான அல்பேனியா உதுமேனிய பேரரசுடமிருந்து விடுதலையடைந்தது.

1960. வடமேற்கு ஆபிரிக்க நாடான மவுரித்தேனியா பிரான்சிடமிருந்து விடுதலையடைந்தது.

1995. சாத்தானின் கவிதைகள் என்னும் நூலை எழுதியதால் ஈரானில் மரண தண்டனை வழங்கப்பட்ட இந்தியா வம்சாவளி எழுத்தாளர் சல்மான் ருஸ்டி தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

**நவம்பர் – 29**

1877. தோமஸ் அல்வா எடிசன் போனோகிராப் என்ற ஒலிப்பதிவுக் கருவியை முதற்தடவையாகக் காட்சிப்படுத்தினார்.

1908. தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகர் கலைவாணர் N.S. கிருஸ்ணன் பிறப்பு (இறப்பு 30.08.1957).

1947. பலஸ்தீனத்தை பிரிப்பதென ஐக்கிய நாடுகள் பொதுச்சபை முடிவெடுத்தது.

1978. திரு.J.P.O. சில்வா தலைமையில் தேர்தல் தொகுதி வரையறை ஆணைக் குழு ஒன்று ஜனாதிபதி J.R. ஜயவர்த்தனாவால் அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவம்பர் – 30** ✱ உலக கணிணி பாதுகாப்பு தினம்

1872. உலகின் முதலாவது அனைத்துலக காற்பந்துப் போட்டி ஸ்கொட்லாந்தில் உள்ள மிகப் பெரிய நகரான கிளாஸ்கோவில் ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் இடம்பெற்றது.

1874. ஐக்கிய இராச்சியத்தின் பிரதமரும் நோபல் பரிசு பெற்றவரான சேர். வின்சன்ட் சர்ச்சில் பிறப்பு (இறப்பு 24.01.1965).

1917. முதலாம் உலகப் போரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த R. ஐயாத்துரை என்ற லான்ஸ் கோப்ரல் போரில் ஈடுபட்டு இறப்பு.

1923. தமிழ் நாட்டு முதலமைச்சரும் நடிகருமான M.G. இராமச்சந்திரனின் மூன்றாவது மனைவியான நடிகையும் அரசியல்வாதியுமான ஜானகி இராமச்சந்திரன் பிறப்பு (இறப்பு 19.05.1996).

1936. லண்டனில் ஹைட் பார்க் நகரில் அமைந்துள்ள பளிங்கு அரண்மனை தீயினால் அழிந்தது.

1962. பர்மாவைச் சேரந்த யூ தாண்ட் ஐக்கிய நாடுகள் சபையின் மூன்றாவது செயலாளர் நாயகமாக தெரிவு செய்யப்பட்டார்.

1966. கரிபியக்கடலுக்கு கிழக்குத் திசையில் அந்திலாந்திக் மாக்கடலில் அமைந்துள்ள தீவு நாடான ''பார்படோஸ'' ஐக்கிய இராச்சியத்திட மிருந்து விடுதலையடைந்தது.

1967. தெற்கு ஜேர்மன் ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

2010. 'Oxford' பல்கலைக்கழகத்தின் விசேட அழைப்பின் பேரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டன் விஜயம் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர்

**டிசம்பர்–01** ✸ உலக எய்ட்ஸ் தினம் - எய்ட்ஸ் நோய் மற்றும் அதன் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உலக எய்ட்ஸ் தினம் கொண்டாடப்படுகின்றது.

1640. ஐரோப்பா கண்டத்தின் தென்மேற்குப்பகுதியில் அமைந்துள்ள நாடான போர்த்துக்கல் ஸ்பெயினிடமிருந்து விடுதலையடைந்தது.

1875. வேல்ஸ் இளவரசர் (இங்கிலாந்தின் ஏழாம் எட்வேர்ட் மன்னர்) தலைநகர் கொழும்பு வந்தார்.

1918. வடக்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள தீவான ஐஸ்லாந்து டென்மார்கிடமிருந்து விடுதலையடைந்தது.

1958. மத்திய ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடான மத்திய ஆபிரிக்க குடியரசாகியது.

1963. இந்தியாவின் வடகிழக்குப்பகுதியில் அமைந்துள்ள மாநிலமான ''நாகலாந்து'' இந்தியாவின் 16வது மாநிலமானது

1965. இந்தியாவில் எல்லை காவல் படை அமைக்கப்பட்டது

1973. இஸ்ரேலின் முதல் பிரதமர் டேவிட் பென் குயின் இறப்பு (பிறப்பு 16.10.1886).

1981. எயிட்ஸ் நோய்க் கொல்லி அதிகாரபூர்வமாக கண்டறியப்பட்டது

*தொலைக்காட்சிச் சேவைகள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988. உலக எயிட்ஸ் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது (சிவப்பு நாடா சின்னம்).

1989. 7வது உலகத் தமிழாராச்சி ஆபிரிக்காவில் நடைபெற்றது (1-8) வரை

1990. பிரிட்டனையும் பிரான்சையும் இணைக்கும் கடல் சுரங்கப் பாதையை இரு பகுதிகளிலிருந்தும் தோண்டியபடி வந்த பிரிட்டன் பிரான்ஸ் ஊழியர்கள் சந்தித்துக் கொண்டதன் மூலம் சுரங்கப் பாதை தோண்டும் பணி நிறைவு.

1990. ஜவர்ஹலால் நேருவின் சகோதரியும் ஐக்கிய நாட்டின் முதல் பெண் தலைவியுமான அறிவுலக மேதை விஜயலட்சுமி நேரு பண்டிட் இறப்பு (பிறப்பு-18.08.1900).

2012 பலஸ்தீனம் தனி நாடாக ஐ.நா.சபையில் பிரகடனப்படுத்தப்பட்டது. 193 நாடுகளில் 138 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன. ஐ.நா. சபையில் இறுதியாக இணைந்த நாடு தென் சூடான்.

**டிசம்பர்–02** ✱ உலக அடிமைத்தனம் ஒழிக்கும் சர்வதேச தினம்.

1547. அமெரிக்காவில் முதல் கட்ட ஸ்பானியக் குடியேற்றம் ஆரம்பித்தது.

1804. நெப்போலியன் பொனாட் பிரான்சின் பேரரசராக பாலிஸில் முடி சூடிக் கொண்டான்.

1816. ஐக்கிய அமெரிக்காவில் முதலாவது சேமிப்பு வங்கி தொடங்கப்பட்டது.

1852. மூன்றாம் நெப்போலியன் பிரான்சின் பேரரசன் ஆனான்.

1963. உலகிலேயே மிக நீளமான கடலுக்கு அடியிலான தொலைபேசிக் கேபிள் (கொமன் வெல்த் - பசுபிக் கேபிள்) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1971. அரேபியத் தீப கற்பத்தின் தென் கிழக்கில் அமைந்துள்ள எண்ணெய் வளம் மிக்க ஒரு பாலைவன நாடான ''ஐக்கிய அரபு எமிரேட்ஸ்'' ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1976. பிடெல் காஸ்ரோ கியூபாவின் அரசுத் தலைவரானார்.

1988. பெனாசிர் பூட்டோ பாகிஸ்தானின் முதல் பெண் பிரதமரானார்.

1995. யாழ்ப்பாண குடா நாடு இலங்கை இராணுவத்திடம் வீழ்ச்சியடைந்தது.

2002. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் நோர்வே நாட்டின் தலைநகரான ஒஸ்லோவில் ஆரம்பம்.

2003. ஆங்கிலக் கால்வாயை முதன் முதலாக நீந்திக் கடந்த அமெரிக்க பெண்ணான ஜெட்ரூட் இடேர்லி 48வது வயதில் இறப்பு.

2006. பரிதிமாற் கலைஞரின் நூல்கள் தமிழக அரசினால் நாட்டுடமை ஆக்கப் பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007. இலங்கை சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தனது பிறப்பிடமான கண்டி மாநகரில் அமைந்துள்ள அஸ்கிரிய விளையாட்டு அரங்கில் தனது 116வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து வீரர் போல் கொலிங்வுட்டை நேரடியாக விக்கட்டை தகர்த்ததன் மூலம் அவுஸ்ரேலியா பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் கைப்பற்றிய 708 விக்கட்டுக்களை தாண்டி முத்தையா முரளிதரன் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக விக்கட்டுக்களை கைப்பற்றி உலக சாதனை படைப்பு.

2010. 1200 ஆண்டுகள் பழமை வாய்ந்த அழகர் கோயில் கோட்டை சுவர் இடிந்து வீழ்ந்தது.

2010. முல்லைத்தீவு படுகொலை சம்பவங்கள் தொடர்பான நிர்வாணக் கோலத்தில் இருந்த பல ஆண், பெண் சடலங்கள் நிலப்பரப்பின் மீது பார்வை செலுத்தி கொலைத் தண்டனை நிறைவேற்றப்பட்ட சடலங்களை காட்டும் படம் சனல் 4 ஊடாக ஒளிபரப்பப்பட்டது.

2013 ஆபிரிக்க நாட்டு கறுப்பு இனத்தலைவர் முதல்முதலாக ஜனாதிபதியான நெல்சன் மண்டேலா இறப்பு.

**டிசம்பர்–03** ✸ சர்வதேச ஊனமுற்றோர் தினம்.

1828 - 7வது ஜனாதிபதியாக அன்றூ ஜக்சன் தேத்ந்தெடுக்கப்பட்டார்.

1795. நவீன அஞ்சல் சேவையை கண்டுபிடித்த இங்கிலாந்தைச் சேர்ந்த ரோலண்ட் ஹில் பிறப்பு (இறப்பு 27.08.1879).

1884. இந்தியாவின் முதல் ஜனாதிபதியும் இந்தியா விடுதலை போராட்ட வீரருமான டாக்டர். ராஜேந்திர பிரசாத் பிறப்பு (இறப்பு 28.02.1963).

1912. கனடாவில் அமைந்துள்ள கியுபெக் பாலம் திறப்பு.

1922. நியூயோர்க்கில் முதலாவது டெக்ஸிக் கலர் திரைப்படம் வெற்றிகரமாக திரையிடப்பட்டது.

1967. தென்னாபிரிக்கா கேப்டவுன் நகரில் கிறிஸ்லியன் பேனாட் தலைமையில் உலகில் முதலாவது இருதயம் மாற்றும் சத்திர சிகிச்சை 53 வயது லூயிஸ் வாஷ்கான்ஸ் என்பவர் மீது வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

1973. வியாழனை முதலில் அணுகிச் சோதனையிட்ட செயற்கை கோள் பயனியர் - 10 (USA) வியாழனின் படங்களை பூமிக்கு அனுப்பியது.

1984. இந்திய நகரான போபாலில் யூனியன் கார்பைட் நிறுவனத்தில் இடம் பெற்ற நச்சு வாயுக் கசிவில் 3,800 பொது மக்கள் உடனடியாகக் கொல்லப்பட்டனர். 150,000 முதல் 600,000 பேர் வரையில் காயமடைந்தனர். இவர்களில் 6,000 பேர் வரையில் பின்னர் இறந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் இடம்பெற்ற மிக மோசமான தொழிற்சாலை விபத்து இது வாகும்.

1990. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விவசாய பீடம் ஆரம்பம்.

1992. உலகின் முதலாவது வரிவடிவ செய்தி கணிணி மூலம் தொலை பேசிக்கு அனுப்பப்பட்டது.

1997. நிலக்கண்ணிவெடிகளை தயாரிப்பது மற்றும் பயன்படுத்துவது தடை செய்யும் ஒப்பந்தத்தில் 121 நாடுகள் ஓட்டாவாவில் கையெழுத்திட்டனர். ஆனால் அமெரிக்க மற்றும் சீனா கையெழுத்திடவில்லை.

2010. விக்கிலிக்ஸ் ஸ்தாபகரை (ஜூலியன் அசெஞ்) கைது செய்வதற்கு ஆதரவாக சுவீடன் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

2011. இலங்கையில் பெண்களுக்கான முதல் தொழிற்சங்கமான ''உழைக்கும் பெண்கள் முன்னணி தொழிற்சங்கம்'' பதிவு செய்யப்பட்டது.

2015 இந்தியாவின் தமிழ்நாட்டு தலைநகர் சென்னை மாநகரம் வரலாறு காணாத வெள்ளத்தில் மூழ்கியது.

**டிசம்பர்–04**

1122. பாரசீகக் கவிஞரும் கணிதவியலாளருமான ஓமர் கய்யாம் இறப்பு (பிறப்பு 18.05.1990).

1791. உலகின் முதலாவது ஞாயிறு வார இதழ் The Observer வெளிவந்தது.

1829. இந்தியாவில் உடன் கட்டை ஏறல் சடங்கு ஆங்கிலேயர் ஆட்சியில் சட்டத்துக்கு எதிரானதாக ஆக்கப்பட்டது.

1881. லொஸ் ஏன்ஜல் ரைம்ஸ் முதலாவது பதிப்பு வெளியீடு

1924. இந்தியாவின் நுழைவாயில் மற்றும் மும்பையின் ஒரு நினைவுச் சின்னமான மராட்டி திறப்பு.

1934. இந்தியாவில் முதன் முதலாக தினசரி விமானத் தபால் சேவை ஆரம்பம்.

1955. அமெரிக்க பஸ்களில் கறுப்பு இனத்தவர்களுக்குத் தனியான இடத்தை ஒதுக்கீடு செய்வதைக் கண்டித்து கறுப்பினத்தவர்கள் பெருமளவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

1971. இந்திய - பாகிஸ்தான் யுத்தத்தின் பொழுது இந்தியக் கடற்படையால் பாகிஸ்தானின் துறைமுக நகரான கராச்சி மீது நடத்தப்பட்ட கடல் வழி தாக்குதலே படை நடவடிக்கை ''திரிசுலமாகும்''. மற்றும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற படை நடவடிக்கை ''மலைப் பாம்பு'' இவ்விரு நாடுகளின் சுதந்திரத்திற்கு பின்பு இப்பகுதியில் ஏவுகணைகளை செலுத்தும் கப்பல்கள் மற்றும் கப்பல்படை கலங்கள் மூழ்கடிக்கப்பட்டது இப்படை நடவடிக்கை திரிசுல மூலமாக முதல் முறையாக நடந்தேறியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த படை நடவடிக் கையின் வெற்றியே இந்திய கடற்படை தினமாக கொண்டாடப்படுகின்றது.

1992. தென்னிந்திய திரைப்பட முன்னனி நாயகன் விஜய் நடிப்பில் வெளி வந்த முதல் திரைப்படம் நாளைய தீர்ப்பு திரையிடப்பட்டது.

2006. பிரான்ஸ் தொண்டு நிறுவனத்தின் 17 தமிழ் ஊழியர்கள் இலங்கை, கிழக்கு மாகாணத்தின் மூதூரில் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

**டிசம்பர்–05**

- உலக மண் தினம்
- சமூக அபிவிருத்திக்கும் பொருளாதாரத்துக்குமான சர்வதேச தொண்டர் தினம்

1360. பிரெஞ்சு நாணயம் பிராங் அறிமுகப்படுத்தப்பட்டது

1879. ஈழத்தின் சைவ ஆன்மீகவாதி தமிழ் உரை நடையின் தந்தை ஸ்ரீஸ்ரீ ஆறுமுக நாவலர் இறப்பு (பிறப்பு- 18.12.1822).

1893. மின்சாரத்தில் இயங்கும் தானுந்து அறிமுகம்.

1901 உலக புகழ் பெற்ற ஓவியர் வால்ட் டிஸ்ணி பிறப்பு (இறப்பு 15.12.1966).

1946. ஐக்கியநாடுகள் சபையினுடைய நிரந்தர தலைமையிடமாக நியூயோர்க் தெரிவு செய்யப்பட்டது.

1950. இந்திய ஆன்மீகவாதியும் பேராட்ட வீரருமான ஸ்ரீ. அரவிந்தர் இறப்பு (பிறப்பு 15.08.1872).

1967. யாழ்ப்பாணப் புதிய சந்தைக் கட்டிடம் பிரதமர் டட்லி சேனநாயக் காவால் அமைக்கப்பட்டது.

1988. வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதலாவது கூட்டம் நடைபெற்றது.

1995. இலங்கை அரசு தமிழர் தாயகப் பிரதேசமான யாழ்ப்பாணத்தைத் தாம் முழுமையாகக் கைப்பற்றிவிட்டதாக அறிவித்தது.

1998. இலங்கை அரசுப்படையினரால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக்குறு (வெற்றி நிச்சயம்) நட வடிக்கை கைவிடப்படுவதாக இலங்கை அரசு உத்தியோக பூர்வமாக அறிவிப்பு.

2001. இலங்கையின் 12வது பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஆட்சியமைத்தது.

2001. இலங்கை தொலைக்காட்சி சேவையான Tv Lanka ஆரம்பிக்கப்பட்டது.

2003. பொது நலவாய நாடுகளின் செயலாளர் நாயகத்தை தெரிவு செய்வதற்கான தேர்தலில் இலங்கை வெளிநாட்டு அமைச்சர் லகஷ்மன் கதிர்காமர் போட்டியிட்டு 11வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார் வெற்றி பெற்ற வாக்குகள் 15 ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஐக்கிய நாடுகள் அவையின் கூட்டத் தொடர்

**டிசம்பர்–06**

1768. பிரித்தானியா கலைக் களஞ்சியத்தின் முதற் பதிப்பு வெளியிடப்பட்டது.

1823. ஜேர்மனி மொழியியலாளரும் கீழைத்தேச ஆய்வாளருமான மாக்ஸ் முல்லர் பிறப்பு (இறப்பு 28.10.1900).

1865. ஐக்கிய அமெரிக்காவில் அடிமை முறை தடைசெய்யப்பட்டது.

1873. முதலாவது உலக உதைபந்தாட்ட போட்டி அமெரிக்காவில் நடைபெற்றது.

1877. இசைத்தட்டில் தோமஸ் அல்வா எடிசன் அவர்களின் இரவில் முதலாவது பதிவு இடம்பெற்றது.

1897. வாடகை வாகனம் உலகில் முதற் தடவையாக லண்டனில் சேவைக்கு விடப்பட்டது.

1917. ஐரோப்பாவில் உள்ள நாடான பின்லாந்து ரஷ்யாவிடமிருந்து விடுதலையடைந்தது.

1957. பூமியின் சுற்றுவட்டத்திற்கு செய்மதிகளை அனுப்பும் ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளித்திட்டமான "வங்கார்ட் விண்கலம்" ஏவப்படுகையில் வெடித்து சிதறியது.

1958. இந்திய ஹரிஜன மக்களின் தலைவர் கலாநிதி அம்பேத்கர் இறப்பு (பிறப்பு 14.04.1891)

1985. கின்னஸ் புத்தகம் உலகிலேயே அதிகம் விற்பனையாகும் புத்தகம் என்ற சாதனையைப் படைத்தது.

1992. இந்தியாவின் உத்திரப்பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ள அயோத்தியில் 16ம் நூற்றாண்டு பழமைவாய்ந்த ராமாவின் கோட்டை எனப்படும் குன்றில் அமைந்துள்ள "பாபர் மசூதி" இந்துத் தீவிரவாதிகளால் இடித்து அழிக்கப்பட்டது.

2005. இலங்கையின் 18வது இராணுவத்தளபதியாக கார்த்தி ஹேவாகே சரத்பொன்சேகா பதவி ஏற்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006. விக்கிலீக்ஸ் (Wikileaks) இணையத்தளம் ஆரம்பமானது. அவுஸ்திரேலி யாவைச் சேர்ந்த யூலியன் போல் அசாஞ்கே (Jullian Paul Assange) பிரதம ஆசிரியரானார்.

**டிசம்பர்–07** ✸ உலக விமானபோக்குவரத்து தினம்

1815. நெப்போலியனுக்கு ஆதரவாக இருந்த பிரெஞ்சுத்தளபதி மிக்கேல் நேய் என்பவனுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

1888 டன்லப் சைக்கிள் ரயர் கண்டுபிடிக்கப்பட்டது.

1910. யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் புதிய கட்டடம் திறக்கப் பட்டது.

1912 இலங்கையில் முதல் விமானம் வெற்றிகரமாக விண்ணில் பறக்க விடப்பட்டது.

1927. இலங்கை பெண்களின் வாக்குரிமைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. (The Ceylon Womans Franchise union).

1935. இலங்கையின் முதலாவது அரசாங்கச் சபை கலைக்கப்பட்டது.

1941. இரண்டாம் உலக மகாயுத்தத்தில் அமெரிக்க பேள் துறைமுகத்தை ஜப்பானிய விமானங்கள் தாக்கி அழித்தன.

1971. ரஷ்யாவின் மார்ஸ்-2 செவ்வாய்க் கிரகத்தில் இறங்கியது.

1972. ஐக்கிய அமெரிக்காவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு தொடரான மனித விண்வெளி பறப்புத்திட்டமான அப்பலோ திட்டத்தின் கடைசி விண்கலம் ''அப்பலோ17'' சந்திரனை நோக்கி ஏவப்பட்டது.

1988. பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் இஸ்ரேலை தனிநாடாக அங்கீகரித்தார்.

1988. இலங்கை படையினரை பாதுகாக்கும் நோக்கில் தண்டனை தவிர்ப்புச் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றம்

1995. வியாழன் கோளையும் சந்திரனையும் ஆராய்வதற்காக நாசாவினால் விண்ணுக்கு அனுப்பப்பட்ட ஆளில்லா விண்கலமான ''கலிலியோ விண்கலம்'' விண்ணுக்கு ஏவப்பட்டு 6 ஆண்டுகளின் பின்னர் வியாழனை அடைந்தது.

1995. தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ்ப்பாண நகரம் அரசபடைகளால் கைப்பற்றப்பட்டது. அரச கொடி ஏற்றப்பட்டது.

1996. டெலிவிஷன் ஊழல் சம்பந்தமாக முன்னாள் முதலமைச்சர் செல்வி. ஜெ. ஜெயலலிதா கைது செய்யப்பட்டார்.

2002. நிராகாரமின்றி நோன்பு இருந்து மரணித்த தமிழிழ விடுதலைப்புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் திலீபனின் நல்லூர் தெற்க வீதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டிருந்த நினைவுக் கல் அரச படைகளால் இரவோடு இரவாக இடித்து அழிக்கப்பட்டது.

2010. 03.12.2010 அன்று சுவீடன் உச்ச நீதிமன்றம் கைது செய்யக்கோரி வழங்கிய தீர்ப்பையடுத்து விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் ஜீலியன் அசெஞ் லண்டனில் வைத்து கைது செய்யப்பட்டார்.

2010. உலக நடனப்புயல் மைக்கல் ஜாக்சனின் கையுறை 330,000 டொலருக்கு ஏலத்தில் விற்கப்பட்டது.

2010. இந்திய - பிரான்ஸ் நாடுகளுக்கிடையே அணுசக்தி ஒப்பந்தங்கள் உட்பட 7 ஒப்பந்தங்கள் கைச்சாத்து.

**டிசம்பர்–08**

1864. இங்கிலாந்தில் கிளப்டன் தொங்கு பாலம் திறக்கப்பட்டது.

1941. ஐக்கிய அமெரிக்கா ஜப்பானுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தது.

1941. போலந்தின் லோட்ச் என்ற இடத்தில் யூதர்களைக் கொல்வதற்கு நாசிகள் முதன் முதலாக நச்சு வாயு மருந்தைப் பயன்படுத்தினார்கள்.

1953. அணு ஆயுதம் அமைதிக்கே என்று அமெரிக்க ஜனாதிபதி டு வைட் அறிவிப்பு.

1982. மகாத்மா காந்தியின் வரலாற்றினை மையமாகக் கொண்டு வெளி வந்ததும் 8 ஆஸ்கார் விருதினை பெற்றதுமான ''காந்தி'' திரைப்படம் திரையிடப்பட்டது.

1984. இலங்கையில் முதலாவது கைபேசி சேவை பிரதமர் ஆர். பிரேமதாசா வினால் Yapahuwail ஆரம்பம்.

1985. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், மாலைதீவு, நேபாளம், பூட்டான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளினால் சார்க் அமைப்பு உருவாக்கப்பட்டது.

1991. சோவியத் ஒன்றியத்தில் இருந்து விடுதலை பெற்ற நாடுகள் அடங்கிய ஒரு பிரதேச அமைப்பாக விடுதலை பெற்ற நாடுகளின் பொதுநலவாயம் (Commonwealth of Independent States) பெலராஸ் ரஷ்யா உக்ரேன் ஆகிய நாடுகளால் நிறுவப்பட்டது.

2006. பிரிட்டனின் பாதுகாப்பான நாடுகள் பட்டியலிலிருந்து இலங்கை நீக்கப்பட்டது

**டிசம்பர்–09**

1917. பிரித்தானியர் பாலஸ்தீனத்தின் ஜெருசேலம் நகரை கைப்பற்றினர்.

1924. முதலாவது மாரிகால ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டது

1946. இந்தியப் பிரதமர் ராஜீப் காந்தியின் மனைவியும் இந்திய காங்கிரஸ் கட்சி தலைவியுமான சோனியா காந்தி இத்தாலியில் கத்தோலிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவரான ஸ்டேபவனோ பவலோ, பிரெபிடாய் ஆகியோருக்கு மகளாக பிறப்பு.

1950 இலங்கையில் கடற்படை நிறுவப்பட்டது.

1961. கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள பெரிய நிலப்பரப்பு நாடான தன்சானியா பிரித்தானியாவிடமிருந்து விடுதலையடைந்தது.

1979 பெரியம்மை நோய் முற்றாக அழிக்கப்பட்டதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்தது. மனித உயிர் கொல்லி நோயொன்று முற்றாக அழிக்கப் பட்டது இதுவே முதலாவது உயிர் கொல்லி நோயொழிப்பாகும்.

1986. இந்தியைத் திணிக்கும் அரசியல் சட்ட நகலை எரித்ததற்காக திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் மு. கருணாநிதி உள்ளிட்ட 10. பேரவை உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

1988. இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்து தமிழ் மாநிலமாகியது. முதலமைச்சராக வரதராஜபெருமாள் பதவியேற்றார்.

2001 இலங்கையில் ரணில் விக்கிரமசிங்க 9வது (17வது) பிரதமராக பதவி யேற்பு. 6.4.2004 வரை.

1992. வேல்ஸ் இளவரசர் சார்ல்ஸ் இளவரசி டயானா இருவரினதும் திருமண பிரிவினை சட்டப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

1995. உலகின் முதலாவது 24 மணி நேர தமிழ் வானொலி ஒலிபரப்பு சேவை கனேடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபம் என்றும் பெயரில் கனடாவின் டொரண்டோ நகரில் பபீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டது.

2003 - உலக ஊழல் எதிர்ப்பு தினம் International Anti-Collubtion Day. இது ஐ.நா.சபையினால் 2003லிருந்து பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**டிசம்பர்–10** ✱ உலக மனித உரிமைகள் தினம் - 1948 டிசம்பர் 10 ஆம் திகதி ஒன்று கூடிய ஐக்கியநாடுகள் பொது அவையால் அனைத்துலக மனித உரிமைகள் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டதை பெருமைப்படுத்தும் பொருட்டு உலக மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுகின்றது.

1817. அமெரிக்காவின் 20வது மாநிலமாக மிஸிசிப்பி பிரகடனப்படுத்தப் பட்டது.

1878. இந்திய விடுதலைப் போராட்ட வீரர் மற்றும் சுதந்திர இந்தியாவின் முதலாவது ஆளுநருமான சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரி தமிழ் நாடு தர்மபுரியிலுள்ள தொரப்பள்ளி என்ற இடத்தில் பிறப்பு (இறப்பு 25.12.1972).

1896. சுவீடனை சேர்ந்த டைனமட் வெடிமருந்து கண்டுபிடிப்பாளர் அல்பிரட் நோபல் இறப்பு (பிறப்பு 21.10.1833).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1901. ஒப்பற்ற ஆய்வு மேற்கொண்டவர்களுக்கும் பெரும் பயன் விளை விக்கும் தொழில்நுட்பங்கள் அல்லது கருவிகளை கண்டுபிடித்தவர் களுக்கும் சமூகத்திற்கு அரிய தொண்டாற்றியவர்களுக்கும் வழங்கப் படும் உலகளவில் பெரிதும் மதிக்கப்படும் பரிசான ''நோபல் பரிசு'' முதன் முதலாக வழங்கப்பட்டது.

1902. தாஸ்மேனியாவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1932. தென் கிழக்காசியா நாடான தாய்லாந்து அரசியலமைப்பு ஆரம்பம்.

1936. எட்டாம் எட்வெட் மன்னர் முடி துறந்தார்.

1948. சர்வதேச மனித உரிமை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

1982. யாழ்ப்பாணப் பொது நூலகம் 1.6.1981ல் தீயிடப்பட்ட பின்பு சிறு திருத்தங்களுடன் மீண்டும் வடக்கு பக்கமாக சிறியளவில் இயங்க தொடங்கியது.

1984. சித்திரவதைக்கு எதிரான தடைச்சட்டத்தை பொதுச் சபை வெளியிட்டது.

2009. ஜேம்ஸ் கமரூன் இயக்கத்தில் வெளிவந்த Avatar திரைப்படம் திரையிடப் பட்டது. 1500 கோடி ரூபாய் பொருட் செலவில் தயாரான இப்படம் வசூலில் சாதனை படைத்து முந்தைய சாதனையான Titanic திரைப் படத்தின் சாதனையை முறியடித்தது.

**டிசம்பர்–11** ✸ உலக மலைகள் தினம்

1816. ஐக்கிய அமெரிக்காவின் மத்திய பகுதியல் அமைந்துள்ள இந்தியானா 19வது மாநிலமானது.

1832. பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நகரின் புகழ் பெற்ற ஈபிள் கோபுரத்தை உருவாக்கியவரும் அமெரிக்காவில் உள்ள சுதந்திர சிலையை வடிவமைத்த வருமான அலெக்சாண்டர் குஸ்டன் பிறப்பு.

1882 மகாகவி பாரதியார் பிறப்பு. (11-9-1921)

1906. நோபல் அமைதிப் பரிசு பெற்ற முதலாவது அமெரிக்க அதிபர் தியோடர்ருஸ்லெல்ற்.

1946. ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (Unicef) அமைக்கப்பட்டது.

1955. இலங்கை ஐக்கிய நாடுகள் சபையில் சேர்ந்தது

1955. உலக சமாதானப் புத்தகம் கின்னஸ் புத்தகம் வெளிவந்தது.

1981. எய்ட்ஸ் நோய்க் கொல்லி அதிகாரபூர்வமாக கண்டு கொள்ளப்பட்டது.

2004. கர்நாடக இசைக் கலைஞர M.S. சுப்புலட்சுமி இறப்பு (பிறப்பு 16.09.1916)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டிசம்பர்– 12**

1800. ஐக்கிய அமெரிக்காவின் தலைநகராக வாஷிங்டன் தெரிவு செய்யப் பட்டது.

1812. ரஷ்யாவின் மீதான பிரெஞ்சுப் படையெடுப்பு முடிவடைந்தது.

1911. இந்தியாவின் தலைநகரம் கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாற்றப்பட்டது.

1948. குடியுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டு நாடாளுமன்றத்தில் தமிழ் உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைத்தது மட்டுமல்லாமல் இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்கள் பத்து இலட்சம் பேரின் குடியுரிமையும் பறிக்கப்பட்டது.

1949. தென்னிந்திய தமிழ்த் திரைப்பட நடிகர் சுப்பர் ஸ்டார் ரஜினிகாந் என்றழைக்கப்படும் சிவாஜி ராவ் கைக் வாட் பிறப்பு.

1962. நேபாளம் புதிய அரசியலமைப்பின் மூலம் இந்து இராச்சியமாக மாற்றப்பட்டது.

1963. கிழக்காபிரிக்க நாடான கென்யா ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1972. புதிய தமிழ் புலிகள் என்ற இயக்கம் வேலுப்பிள்ளை பிராபாகரன் தலைமையில் உருவாக்கப்பட்டது

1979. ஆபிரிக்கா கண்டத்தின் தென் பகுதியில் உள்ள நாடான ரொடீசியா வின் பெயர் சிம்பாவேயாக மாற்றப்பட்டது.

2006. ஈழப்போராட்ட இயக்கங்களில் ஒன்றான ஈரோஸ் என்ற ஈழ புரட்சிகர மாணவர் இயக்கம் என்ற அமைப்பை ஆரம்பித்த இ. இரத்தினசபாபதி இறப்பு (பிறப்பு-1938).



அமெரிக்காவை உலுக்கிய கத்ரீனா சூறாவளியின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டிசம்பர்–13** ✱ உலக சிறுவர் ஒலிபரப்பு தினம்

1949. இஸ்ரேலின் சட்டசபை நாட்டின் தலைநகரை ஜெருசேலம் நகருக்கு மாற்ற முடிவெடுத்தது.

1959. சைப்பிரசின் முதலாவது ஜனாதிபதியாக மாக்காரியோஸ் தெரிவானார்.

1972. அப்பலோ-17 விண்வெளி வீரர்கள் யூஜின்செர்னன், ஹரிசன், ஸ்மித் ஆகியோர் சந்திரனில் இறங்கினர். 20ம் நூற்றாண்டில் சந்திரனில் இறங்கிய கடைசி மனிதர்கள் இவர்களே.

1974. தெற்கு ஐரோப்பாவில் மத்தியதரைக் கடலில் அமைந்துள்ளதும் மக்கள் தொகை அடர்த்தி கூடிய தீவு நாடான ''மோல்டா'' குடியரசானது.

1981. மத்திய ஐரோப்பாவில் உள்ள நாடான ''போலந்தில்'' இராணுவ ஆட்சி அமைக்கப்பட்டது.

1987. புகழ் பெற்ற தமிழ் நாவல் எழுத்தாளர் நா. பார்த்தசாரதி இறப்பு (பிறப்பு 18.12.1932).

1996. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராக கொபி அனான் தெரிவு செய்யப்பட்டார்.

2001. இந்திய டெல்லி நாடாளுமன்ற கட்டிடத்தில் பிரதமர் அடல் விஹாரி வாஜ்பாய் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சோனியா காந்தி மற்றும் எம்பிக்களை கொல்லுவதற்காக தீவிரவாதிகள் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தியதில் 12 பேர் பலி. வரலாற்றிலேயே நாடாளு மன்றத்தின் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி இருப்பது இதுவே முதல் தடவையாகும்.

2003. ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹீசைன் அவரது சொந்த ஊரான திக்ரித்துக்கு அருகே அமெரிக்க படையினரால் கைது செய்யப்பட்டார்.

**டிசம்பர்–14**

1799. ஐக்கிய அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவர் ஜோர்ஜ் வாஷிங்டன் இறப்பு (பிறப்பு 22.02.1732).

1899. யாழ்ப்பாண கச்சேரியில் நடைபெற்ற ஆபத்திற்கு உதவும் நண்பர்கள் கழக கூட்டத்தில் இந்தக் கழகத்தால் உருவாக்கப்பட்ட வைத்திய சாலையை அரசாங்கத்திடம் கையளிப்பதுமான தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. (Friend in Need Society Hospital).

1900. மார்க்ஸ் பிளாங் தனது கரும் பொருள் கதிர்வீச்சு பற்றிய கொள்கையை நிறுவினார்.

1939. நாடுகளின் கூட்டமைப்பில் இருந்து சோவியத் ஒன்றியம் வெளி யேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1946. பிரதமர் இந்திரா காந்தியின் இரண்டாவது மகனாக சஞ்சய் பெரோஸ் காந்தி பிறப்பு (இறப்பு 23.06.1980).

1950. அகதிகளை பாதுகாப்பதும் மற்றும் ஆதரவளிப்பதற்குமாக ஐக்கிய நாடுகள் சபையினால் அமைக்கப்பட்ட அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையம் சுவிஸ்சர்லாந்தின் ஜெனிவாவில் நிறுவப்பட்டது.

1955. ஐக்கிய நாடுகள் அமையத்தில் இலங்கை உறுப்புரிமை பெற்றது.

1962. நாசாவின் மரைனர்-2 விண்கலம் வெள்ளி கோளை அண்மித்தது. இதுவே வெள்ளியை அண்மித்த முதலாவது விண்கலம் ஆகும்.

1992. இலங்கைத் தொலைக்காட்சி சேவையான MTV Sports ஆரம்பிக்கப் பட்டது.

2004. தென் பிரான்சிலே உள்ள வியப்பூட்டும் பொறியியல் சாதனை படைத்த வான் வீதி என அழைக்கப்படும் உயர்ந்த பாலமான ''மில்லோ'' பாலம் திறக்கப்பட்டது. (இப் பாலம் டார்ன் ஆற்றுப் பள்ளத்தாக்கை கடக்க 2,460மீ நீளமுடையது)

2004. யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் முதன்முதலாக புற்று நோய் சிகிச்சை உள்ளக விடுதி வசதிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

2006. ஐக்கிய நாடுகள் சபையின் எட்டாவது செயலாளராக தென்கொரியா வைச் சேர்ந்த பான் கீ மூன் பதவி ஏற்பு.

2006. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இறப்பு (பிறப்பு 04.03.1938).

2010. 07.12.2010ல் கைது செய்யப்பட்ட விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் ஜீலியன் அசெஞ் பிணையில் விடுதலை.

**டிசம்பர்–15**

1891. கூடைப்பந்தாட்டத்தை முதன் முதலில் ''ஜேம்ஸ் நெய்ஸ்மித்'' ஆரம்பித்தார்.

1932. இந்தியாவில் முதன் முதலாக விமானம் பறக்க விடப்பட்டது.

1941. உக்ரேனின் ஹர்கில் நகரில் 15 ஆயிரம் யூதர்கள் நாசிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

1960. மன்னர் மகேந்திரா நேபாாளத்தின் அரசைக் கலைத்து நாட்டின் முழு அதிகாரத்தையும் தனதாக்கி கொண்டார்.

1994. இணைய உலாவி நெட்ஸ்கேப் நெவிகேட்டர் 1.0 வெளியிடப்பட்டது.

1994. இலங்கையின் இலஞ்சம், ஊழல் பற்றிய தகவல்களைப் புலனாய்வு செய்வதற்கான முதலாவது ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

1999. இலங்கையின் இலஞ்சம், ஊழல் பற்றிய தகவல்களைப் புலனாய்வு செய்வதற்கான இரண்டாவது ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2001. இத்தாலியின் பைசா நகரில் உள்ள பைசா பேராலயத்தின் மணிக் கோபுரமான பைசா சாய்ந்த கோபுரம் 11 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் திறக்கப்பட்டது.

2006. கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி. சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கொழும்பில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார்.

2010. இலங்கை வன்னி முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் நடந்த சம்பங்களை சித்தரிக்கும் வகையில் தமிழ் நாடு தஞ்சை மாநிலம் பான்செக்கடர் கல்லூரி எதிரில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் அமைக்கும் பணி ஆரம்பம். உலகத் தமிழர் பேரமைப்பு இதனை 20000 சதுர அடி விஷ்திரத்தில் அமைப்பதோடு. அத்தோடு ஓவியக் கூடமும் அமைக்கப்படுகிறது.

**டிசம்பர்–16**

1497. போர்துக்கீச நாடுகாண் பயணியான வாஸ்கொடகாமா முன்னர் பர்த்தலோமியஸ் டயஸ் சென்றடைய முடியாத தென்னாபிரிக்கா வின் நன்னம்பிக்கை முனையை சுற்றி வந்தார்.

1770. காது கேளாத நிலையிலும் இசை உலகில் சாதனைகள் நிகழ்த்திய இசை மேதை பீத் தோவன் பிறப்பு.

1917. ஆங்கில எழுத்தாளர் ஆர்தர் சி. கிளார்க் பிறப்பு (இறப்பு 19.03.2008)

1925. இலங்கை வானொலியின் வானொலி சேவை கொழும்பில் ஆரம்பம்.

1925 ஆசியாவின் முதல் வானொலி நிலையமான இலங்கை வானொலி சேவை ஆரம்பிக்கப்பட்டது. பரிட்சார்த்த ஒலிபரப்பு - 1922

1962. நேபாளத்தின் தேசியக் கொடி புதிய அரசியலமைப்பு சட்ட வரை வின் போது ஏற்றுக் கொள்ளப்பட்டது. உலக தேசியக் கொடிகளில் செவ்வக மற்ற கொடியாகவும் இக்கொடி காணப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

1971. பெர்ஸிய வளைகுடாவில்லுள்ள சிறிய மேற்கு ஆசிய நாடான பஹ்ரைன் பிரித்தானியாவிடமிருந்து விடுதலையடைந்தது.

1971. பங்களாதேஷ் விடுதலைப் போரில் பாகிஸ்தான் இராணுவத்தினர் சரணடைந்ததன் மூலம் போர் முடிவுக்கு வந்தது.

1985. இலங்கைத் தமிழர்களுக்காக தமிழ் நாட்டு முதலமைச்சர் M.G. இராமச் சந்திரன் ஒரு நாள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தார்.

1991. வடக்கு மற்றும் மத்திய யுரெசியாவிலுள்ள ''சக்ஸ்தான்'' சோவியத் ஒன்றியத்திடமிருந்து விடுதலையடைந்தது.

2010. இலங்கை தேசிய கீதத்தை தமிழிலும் பாடலாம் என அரசாங்கம் அறிவிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010. இலங்கை முதலாவது ஐந்தாயிரம் (5000) ரூபா பெறுமதியான பலவர்ண நாணயக் குற்றியை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டது.

**டிசம்பர்– 17**

- பாலியல் பெண் தொழிலாளர்களுக்கு எதிரான வன்முறையை நிறுத்தும் சர்வதேச தினம்.
- 1797-ஹோலிங் பெல்லைக் கண்டுபிடித்த ஜோசப் ஹென்றி பிறப்பு. இவர் அமெரிக்காவில் நியூயோர்க் ஆப்ஸி என்ற இடத்தில் பிறந்தார்

1907. தெற்காசியாவில் இமய மலைச்சாரலின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ள நிலத்திடை நாடான ''பூட்டான்'' அரசியலமைப்பினை ஆரம்பித்தது.

1903. ரைட் சகோதரர்கள் வடக்கு கரோலைனாவில் முதல் முதலில் பன்னிரண்டு வினாடிகள் எஞ்சின் உந்தும் ஊர்தியில் பறந்தனர்.

1950. இலங்கையின் இராணுவத்தளபதி சரத் பொன்சேக பிறப்பு.

1975. 2000ம் ஆண்டு அவுஸ்திரேலிய சிட்னியில் நடைபெற்ற 27வது ஒலிம்பிக் போட்டியில் 200m ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கம் சுவீகரித்த இலங்கை ஓட்ட வீராங்கனையும் அத்தோடு 1948ற்குப் பின் ஒலிம்பிக் போட்டியிலே பதக்கம் சுவீகரித்த ஒரோயொரு இலங்கை சார் வீரருமான சுசந்திகா ஜயசிங்க (Susanthika Jayasinghe) பிறப்பு.

1979. இலங்கையின் மகா தேசாதிபதி சேர். ஒலிவர் குணதிலக இறப்பு.

1989. 25ஆண்டுகளின் பின்னர் பிரேசிலில் முதலாவது பொதுத்தேர்தல் நடைபெற்றது.

2000. சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம் ஐ.நா.சபையால் பிரகடனப்படுத்தப் பட்டது.

2007. 26.12.2004 அன்று சுனாமியால் பலமாக சேதமாக்கப்பட்ட காலி சர்வதேச கிரிக்கெட் மைதானம் மீள் புனரமைக்கப்பட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சாவினால் திறக்கப்பட்டது.

2010. இலங்கையில் முதன் முதலில் இரு குழந்தைகள் ஒட்டிப் பிறப்பு. கொழும்பு றிச்வே குழந்தைகள் வைத்தியசாலையில் 11.1.2011ல் 11 பேர் கொண்ட மருத்துவக் குழு சத்திரசிகிச்சை மூலம் வெற்றி கரமாக பிரித்தனர்.

**டிசம்பர்– 18**

- சர்வதேச புலம் பெயர்ந்தோர் தினம் (ஐ.நா சபையால் 2000ம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது.)

1822 ஆறுமுக நாவலர் கந்தப்பிள்ளை சிவகாமி அம்மையாருக்கு பிள்ளையாக நல்லூரில் பிறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1911. சேர்.பொன்னம்பலம் இராமநாதன் இலங்கையின் சட்டசபைக்கு தேசியப் பிரதிநிதியாகத் தெரிவானார்.

1926. துருக்கி இன்று உலகில் பரவலாக பயன்பாட்டில் உள்ள நாட் காட்டியான ''கிரகொரியின்'' நாட்காட்டிக்கு மாறியது.

1935. இலங்கை சமசமாஜக் கட்சி என்ற இடதுசாரி கட்சி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.

1958. ஆபிரிக்கா கண்டத்தில் மேற்கு பகுதியில் அமைந்துள்ளதும் உலகின் மிகவும் ஏழை நாடுகளில் ஒன்றான ''நைஜர்'' நாடு விடுதலையடைந்தது.

1958. உலகின் முதலாவது தொடர்பாடல் விண் சாதனம் (சற்றாலர்) செயற்படத் தொடங்கியது.

1978. பெண்களுக்கெதிரான சகல பாரபட்சங்களையும் இல்லா தொழிப் பதற்கான சர்வதேச சாசனம் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1999ல் இலங்கை இவ் பட்டயத்தில் கைச் சாத்திட்டது.

1999. கொழும்பு நகரசபை முன்னரங்கில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தின் போது ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமார துங்க மீது நடத்தப்பட்ட தற்கொலைத் குண்டுத் தாக்குதலில் வலது கண் இழக்கப்பட்டது. இத் தாக்குதல்களில் 15 பேர் பலியானார்கள்.

2000 சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம் ஐ.நா.சபையால் பிரகடனப்படுத்தப் பட்டது.

**டிசம்பர்–19**

1871. யாழ் மாவட்டத்தில் முதற்தடவையாக கத்தோலிக்க மதகுரு பதவிகள் (Ordination) வழங்கப்பட்டன.

1972. சந்திரனுக்கு கடைசித் தடவையாக மனிதர்களை ஏற்றிச் சென்ற அப்பலோ - 17 பாதுகாப்பாக பூமி திரும்பியது.

1994. பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் வக்கார் யுனிஸ் நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் தொடர்ந்து மூன்று வீரர்களை ஆட்டமிழக்கச் செய்து ''ஹட்ரிக்'' சாதனை.

1997. ஜேம்ஸ் கேமரூன் இயக்கத்தில் வெளிவந்த ஆங்கிலத் திரைப் படமான Titanic திரைப்படம் வெளியானது.

1920. உலகின் முதல் வானொலி நிலையம் அமெரிக்காவில் கிழக்கு பிட்ஸ் பெர்க்கில் ஆரம்பிக்கப்பட்டது.

1960. ''வியட்நாம் விடுதலைக்கான தேசிய முன்னணி'' அமைக்கபட்டது.

1988. ேபாதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சாசனம் வியட்நாமில் கைச்சாத்திடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988. இலங்கையின் 2வது ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. பிரேமதாஸா வெற்றியிட்டினார்.

2012. தென்கொரியாவின் முதலாவது ஜனாதிபதியாக பார்க் ஜீன்ஹை தேர்வு

2015. தமிழ் மக்கள் பேரவை என்ற அரசியல் கலப்படமற்ற சபை வடபகுதியில் உருவாக்கம் வடக்கு மாகாண முதலமைச்சர் C.U. விக்கினேஸ்வரன் தலைமையில் இப்பேரவை உருவாக்கப்பட்டுள்ளது.

**டிசம்பர்–20**

1844. இலங்கையில் அடிமைகளை வேலைக்கமர்த்துவதற் கெதிரான சட்ட மூலம் கொண்டுவரப்பட்டது.

1917. சோவியத்தின் முதலாவது இரகசியக் காவற்துறை 'சேக்கா' அமைக்கப் பட்டது.

1960. வியட் நாம் விடுதலைக்கான தேசிய முன்னணி அமைக்கப்பட்டது.

1988. போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான ஐ.நா. சாசனம் வியன்னாவில் கைச்சாத்திடப்பட்டது.

1999 இலங்கையின் செய்திப் பத்திரிகையின் ஒன்றான வலம்புரி பத்திரிகை ஆரம்பம்.

**டிசம்பர்–21**

1913. உலகின் முதலாவது குறுக்கெழுத்துப் போட்டி ''நியூயோர்க் வேர்ல்ட்'' பத்திரிகையில் வெளியானது.

1967. உலகின் முதலாவது இருதய மாற்று சிகிச்சை பெற்ற தென்னாபிரிக் காவைச் சேர்ந்த லூயிஸ் நாஷா கான்ஸ்கி சிகிச்சை பெற்ற 18 நாட்களின் பின் இறப்பு.

1968. சந்திரனுக்கு மனிதனை ஏற்றிச் சென்ற விண்கலம் அப்பலோ - 8 புளோரிடாவில் இருந்து ஏவப்பட்டது. புவியீர்ப்பை தாண்டிச் சென்ற முதலாவது மனித விண்கலம் இதுவாகும்.

1973. அரபு - இஸ்ரேல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஜெனிவா மாநாடு ஆரம்பமானது,

1979. ரொடீசியாவின் (தற்போது சிம்பாவேயாக இருக்கும்) விடுதலைக்கான உடன்பாடு இங்கிலாந்து தலைநகர் லண்டனில் கைச்சாத்திடப்பட்டது.

1991. ஆர்மேனியா, அசர்பையான், கசகஸ்தான், கிர்கிஸ்தான், மல்டோவா துர்க்மெனிஸ்தான், தாஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய எட்டு நாடுகள் விடுதலை பெற்ற நாடுகளின் பொதுநலவாய அமைப்பில் (Commonwealth of Independent States) இணைந்து கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டிசம்பர்–22**

1853. மேற்கு வங்காளத்திலுள்ள ஜெயராம்பாடி கிராமத்தில் இராமச்சந்திரர் சியாமா சுந்தரி தம்பதியினருக்கு மூத்த மகளாக அன்னை சாரதாதேவி பிறப்பு. - (1920)

1915. மலேசியாவில் இலங்கைத் தமிழரால் வாங்கப்பட்ட யாழ்ப்பாணம் என்று பெயரிடப்பட்ட விமானம் பிரித்தானிய வான்படைக்கு அன் பளிப்புச் செய்யப்பட்டது.

1978. இலங்கை பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு ஆரம்பம்.

1982. ஜனாதிபதி J.R. ஜெயவர்தனாவால் அப்போதைய நாடாளு மன்றத்தின் (பாராளுமன்றம்) பதவிக் காலத்தை மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்காக மக்களின் விருப்பத்தைக் கோரி இலங்கை அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக ''இலங்கை தேசிய வாக்கெடுப்பு'' ஆரம்பம்.

1989. கிழக்கு ஜேர்மனியையும் மேற்கு ஜேர்மனியையும் பேர்லினில் பிரித்த ''பிராண்டன்பேர்க் கதவு'' 30 ஆண்டுகளின் பின்னர் திறந்துவிடப்பட்டது.

**டிசம்பர்–23**

1922. பிரிட்டிஷ் ஒலிபரப்புச் சேவையான BBC தினசரி செய்திகளை ஒலி பரப்பத் தொடங்கியது.

1954. முதலாவது மனித சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை ஐக்கிய அமெரிக்கா வின் பாஸ்டன் நகரில் மேற்கொள்ளப்பட்டது.

1958. உலகின் மிகப் பெரிய இரும்பிலாலான ''டோக்கியோ கோபுரம்'' திறக்கப்பட்டது.

1964. இந்திய தமிழ் நாட்டின் தென் பகுதியிலுள்ள தனுஷ் கோடி பெரும் புயலால் தாக்கப்பட்டு அழிந்தது.

1970. உலகின் மிக உயர்ந்த கட்டடமான நியூயோர்க் நகரில் அமைந்துள்ள உலக வர்த்தக மைய கட்டடம் 1368 அடி (417 மீற்றர்) நிர்மாணிக்கப் பட்டு திறக்கப்பட்டது.

1986 வொயோகர் என்ற விமானம் புறப்பட்டு எங்கும் தரையிறங்காமல் முதன் முதலில் உலகை சுற்றிவந்து கலிபோர்னியாவில் தரையிறங்கியது. விமானிகள் டிக்ரூட்டின் - ஜினாயேகர்

**டிசம்பர்–24**

1524. போர்த்துக்கீச மாலுமி வாஸ்கொடகாமா இறப்பு (பிறப்பு 1460).

1951. வட ஆபிரிக்காவில் அமைந்துள்ள ''லிபியா'' இத்தாலியிடமிருந்து விடுதலையடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1954. தென் கிழக்காசியாவில் அமைந்துள்ள "லாவோஸ்" விடுதலையடைந்தது.

1972. இந்திய அரசியல்ஞானி இராஜாஜி இறப்பு (பிறப்பு 12.09.1879)

1979. ஐரோப்பாவின் முதலாவது விண்கலம் ஆரியா விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

1987. தமிழக முதல்வரும் மற்றும் திரைப்பட நடிகருமான M.G. இராமச்சந்திரன் சென்னை ராமாவாரம் தோட்டத்திலுள்ள தனது வீட்டில் மாரடைப்பால் இறப்பு (பிறப்பு 17.01.1917).

2001. தமிழீழ விடுதலைப் புலிகள் முதல் முதல் 60 நாட்களுக்கான யுத்த நிறுத்தத்தை அறிவித்தனர்.

2005. இலங்கை தமிழரசுக்கட்சி மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜ சிங்கம் மட்டக்களப்பு தேவாலயம் ஒன்றில் இரவு நத்தார் ஆராதனையில் இருந்த போது சுட்டுக்கொலை (பிறப்பு 27.11.1934)

2015. இலங்கைக்கான முதலாவது சமூக வலைத்தலம் அறிமுகம் முகநூல் Face Book போன்றது. www.linklank.com

**டிசம்பர்–25** ✱ கிறிஸ்மஸ் (Christmas) - நாசரேத்து இயேசுவின் பிறப்பைக் குறிக்கும் முகமாக கொண்டாடப்படுகின்றது.

1796 ஆங்கிலேயருக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண் போராளி வேலு நாச்சியார் இறப்பு - (1730)

1892. இந்தியா தமிழ் நாட்டின் எல்லையான கன்னியாகுமாரி வந்த சுவாமி விவேகானந்தர் கடலுக்குள் நீந்திச் சென்று அங்கிருந்த பாறையில் மூன்று நாட்கள் கடும் தவம் இருந்தார்.

1914. முதலாம் உலகப் போரில் ஜேர்மனிக்கும் பிரித்தானியாவிற்கும் இடையில் போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது.

1947. சீனக் குடியரசின் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது.

1977. ஹொலிவூட் திரையுலகின் மிகப்புகழ் பெற்ற நகைச்சுவை நடிகர் சார்லி சப்ளின் இறப்பு. (பிறப்பு 16.04.1889).

1991. சோவியத் யூனியன் முடிவுற்றதாக மிக்கைல் கொபர்சேவ் தொலைக் காட்சியில் உரை நிகழ்த்தினார்.

2010. இந்திய அகமதாபாத்தில் 22480 செஸ் (Chess) வீரர்கள் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் செஸ் விளையாடி கின்னஸ் சாதனை.

**டிசம்பர்–26** ✱ பாதுகாப்பு தினம்

1612. கலிலியோ கலிலி நெப்டியூன் கோளைக் கண்டுபிடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட 9.3 ரிக்டர் அளவு நில நடுக்கம், சுனாமி ஆழிப்பேரலையின் தோற்றம்.*

1891. யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் பல்லாயிரக் கணக்கான ரூபாய் பெறுமதியான நகைகள் களவாடப்பட்டன.

1893. சீனத்து பெருந்தலைவர் மா.ஓ.சேதுங் பிறப்பு (இறப்பு 09.09.1976).

1898. ரேடியம் (கதிர்வீச்சு இயல்புள்ள ஒரு மூலகமாகும் இதன் குறியீடு Ra இதன் அணு எண் 88 ஆகும். இது பொதுவாக தூய வெள்ளை நிறமாக இருப்பினும் வளியில் திறந்து விடப்படும் போது ஓட்சி யேற்றப்பட்டு கறுப்பு நிறமாக மாறுகின்றது. இது கதிர் வீச்சை வெளியிடும் தன்மை கொண்டது) கண்டுபிடிக்கப்பட்டது.

1986. உலக மக்கள் தொகை 5 பில்லியனை எட்டியது.

1991. சோவியத் சமூகவுடமைக் குடியரசுகளின் ஒன்றியமான ''சோவியத் ஒன்றியம்'' கலைக்கப்பட்டது.

2004. இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட 9.3ரிக்டர் அளவு நில நடுக்கம், சுனாமி ஆழிப்பேரலையை ஏற்படுத்தி இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, மாலைதீவுகள் ஆகிய நாடுகளில் பலத்த சேதத்தை ஏற்படுத்தியது. 300,000 பேருக்கு மேல் இறந்தனர்.

2006. சதாம் ஹீசைனின் மேன் முறையீடு நிராகாரிக்கப்பட்டு மரண தண்டனை உறுதிசெய்யப்பட்டது.

2008 ஜனவரி 04 சிறுவர் துஸ்பிரயோகத்திற்கு எதிரான தினமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டிசம்பர்–27**

1864. இலங்கையில் முதலாவது தொடரூந்து சேவை கொழும்புக்கும், அம்பே புசைக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்டது. (இதன் நீளம் 54Km நீளமுடையது).

1915 யாழ்ப்பாணத்தின் முதல் பொது நூலகம் 'நகுலேசுவரா நூல் நிலையம்' கீரிமலையில் திறக்கப்பட்டது.

1922. உலகின் முதலாவது விமானம் தாங்கிக் கப்பல் 'ஹோஷே' அங்குரார்ப் பணம் (வெள்ளோட்டம்)

1945. வறுமையான நாடுகளுக்கு கடன்கள் அமைத்து கொடுப்பதற்காக 5 சர்வதேச அமைப்புக்களை உள்ளடக்கிய ஓர் குழுமமான உலக வங்கி (World Bank Group) குழுமம் 28 நாடுகளின் ஒப்புதலுடன் உருவாக்கப் பட்டது.

1956 தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழிச்சட்டம் ஏக மனதாக நிறை வேற்றப்பட்டது.

1994. பாடசாலை அபிவிருத்திச் சபையினர் அமைப்பு முறை நீக்கப்பட்டது. பதிலாக பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

2007. பாகிஸ்தான் பிரதமர் பெனாசீர் பூட்டோ குண்டு வெடிப்பில் கொல்லப் பட்டார் (பிறப்பு 21.06.1953).

**டிசம்பர்–28**

1065. லண்டன் வெஸ்ட் மினிஸ்டர் தேவாலயம் திறந்து வைக்கப்பட்டது,

1836. வட அமெரிக்கா கண்டத்தில் அமைந்துள்ள ''மெக்சிக்கோ'' ஸ்பெயினிட மிருந்து விடுதலையடைந்தது.

1930. மகாத்மா காந்தி பேச்சு வார்த்தைக்காக பிரித்தானியா சென்றார்.

1981 அமெரிக்காவில் முதலாவது சோதனைக் குழாய் குழந்தை பிறப்பு.

1994. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு அடுத்த படியாக செயற்பட்ட மாத்தையா என்றழைக்கப்படும் கோபால சாமி மகேந்திரராஜா இந்திய உளவுத்துறையான றோ (RAW- Reasearch and Analysis Wing) உடன் இரகசிய தொடர்புகள் பேணி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு அல்லது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குத் துரோகம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு 1993ல் கைது செய்யப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

2006. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் இறப்பு.

2007. நேபாளத்தில் மன்னர் ஆட்சி முடிவுக்கு வந்தது. இடைக்கால பாராளு மன்றம் நாட்டை குடியரசாக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டிசம்பர்–29** ✱ சர்வதேச பல்லுயிர் பெருக்க தினம்.

1891. தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழுக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.

1862. கிரிக்கட் பந்து கண்டுபிடிக்கப்பட்டது. பக் 243 - 1922 - (USSR)

1911. ஆசியாக் கண்டத்தில் அமைந்துள்ளதும் உலகிலே இரண்டாவது பெரிய நிலஞ்சூழ் நாடான ''மங்கோலியா'' கிங் வம்சத்திடமிருந்து விடுதலையடைந்தது.

1951. இலங்கையில் வெளிவந்த முதலாவது தமிழ்த் திரைப்படமான குசுமலதா திரையிடப்பட்டது. (21.01.1947 இல் இலங்கையிலே திரையிடப்பட்ட சங்கவுனு பிலித்துற - Sangawunu Pilitura என்ற சிங்களத் திரைப்படத்தின் தமிழ் மொழி மாற்றுப்படமாகும்)

1993. உலகின் மிகப்பெரிய செப்பிலான புத்தர்சிலை ஹொங்கொங்கில் அமைக்கப்பட்டது.

**டிசம்பர்–30**

1906. அரசியல் கட்சியான அகில இந்தியா முஸ்லீம் லீக் கட்சி டாக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.

1922. சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியம் உருவாக்கப்பட்டது.

1924. யாழ்ப்பாண வாலிபர் சங்க மாநாட்டில் சாதி ஒழிப்பு தீர்மானம் முதல் முதலில் கொண்டு வரப்பட்டது.

1927. ஆசிய கண்டத்தில் முதல் முதல் நிலக்கீழ் சுரங்க போக்குவரத்துப் பாதை ஜப்பானில் திறந்து வைக்கப்பட்டது.

1941. மகாத்மா காந்தி காங்கிரஸ் தலைமைப் பதிவியிலிருந்து விலகினார்.

1943. சுபாஷ் சந்திரபோஸ் அந்தமான் தீவுகளின் போர்ட்பிளையர் நகரில் இந்திய விடுதலைக் கொடியை ஏற்றினார்.

1953. உலகின் முதலாவது NTSC தொலைக்காட்சி பெட்டி 1,175 டொலருக்கு விற்பனை செய்யப்பட்டது.

1960. 500வது தேர்வுத் துடுப்பாட்டம் அவுஸ்ரேலியா - மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையில் மெல்பேர்ன் மைதானத்தில் ஆரம்பம். 03.01.1961 வரை நடைபெற்ற இப்போட்டியில் அவுஸ்திரேலியா அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி.

2006. முஸ்லீம்களின் ஹஜ் பெருநாள் அன்று ஈராக் நாட்டின் ஜனாதிபதி சதாம் ஹீசைன் காலை 8.30 மணியளவில் தூக்கிலிடப்பட்டார். (பிறப்பு 28.041937)

2015 இலங்கையின் வரலாற்று முக்கியத்துவமுடைய சிகிரியா மலையில் உள்ள சுவர் ஓவியங்களை புகைப்படமெடுக்கும் செயற்பாடுகள் தடைவிதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டிசம்பர்–31**

1600. இந்தியாவில் பிரித்தானியாவுக்கு வணிக முறையிலான முன்னுரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் பிரித்தானியா கிழக்கிந்தியா நிறுவனம் தொடங்கப்பட்டது.

1847. ஸ்ரீஸ்ரீ ஆறுமுக நாவலர் தனது முதலாவது பிரசங்கத்தை வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் ஆரம்பித்தார்.

1857. விக்டோரியா மகாராணி கனடாவின் தலைநகராக ஒட்டாவைத் தேர்ந்தெடுத்தார்.

1879. நுண்ணிழை ஒன்றினூடு மின்சாரத்தை செலுத்தும் போது அது ஒளிர்கின்ற தோற்றப்பாட்டை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மின் விளக்கு (வெள்ளொளிர்வு விளக்கு) முதற்தடவையாக தோமஸ் அல்வா எடிசனால் காட்சிப்படுத்தப்பட்டது.

1984. இந்தியப் பிரதமராக ராஜீவ் காந்தி பதவியேற்பு.

1991. சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் அனைத்து நிறுவனங்கள், மற்றும் சோவியத் ஒன்றியம் அதிகாரபூர்வமாக கலைக்கப்பட்டன.

1999. 1977ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய, ஐக்கிய அமெரிக்கா பனாமா கால்வாயின் அதிகாரத்தை பனாமாவிடம் ஒப்படைத்தது.

2004. உலகின் மிக உயரமான ''வானளாவியான'' (152 மீற்றர்களிலும் கூடிய உயரம் கொண்ட உயர்ந்த மனித வாழ்க்கைக்கு உகந்த கட்டிடங்களை வானளாவிகள் என்று அழைப்பார்கள்) தாய் வானின் 509 மீட்டர் உயர தாய்ப்பே - 101 அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் சிறப்புத் தினங்கள்

**ஜனவரி**

01 - சர்வதேச பூகோள தினம்

01 - சர்வதேச சமாதான தினம்

3வது ஞாயிற்றுக்கிழமை - சர்வதேச மதங்கள் தினம்

05 - சர்வதேச தேசிய பறவைகள் தினம்

10 - சர்வதேச சிரிப்பு தினம்

15 - சர்வதேச மத தினம்

26 - சர்வதேச சுங்க தினம்

30 - சர்வதேச தொழுநோய் ஒழிப்பு தினம்

30 - சர்வதேச தியாகிகள் தினம்

**பெப்ரவரி**

02 - சர்வதேச சதுப்பு நில தினம்

04 - சர்வதேசப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம்

08 - சர்வதேசத் திருமணத் தினம்

11 - சர்வதேச நோயாளர் தினம்

13 - சர்வதேச வானொலி தினம்

13 - சர்வதேச மாற்றுப் பெயர் பெறும் தினம்

14 - சர்வதேச காதலர் தினம்

20 - சர்வதேச சமூக நீதி தினம்

20 - சர்வதேச வாய் சுகாதார தினம்

21 - சர்வதேச தாய்மொழித் தினம்

22 - சர்வதேச சாரணிய தினம் (சாரணர் இயக்கத்தை தோற்றுவித்த ராபர்ட் பேடன் பவெல் பிறந்த நாள்)

28- சர்வதேச அறிவியல் தினம்

**மார்ச்**

03 - சர்வதேச மகிழ்ச்சி தினம்

03 - சர்வதேச பாலியல் தொழிலாளர்கள் உரிமை தினம்

08 - சர்வதேச மகளிர் தினம்

12 - சர்வதேச கண் அழுத்த (குளுகோமா) தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 - சர்வதேச சிக்கன தினம்
15 - சர்வதேச ஊனமுற்றோர் தினம்
15 - சர்வதேச நுகர்வோர் உரிமை தினம்
19 - சர்வதேச உறக்க தினம்
20 - சர்வதேச கதை படிக்கும் தினம்
20 - சர்வதேச மகிழ்ச்சி தினம்
20 - சர்வதேச சிட்டுக் குருவிகள் தினம்
21 - சர்வதேச வன தினம்
சர்வதேச கவிதை தினம்
சர்வதேச பொம்மலாட்ட தினம்
21 - சர்வதேச இன பேத ஒழிப்பு தினம்
21 - சர்வதேச நலிவுற்றோர் தினம்
23 - சர்வதேச செய்யுள் தினம்
22 - சர்வதேச குடிநீர் தினம்
23 - சர்வதேச வானிலை தினம்
24 - சர்வதேச காசநோய் தினம் 1996
26 - சர்வதேச நாடக தினம் - முதன் முதலில் பரிஸ்நாட்டில் நடைபெற்றது
27 - சர்வதேச திரையரங்குகள் தினம்

**ஏப்ரல்**

01 - சர்வதேச முட்டாள் தினம்
02 - சர்வதேச சிறுவர் புத்தக தினம்
சர்வதேச ஆட்டிஸம் (குழந்தைகளுக்கு ஏற்படும் அறிவுத்திறன் குறைபாடு) தினம்
03 - சர்வதேச பத்திரிகை சுதந்திர தினம்
04 - சர்வதேச நிலக் கண்ணிவெடி விழிப்புணர்வு தினம்
07 - சர்வதேச சுகாதார தினம்
07 - சர்வதேச புகைப்பிடிக்காத தினம் (1988)
08 - சர்வதேச உரோமர் கலாசார தினம்
12 - மனித விண்வெளிப் பயணத்துக்கான சர்வதேச தினம்
14 - சர்வதேச சித்தர்கள் தினம்
16 - சர்வதேச முயற்சியாளர்கள் தினம்
17 - இரத்தம் உறையா பரம்பரை வியாதிகள் தினம்
18 - சர்வதேச பாரம்பரிய தினம்
22 - சர்வதேச பூமி தினம் 1970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - வீதியோரச் சிறுவர்களுக்கான சர்வதேச தினம்

23 - சர்வதேசப் புத்தகம் மற்றும் பதிப்புரிமை தினம்

25 - சர்வதேச மலேரிய தினம்

26 - சர்வதேச அறிவுசார் சொத்துரிமை தினம்

27 - சர்வதேச கிரபிக்ஸ் வடிவமைப்பு தினம்

28 - சர்வதேச வேலையின் போது பாதுகாப்புக்கும் நலத்துக்குமான தினம்

29 - சர்வதேச நடன தினம்

## மே

01 - சர்வதேச தொழிலாளர் தினம்

03 - சர்வதேச ஊடக சுதந்திர தினம் 1993

03 - சர்வதேச ஆஸ்துமா விழிப்புணர்வு தினம்

04 - சர்வதேச தீயணைக்கும் படையினர் தினம்

05 - சர்வதேச மருத்துவிச்சிகள் தினம்

1வது ஞாயிற்றுக்கிழமை - சர்வதேச சிரிப்பு தினம்

08 - சர்வதேச செஞ்சிலுவை - செம்பிறை தினம்

12 - சர்வதேச செவிலியர் தினம்

2வது ஞாயிற்றுக்கிழமை - அன்னையர் தினம்

15 - சர்வதேச குடும்ப தாதியர் தினம்

17 - சர்வதேச தகவல் சமூக தினம் / தொலைத் தொடர்பு தினம் 2005

17 - சர்வதேச உயர் இரத்த அழுத்த தினம்

18 - சர்வதேச அருங்காட்சியக நூதனசாலை தினம்

21 - சர்வதேச பண்பாட்டுத் தினம்

22 - சர்வதேச உயிர்ப்பல்வகமை தினம்

23 - ஆமையின் பாதுகாப்பு உலக தினம்

24 - காமன்வெல்த் தினம்

25 - சர்வதேச காணாமல் போன குழந்தைகள் தினம்

29 - ஐக்கிய நாடுகள் சர்வதேச அமைதி காப்போர் தினம்

31 - சர்வதேச புகையிலை மறுப்புத் தினம்

## ஜீன்

01 - சர்வதேச குழந்தைகள் தினம்

04 - சர்வதேச தாக்குதலுக்கு பலியான பச்சிளம் குழந்தைகள் தினம்

05 - சர்வதேச சுற்றுச் சூழல் தினம் - 1973

06 - சர்வதேச சித்தரவதைக்கு ஆளானோருக்கான ஆதரவு தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 - சர்வதேச தொல்பொருளியலாளர் தினம்

08 - சர்வதேச சமுத்திர தினம்

10 - சர்வதேச குமிழ் முனை பேனா தினம்

12 - சர்வதேச குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான தினம்

14 - சர்வதேச இரத்த தான தினம் - 2005

15 - சர்வதேச காற்று தினம்

03வது ஞாயிறு- தந்தையர் தினம்

17 - சர்வதேச பாலைவனமாதல் மற்றும் வறட்சிக்கு எதிரான தினம்

20 - சர்வதேச அகதிகள் தினம்

21 - சர்வதேச இசைத் தினம்

21 - சர்வதேச யோகா தினம்

23 - சர்வதேச விதவைகள் தினம்

25 - சர்வதேச நல்லொழுக்க தினம்

26 - சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினம் மற்றும் சட்ட விரோத கடத்தல் ஒழிப்பு தினம் 1988

27 - சர்வதேச நீரிழிவு தினம்

## ஜீலை

01 - சர்வதேச மருத்துவர் தினம்

01 - சர்வதேச கேளிக்கை தினம்

முதல் சனிக்கிழமை - சர்வதேச கூட்டுறவு தினம்

06 - சர்வதேச விலங்குகளிலிருந்து மனிதனுக்கு பரவக் கூடிய நோய்கள் தினம்

07 - சர்வதேச எழுத்தாளர் தினம்

08 - சர்வதேச காதலர் தின எதிர்ப்பு தினம்

11 - சர்வதேச மக்கள் தொகை தினம்

16 - சர்வதேச பாம்பு தினம்

18 - நெல்சன் மண்டேலா தினம்

20 - சர்வதேச சதுரங்க தினம்

20 - நிலவில் மனிதன் கால் பதித்த தினம்

25 - சர்வதேசநோயாளிகள் பாதுகாப்புக்கான தினம்

26 - சர்வதேச சதுப்பு நிலக்காடுகள் தினம்

28 - சர்வதேச (கல்லீரல்) ஹெபடைட்டிஸ் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆகஸ்ட்**

01 - சர்வதேச சாரணர் தினம்

01 - சர்வதேச தாய்ப்பால் தினம்

1-7 - முதலாவது வாரம் சர்வதேசத் தாய்ப்பால் வாரம்

06 - சர்வதேச ஹிரோஷிமா தினம்

முதல் ஞாயிறு - உலக நண்பர்கள் தினம்

08 முதல் 14ம் திகதி வரையான - உடல் உறுப்பு கொடை (தானம்) விழிப்புணர்வு வாரம்

09 - சர்வதேச ஆதிவாசிகள் தினம்

12 - சர்வதேச இளைஞர் தினம் 1999

13 - சர்வதேச இடது கை பழக்கமுடையோர் தினம் 1976

19 - சர்வதேச புகைப்பட தினம்

19 - சர்வதேச மனித நேய தினம் 2009

21 - சர்வதேச நாகரீக தினம்

23 - அடிமை வர்த்தக ஒழிப்பு நினைவு தினம்

25 - சர்வதேச வீட்டுத்தோட்ட தினம்

29 - சர்வதேச விளையாட்டு தினம்

29 - சர்வதேச பெண் சமத்துவ தினம்

30 - சர்வதேச காணமற்போனோர் தினம்

**செப்டம்பர்**

02 - சர்வதேச தேங்காய் தினம்

03 - சர்வதேச கடலோர பகுதி தூய்மைப்படுத்தும் தினம்

04 - சர்வதேச சாக்லேட் தினம்

08 - சர்வதேச எழுத்தறிவு தினம் 1965

09 - சர்வதேச கர்ப்ப காலத்தில் மதுபானங்களை தவிர்க்கும் தினம்

10 - சர்வதேச தற்கொலை முயற்சி தடுப்பு தினம்

12 - சர்வதேச பெண்ணுறை தினம்

14 - சர்வதேச முதலுதவி தினம்

15 - அனைத்துலக மக்களாட்சி தினம் 2007

16 - சர்வதேச ஓசோன் தினம்

18 - சர்வதேச நீர் கண்காணிப்பு தினம்

3வது சனிக்கிழமை -சர்வதேச மென்பொருள் உரிமை தினம்

21 - சர்வதேச அமைதி தினம்

21 - சர்வதேச ஞாபக மறதி தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 - சர்வதேச ரோஸ் தினம் / புற்று நோய் தினம்
24 - சர்வதேச பெண் குழந்தைகள் தினம்
26 - சர்வதேச செவிப்புலனற்றோர் தினம்
26 - சர்வதேச கடல்சார் தினம்
27 - சர்வதேச சுற்றுலா தினம்
28 - சர்வதேச வெறிநாய்க்கடி விழிப்புணர்வு தினம்
28 - சர்வதேச பசுமை நுகர்வோர் தினம்
29 - சர்வதேசஇதய தினம்
30 - சர்வதேச மொழி பெயர்ப்பு தினம்

**அக்டோபர்**

01 - சர்வதேச முதியோர் தினம் 1990
01 - சர்வதேச சிறுவர் தினம் 1951
சர்வதேச சைவ உணவாளர் தினம்
04 - சர்வதேச விலங்குகள் தினம்
05 - சர்வதேச ஆசிரியர் தினம்
08 - சர்வதேச முட்டை தினம்
08 - சர்வதேச குருடர் தினம்
09 - சர்வதேச தபால் தினம்
10 - சர்வதேச மரணதண்டனை எதிர்ப்பு தினம்
10 - சர்வதேச உளச்சுகாதார தினம்
10 - சர்வதேச குடியிருப்பு தினம்
10 - சர்வதேச மன தினம்
11 - சர்வதேச பெண் பிள்ளைகள் தினம்
14 - சர்வதேச தர நிர்ணய தினம்
சர்வதேச பேரழிவு குறைப்புத் தினம்
15 - சர்வதேச கிராம பெண்கள் தினம்
15 - சர்வதேச கைகழுவுதல் தினம்
15 - சர்வதேச விழிப்புலனற்றோர் தினம் / வெள்ளைப் பிரம்பு தினம்
சர்வதேச மாணவர்கள் தினம்
16 - சர்வதேச உணவு தினம் 1981
17 - சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் 1992
20 - சர்வதேச புள்ளிவிபரவியல் தினம்
21 - சர்வதேச விவசாய தினம்
24 - சர்வதேச போலியோ தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 - ஐக்கிய நாடுகள் தினம்
24 - சர்வதேச அபிவிருத்தி தகவல் தினம்
26 - சர்வதேச இணையத்தள தினம்
31 - சர்வதேச சிக்கன தினம்

**நவம்பர்**

08 - சர்வதேச நகர் திட்டமிடல் தினம்
09 - சர்வதேச சுதந்திர தினம்
09 - சர்வதேச ஓட்ட தினம்
10 - சர்வதேச அறிவியல் தினம்
11 - சர்வதேசப் போர் நினைவுத் தினம்
13 - சர்வதேச அன்பு தினம்
14 - சர்வதேச நீரிழிவு விழிப்புணர்வு தினம் 1991
16 - சர்வதேச சகிப்புத்தன்மை தினம்
17 - சர்வதேச மாணவர் நாள் 1941
18 - சர்வதேச மனநோயாளர் தினம்
19 - சர்வதேச ஆண்கள் தினம்
சர்வதேச கழிவறை தினம்
20 - சர்வதேச குழந்தைகளின் உரிமைகளுக்கான தினம்
20 - சர்வதேச மூலநோய் தினம்
21 - சர்வதேச தொலைக்காட்சி தினம்
25 - பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினம்
26 - சர்வதேச உடல் பருமனுக்கு எதிரான தினம்
சர்வதேச சட்ட தினம்
30 - சர்வதேச கணணி பாதுகாப்பு தினம்

**டிசெம்பர்**

01 - உலக எயிட்ஸ் விழிப்புணர்வு தினம் 1989
02 - சர்வதேச அடிமைத்தனம் ஒழிக்கும் தினம்.
03 - சர்வதேச ஊனமுற்றோர் தினம் 1992
05 - சர்வதேச பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான சர்வதேச தொண்டர்கள் தினம்
06 - சர்வதேச மண் தினம்.
07 - சர்வதேச விமான போக்குவரத்து தினம்
08 - சர்வதேச அறிவுத்திறன் குறைபாடுள்ளவர்களுக்கான தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09 - சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம்

10 - சர்வதேச மனித உரிமைகள் தினம்

11 - சர்வதேச மலைகள் தினம்

12 - சர்வதேச அதிஷ்ட தினம்

13 - சர்வதேச சிறுவர் ஒலிபரப்பு தினம்

14 - சர்வதேச எரிசக்தி சேமிப்பு தினம்

17 - சர்வதேச பாலியல் பெண். தொழிலாளர்களுக்கெதிரான வன்முறையை நிறுத்தும் தினம்.

18 - சர்வதேச குடிபெயர்வோர் தினம்

26 - சுனாமி பேரலை நினைவு தினம்

26 - சர்வதேச பாதுகாப்பு தினம்

29 - சர்வதேச பல்லுயிர் பெருக்க் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்காட்டி

## அறிமுகம்

நாட்காட்டி என்பது நாளைக்காட்டுவது என்ற பொருளைக் கொடுத்தாலும் இது உண்மையில் சமூக சமய வணிக நிர்வாக நோக்கங்களுக்காக நாட்களை ஒழுங்குபடுத்தும் ஒரு முறை ஆகும். ''கலண்டே'' என்னும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து உருவானதே ''காலண்டர்'' என்ற ஆங்கிலச் சொல் ஆகும். ''கலண்டே'' என்றால் கணக்கினைக் கூட்டுவது என்று பொருள்.

## வரலாறு

பண்டைக்காலத்தில் இருந்தே பல நாடுகளிலும் தமக்கென நாட்காட்டிகளை உருவாக்கி பயன்படுத்தி உள்ளனர். தொடக்க காலத்தில் புவியியல் மற்றும் காலநிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களை அடிப்படையாக வைத்தே நாட் காட்டிகள் உருவாக்கப்பட்டன. நைல் நதியில் ஆண்டுதோறும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கை அடிப்படையாகக்கொண்டு பண்டைய எகிப்தியர்கள் நாட்காட்டியை உருவாக்கினார்கள். இந்தியாவில் பருவ நிலை மாற்றங்களை வைத்தும் சூரியன் மற்றும் சந்திரனின் மாற்றங்களை வைத்தும் காலத்தைக் கணக்கிட்டார்கள். இன்று உலகமெங்கும் பரவலாக பயன்படுத்தப்படுபவை ''கிரெகோரியின்'' நாட்காட்டி எனப்படுகிறது. நாட்காட்டி என்பது ஒரு நாளின் தகவல்களை கொடுக்கும் ஒரு பொருளையும் குறிக்கின்றது. பொதுவான வழக்கில் நாட்காட்டி என்பதன் மூலம் புரிந்து கொள்ளப்படுவதும் இதுவே. பொதுவான நாட்காட்டிகள் காகிதத்தால் செய்யப்பட்டவை தற்காலத்தில் பல்வேறு வசதிகளுடன் கூடிய மின்னனு நாட் காட்டிகளும் உள்ளன.

## நாட்காட்டி காட்டும் செய்திகள்

நாட்காட்டி நாட்களைச் சேர்த்துக் கிழமைகள் மாதங்கள் ஆண்டுகள் எனவாக்கி அவற்றுக்கு பெயர்களும் வழங்குவதன் மூலம் செய்யப்படுகிறது. ஓவ்வொரு நாளுக்கும் கொடுக்கப்படும் பெயர் ''திகதி'' எனப்படுகிறது. நாள் மாதம் ஆண்டு முதலிய காலப் பகுப்புக்கள் பொதுவாகச் சூரியன் சந்திரன் முதலிய வற்றின் இயக்கங்கள் போன்ற வானியல் தோற்றப்பாடுகளுக்கு இயைபாக இச்செய்திகள் அமைந்துள்ளன. எனினும் அவை துல்லியமாகப் பொருந்திவர வேண்டியது இல்லை. இவற்றுள் பல பிற நாட்காட்டிகளை மாதிரியாகக் கொண்டு தமக்குப் பொருத்தமாக அமையும் படி உருவாக்கப்பட்டன.

## நாட்காட்டிகளின் வகைகள்

நாட்காட்டிகள் மொழி சமயம் பண்பாடு போன்றவற்றின் அடிப்படையில் பல வகைகளில் பிரிக்கப்பட்டுள்ளன. இது போல் நாட்காட்டிகள் தினசரி மாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற கால அமைப்பின் அடிப்படையிலும் தனித்தனி வகைகளாக வகைப் படுத்தப்படுகின்றன.

## கிரெகோரியின் நாட்காட்டி

கிரெகோரி நாட்காட்டி (Gregorian Calender) என்பது இன்று உலகில் பரவலாக பயன்பாட்டில் உள்ள நாட்காட்டியாகும் இது கி.மு 45ல் ரோமப் பேரரசர் ஜூலியஸ் சீசரால் உருவாக்கப்பட்ட ஜூலியன் நாட்காட்டியின் ஒரு திருத்தப்பட்ட வடிவ மாகும். இத்தாலியரான அலோசியஸ் லிலியஸ் (Aloysius Lilius) என்ற மருத்து வரால் முன்வைக்கப்பட்டது. இது பெப்ரவரி 24 1582 இல் அப்போதைய திருத்தந்தையான திருத்தந்தை கிரெகோரியின் ஆணைப்படி துவக்கி வைக்கப் பட்டது. இதன் காரணமாக பின்னாளில் இந்நாட்காட்டிக்கு ''கிரெகோரியன் நாட்காட்டி'' என்னும் பெயர் வழங்கலாயிற்று.

இந்த நாட்காட்டியின் படி இயேசு பிறந்ததாக கணிக்கப்பட்ட ஆண்டிலிருந்து ஆண்டுகள் இலக்கமிடப்பட்டன. மேலும் இக்காலப் பகுதி ''ஆண்டவரின் ஆண்டு'' எனவும் பெயரிடப்பட்டது. இது கி.பி 6வது நூற்றாண்டில் டயனீசியஸ் எக்சீகுவஸ் (Aloysius Lilius) என்னும் கிறிஸ்தவத் துறவியால் உரோமையில் துவக்கப்பட்ட ஆண்டுக் கணிப்பு முறையாகும்.

இந் நாட்காட்டி பயன்படுத்தும் முன்னர் இருந்த ரோமானிய நாட் காட்டியில் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன், செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் எனப் பத்து மாதங்கள் கொண்டதே ஒரு ஆண்டாகும். பின்னரே ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்கள் சேர்க்கப்பட்டன. கிரெகோரியின் நாட்காட்டியானது ஜூலியன் நாட்காட்டியின் சராசரி ஆண்டை விட நீளமாகக் காணப்பட்டமையால் இளவேனிற் சம இராப்பகல் நாள் நாட்காட்டியில் பின்நோக்கி நகர்வதைத் திருத்துவதற்காக முன் கொணரப் பட்டது. மேலும் உயிர்த்த ஞாயிறு நாளை கணக்கிட பயன்பட்ட சந்திர நாட்காட்டியும் பல குறைகளைக் கொண்டிருந்ததும் இன்னொரு முக்கிய காரணமாகும்.

ஸ்பெயின் போர்த்துக்கல் போலிஸ் லிதுவேனியன் காமன்வெல்த் இத்தாலியன் பெரும்பகுதிகள் போன்றவையே கிரெகோரியன் நாட்காட்டியை முதலில் ஏற்றுக்கொண்டன. 1582 அக்டோபர் முதல் இவை கிரெகோரியன் நாட்காட்டியை பயன்படுத்தத் தொடங்கின. இங்கிலாந்தும் அமெரிக்காவும் 1752 ம் ஆண்டிற்குப் பிறகே கிரெகோரியன் நாட்காட்டியை அங்கீகரித்தன. ஆங்கிலேய ஆட்சி காலத்தில் இந்தியாவிலும் இந் நாட்காட்டி புழக்கத்திற்கு வந்தது. கிரெகோரியன் நாட்காட்டியை கடைசியாக ஏற்றுக் கொண்ட நாடுகளில் கடைசியாக வருவது கிரீஸ் ஆகும். 1923 பெப்ரவரி 15 ல் இந் நாடு கிரெகோரியன் நாட்காட்டியை அங்கீகரித்தது.

## நெட்டாண்டு

நெட்டாண்டு என்பது பருவ மற்றும் வானவியல் ஆண்டுடன் நாட்காட்டியை ஒருமுகப்படுத்தும் நோக்கில் கூடுதலாக ஒரு நாளையோ கிழமையையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிரெகோரியன் நாட்காட்டி

அல்லது மாதத்தையோ கொண்ட ஆண்டாகும். எடுத்துக்காட்டாக பெப்ரவரி மாதத்தில் 28 நாட்களுக்குப் பதில் 29 நாட்கள் வரும். ஆண்டைக் குறிப் பிடலாம் பருவங்களுக்கு வானவியல் நிகழ்வுகளும் சரியாக ஒரே நாள் இடைவெளியில் நடைபெறுவதில்லை. எனவே ஒரெ அளவு நாட்களைக் கொண்ட நாட்காட்டி காலப்போக்கில் அது நடக்க வேண்டிய பருவத்தில் இருந்து நகரும் இந்த நகர்வை ஓர் ஆண்டின் ஒரு நாளையோ கிழமையையோ அல்லது மாதத்தையோ கூடுதலாக இணைப்பதன் மூலம் சரி செய்து கொள்ளமுடியும். நெட்டாண்டு அற்ற வருடம் சாதாரண வருடம் என அழைக்கப்படுகிறது.

இன்று பரவலாக பயன்பாட்டில் உள்ள கிரெகோரியின் நாட்காட்டியானது பெப்ரவரி மாதத்திற்கு கூடுதலான 29வது நாளை நான்கால் வகுபடும் எண்ணிக்கையிலான ஆண்டுகளுக்கு சேர்க்கின்றது. எவ்வாறாயினும் நூற்றாண்டு ஆண்டுகளில் 400 ஆல் வகுபடும் ஆண்டுகளுககு மட்டுமே இது சேர்க்கப் படுகின்றது. எடுத்துக்காட்டாக 1600 - 2000 என்பன நெட்டாண்டுகளான அதே வேளை 1700 1800 1900 என்பன நெட்டாண்டுகளில்லை.

இதற்கான காரணம் கிரெகோரியன் நாட்காட்டியானது இளவேனிற் சம இராப்பகல் நாள் மார்ச் 21க்கு அருகாமையில் வருமாறு வடிவமைக்கப்பட்ட தாகும். இதன் மூலம் உயிர்த்த ஞாயிறு நாளானது (மார்ச் 21 அல்லது அதற்கருகில் வரும் சந்திரனின் 14வது நாளுக்கு அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமையில் கொண்டாடப்படும்) இளவேனிற் சம இராப்பகல் நாள் சரியாக இருக்கும்.

சம இராப்பகல் நாள் ஆண்டானது தற்சமயம் சுமார் 365.242375 நாள் நீளமானது. கிரெகோரியின் நெட்டாண்டு விதியானது சராசரி ஆண்டுக்கு 365.2425 நாட்களைக் கொடுக்கிறது. 0.0001 சுற்று மிகையான கூடுதல் சேர்ப்பு காரணமாக 8000 ஆண்டுகளில் நாட்காட்டியானது ஒரு நாள் பிந்தி காணப்படும். ஆனால் 8000 வருடங்களில் சம இராப்பகல் நாள் வருடமானது முன்மொழியப்பட முடியாத அளவினால் சிறியதாக காணப்படும் எனவே கிரெகோரியன் நாட் காட்டி போதுமான அளவு துல்லியம் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதங்கள்

## ஜனவரி

ஜனவரி கிரெகோரி நாட்காட்டியின் முதல் மாதமாகும். பொதுவாக இம்மாதம் தமிழ் மாதமாகிய மார்கழியின் மத்தியில் துவங்கி தை மாதத்தின் மத்தியில் முடியும். இம் மாதம் 31 நாட்களை கொண்டது.

இம் மாதம் ரோமானிய மன்னர் ஜனஸின் பெயரிலிருந்து பெற்றுள்ளது. ரோமன் இதிகாசத்தில் துவக்கங்களின் கடவுளாக காணப்பட்ட *ஜானஸ் லானுரியஸ்* என்ற கடவுளின் பெயரே கிரெகோரியின் கலண்டரின் முதல் மாதமான ஜனவரிக்கு வழங்கப்படுகிறது.

## பெப்ரவரி

பெப்ரவரி கிரெகோரி நாட்காட்டியின் இரண்டாவது மாதமாகும். இம் மாதமே வருடத்தின் சிறிய மாதம் ஆகும். இம் மாதமானது நெட்டாண்டுகளில் மட்டும் 29 நாட்களைக் கொண்டது. சாதாரணமான ஆண்டுகளில் 28 நாட்களைக் கொண்டது.

ரோமானிய கடவுள் பிப்ரஸிடமிருந்து இம் மாதம் தனது பெயரை பெற்றுள்ளது. பெப்ரவரி என்பது ''*சுத்தப்படுத்தல்*'' என்னும் இலத்தீன் மொழிச்சொல்லில் இருந்து பிறந்தது. புராதன ரோமானியர்கள் பெப்ரவரி மாதம் 15ம் திகதி *பெப்ரா* என்னும் சுத்தப்படுத்தும் செயலைச் செய்வதற்காக சூட்டப்பட்டது என்றும் கூறுகின்றனர்.

## மார்ச்

மார்ச் கிரெகோரி நாட்காட்டியின் மூன்றாவது மாதமாகும். இம் மாதம் 31 நாட்களை கொண்டது.

இம் மாதம் ''*மார்ஸி*'' என்னும் ரோமானியப் போர்க்கடவுளின் நினைவாகப் பெயரிடப்பட்டது. கி.மு 700களில் ரோமபுரியை ஆண்ட *நுமபோம்* வில்ஸ் மன்னர் ஜனவரியையும் பெப்ரவரியையும் ஒன்றிணைப் பதற்கு முன்பு வரை மார்ச் மாதமே பண்டைய ரோமானிய நாட்காட்டியில் ஆண்டின் முதல் மாதமாக இருந்தது.

## ஏப்ரல்

ஏப்ரல் கிரெகோரி நாட்காட்டியின் நான்காவது மாதமாகும். இம் மாதம் 30 நாட்களை கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோமானிய நம்பிக்கைகளின்படி இம் மாதம் **வீனஸ் தேவதையின்** மாதமாக கருதப்படுகிறது. கிரேக்கர்கள் வீனஸை அப்ரோடைட் என்றே அழைக்கின்றனர். அதன் படி வீனஸ் தேவதையின் மாதம் எனப் பொருள் தரும் ''அப்லோரிஸ்'' என்ற சொல்லே ஏப்ரல் மாதம் என பெயர் வரக் காரணமாயிற்று.

### மே

மே கிரெகோரி நாட்காட்டியின் ஐந்தாவது மாதமாகும். இம் மாதம் 31 நாட்களை கொண்டது. கிரேக்கக் கடவுளான ***''மாயியா''*** ***என்ற*** பெயரே மே மாதத்திற்கு பெயராக சூட்டப்பட்டுள்ளது

### ஜீன்

ஜீன் கிரெகோரி நாட்காட்டியின் ஆறாவது மாதமாகும். இம் மாதம் 30 நாட்களை கொண்டது.

ஜீபிடர் கடவுளின் மனைவியாக புராதன ரோமானியர்கள் கருதிய ''ஜீனோ'' என்பதிலிருந்து ஜீன் மாதம் பிறந்தது.

### ஜீலை

ஜீலை கிரெகோரி நாட்காட்டியின் ஏழாவது மாதமாகும். இம் மாதம் 31 நாட்களை கொண்டது.

ரோமன் நாட்காட்டியின் படி இம் மாதம் ஐந்தாவது மாதமாக கருதப்பட்டு வந்தது. இலத்தீன் மொழியின் ''சவிண்டிலஸ்'' என ரோமானியர்களால் அழைக்கப்பட்டது. இம் மாதத்தில்தான் ரோமானிய மன்னர் ஜிலியஸ் சீசர் பிறந்தார். இதனால் இம் மாதத்திக்கு ஜீலை என்று புதுப் பெயர் சூட்டப்பட்டது.

### ஆகஸ்ட்

ஆகஸ்ட் கிரெகோரி நாட்காட்டியின் எட்டாவது மாதமாகும். இம் மாதம் 31 நாட்களைக் கொண்டது.

இம் மாதம் ரோமானியர்களின் புராதன நாட்காட்டியில் ஆறாவவது மாதமாக கருதப்பட்டது. ஆறாவது என்னும் பொருள்படும் ''செக்ரிலஸ்'' என்னும் இலத்தீன் மொழிச் சொல்லே துவக்கத்தில் ரோமன் நாட்காட்டியில் இம் மாதத்தின் பெயராக பயன்படுத்தப்பட்டது. பின்னர் கி.மு 8ம் நூற்றாண்டில் அலெக்ஸான்டிரியா நகரை வென்ற ரோமானிய மன்னர் ''அகஸ்டல் சீசரின்'' சிறப்பை வெளிப்படுத்தும் விதமாக இம் மாதத்திற்கு ஆகஸ்ட் என பெயர் சூட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செப்டம்பர்

செப்டம்பர் கிரெகோரி நாட்காட்டியின் ஒன்பதாவது மாதமாகும். இம் மாதம் 30 நாட்களை கொண்டது.

இலத்தீன் மொழியில் ஏழு எனப் பொருள்படும் ''வெப்டம்'' என்ற சொல்லே புராதன ரோமானியர்களின் நாட்காட்டியில் ஏழாவது மாதத்திற்கு வழங்கப்பட்டது. அதனால் கிரெகோரி நாட்காட்டியும் ஒன்பதாவது மாதத்திற்கு அப்பெயரைச் சூட்டியது.

## அக்டோபர்

அக்டோபர் கிரெகோரி நாட்காட்டியின் பத்தாவது மாதமாகும். இம் மாதம் 31 நாட்களை கொண்டது.

இலத்தீன் மொழியில் எட்டு எனப் பொருள்தரும் ''அக்டோ'' என்ற சொல்லில் இருந்து வந்ததே அக்டோபர் மாதமாகும்.

## நவம்பர்

நவம்பர் கிரெகோரி நாட்காட்டியின் பதினொன்றாம் மாதமாகும். இம் மாதம் 30 நாட்களை கொண்டது.

ஒன்பது என்னும் பொருள் தரும் ''நோவம்'' என்னும் இலத்தீன் மொழியிலிருந்து உருவானதே நவம்பர் மாதமாகும்.

## டிசம்பர்

டிசம்பர் கிரெகோரி நாட்காட்டியின் பன்னிரண்டாவது மாதமாகும். இம் மாதம் 31 நாட்களை கொண்டது.

இலத்தீன் மொழியில் ''பத்து'' என்னும் பொருள் தரும் ''டிசம்பர்'' ரோமானிய நாட்காட்டியில் பத்தாவது மாதமாக இருந்தது. மற்றும் இம் மாதம் வருடத்தின் இறுதி மாதமாகும். இம் மாதத்தின் சிறப்பம்சமாக ஆண்டு தோறும் செப்டம்பர் மாதம் தொடங்கும் அதே வார நாளிலேயே டிசம்பர் மாதமும் தொடங்குகிறது. அதே போல் ஆண்டு தோறும் ஏப்ரல் மாதம் முடியும் அதே வார நாளிலேயே டிசம்பர் மாதம் முடிவடைகிறது.

200556

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழமைகள்

## அறிமுகம்

கிழமை அல்லது வாரம் என்பது ஏழு நாட்கள் கொண்ட ஒரு கால அளவு. கிழமை என்றால் உரிமை என்று பொருள் இந்த ஏழு நாட்களும் வானத்தில் தெரியும் ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி ஆகிய ஏழு ஒளி தரும் பொருட்களுக்கு உரிய நாளாக பன்னெடுங்காலமாக அறியப் படுகின்றது. இந்த ஏழு பெயர்களும் சுழற்ச்சி முறையில் திரும்பத் திரும்ப வருகின்றன. ஞாயிறு என்பது சூரியனின் பெயர்களில் ஒன்று இது ஒரு நாள் மீன் எனவே ஞாயிற்றுக்கிழமை கதிரவனுக்கு உரிய நாளாக கொள்ளப்படுகின்றது. திங்கள் என்பது நிலாவின் பெயர்களில் ஒன்று திங்கட்கிழமை நிலாவுக்கு உரிய நாள் இப்படியாக மற்ற நாட்களும் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி என்னும் ஐந்தும் கதிரவனை சுற்றி வரும் கோள் மீன்களுக்கு உரிய நாட்களாக அமைந்துள்ளன.

மேற்கத்தைய காலக் கணிப்பு முறைகளிலும் இந்திய முறைகளிலும் கிழமை என்னும் இந்தக் கால அலகு இடம்பெற்றுள்ளது. பொதுவாக பிற மொழிகளிலும் கிழமையில் அடங்கும் நாட்களின் பெயர்கள் சூரியன் சந்திரன் மற்றும் ஐந்து கோள்களின் பெயர்களைத் தாங்கி உள்ளன.

*ஞாயிற்றுக்கிழமை*

*திங்கட்கிழமை*

*செவ்வாய்க்கிழமை*

*புதன்கிழமை*

*வியாழக்கிழமை*

*வெள்ளிக்கிழமை*

*சனிக்கிழமை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டுகளின் வரிசை

## முதலாம் நூற்றாண்டு

100 - 99 - 98 - 97 - 96 - 95 - 94 - 93 - 92 - 91
90 - 89 - 88 - 87 - 86 - 85 - 84 - 83 - 82 - 81
80 - 79 - 78 - 77 - 76 - 75 - 74 - 73 - 72 - 71
70 - 69 - 68 - 67 - 66 - 65 - 64 - 63 - 62 - 61
60 - 59 - 58 - 57 - 56 - 55 - 54 - 53 - 52 - 51
50 - 49 - 48 - 47 - 46 - 45 - 44 - 43 - 42 - 41
40 - 39 - 38 - 37 - 36 - 35 - 34 - 33 - 32 - 31
30 - 29 - 28 - 27 - 26 - 25 - 24 - 23 - 22 - 21
20 - 19 - 18 - 17 - 1 - 5 - 4 - 3 - 2 - 1

## இரண்டாம் நூற்றாண்டு

200 - 199 - 198 - 197 - 196 - 195 - 194 - 193 - 192 - 191
190 - 189 - 188 - 187 - 186 - 185 - 184 - 183 - 182 - 181
180 - 179 - 178 - 177 - 176 - 175 - 174 - 173 - 172 - 171
170 - 169 - 168 - 167 - 166 - 165 - 164 - 163 - 162 - 161
160 - 159 - 158 - 157 - 156 - 155 - 154 - 153 - 152 - 151
150 - 149 - 148 - 147 - 146 - 145 - 144 - 143 - 142 - 141
140 - 139 - 138 - 137 - 136 - 135 - 134 - 133 - 132 - 131
130 - 129 - 128 - 127 - 126 - 125 - 124 - 123 - 122 - 121
120 - 119 - 118 - 117 - 116 - 115 - 114 - 113 - 112 - 111
110 - 109 - 108 - 107 - 106 - 105 - 104 - 103 - 102 - 101

## மூன்றாம் நூற்றாண்டு

300 - 299 - 298 - 297 - 296 - 295 - 294 - 293 - 292 - 291
290 - 289 - 288 - 287 - 286 - 285 - 284 - 283 - 282 - 281
280 - 279 - 278 - 277 - 276 - 275 - 274 - 273 - 272 - 271
270 - 269 - 268 - 267 - 266 - 265 - 264 - 263 - 262 - 261
260 - 259 - 258 - 257 - 256 - 255 - 254 - 253 - 252 - 251
250 - 249 - 248 - 247 - 246 - 245 - 244 - 243 - 242 - 241
240 - 239 - 238 - 237 - 236 - 235 - 234 - 233 - 232 - 231
230 - 229 - 228 - 227 - 226 - 225 - 224 - 223 - 222 - 221
220 - 219 - 218 - 217 - 216 - 215 - 214 - 213 - 212 - 211
210 - 209 - 208 - 207 - 206 - 205 - 204 - 203 - 202 - 201

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் நூற்றாண்டு

400 - 399 - 398 - 397 - 396 - 395 - 394 - 393 - 392 - 391
390 - 389 - 388 - 387 - 386 - 385 - 384 - 383 - 382 - 381
380 - 379 - 378 - 377 - 376 - 375 - 374 - 373 - 372 - 371
370 - 369 - 368 - 367 - 366 - 365 - 364 - 363 - 362 - 361
360 - 359 - 358 - 357 - 356 - 355 - 354 - 353 - 352 - 351
350 - 349 - 348 - 347 - 346 - 345 - 344 - 343 - 342 - 341
340 - 339 - 338 - 337 - 336 - 335 - 334 - 333 - 332 - 331
330 - 329 - 328 - 327 - 326 - 325 - 324 - 323 - 322 - 321
320 - 319 - 318 - 317 - 316 - 315 - 314 - 313 - 312 - 311
310 - 309 - 308 - 307 - 306 - 305 - 304 - 303 - 302 - 301

## ஐந்தாம் நூற்றாண்டு

500 - 499 - 498 - 497 - 496 - 495 - 494 - 493 - 492 - 491
490 - 489 - 488 - 487 - 486 - 485 - 484 - 483 - 482 - 481
480 - 479 - 478 - 477 - 476 - 475 - 474 - 473 - 472 - 471
470 - 469 - 468 - 467 - 466 - 465 - 464 - 463 - 462 - 461
460 - 459 - 458 - 457 - 456 - 455 - 454 - 453 - 452 - 451
450 - 449 - 448 - 447 - 446 - 445 - 444 - 443 - 442 - 441
440 - 439 - 438 - 437 - 436 - 435 - 434 - 433 - 432 - 431
430 - 429 - 428 - 427 - 426 - 425 - 424 - 423 - 422 - 421
420 - 419 - 418 - 417 - 416 - 415 - 414 - 413 - 412 - 411
410 - 409 - 408 - 407 - 406 - 405 - 404 - 403 - 402 - 401

## ஆறாம் நூற்றாண்டு

600 - 599 - 598 - 597 - 596 - 595 - 594 - 593 - 592 - 591
590 - 589 - 588 - 587 - 586 - 585 - 584 - 583 - 582 - 581
580 - 579 - 578 - 577 - 576 - 575 - 574 - 573 - 572 - 571
570 - 569 - 568 - 567 - 566 - 565 - 564 - 563 - 562 - 561
560 - 559 - 558 - 557 - 556 - 555 - 554 - 553 - 552 - 551
550 - 549 - 548 - 547 - 546 - 545 - 544 - 543 - 542 - 541
540 - 539 - 538 - 537 - 536 - 535 - 534 - 533 - 532 - 531
530 - 529 - 528 - 527 - 526 - 525 - 524 - 523 - 522 - 521
520 - 519 - 518 - 517 - 516 - 515 - 514 - 513 - 512 - 511
510 - 509 - 508 - 507 - 506 - 505 - 504 - 503 - 502 - 501

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏழாம் நூற்றாண்டு

700 - 699 - 698 - 697 - 696 - 695 - 694 - 693 - 692 - 691
690 - 689 - 688 - 687 - 686 - 685 - 684 - 683 - 682 - 681
680 - 679 - 678 - 677 - 676 - 675 - 674 - 673 - 672 - 671
670 - 669 - 668 - 667 - 666 - 665 - 664 - 663 - 662 - 661
660 - 659 - 658 - 657 - 656 - 655 - 654 - 653 - 652 - 651
650 - 649 - 648 - 647 - 646 - 645 - 644 - 643 - 642 - 641
640 - 639 - 638 - 637 - 636 - 635 - 634 - 633 - 632 - 631
630 - 629 - 628 - 627 - 626 - 625 - 624 - 623 - 622 - 621
620 - 619 - 618 - 617 - 616 - 615 - 614 - 613 - 612 - 611
610 - 609 - 608 - 607 - 606 - 605 - 604 - 603 - 602 - 601

### எட்டாம் நூற்றாண்டு

800 - 799 - 798 - 797 - 796 - 795 - 794 - 793 - 792 - 791
790 - 789 - 788 - 787 - 786 - 785 - 784 - 783 - 782 - 781
780 - 779 - 778 - 777 - 776 - 775 - 774 - 773 - 772 - 771
770 - 769 - 768 - 767 - 766 - 765 - 764 - 763 - 762 - 761
760 - 759 - 758 - 757 - 756 - 755 - 754 - 753 - 752 - 751
750 - 749 - 748 - 747 - 746 - 745 - 744 - 743 - 742 - 741
740 - 739 - 738 - 737 - 736 - 735 - 734 - 733 - 732 - 731
730 - 729 - 728 - 727 - 726 - 725 - 724 - 723 - 722 - 721
720 - 719 - 718 - 717 - 716 - 715 - 714 - 713 - 712 - 711
710 - 709 - 708 - 707 - 706 - 705 - 704 - 703 - 702 - 701

### ஒன்பதாம் நூற்றாண்டு

900 - 899 - 898 - 897 - 896 - 895 - 894 - 893 - 892 - 891
890 - 889 - 888 - 887 - 886 - 885 - 884 - 883 - 882 - 881
880 - 879 - 878 - 877 - 876 - 875 - 874 - 873 - 872 - 871
870 - 869 - 868 - 867 - 866 - 865 - 864 - 863 - 862 - 861
860 - 859 - 858 - 857 - 856 - 855 - 854 - 853 - 852 - 851
850 - 849 - 848 - 847 - 846 - 845 - 844 - 843 - 842 - 841
840 - 839 - 838 - 837 - 836 - 835 - 834 - 833 - 832 - 831
830 - 829 - 828 - 827 - 826 - 825 - 824 - 823 - 822 - 821
820 - 819 - 818 - 817 - 816 - 815 - 814 - 813 - 812 - 811
810 - 809 - 808 - 807 - 806 - 805 - 804 - 803 - 802 - 801

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பத்தாம் நூற்றாண்டு

1000 - 999 - 998 - 997 - 996 - 995 - 994 - 993 - 992 - 991
990 - 989 - 988 - 987 - 986 - 985 - 984 - 983 - 982 - 981
980 - 979 - 978 - 977 - 976 - 975 - 974 - 973 - 972 - 971
970 - 969 - 968 - 967 - 966 - 965 - 964 - 963 - 962 - 961
960 - 959 - 958 - 957 - 956 - 955 - 954 - 953 - 952 - 951
950 - 949 - 948 - 947 - 946 - 945 - 944 - 943 - 942 - 941
940 - 939 - 938 - 937 - 936 - 935 - 934 - 933 - 932 - 931
930 - 929 - 928 - 927 - 926 - 925 - 924 - 923 - 922 - 921
920 - 919 - 918 - 917 - 916 - 915 - 914 - 913 - 912 - 911
910 - 909 - 908 - 907 - 906 - 905 - 904 - 903 - 902 - 901

### பதினொராம் நூற்றாண்டு

1100 - 1099 - 1098 - 1097 - 1096 - 1095 - 1094 - 1093 - 1092 - 1091
1090 - 1089 - 1088 - 1087 - 1086 - 1085 - 1084 - 1083 - 1082 - 1081
1080 - 1079 - 1078 - 1077 - 1076 - 1075 - 1074 - 1073 - 1072 - 1071
1070 - 1069 - 1068 - 1067 - 1066 - 1065 - 1064 - 1063 - 1062 - 1061
1060 - 1059 - 1058 - 1057 - 1056 - 1055 - 1054 - 1053 - 1052 - 1051
1050 - 1049 - 1048 - 1047 - 1046 - 1045 - 1044 - 1043 - 1042 - 1041
1040 - 1039 - 1038 - 1037 - 1036 - 1035 - 1034 - 1033 - 1032 - 1031
1030 - 1029 - 1028 - 1027 - 1026 - 1025 - 1024 - 1023 - 1022 - 1021
1020 - 1019 - 1018 - 1017 - 1016 - 1015 - 1014 - 1013 - 1012 - 1011
1010 - 1009 - 1008 - 1007 - 1006 - 1005 - 1004 - 1003 - 1002 - 1001

### பன்னிரண்டாம் நூற்றாண்டு

1200 - 1199 - 1198 - 1197 - 1196 - 1195 - 1194 - 1193 - 1192 - 1191
1190 - 1189 - 1188 - 1187 - 1186 - 1185 - 1184 - 1183 - 1182 - 1181
1180 - 1179 - 1178 - 1177 - 1176 - 1175 - 1174 - 1173 - 1172 - 1171
1170 - 1169 - 1168 - 1167 - 1166 - 1165 - 1164 - 1163 - 1162 - 1161
1160 - 1159 - 1158 - 1157 - 1156 - 1155 - 1154 - 1153 - 1152 - 1151
1150 - 1149 - 1148 - 1147 - 1146 - 1145 - 1144 - 1143 - 1142 - 1141
1140 - 1139 - 1138 - 1137 - 1136 - 1135 - 1134 - 1133 - 1132 - 1131
1130 - 1129 - 1128 - 1127 - 1126 - 1125 - 1124 - 1123 - 1122 - 1121
1120 - 1119 - 1118 - 1117 - 1116 - 1115 - 1114 - 1113 - 1112 - 1111
1110 - 1109 - 1108 - 1107 - 1106 - 1105 - 1104 - 1103 - 1102 - 1101

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதின்மூன்றாம் நூற்றாண்டு

1300 - 1299 - 1298 - 1297 - 1296 - 1295 - 1294 - 1293 - 1292 - 1291
1290 - 1289 - 1288 - 1287 - 1286 - 1285 - 1284 - 1283 - 1282 - 1281
1280 - 1279 - 1278 - 1277 - 1276 - 1275 - 1274 - 1273 - 1272 - 1271
1270 - 1269 - 1268 - 1267 - 1266 - 1265 - 1264 - 1263 - 1262 - 1261
1260 - 1259 - 1258 - 1257 - 1256 - 1255 - 1254 - 1253 - 1252 - 1251
1250 - 1249 - 1248 - 1247 - 1246 - 1245 - 1244 - 1243 - 1242 - 1241
1240 - 1239 - 1238 - 1237 - 1236 - 1235 - 1234 - 1233 - 1232 - 1231
1230 - 1229 - 1228 - 1227 - 1226 - 1225 - 1224 - 1223 - 1222 - 1221
1220 - 1219 - 1218 - 1217 - 1216 - 1215 - 1214 - 1213 - 1212 - 1211
1210 - 1209 - 1208 - 1207 - 1206 - 1205 - 1204 - 1203 - 1202 - 1201

## பதினான்காம் நூற்றாண்டு

1400 - 1399 - 1398 - 1397 - 1396 - 1395 - 1394 - 1393 - 1392 - 1391
1390 - 1389 - 1388 - 1387 - 1386 - 1385 - 1384 - 1383 - 1382 - 1381
1380 - 1379 - 1378 - 1377 - 1376 - 1375 - 1374 - 1373 - 1372 - 1371
1370 - 1369 - 1368 - 1367 - 1366 - 1365 - 1364 - 1363 - 1362 - 1361
1360 - 1359 - 1358 - 1357 - 1356 - 1355 - 1354 - 1353 - 1352 - 1351
1350 - 1349 - 1348 - 1347 - 1346 - 1345 - 1344 - 1343 - 1342 - 1341
1340 - 1339 - 1338 - 1337 - 1336 - 1335 - 1334 - 1333 - 1332 - 1331
1330 - 1329 - 1328 - 1327 - 1326 - 1325 - 1324 - 1323 - 1322 - 1321
1320 - 1319 - 1318 - 1317 - 1316 - 1315 - 1314 - 1313 - 1312 - 1311
1310 - 1309 - 1308 - 1307 - 1306 - 1305 - 1304 - 1303 - 1302 - 1301

## பதினைந்தாம் நூற்றாண்டு

1500 - 1499 - 1498 - 1497 - 1496 - 1495 - 1494 - 1493 - 1492 - 1491
1490 - 1489 - 1488 - 1487 - 1486 - 1485 - 1484 - 1483 - 1482 - 1481
1480 - 1479 - 1478 - 1477 - 1476 - 1475 - 1474 - 1473 - 1472 - 1471
1470 - 1469 - 1468 - 1467 - 1466 - 1465 - 1464 - 1463 - 1462 - 1461
1460 - 1459 - 1458 - 1457 - 1456 - 1455 - 1454 - 1453 - 1452 - 1451
1450 - 1449 - 1448 - 1447 - 1446 - 1445 - 1444 - 1443 - 1442 - 1441
1440 - 1439 - 1438 - 1437 - 1436 - 1435 - 1434 - 1433 - 1432 - 1431
1430 - 1429 - 1428 - 1427 - 1426 - 1425 - 1424 - 1423 - 1422 - 1421
1420 - 1419 - 1418 - 1417 - 1416 - 1415 - 1414 - 1413 - 1412 - 1411
1410 - 1409 - 1408 - 1407 - 1406 - 1405 - 1404 - 1403 - 1402 - 1401

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA

## பதினாறாம் நூற்றாண்டு

1600 - 1599 - 1598 - 1597 - 1596 - 1595 - 1594 - 1593 - 1592 - 1591
1590 - 1589 - 1588 - 1587 - 1586 - 1585 - 1584 - 1583 - 1582 - 1581
1580 - 1579 - 1578 - 1577 - 1576 - 1575 - 1574 - 1573 - 1572 - 1571
1570 - 1569 - 1568 - 1567 - 1566 - 1565 - 1564 - 1563 - 1562 - 1561
1560 - 1559 - 1558 - 1557 - 1556 - 1555 - 1554 - 1553 - 1552 - 1551
1550 - 1549 - 1548 - 1547 - 1546 - 1545 - 1544 - 1543 - 1542 - 1541
1540 - 1539 - 1538 - 1537 - 1536 - 1535 - 1534 - 1533 - 1532 - 1531
1530 - 1529 - 1528 - 1527 - 1526 - 1525 - 1524 - 1523 - 1522 - 1521
1520 - 1519 - 1518 - 1517 - 1516 - 1515 - 1514 - 1513 - 1512 - 1511
1510 - 1509 - 1508 - 1507 - 1506 - 1505 - 1504 - 1503 - 1502 - 1501

## பதினேழாம் நூற்றாண்டு

1700 - 1699 - 1698 - 1697 - 1696 - 1695 - 1694 - 1693 - 1692 - 1691
1690 - 1689 - 1688 - 1687 - 1686 - 1685 - 1684 - 1683 - 1682 - 1681
1680 - 1679 - 1678 - 1677 - 1676 - 1675 - 1674 - 1673 - 1672 - 1671
1670 - 1669 - 1668 - 1667 - 1666 - 1665 - 1664 - 1663 - 1662 - 1661
1660 - 1659 - 1658 - 1657 - 1656 - 1655 - 1654 - 1653 - 1652 - 1651
1650 - 1649 - 1648 - 1647 - 1646 - 1645 - 1644 - 1643 - 1642 - 1641
1640 - 1639 - 1638 - 1637 - 1636 - 1635 - 1634 - 1633 - 1632 - 1631
1630 - 1629 - 1628 - 1627 - 1626 - 1625 - 1624 - 1623 - 1622 - 1621
1620 - 1619 - 1618 - 1617 - 1616 - 1615 - 1614 - 1613 - 1612 - 1611
1610 - 1609 - 1608 - 1607 - 1606 - 1605 - 1604 - 1603 - 1602 - 1601

## பதினெட்டாம் நூற்றாண்டு

1800 - 1799 - 1798 - 1797 - 1796 - 1795 - 1794 - 1793 - 1792 - 1791
1790 - 1789 - 1788 - 1787 - 1786 - 1785 - 1784 - 1783 - 1782 - 1781
1780 - 1779 - 1778 - 1777 - 1776 - 1775 - 1774 - 1773 - 1772 - 1771
1770 - 1769 - 1768 - 1767 - 1766 - 1765 - 1764 - 1763 - 1762 - 1761
1760 - 1759 - 1758 - 1757 - 1756 - 1755 - 1754 - 1753 - 1752 - 1751
1750 - 1749 - 1748 - 1747 - 1746 - 1745 - 1744 - 1743 - 1742 - 1741
1740 - 1739 - 1738 - 1737 - 1736 - 1735 - 1734 - 1733 - 1732 - 1731
1730 - 1729 - 1728 - 1727 - 1726 - 1725 - 1724 - 1723 - 1722 - 1721
1720 - 1719 - 1718 - 1717 - 1716 - 1715 - 1714 - 1713 - 1712 - 1711
1710 - 1709 - 1708 - 1707 - 1706 - 1705 - 1704 - 1703 - 1702 - 1701

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

## பத்தொன்பதாம் நூற்றாண்டு

1900 - 1899 - 1898 - 1897 - 1896 - 1895 - 1894 - 1893 - 1892 - 1891
1890 - 1889 - 1888 - 1887 - 1886 - 1885 - 1884 - 1883 - 1882 - 1881
1880 - 1879 - 1878 - 1877 - 1876 - 1875 - 1874 - 1873 - 1872 - 1871
1870 - 1869 - 1868 - 1867 - 1866 - 1865 - 1864 - 1863 - 1862 - 1861
1860 - 1859 - 1858 - 1857 - 1856 - 1855 - 1854 - 1853 - 1852 - 1851
1850 - 1849 - 1848 - 1847 - 1846 - 1845 - 1844 - 1843 - 1842 - 1841
1840 - 1839 - 1838 - 1837 - 1836 - 1835 - 1834 - 1833 - 1832 - 1831
1830 - 1829 - 1828 - 1827 - 1826 - 1825 - 1824 - 1823 - 1822 - 1821
1820 - 1819 - 1818 - 1817 - 1816 - 1815 - 1814 - 1813 - 1812 - 1811
1810 - 1809 - 1808 - 1807 - 1806 - 1805 - 1804 - 1803 - 1802 - 1801

## இருபதாம் நூற்றாண்டு

2000 - 1999 - 1998 - 1997 - 1996 - 1995 - 1994 - 1993 - 1992 - 1991
1990 - 1989 - 1988 - 1987 - 1986 - 1985 - 1984 - 1983 - 1982 - 1981
1980 - 1979 - 1978 - 1977 - 1976 - 1975 - 1974 - 1973 - 1972 - 1971
1970 - 1969 - 1968 - 1967 - 1966 - 1965 - 1964 - 1963 - 1962 - 1961
1960 - 1959 - 1958 - 1957 - 1956 - 1955 - 1954 - 1953 - 1952 - 1951
1950 - 1949 - 1948 - 1947 - 1946 - 1945 - 1944 - 1943 - 1942 - 1941
1940 - 1939 - 1938 - 1937 - 1936 - 1935 - 1934 - 1933 - 1932 - 1931
1930 - 1929 - 1928 - 1927 - 1926 - 1925 - 1924 - 1923 - 1922 - 1921
1920 - 1919 - 1918 - 1917 - 1916 - 1915 - 1914 - 1913 - 1912 - 1911
1910 - 1909 - 1908 - 1907 - 1906 - 1905 - 1904 - 1903 - 1902 - 1901

## இருபத்தொராம் நூற்றாண்டு

2080 - 2079 - 2078 - 2077 - 2076 - 2075 - 2074 - 2073 - 2072 - 2071
2070 - 2069 - 2068 - 2067 - 2066 - 2065 - 2064 - 2063 - 2062 - 2061
2060 - 2059 - 2058 - 2057 - 2056 - 2055 - 2054 - 2053 - 2052 - 2051
2050 - 2049 - 2048 - 2047 - 2046 - 2045 - 2044 - 2043 - 2042 - 2041
2040 - 2039 - 2038 - 2037 - 2036 - 2035 - 2034 - 2033 - 2032 - 2031
2030 - 2029 - 2028 - 2027 - 2026 - 2025 - 2024 - 2023 - 2022 - 2021
2020 - 2019 - 2018 - 2017 - 2016 - 2015 - 2014 - 2013 - 2012 - 2011
2010 - 2009 - 2008 - 2007 - 2006 - 2005 - 2004 - 2003 - 2002 - 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை...

KOHA JPL

1. ''கேசரி'' தகவல் களஞ்சியம் - 2011
2. ஜனநாயகத்தின் நான்காவது தூன் - ஆசிரியர் காவலூர் இ. விஜேந்திரன்
3. ஐக்கிய நாடுகள் பற்றி அடிப்படையான விடயங்கள் (ஐக்கிய நாடுகளின் 50வது ஆண்டு நிறைவினை முகமாக ஐக்கிய நாடுகளின் செய்தி ஸ்தாபனத்தில் வெளியிடப்பட்டது).
4. விக்கிபீடியா கலைக்களஞ்சியம்
5. வீரகேசரி பத்திரிகை
6. தினக்குரல் பத்திரிகை
7. உதயன் பத்திரிகை
8. வலம்புரி பத்திரிகை
9. தினமணி (இந்தியா)
10. தினமலர் (இந்தியா)
11. விஜய் பத்திரிகை
12. இலங்கை பாராளுமன்றம் - பாராளுமன்ற கையேடு
13. இலங்கையின் பிரதமர் அலுவலக - இணையதளம்.
14. இலங்கை கல்வி அமைச்சின் சுற்று நிருபங்கள்
15. இலங்கை கல்வி அமைச்சின் இணையத்தளம்
16. லீலா பஞ்சாங்க சித்திர கலண்டர்
17. அஷ்டலட்சுமி கலண்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள் என்றும் மறக்கப்பட முடியாதவையாகும். அந்த வகையில் பத்து நூற்றாண்டுகளுக்கும் மேலான காலப்பகுதியில் இடம்பெற்ற நிகழ்வுகளை தொகுத்து நூல் வடிவம் கொடுத்த கலாநிதி திருமதி. ஜெயலட்சுமி இராசநாயகம் அவர்களின் முயற்சி பாராட்டத்தக்கதாகும். ஒரே பார்வையில் சகல வரலாற்று நிகழ்வுகளையும் இலகுவாகப் பார்வையிடக்கூடிய வகையில் தேவைக் கேற்றவாறு புகைப்படங்களுடன் திகதி மாதம் வருடங்களுடன் இந்நூல் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. போட்டிப் பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர் களுக்கும் இந்நூல் சிறந்த வழிகாட்டியாக அமையும். அத்துடன் வருங்கால சந்ததியினருக்கும் பயன்மிக்க ஆவணமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இந்நூல் வரலாற்றுப் பொக்கிஷமாகப் பேணப்பட வேண்டிய ஆவணமாகும்.

இ. இரவீந்திரன்
*செயலாளர், வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடமாகாணம்*



கலாநிதி (திருமதி) ஜெயலக்சுமி இராசநாயகம்; இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாள ராவர். இவர் தனது ஆரம்ப கல்வியை வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரியிலும் கலைமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் பெற்றவர். அதைத் தொடர்ந்து பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் கல்வித்துறையில் முதுதத்துவமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டவர். பின் கலாநிதிப்பட்டத்தை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பெற்றவர். இவர் பல ஆய்வுக் கட்டுரைகளை உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் எழுதி வெளியிட்டுள்ளார். அத்துடன் கல்வித் தத்துவங்கள் சார்பான பல நூல்களையும் வெளியிட்டுள்ளார். யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழத்திலும், யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியல் கல்லூரியிலும், தேசிய கல்வி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையிலும் வருகை விரிவுரையாளராகவும் சேவையாற்றி வருகின்றார்.

pbd
601050136
VARALATTU PATHIVUGA
14/09/2017
Rs. 850.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org